# The Journal of
# The Tanjore Maharaja Serfoji's
# SARASVATI MAHAL LIBRARY


EDITED BY

**A. PANCHANATHAN,** M. A., M. L. I. S.,
*Administrative Officer i c.*
SARASVATI MAHAL LIBRARY.
THANJAVUR.



Vol. XLIII Nos. 1, 2

PUBLISHED ON BEHALF OF

**THE SARASVATI MAHAL LIBRARY,**
**THANJAVUR.**

ANNUAL SUBSCRIPTION Rs. 50/-

A. D. 1995.

# The Journal of
# The Tanjore Maharaja Serfoji's
# SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

**A. PANCHANATHAN,** M. A., M. L. I. S.,
*Administrative Officer i/c.*
SARASVATI MAHAL LIBRARY,
THANJAVUR.

PUBLISHED ON BEHALF OF

**THE SARASVATI MAHAL LIBRARY,**
**THANJAVUR.**

1995] [Price Rs. 25—00

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XLIII A. D. 1995 Saka 1917 Nos. 1, 2.

# முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தின் ஆராய்ச்சிப் பருவ இதழ்த் தொகுதி 43, பகுதி 1, 2ஐத் தற்பொழுது ஆய்வாளர்கள், அறிஞர்கள் மற்றும் வாசகர்கள் முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி எய்துகின்றேன்.

இவ்விதழில் பன்மொழி இலக்கியம், சுவடியியல், நூலகவியல், வரலாற்றியல் ஆகிய பொருண்மைகளிலான படைப்புகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ், வடமொழி, மராட்டி, தெலுங்கு ஆகிய மொழியிலக்கியங்கள் பற்றிய அரிய செய்திகளைத் தாங்கிய இலக்கியக் கட்டுரைகளும், வரலாற்று நோக்கிலான கட்டுரைகளும், மோடி ஆவணங்கள் குறித்த அறிமுகக் கட்டுரையும், சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்க் காகிதச் சுவடிகள் குறித்த கட்டுரையும், சரசுவதி மகால் நூலகத்தின் அரிய தமிழ் அச்சு நூல்களின் பட்டியலும், சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ் இலக்கிய இலக்கணச் சுவடிகளின் அகர வரிசைப் பட்டியலும், சுவடி நூலகங்களின் பாதுகாப்பு முறைகள் குறித்த கட்டுரையும் இவ்விதழை அணி செய்கின்றன.

இப்படைப்புகள் அனைத்தும் கற்போர்க்குப் பயன்மிக அளிக்கும் வகையில் எளிய நடையில் விளக்கமும் தெளிவும் அமைய ஆக்கப் பெற்றுள்ளன. இவற்றைச் சிறப்பான முறையில் படைத்தளித்துள்ள இந்நூலகத்தின் மொழிப் பண்டிதர்கள், நூலகர்கள், வேதிமக் காப்பாளர், மோடி வல்லுநர், சிறப்புக்

8. தங்கத் தஞ்சைத் தரணியின் மும்மணிகள்

— திரு. பு. ம. பத்மநாப சர்மா,
*முன்னாள் வடமொழிப் பண்டிதர்.*

9. சிவரஹஸ்யம்

— தேதியூர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,
*ஸம்ஸ்க்ருத மேனிலைப் பண்டிதர்.*

10. தஞ்சை மராட்டியர் வரலாறு கூறும் வடமொழி இலக்கியச் சுவடிகள்

— *ஸாஹித்ய சிரோமணி*
திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி,
*ஸம்ஸ்க்ருத பண்டிதர்.*

11. தஞ்சையில் நடைபெற்ற ஸம்ஸ்க்ருத நாடகங்கள்

— *வேதாந்த சிரோமணி, தமிழ் வித்வான்*
திரு. என். ஸ்ரீநிவாஸன்,
*ஸம்ஸ்க்ருத பண்டிதர்.*

12. வைணவ இலக்கியங்களில் தமிழ்—தமிழர்

— *நியாய சிரோமணி*
திரு. ஆ. வீரராகவன், *எம். ஏ., பி. எட்.,*
*ஸம்ஸ்க்ருத பண்டிதர்.*

13. விச்வகுணாதர்ச சம்பூ காவ்யத்தில்
தஞ்சாவூர் மற்றும் சோழநாட்டு வர்ணனை

— *நியாய சிரோமணி*
திரு. எஸ். சுதர்சனன், *எம்.ஏ.,*
*ஸம்ஸ்க்ருத பண்டிதர்.*

14. தஞ்சையில் குறவஞ்சி நாடகங்கள்

— திரு. ந. விசுவநாதன்,
*முன்னாள் தெலுங்குப்பண்டிதர்.*

15. மோடி ஆவணம் — ஓர் அறிமுகம்

— திரு. இராக. விவேகானந்தகோபால்,
*மோடி வல்லுநர்.*

16. சுவடி நூலகங்களும் பாதுகாப்பு முறைகளும்

— திரு. ப. பெருமாள், *பி. எஸ்ஸி(சி).,* எம். ஏ., எம். எல். ஐ. எஸ்ஸி.,
*வேதிமக் காப்பாளர்.*

# Mahratta Rule in the South and their Contribution towards Cultural Heritage of Tamil Country

**Srimant TULAJENDRA RAJAH P. BHOSALE,**
**Great Grandson of H. H. Shivaji Maharajah**
**the Last Ruler of Thanjavur,**
Prince and Life Member of
T. M. S. S. M. Library, Thanjavur.

With great delectation and pleasure as the descendant of Chatrapathi Serfoji Maharajah. the scholar prince of Thanjavur, I have noted here a few points related to the contribution of the Mahrattas to the cultural heritage of the Tamil country. Ekoji alias Venkoji was the founder King of Mahratta dynasty in Thanjavur during 17th century and he was the half-brother of the Great Shiva Chatrapathi. Sahaji was the common father for Shivaji and Ekoji, and their decendants ruled Satara, Kolhapur and Thanjavur. They were all from Bhosale family. When the Bhosale family entered the Tamil country, they had left their imperishable imprint in the literature, architecture, music, arts, culture and politics of Tamilnadu. The main role of the Mahratta Kings of Thanjavur was in preserving the faloric of Indian culture during the turbulent period of foreign invasions.

The Mahrattas spread out from Bangalore to the south are today mixed with the people of Tamilnadu and adopted the Tamil culture as their own. The Mahratta rulers also patronised the Hindu Religion and Culture. Saint Samartha Ramdass Swami and his disciples visited South India during Venkoji's period and established several Mutts. His divine grace and deep erudition attracted several devotees and followers irrespective of caste and creed. So, the Mutts in Thanjavur and Mannargudi are propagating Hinduism and culture to the people of Tamilnadu. The first Ruler Venkoji gave patronage to the Saints. Poets and Scholars of Marathi. Sanskrit, Telugu and Tamil, and the tradition was continued by the successive rulers of Thanjavur. Venkoji put foundation for this.

The Fine Arts like painting, music and dance were given encouragement and they flourished during the Mahratta period. So, Dance Dramas were written during Sahaji's period, who was the son of Venkoji and it is called that, Thanjavur is the birth place of Dance Drama. As the population of Thanjavur was mixed one such as Tamils, Nayaks, Marathas and Gujarathis, multi lingual dramas were written. Even the Mahratta rulers themselves were great scholars and they composed poems, lyrics, treatises and synthesised the culture of Tamil, Telugu and Mahratta.

The notable trait of Venkoji and his successors never attempted to thrust their ways of living and thinking to conquer the people or subjects. They wisely and freely mixed with existing culture and patronised it. This in turn made the people to love, respect them and not look upon them as intolerable aliens. So people led their life happily and observed this as the best in the Mahratta culture,

Immediately after his setting down at Thanjavur, Venkoji devoted his entire attention towards improvement of agriculture and the economic condition of his subjects by providing irrigation facilities like widening and deepening of canals, constructing new tanks, make use of waste lands for cultivation etc.

Serfoji II, last but one of the Mahratta rulers contributed a lot towards national integration through language. Many languages were taught in the Navavidya Kalanidhi Sala and started Sanskrit and Tamil schools separately in various places. He utilised his leisure and wealth to collect manuscripts, books and art pieces from all over the country and even from the Britishers. That is why he could enrich the collections of manuscripts, and books in the Sarasvati Mahal Library. So the Sarasvati Mahal Library received the attention of Western Scholars also. Serfoji established Charitable. Medical institutions such as Dhanvantari Mahal and a Printing Press of his own for the benefit of his subjects.

**A Crowned head need not be a scholarly one; A Scholarly head need not be a crowned head. But, the mighty Mahratta rulers of Thanjavur struck a happy balance between these two** opposing ideals.

# சரசுவதி மகால் நூலகமும் தமிழும்

**அ. பஞ்சநாதன்,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,
*நூலகர் மற்றும் வெளியீட்டு மேலாளர்,*
சரசுவதி மகால் நூலகம்.

**முகவுரை**

தமிழ்மொழி - செந்தமிழ், பைந்தமிழ் தண்டமிழ், நற்றமிழ், ஒண்டமிழ், தீந்தமிழ், இன்றமிழ், பூந்தமிழ் என்றெல்லாம் பலவாறாகப் போற்றப்படுகின்ற சிறப்புடையதாகும்.

கவிச்சக்கரவர்த்தி கம்பரால் "என்றுமுள தென்றமிழ்" எனப் போற்றப் பட்ட நம் தமிழ்மொழியின் உயர்வினை, உலகின் பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்த மகாகவி பாரதியார் மற்றைய மொழிகளோடு ஒப்பிட்டுப்பார்த்து 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியுள்ளதை நாம் அனைவரும் அறிவோம்.

அப்படிப்பட்ட, உலக மொழிகள் பலவற்றுள்ளும் உயர்தனிச் செம்மொழி யாகிய தமிழ்மொழியின் சிறப்பினைத் தரணிக்கு ஆய்வு வகையாலும், அன்புத் தோய்வு வகையாலும் எடுத்துக்காட்ட இப்பொழுது தஞ்சைத்தரணியில் எட்டாம் உலகத் தமிழ் மாநாடு மிகச்சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றது.

இவ்வெட்டாம் உலகத் தமிழ் மாநாடு நிகழுகின்ற தஞ்சையிலேயே அமைந்து தமிழ் மொழிக்கும், ஏனைய இந்திய மொழிகளுக்கும் பல கலை களுக்கும் அரும்பெரும் தொண்டினை ஆற்றிவருகின்ற உலகுபுகழ் நிறுவன மாகத் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம் விளங்கு கின்றது.

இந்நிறுவனத்தின் தமிழ்மொழி மேம்பாட்டுப் பணிகள் நீண்ட வரலாற்றை உடையன. அவற்றைச் சுருக்கமாகத் தொகுத்து இங்குக் காண்போம்.

## சரசுவதி மகால் நூலகத்தின் மொழித்துறைகள்

தமிழ்மொழி, வடமொழி, மராட்டியமொழி, தெலுங்குமொழி ஆகிய மொழிகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளைக்கொண்ட மொழிச் சுவடித்துறைகள் இந்நூலகத்தில் உள்ளன. மராட்டி மொழியின் மோடிப் பிரிவும் இந்நூலகத்தில் உள்ளது. நாயக்கர்கள், மராட்டியர்கள் தஞ்சையை ஆண்ட காலத்தில் அவர்களால் ஆதரிக்கப்பெற்ற புலவர்கள் இயற்றிய பல மொழி இலக்கியங்களும் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலை ஆகிய வற்றோடு தொடர்புடையனவாகவே தோன்றியுள்ளன; அவற்றின் தாக்கத் துடனேயே தோன்றியுள்ளன. ஆதலால் இந்நூலகத்தின் சுவடித்துறைகளும், இந்நூலகத்தின் சுவடித்துறை ஆய்வுகளும், வெளியீடுகளும் தமிழியல் ஆய்வு களுக்குப் பெருந்துணையாக அமைவனவாகும்.

## சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறை

தமிழ்ப் பேரறிஞர்களான திருவாளர்கள் உலகநாதப் பிள்ளை, முத்து ரத்தினமுதலியார், இராம. கோவிந்தசாமிப்பிள்ளை முதலியோரின் தமிழ்ப் புலமைத்தொண்டால் தழைக்கப்பெற்றது இந்நூலகத்தின் தமிழ்ச் சுவடித் துறையாகும்.

உயர்திரு. பண்டிதர் உலகநாதப் பிள்ளை அவர்கள் உருவாக்கிய தமிழ்ச் சுவடிகளின் விளக்க அட்டவணைத் தொகுதிகள் சிறப்புடையன. அவை பின்னர் வந்த தமிழ்த்துறைப் பண்டிதர்கள் பின்பற்றுவதற்கு உரியனவாக அமைந்தவை. சிறந்த வகை தொகைப்பாடுகளோடு அத்தொகுதிகள் விளங்கு கின்றன.

சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் மொத்தம் 3,518 ஓலைச் சுவடிகள் உள்ளன. இச்சுவடிகள் தமிழகத்தின் பல கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களாலும், பேராசிரியர்களாலும், தனித்த ஆய்வாளர்களாலும் அவர்தம் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அரிய நூல்கள் ஆய்வுலகத் திற்கும், வாசகர்களுக்கும் பயன்படும்வண்ணம் சுவடிகளிலிருந்து நூல்களாகப் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டும் வருகின்றன.

## தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள சுவடிகள்

சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த் துறையில் இடம்பெற்றுள்ள மொத்தம் 3,518 சுவடிகளில் இலக்கிய, இலக்கண, தத்துவ நூற்சுவடிகள் 2,004 ஆகும். வைத்தியச் சுவடிகள் 1,514 ஆகும். வைத்தியச் சுவடிகளில் பெரும் பான்மையானவை சித்த மருத்துவச் சுவடிகள் ஆகும். இச்சுவடிகள் சித்த

மருத்துவர்களாலும், பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களாலும், பேராசிரியர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சுவடிகள் தக்க சித்த மருத்துவ அறிஞர்களைச் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு பதிப்பிக்கப்பட்டு இந்நூலக வெளியீடுகளாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள இலக்கியச்சுவடிகளில் சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய நூற்சுவடிகள் மிகமிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் முதலிய நூற்சுவடிகளே இத்துறையில் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. நிகண்டு நூற் சுவடிகளும், இலக்கண நூற்சுவடிகளும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இத்துறையில் இடம்பெற்றுள்ளன. ஜோதிடச் சுவடிகளும், தத்துவ நூற்சுவடிகளும் கணிசமான அளவிற்கு இத்துறையில் இடம்பெற்றுள்ளன.

## சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்ச்சுவடிப் பதிப்புகள்

மகாலின் தமிழ்த்துறையில் இடம்பெற்றுள்ள ஓலைச் சுவடிகளையும், காகிதச் சுவடிகளையும் அடிப்படையாகக்கொண்டு பல நூல்கள் பதிப்பிக்கப் பெற்று வெளியிடப்பெற்றுள்ளன. இதுவரை சரசுவதி மகால் நூலகம் வெளியிட்டுள்ள பல மொழிகளையும் சார்ந்த நூல்களின் மொத்த எண்ணிக்கை 357 ஆகும். இதில் 174 நூல்கள் தமிழ் நூல்கள் என்னும் விவரக்குறிப்பே இந்நூலகம் வெளியிட்டுள்ள நூல்களில் தமிழ்ச் சுவடிப்பதிப்பு நூல்களே பெரும்பான்மையன என்னும் பெருமையைப் பீடுற எடுத்து மொழியும். தமிழ்ச் சுவடிப்பதிப்பு நூல்கள் இந்நூலகத்திலேயே பணிபுரிகின்ற பண்டிதர்களைப் பதிப்பாசிரியர்களாகக்கொண்டும், தக்க தமிழறிஞர்களைச் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களாகக்கொண்டும் பதிப்பித்து வெளியிடப்படுகின்றன.

தமிழறிஞர்களான திருவாளர்கள் முத்துரத்தினமுதலியாரும், எம். ஆர். கந்தசாமிப்பிள்ளையும் இணைந்து பதிப்பித்த நாலடியார் (உரைவளம்) நூல் ஒருநூலை எவ்வகையிலெல்லாம் சிறப்பாகப் பதிப்பிக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டான முன்மாதிரிப் பதிப்பு நூலாகத்திகழ்கின்றது. இப்பதிப்பு நூல் தமிழுலகிற்குச் சரசுவதி மகால் நூலகத்தின் சிறந்த ஒரு கொடையாகும். விரிவான ஆராய்ச்சி முன்னுரை தருதல், பாடபேதங்கள் சுட்டல், ஒப்புமைப் பகுதிகள் காட்டல், அருஞ்சொல் முதலியவற்றின் அகராதிகளைத் தருதல் எனப் பல்வேறு பதிப்பு நுட்பங்களும் அமைய இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"எந்தசாமிப்பிள்ளையும் ஈடில்லை எங்கள் கந்தசாமிப் பிள்ளைக்கு" என்று பாவேந்தர் பாரதிதாசனால் பாராட்டப்பட்ட தமிழ்ப் பேரறிஞரான

பள்ளியகரம் நீ. கந்தசாமிப்பிள்ளையவர்கள் சரசுவதி மகால் நூலகத்தின் கௌரவக் காரியதரிசியாக வீற்றிருந்து பல மொழிப் பணிகளையும். தமிழ்ப் பணிகளையும் சிறப்பாக ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. செந்தமிழ், கொடுந் தமிழ் ஆகிய நூல்களின் மறுவெளியீட்டிற்கும், இலக்கணவிளக்கம், இலக்கணக் கொத்து முதலிய நூல்களின் சிறந்தபதிப்பு முயற்சிகளுக்கும் அவர் ஆற்றிய பணி மிகச் சிறப்பானதாகும்.

உயர்திரு பண்டித இராம. கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள் பதிப்பித்த தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், நம்பி அகப்பொருள் நூல் களும், தமிழ்க்கடல் தி. வே. கோபாலய்யர் அவர்கள் பதிப்பித்த இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, பிரயோக விவேகம் ஆகிய இலக்கண நூல்களும், பாவலர் பாலசுந்தரனார் பதிப்பித்த தனிப்பாடல் திரட்டுத் தொகுதிகளும்' புலவர் வி. சொக்கலிங்கம் அவர்கள் பதிப்பித்த ஆசிரியநிகண்டு நூலும், புலவர் ப. வெ. நாகராஜன் அவர்கள் பதிப்பித்த திருவேட்டைநல்லூர் அய்யனார் பள்ளு நூலும், வடமொழிப்பண்டிதர் திரு. நீ. வை. வேங்கடசுப்ரமண்ய சாஸ்த்திரி அவர்கள் தமிழ் விளக்கத்துடன் பதிப்பித்த பாணினீயதாதுபாடம் நூலும் தமிழ்ப் பதிப்புலகத்திற்கும், தமிழ் ஆய்வுலகத்திற்கும் சரசுவதி மகால் நூலகம் வழங்கியுள்ள அரிய கொடைகளில்சிலவாகும். நூலக வெளியீடுகளான அம்மானை நூல்கள் குறிப்பிடத்தக்கன. நூலகம் தனது பருவ இதழின் வாயிலாகத் தமிழ்ச் சுவடிப் பதிப்புகளையும், கட்டுரைகளையும் தமிழுலகிற்கு அவ்வப்போது வழங்கி ஆற்றிவருகின்ற பணியும் குறிப்பிடத்தக்கது.

## நிறைவுரை

தமிழ் ஆய்வாளர்களுக்கும், அறிஞர்களுக்கும் சரசுவதி மகால் நூலகம் தமிழ்ச் சுவடித்துறையாலும், பல்லாயிரக்கணக்கான தமிழ் நூல்களைத் தன் னகத்தேகொண்ட புத்தகப்பிரிவாலும், சிறப்பாக வெளியிட்டுள்ள பல தமிழ்ப் பதிப்பு நூல்களாலும் பெரும்பயன் நல்கி வருகின்றது ; தமிழுக்குப் பெருந் தொண்டினை ஆற்றிவருகின்றது.

விரைவில் நூலக வெளியீடுகளாக "நாகை கனகசபை நாதர் உலா", "வண்ணத்திரட்டு", "இராம நாடகக் கீர்த்தனைகள்", "அரிச்சந்திரன் அம்மானை" "களாபூரணோதயம்" (தெலுங்குமொழிக் காவியத்தின் தமிழாக் கம்) முதலிய நூல்கள் செம்மையான முறையில் பதிப்பிக்கப்பெற்றுத் தமிழ் மொழியை அணிசெய்யும்வண்ணம் வெளிவர உள்ளன. வருங்காலங்களில் இந்நூலகத்தின் தமிழ்ப்பணிகள் மேலும் மேம்படுதல் உறுதி.

# தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலுள்ள அரிய தமிழ்க் காகிதச் சுவடிகள்

**ம. சீராளன், பி. ஏ., எம். எல். ஐ. எஸ்.,**
*நூலகர் நிலை II*
*சரசுவதி மகால் நூலகம்.*

உலகப் புகழ்பெற்ற தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் பன்னெடுங் காலமாகத் தஞ்சையை ஆட்சி செய்த மன்னர்களால் சேகரித்து வைக்கப்பட்ட சுவடிகளை இன்றும் நாம் காணமுடிகிறது. கலைமகள் பெயர் தாங்கி அனைத்துக் கலை நூல்களையும் தன்னகத்தே கொண்டிலங்கும் இத்தொன்னூலகத்தில் ஆயிரக்கணக்கான சுவடிகள் பல்வேறு மொழிகளில் எழுதிவைக்கப் பட்டுள்ளன. ஆகவே இதனை ஓர் அரிய கலைக் கருவூலம் என்கிறோம். சுவடிகளை ஓலைச்சுவடி, காகிதச் சுவடி என இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

நம் முன்னோர்கள் ஆதியில் நூல்களை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தனர். ஆகவே ஓலைச் சுவடிகள் காலத்தால் முந்தியவை எனக் கொள்ளலாம். காகிதங்கள் தயாரிக்கத் தொடங்கியதும் நூல்களைக் காகிதங்களில் எழுதிவைக்கலாயினர். இந்நூலகத்தில் கையால் தயார் செய்த காகிதங்களிலும், இயந்திரங்களில் தயார் செய்த காகிதங்களிலும் எழுதிவைத்த சுவடிகள் சுமார் 20,540 உள்ளன. காகிதங்கள் புழக்கத்தில் வந்த பின்பும் தஞ்சை மன்னர் சிவாஜி காலம்வரை (கி. பி. 1855) ஓலைச் சுவடிகளில் பல்வேறு நூல்களையும், அன்றாட வரவு-செலவு விவரங்களையும் எழுதி வந்திருக்கின்றனர். பனை ஓலைகளில் மட்டுமில்லாது கூந்தல்பனை ஓலைகளிலும் எழுதுவர். காகிதங்களில் எழுதுவதைவிடப் பனை ஓலைகளில் ஏன் எழுதலாயினர் என்பதற்குச் சில காரணங்களையும் கூறலாம். தென்னிந்தியாவில் பனை மரங்கள் அதிகம். குறிப்பிட்ட பருவகாலங்களில் பனை மரத்திலிருந்து ஓலைகளைச் சேகரித்துப் பதப்படுத்தி வீடுகளில் கட்டுகட்டாகக் கட்டிவைத்துக் கொண்டு எழுத்தாணியால் நெட்டெழுத்துக்களில் புலவர்கள் அல்லது அறிஞர்கள் சொல்லச் சுவடி எழுதுவதில் வல்லவர்கள் எழுதுவது வழக்கமாக

---

இக்கட்டுரை 27—3—1987 அன்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக, அரிய கையெழுத்துத் தமிழ்ச் சுவடிகள் (காகிதம்) தொகுப்புப் பற்றிய கருத்தரங்கில் படிக்கப்பட்டது.

இருந்து வந்திருக்கிறது. மேலும் காகிதங்களைவிடப் பனை ஓலைகள் நீண்ட காலம் நிலைத்திருப்பவை. ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டுமுறை ஓலைச் சுவடிகளுக்குத் தைலக்காப்பிட்டு (மஞ்சள், வசம்பு, கோவை இலைச்சாறு, ஊமத்தைச்சாறு முதலியவற்றின் கலவை) பத்திரப்படுத்தி வைத்துவிட்டால் பல ஆண்டுகள் இவை கெட்டுப்போவதில்லை. ஆனால் காகிதங்கள் அவ்வாறு நீடித்து நிற்கும் தகுதி பெற்றவை அல்ல. தற்கால முறைப்படி காகிதங்களை சிப்பான், லேமினேஷன், மெண்டிங் போன்ற பாதுகாப்பு முறைகளைச் செய்தால்தான் நீண்டகாலம் நிலைத்திருக்கச் செய்யமுடியும்.

சுவடி எழுதும்போது அவற்றின் கடைசி ஏட்டில் போதிய விவரங்களைத் தந்து எழுதுவது அக்கால மரபு. மூலப்பிரதியா, மறுபிரதியா போன்ற விவரங்களும் இதிலிருந்து அறியமுடியும். எடுத்துக்காட்டாகச் சீவகசிந்தாமணி (நச்சினார்க்கினியர் உரையுடன்)[1] என்ற சுவடியின் ஈற்றுக்குறிப்பை (Colophon) கீழே தந்துள்ளேன்.

"ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீ சகாப்தம் 1550க்கு மேல் செல்லா நின்ற ஈசுவர ஹூத்து தை மீ"த்து அமரபக்ஷத்து திரிதியையும் பெற்ற ஆதித்திய வாரநாள் எழுதி முடிந்த பிரதியோடு பார்த்து சகாப்தம் 1625க்கு மேல் செல்லா நின்ற சுபானு ஹூத்து சித்திரை மீ"த்து அமரபக்ஷத்து துவாதசி 5வ வெள்ளிக்கிழமை நாள் எழுதி முகிந்தது, இந்தச்சுவடி கண்ணங்குடை பொன்னம்பலத்தா பிள்ளை புத்திரர் முத்தையா பிள்ளையவர்கள் சிந்தாமணி எழுதி முகிந்தது முற்றும்."

மேலே குறித்த செய்தியை நோக்குமிடத்துச் சுவடியிலிருந்து சுவடி படியெடுத்து வைத்துக்கொள்ளும் பழக்கம் இருந்துவந்தது என்பதும் அறிகிறோம்.

சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்ப் பிரிவில் 3518 ஓலைச்சுவடிகள் உள்ளன. இவற்றை இலக்கியம், வைத்தியம் என இரு பெரும் பிரிவாகப் பிரித்துவைத்துள்ளனர். இலக்கியப் பிரிவில் 2004 சுவடிகளும், வைத்தியப் பிரிவில் 1514 சுவடிகளும் உள்ளன. இச்சுவடிகளுக்கு விவரப்பட்டியல் (நூற் பெயர், சுவடி எண், வரிசை எண், ஏடுகளின் எண்ணிக்கை, பக்கத்திற்கு எத்தனை வரிகள், சுவடியின் அளவு, நூல் தொடக்கம், முடிவு, ஈற்றுக்குறிப்பு) தந்து இதுவரை 14 காட்லாக்குகள் அச்சாகி வெளிவந்து நூலகத்தில் விற்பனை ஆகிவருகின்றது. சுவடிகளைப் பட்டியல் செய்யும் பணி தொடர்ந்து தமிழ்ப் பிரிவின் பண்டிதர்களால் செய்யப்பட்டு வருகின்றது.

---

1 Descriptive Catalogue of the Tamil Manuscripts Volume 1 pp. 123.

சரசுவதி மகாலிலுள்ள தமிழ்ச் சுவடிகளின் பட்டியல் :

| | | | | ரூ. பை. |
|---|---|---|---|---|
| பாகம் | 1 | (இலக்கியம்) | (1925) | 5—50 |
| ,, | 2 | ,, | (1925) | 3—50 |
| ,, | 3 | (வைத்தியம்) | (1926) | 4—00 |
| ,, | 4 | ,, | (1965) | 2—50 |
| ,, | 5 | (இலக்கியம்) | (1976) | 16—50 |
| ,, | 6 | ,, | (1981) | 19—00 |
| ,, | 7 | ,, | (1984) | 21—00 |
| ,, | 8 | (வைத்தியம்) | (1985) | 8—50 |
| ,, | 9 | ,, | (1986) | 8—00 |
| ,, | 10 | (இலக்கியம்) | (1990) | 16—00 |
| ,, | 11 | (வைத்தியம்) | (1988) | 30—00 |
| ,, | 12 | ,, | (1988) | 30—00 |
| ,, | 13 | ,, | (1988) | 40—00 |
| ,, | 14 | ,, | அச்சில் | ... |

ஆகவே, தமிழ்ச் சுவடிகளின் பிரிவை முழுமையாகப் பார்த்த பின்பு சரசுவதி மகால் நூலகத்தில் எத்தனை தமிழ்க் காகிதச் சுவடிகள் உள்ளன என்று கேட்டால் ஒன்றுமில்லை என்ற பதிலைத்தான் அனைவரும் கூறுவர். அதனை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளமுடியாது. வேறு கண்ணோட்டத்தோடு மற்றப் பகுதிகளையும் பார்வையிட்டால் அரிய தமிழ்க் காகிதச் சுவடிகள் பலவற்றைக் காணமுடிகிறது. பிற மொழிப் பகுதியில் இச்சுவடிகள் வைக்கப் பட்டிருந்தாலும் அவற்றை நாம் அரிய தமிழ்க் காகிதச் சுவடிகள் என எடுத்துக் கொள்ளப் போதிய சான்றுகள் உள. அப்பகுதி என்னென்னவென்றும், அவற்றிலுள்ள நூல்களைப் பற்றியும் சிறிது விவரமாகத் தெரிந்துகொள்வோம்.

1. தமிழ்ப் பிரிவிலுள்ள காகிதச் சுவடிகள்.
2. மோடிப் பிரிவில் கிடைத்த தமிழ்க் காகிதச் சுவடிகள்.
3. வடமொழிப் பிரிவிலுள்ள தமிழ் மொழிக் காகிதச் சுவடிகள்.
4. மராத்தி மொழிப் பிரிவிலுள்ள தமிழ் மொழிக் காகிதச் சுவடிகள்.
5. படியெடுப்புப் பகுதியில் சேர்த்துவைக்கப்பட்டுள்ள தமிழ்ப் படிகள்
6. அச்சு நூல் பிரிவிலுள்ள அரிய நூல்.

**1. தமிழ்ப் பிரிவிலுள்ள காகிதச் சுவடிகள் :**

இப்பிரிவில் அழுக்குறாத் தன்மை, கடன் வாங்காமை, வைத்தியம், யூகி முனிவர் வைத்திய விளக்கம், சுமிருதி சந்திரிகை, ஆசிரிய நிகண்டு முதலிய ஆறு நூல்கள் நோட்டுப் புத்தகங்களில் எழுதிவைக்கப்பட்டுள்ளன. சுமிருதி

சந்திரிகை, ஆசிரிய நிகண்டு என்ற இரு நூல்களும் நூலக வாயிலாகப் பதிப்பாகி வெளிவந்துவிட்டன. இப்பிரதிகள் 20ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டிருக்கலாம். காகிதங்கள் மிகவும் சிதிலமாக உள்ளன. மேலும் விவரங்கள் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2. மோடிப் பிரிவில் கிடைத்த தமிழ்க் காகிதச் சுவடிகள் :

சரசுவதி மகால் நூலகத்தில் மராத்திய மன்னர்களுடைய ஆவணங்கள் 850 துணி மூட்டைகளாகக் கட்டிவைக்கப்பட்டுள்ளன. இவை காகிதக் கட்டுக்களேயாயினும் அவற்றில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் மோடி எழுத்துக்களாகும். மராத்திய மன்னர்களின் அரசியல் அலுவல்களில் இந்த மோடி எழுத்துக்களே உபயோகப்பட்டு வந்திருந்தபோதிலும் மக்கள் தங்கள் தங்கள் தாய்மொழிகளான தமிழ், தெலுங்கு, உருது, ஆங்கிலம் முதலான மொழிகளில் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்திருக்கின்றனர் என்பது இப்பகுதியில் உள்ள தமிழ் மூட்டைகளால் தெரிகின்றது.

மோடிப் பலகணி என்ற தலைப்பின் கீழ் நூலகத்தின் முன்னாள் தமிழ்ப் பண்டிதர் திரு. வீ. சொக்கலிங்கம் நூலகப் பருவ இதழ் வாயிலாக இவற்றில் காணப்படும் செய்திகளை வரிசைப்படுத்தி வெளியிட்டுள்ளார். மோடிப் பலகணி என்ற பெயர் ஏன் கொடுக்கப்பட்டது என்பதற்கு அவர் கூறும் காரணம் யாதெனில்,

> * "பெரியதொரு மாளிகையினுள் பலகணி வழியாகப் பார்த்தால் எவ்வளவு தெரியுமோ அதுபோன்று மோடி மாளிகையில் தமிழ்ப் பலகணி வழியாக நோக்கினால் தெரியும் சில முக்கியச் செய்திகளை ஈண்டு கூறுவான்வேண்டி இதற்குத் தஞ்சை அரசு ஆவணங்கள் (The Tanjore Raj Records) என்றிருந்தபோதிலும் மோடிப் பலகணி எனப் பெயர் கொடுக்கப்பட்டது."

இதுவரை மோடிப் பலகணி வரிசையில் மராத்தியர் கால நாணயங்கள், கப்பல் பற்றிய செய்திகள், கோயில்கள், உத்தரவு மற்றும் பொதுச்செய்திகள், அணிகலன்கள், மரச்சாமான்கள் முதலிய சாமான்கள், போர்ச் செய்திகள், அல்லாப்பண்டிகையின் வரலாறு முதலிய தலைப்புகளில் செய்திகள் வெளி வந்துள்ளன. இப்பகுதியில் சுமார் 148 ஆவணங்களும், முக்கிய கடிதங்களும் படியெடுப்பு செய்யப்பட்டு இரண்டு தொகுதிகளாக வைக்கப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் 1 முதல் 97 ஆவணங்களும், இரண்டாம் தொகுதியில் 98 முதல் 148 முடிய உள்ள ஆவணங்களும், மோடிப் பகுதியிலிருந்து பெற்ற

---

* Journal of T. M S S. M Library, Vol 16 No 2

முக்கிய கடிதங்களையும் படியெடுப்புச் செய்துள்ளனர்.* இவற்றை ஆய்ந்து வெளியிட்டால் மராத்தியர் கால அரசியல், பண்பாடு முதலியன பற்றி அறிந்து கொள்ள மேலும் பல செய்திகள் கிடைக்கலாம். இணைப்பு II-ல் இப்பகுதி பற்றிய விபரங்களைக் காணலாம்.

### 3. வடமொழிப் பிரிவிலுள்ள தமிழ்க் காகிதச் சுவடிகள் :

நூலகத்தின் வடமொழிச் சுவடிகள் பிரிவில் 17,586 காகிதச் சுவடிகள் உள்ளன. இவைகள் தஞ்சை மன்னர்கள் சேர்த்துவைத்த சுவடிகள் மட்டு மில்லாது கருணை உள்ளங்கொண்ட பெரியோர்கள் 20ஆம் நூற்றாண்டில் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய சுவடிகளும் இத்தொகுப்பில் அடங்கும். இப்பிரிவில் தியாகராஜர் குறவஞ்சி, வைத்தியக் குறவஞ்சி, மோகினி விலாசக் குறவஞ்சி, பாவப்பிரகாசிகா, திவ்யபிரபந்த விளக்கம், தாசீ தர்மம் என்னும் ஆறு சுவடிகள் உள்ளன. திரு. ஆத்மாராம் கோஸ்வாமி என்பவர் தம் முன்னோர்கள் நினைவாக 28—3—1927ல் நூலகத்திற்குச் சில சுவடிகளை அன்பளிப்பாக வழங்கினார். அத்தொகுதி தியாகராஜ சுவாமி கலெக்ஷன் (T. S. Collection) என்று பெயரிட்டு வைக்கப்பட்டுள்ளது. இத் தொகுப்பில் 37 சிறு மூட்டைகள் உள்ளன. அவற்றில் 1115ஆம் எண்ணுள்ள "மோகினி விலாசக் குறவஞ்சி" என்ற நாட்டிய நாடக நூல் 16 தாள்களில் தமிழ்ப் பாடல்களும், வடமொழிப் பாடல்களும் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டு உள்ளது.

இந்நூலாசிரியர் சப்தரிஷி என்பவர் திருச்சி மாவட்டம் லால்குடியைச் சேர்ந்தவர். இரண்டாம் ஷாஜி (கி. பி 1684 — 1710)யின் அவைக்களப் புலவராக விளங்கியவர். இந்நூல் மன்னர் ஷாஜியைப் பாட்டுடைத் தலைவ னாகக்கொண்டு பாடப்பட்டதாகும். இதுகாறும் பார்க்கக் கிடைத்த குறவஞ்சி நாடகங்களுள் ஷாஜி மன்னர் மீது பாடல் பெற்ற குறவஞ்சி நாடகங்கள் காலத்தால் முந்தியவை. அதற்குப் பின்னரே திருக்குற்றாலக் குறவஞ்சி படைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. இம்மன்னர் காலத்தில் குறவஞ்சி நூல்கள் தஞ்சையில் பிரபலமடைந்திருந்தன. இந்நூல் சரசுவதி மகால் வெளியீடாக வடமொழிப் பண்டிதர் திரு என். சீனிவாசன் அவர்களால் பதிப்பிக்கப்பட்டு 1985ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

தியாகராஜர் குறவஞ்சி என்ற நூல் டாக்டர் வே பிரேமலதா அவர் களால் செம்பதிப்பாக ஆய்வு முன்னுரை. போதிய விளக்கமுடன் நூலக வாயிலாக 1970ல் வெளிவந்துள்ளது. பாவப்பிரகாசிகா என்ற சுவடியில் 36 பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் சரசுவதி மகாலில் சரபேந்திர வைத்திய

---

* மோடிப் பலகணி 1 & 2 — Copied Volume No. 1633 & 1634.

முறைகள் என்ற வரிசையில் வெளிவந்துள்ள நயனரோக சிகிச்சை என்னும் கண் வைத்திய நூலில் அச்சாகியுள்ளன.

(தேவநாகரி எழுத்தில் தமிழ்ப்பாடல் எழுதப்பட்டுள்ளது)

श्री गणेशाय नमः ॥

अरोग्यमस्तु ॥

तुत्तमुडन् - उप्पिलिइन् - कोडियोडोक्क -

त्तुऋशुवघै - शमनाह - निऋत्तुकोंडू -

शुद्धपशुवेण्णै - शमन् - कूट्टि - मैपोल् - तोणवरैते - शिमुळिल् - अडत्तूवैतू -

पत्तियुडन् - शिऋपयऋपोल् - कण्णिल्पोड - पेलमान - कण्णाणिपूउंत्तीऋं.*

(மேலே கொடுக்கப்பட்டுள்ள பாடல் தமிழில் எழுதப்பட்டுள்ளது)

ஸ்ரீ கணேசாய நம: !
ஆரோக்கிய மஸ்து !
துத்தமுடன் உப்பிலியின் கொடியோ டொக்க
துருசுவகை சமனாக நிறுத்துக்கொண்டு
சுத்த பசுவெண்ணெய் சமன்கூட்டி மைபோல் தோண வரைத்தே
சிமிழில் அடைத்து வைத்து
பத்தியுடன் சிறுபயறு போல கண்ணில்போட பலமான கண்ணாணி
பூவுந்தீரும்

வைத்தியக் குறவஞ்சி என்ற நூல் அச்சாகி உள்ளதாக்க் கூறப்பட்ட போதிலும் அச்சுப் பிரதிகள் கிடைப்பது அரிதாக உள்ளது. சுவடிகள் முழுமையாக இல்லாததால் சுவடியின் ஈற்றுக் குறிப்பில் வழக்கமாகக் காணப்படும் செய்திகள் ஏதும் அறியமுடியவில்லை.

கொட்டையூர் திரு. சேஷ ஐயங்கார் அவர்களிடமிருந்து நூலகத்திற்கு **20—1—1970**ல் பல வடமொழிப் பிரதிகள் வாங்கப்பட்டன. அத்தொகுப்பில் திவ்யபிரபந்த விளக்கம், தாசீ தர்மம் என்னும் இரு படியெடுப்புகள் தமிழ் மொழியில் தாள்களில் உள்ளன.

இத்துறையின் கண்ணுள்ள சுவடிகளைப் பற்றிய விவரங்களை இணைப்பு IIIல் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

---

* Bhavaprakasika · Paper Manuscript (T M S S M L B. No 14673).

4. மராத்திப் பகுதியில் உள்ள தமிழ் மொழிக் காகிதச் சுவடிகள் :

இப்பிரிவில் 2954 காகிதச் சுவடிகள் உள்ளன. இவையாவும் கையாலும் இயந்திரங்களினாலும் தயார் செய்த காகிதங்களில் எழுதப்பட்டுள்ளன. இத் துறையில் ஓலைச் சுவடிகளே இல்லை. தாசபோதம் என்ற வேதாந்த நூலும், பஞ்ச பாஷா விலாச நாடகம் என்ற நூலும் தேவநாகரி எழுத்தில் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது. தாசபோதம் என்ற நூல் இரண்டு தொகுதி களாக முன்னாள் மராத்தி மொழிப் பண்டிதர் திரு S. கணபதிராவ் அவர் களால் பதிக்கப்பட்டு கி. பி. 1963ல் நூலக வாயிலாக வெளிவந்துள்ளது

மற்றொரு நூலான பஞ்ச பாஷா விலாச நாடகம் என்னும் நூல் இலக்கியச் சுவை மிக்க நாடக நூல். தேவநாகரி எழுத்தில் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராத்தி, (பழைய) இந்தி ஆகிய ஐந்து மொழிகளில் பாத்திரங்களைப் படைத்து ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக அமைந் துள்ள ஒரு நாடக நூல். கண்ணன் ராஜசூய யாகத்திற்குச் செல்லுகிறான், அவன் சமஸ்கிருதத்தில் பேசுகிறான். தமிழ், தெலுங்கு, மராத்தி, (பழைய) இந்தி மொழி பேசும் நான்கு பெண்களும் கண்ணனைக் காதலித்து மோகித்து விரக தாபத்தை அடைகின்றனர். இவர்களுள் தமிழ்ப் பெண்ணுக்கும் தெலுங்குப் பெண்ணிற்கும் விவாதங்கள் நடைபெறுகின்றன. இவர்கள் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வது மிகவும் வேடிக்கையாக உள்ளது. அதே போல் மராத்திப் பெண்ணிற்கும், இந்தி மொழி பேசும் பெண்ணிற்கும் விவாதங்கள் நடைபெற்று ஒருவருக்கொருவர் ஏசிக்கொள்கின்றனர்.

இந்நாடக நூல் தஞ்சை மராத்திய மன்னர் இரண்டாம் ஷாஜி (கி. பி. 1684 — 1710) அவர்களால் எழுதப்பட்டது. மராத்திப் பகுதியில் காகிதச் சுவடியாக உள்ளது. நூலகத் தெலுங்குப் பண்டிதர் திரு என். விசுவநாதன் அவர்களால் நூலகப் பருவ இதழ் வாயிலாக பதிப்பாகி கி. பி. 1966ல் வெளிவந்துள்ளது. *ஆனால் தனி நூலாக வெளிவரவில்லை.

இதனை மூலத்தோடு ஒலி பெயர்ப்புச் செய்து விரிவான முன்னுரை யுடன் தனி நூலாகப் பதிப்பித்து வெளியிட்டால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டான நாடகமாக அமையும் எனக் கருதுகிறேன்.

5. படியெடுப்புப் பகுதியில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ப்படி.

இந்நூலகத்தில் உள்ள சுவடிகளின் மூலப் பிரதியை இரு முக்கிய காரணங்களுக்காக படியெடுப்புச் செய்து வைத்தனர். அதாவது மூலப்பிரதி மிகவும் சிதலமாக இருந்தால் காலப்போக்கில் அழிந்துவிடும் என்பதற்காகவும் சுவடியை அச்சிடும் போது பதிப்பாசிரியர்களுக்கு மூலச்சுவடியை நூலகத்தை·

* Journal of T. M. S. S. M Library Vols. 18 (No. 3); 19 (Nos 1, 2 and 3).

விட்டு வெளியே கொடுக்க இயலாது என்பதற்காகவும் படியெடுப்பு செய்யப் பட்டது. இவ்வாறு படியெடுப்புச் செய்து 6283 தொகுப்புகள் வைக்கப் பட்டுள்ளன. இவற்றில் சுமார் 1500 தமிழ் நூல்களின் தொகுப்புக்கள் உள்ளன. ஒரு சில தொகுப்புக்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட தலைப்புகளும் உள்ளன. தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி முதலிய மொழிச் சுவடி களை படியெடுத்து இதே பிரிவில் வரிசை எண் இட்டு வைக்கப்படுகிறது.

இப்பிரிவில் உள்ள படியெடுப்பு தொகுப்பில் பல சான்றோர்கள் தங்கள் இல்லத்தில் தம் முன்னோர்கள் ஏடு பார்த்து எழுதி வைத்த நோட்டுப் புத்தகங்களை இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். மற்றும் பொள்ளாச்சி திரு. N. மகாலிங்கம் போன்ற ஆர்வலர்கள் வெளியிடங்களி லுள்ள சுவடிகளைப் படியெடுத்தும் நூலகத்திற்கு அன்பளிப்பாகத் தந்துள் ளனர். மேலும் நூலகமே வெளியாரிடம் உள்ள சுவடிகளைப் பார்த்து நூலகத்திற்குப் படியெடுப்புச் செய்துகொண்டவைகளும் இத்தொகுப்பில் அடங்கும். இத் தொகுப்பிற்கு நூலகத்தில் மூலப்பிரதிகள் கிடையாது. நூலகத்திலும் இதற்கு முன் வேறு பிரதிகள் கிடையாது ஆகவே நாம் இவற்றை அரிய காகிதச் சுவடிகள் என்றே கருதவேண்டியுள்ளது.

படியெடுப்புப் பிரதிகளை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். அவை மூலச்சுவடிகளின் நிலைமை, அரிய தன்மை முதலியவற்றைக் கருத்தில்கொண்டு படியெடுப்பு செய்யப்பட்டவைகள், 2. பதிப்பாசிரியர்களுக்கு பதிப்புப் பணிக்காக சுவடிகள் வெளியே எடுத்துச் செல்லக்கூடாது என்னும் விதிக்கேற்ப படியெடுப்பு செய்து கொடுப்பவைகள் என இருபாற்படும். நூலகத்திற்குச் சான்றோர்கள் சிலர் தமது சொந்த பயன்பாட்டிற்கு படியெடுப்பு செய்து வைத்திருந்த நோட்டுப் புத்தகங்களை அன்பளிப்பாக கொடுத்துள்ளனர். மேலும் நூலகமே பல நிறுவனங்களிலிருந்து இந்நூலகத்தில் இல்லாத சுவடி களை படியெடுப்புச் செய்து வாங்கி வைத்துள்ளது. இப்படிகளுக்கெல்லாம் மூலச்சுவடி இந்நூலகத்தில் இல்லாமையால் இவற்றையே காகிதச் சுவடி எனக் கருதுவது அவசியமாகின்றது. கீழே குறித்துள்ள வரைவு இவ்விவரத்தினை மேலும் தெளிவுபடுத்தும் எனக் கருதி குறிக்கப்பட்டுள்ளது.

1. சுவடி படியெடுப்பிற்குக் காரணம்

பாதுகாப்பிற்கு எடுத்தது | பதிப்புப் பணிக்காக எடுத்தது

2. படியெடுப்புப் பிரதி

சான்றோர்கள் வழங்கியது | நூலகம் பிற நிறுவனங்களிலிருந்து படியெடுத்தது

இப்பிரிவில் காகிதச் சுவடி எனக் கருதத் தக்க படிகளின் விவரப் பட்டியல் இணைப்பு IVல் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் இலக்கண விளக்கம், கொடுந்தமிழ், செந்தமிழ், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து முதலிய நூல்கள் சரசுவதிமகால் வாயிலாக வெளிவந்துள்ளன. இத்தொகுப்பிலுள்ள தணிகைப் பிள்ளைத் தமிழ், தணிகைக் கலம்பகம், தணிகை அந்தாதி தணிகை உலா முதலிய நான்கு நூற்களையும் 'தணிகைக் கொத்து' என்ற தொகுப்பு நூலாக வெளியிட்டால் பயனுடையதாகும். பதினெண்சித்தர்களில் ஒருவரான கோரக்கர் அருளிய தொகுப்பு நூல் ஒன்றும் வெளியிடத் தகுந்தவையாகும்.

**அச்சுநூல் பிரிவிலுள்ள அரிய காகிதச் சுவடி எனத் தகும் நூல்:**

நூலகத்திலுள்ள அச்சு நூல்களை 1. மன்னர் தொகுப்பு (Rajah's Collection) 2. தற்கால நூல்கள் (Modern Printed books) என இரு பிரிவுகளாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளது. மன்னர் தொகுப்பில் 4302 நூல்கள் உள்ளன. இந்நூல்கள் பெரும்பாலும் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் வெளிநாடுகளில் அச்சானவை இந்நூல்கள் ஆங்கிலம் மற்றும் பல ஐரோப்பிய மொழிகளில் உள்ளன. மன்னர் தொகுப்பில் கீழே குறித்துள்ள நூல் ஒரு அரிய நூலாகக் கருதத்தகுந்தது. ஓலைச்சுவடியில் உள்ள எழுத்துக்களை அப்படியே ப்ளாக் செய்து காகிதங்களில் அச்சிட்டு இருந்தாலும் அரிய தமிழ்க் காகிதச் சுவடி என்று எடுத்துக் கொள்ளலாம்.

**அந்நூல் பற்றிய விவரம் பின்வருமாறு :***

| | |
|---|---|
| Oriental Historical Manuscripts | ஓரியண்டல் ஹிஸ்டாரிக்கல் மானுஸ்கிருப்ட்ஸ் |
| in the Tamil Language | இன் தி தமிழ் லாங்வேஜ் |
| Translated with annotations By | மொழி பெயர்க்கப்பட்டது |
| William Taylor, Missionary | வில்லியம் டெய்லர், மிஷினரி |
| in two Volumes | 2 தொகுதிகள் |
| Madras | சென்னை |
| 1835 | 1835 |

இந்நூல் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் கி. பி. 1835ல் இரண்டு தொகுதிகளாக அச்சாகியுள்ளன. இவற்றில் வரலாற்றுக்குத் துணை

* Rajah's Collection English No. 1765 & 1768.

செய்யும் செய்திகளும், புராண இதிகாச நிகழ்ச்சிக் குறிப்புகளும், பல சுவடிகளின் விவரங்களும் காணமுடிகிறது. தமிழ்மொழி மூலமும் ஆங்கில மொழி பெயர்ப்பும் ஆக 578 பக்கங்கள் உள்ள இந்நூலில் தமிழ்ப்பகுதி மட்டும் 93 பக்கங்களில் அச்சாகி உள்ளன. இதற்கு ஆங்கில மொழிபெயர்ப்பும் எதிர் புறம் தரப்பட்டுள்ளன. இவற்றின் மாதிரிப்படி ஒன்று கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

Volume 1. பக்கம் 4 & 5 Chapter 1. (**தமிழ்ப்படி**) *(மூலத்தில் உள்ளது)*

*ஸ்ரீமதுசகல லொக சிருஷிட்டி திதி சஙகாரகாா னெசுாாாயிருககிற ஸ்ரீ பாமெசுானுடைய கருணையிணலெ சகல சீவா றறு மாககளையும பிறபபிலிககிற நிமிததியம பிறம்பதெவனா உணடு பணணினா அந்த பிறமம தெவருககு வயசு எவவளவு எனறால மனுஷாகள கணசிமிடடுகிற நோம ஒரு நிமிசமெனறு போ.*

**மேலே எழுதியுள்ள பத்தியின் ஆங்கில மொழி பெயர்ப்பு** *(மூலத்தில் உள்ளது)*

The Supreme Ishvar is the creater, preserver and destroyer of all world. The supreme heavenly Ishvaran, by his grace, (or favor) made the god Brahma, for the purpose of producing all living souls. Now, the age of this god Brahma is as follows: The time of winking the eye is one moment.

*(மேலே கொடுக்கப்பட்டுள்ள தமிழ்ப்படியினைத் திருத்தி எடுத்துக்காட்டிற்காக கீழே தரப்பட்டுள்ளது)*

ஸ்ரீமத் சகல லோக சிருஷ்டி சங்கராகாரணேசுரராயிருக்கிற ஸ்ரீபரமேசுவரனுடைய கருணையினாலே சகல சீவாத்துமாக்களையும் பிறப்பிக்கிற நிமித்தம் பிரம்மதேவனார் உண்டு பண்ணினார். அந்த பிரம்மதேவருக்கு வயசு எவ்வளவு என்றால் மனுஷர்கள் கண்சிமிட்டுகிற நேரம் ஒரு நிமிசமென்று பேர்.

இந்நூலினை ஆய்ந்து மறு பதிப்பு வெளியிடுதல் மிக்க பயனுள்ளதாக அமையுமெனக் கருத இடமுள்ளது. இத்தகு சிறப்பு மிக்க அரிய சுவடிகளின் கலைக் கருவூலம்தான் தஞ்சை சரசுவதிமகால் நூலகம்.

வாழ்க சரசுவதி மகால் நூலகம்! ஓங்குக அதன் புகழ் !!

## இணைப்பு — I தமிழ்ப் பிரிவிலுள்ள காகிதச் சுவடிகள்

| வ. எண் | சுவடியின் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 1. | அழுக்குறாத் தன்மை பகுதி - 1 | 30 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. |
| 2. | ,, பகுதி - 2 | ,, |
| 3. | ஆசிரிய நிகண்டு பகுதி - 1 | தமிழ்ப் பேரறிஞர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களுடைய காகிதச் சுவடி பின்னர் பண்டிதர் திரு அ. கந்தசாமிப் பிள்ளை அவர்களிடம் வந்து, அதன் பின் அவருடைய மாணாக்கரான போளுவாம்பட்டி திரு ஐ. இராமசாமி அவர்கள் மூலம் 29-9-84ல் மகாலுக்கு வரப்பெற்றது. |
| 4. | ,, பகுதி - 2 | ,, |
| 5. | கடன் வாங்காமை | 18 தாள்களில் எழுதப்பட்டுள்ளது. |
| 6. | சுமிருதி சந்திரிகை | நூலகப்பருவ இதழ் வாயிலாக |
| 7. | ,, | ,, [வெளிவந்துள்ளது. |
| 8. | ,, | ,, |
| 9. | பூகி முனிவர் வைத்திய விளக்கம் | 120 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. |
| 10. | வைத்தியம் | பெரிய சைஸ் நோட்டுப் புத்தகம் — சைஸ் 12" x 9" — 26 தாள்கள் 11-11-65ல் மராத்தி பகுதியிலிருந்து வந்த தமிழ்க் காகிதச் சுவடி. |

## II மோடிப் பிரிவில் கிடைத்த தமிழ்க் காகிதச் சுவடிகள் :

மோடிப் படிகள்:
1. அனிசலன்கள்
2. உத்தரவுகளும் பொதுச் செய்திகளும்
3. கப்பல் செய்தி
4. கோயில்கள்
5. நாணயங்கள்

மோடிப் பலகணி : 6. போர்ச் செய்திகளும், அல்லா பண்டிகை வரலாறும்
7. மரச்சாமான் முதலிய சாமான்கள்

குறிப்பு : சி. எண் 1633 & 1634. இரண்டு தொகுதிகள் 1—480 & 481 — 610 பக்கங்களில் ஆவணங்கள் 1—97 & 98—148 முடிய உள்ளன. மோடிப் பிரிவைச் சார்ந்த சில கடிதங்களும் படி எடுக்கப் பட்டுள்ளது. இங்கு குறிப்பிட்டுள்ள ஏழு கட்டுரைகளும் நூலகப் பருவ இதழ் வாயிலாக வெளிவந்துள்ளன.

## III வடமொழிப் பிரிவிலுள்ள தமிழ்க் காகிதச் சுவடிகள்

| வ. எண். | சுவடியின் பெயர் | | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | தியாகராஜர் குறவஞ்சி | No. 18 | தேவநாகரி எழுத்து-தமிழ்மொழி-காகிதம் கையால் செய்தது போன்று காணப்படுகிறது. குறவஞ்சி இலக்கியம். |
| 2. | பாவப் பிரகாசிகா | B. No. 14673 | தேவநாகரி எழுத்து-தமிழ்மொழி-இந்நூல் எழுதி வைக்கப்பட்டுள்ள காகிதம் நன்றாக உள்ளது. மிஷினில் தயார் செய்த காகிதம் போன்று உள்ளது. வைத்தியம். |
| 3. | வைத்தியக் குறவஞ்சி | — | தேவநாகரி எழுத்து-தமிழ்மொழி-இந்நூல் கையால் தயார் செய்த காகிதங்களால் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதியிருக்கலாம் எனத் தெரிகிறது. வைத்திய நூல். |
| 4. | மோகினி விலாசக் குறவஞ்சி | T. S. No. 1115 – 16 தாள்கள் | – தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் கி. பி. 1985ல் வடமொழிப்பண்டிதர் திரு N. சீனிவாசன் அவர்களால் பதிப்பாகி, நூலகத்தின் வாயிலாக வெளிவந்துள்ளது. |

## IV மராத்திப் பகுதியில் உள்ள தமிழ் காகிதச் சுவடிகள்

| வ. எண் | நூற்பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 1. | தாசபோதம் | தேவநாகரி எழுத்து — தமிழ்மொழி. இந்நூல் முன்னாள் மராத்தி மொழிப்பண்டிதர் திரு எஸ். கணபதி ராவ் அவர்களால் ஒலிபெயர்ப்பு செய்து கி. பி. 1963ல் நூலகத்தின் வாயிலாக வெளியாகி உள்ளது. |
| 2. | பஞ்சபாஷ விலாசநாடகம் | இந்நூல் மராத்தி பிரிவில் வைக்கப்பட்டிருப்பினும் கண்ணன் சமஸ்கிருதத்தில் பேசுவதாகவும் மற்ற பெண்கள் ஐவரும் தத்தம் தாய்மொழியான தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி, பழைய இந்தி முதலான ஐந்து மொழிகளில் பேசப்படுகிறது. 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. |

## V படியெடுப்புப் பகுதியில் (Copied Volume) சேர்த்து வைக்கப்பட்டுள்ள அரிய தமிழ்ப்படிகள்

| வ. எண் | நூற்பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 1. | அனுமாரின் ஆன்ம நியாசம், பிரம்ம கல்பம் ஆகிய 12 சிறு நூல்களை உள்ளடக்கிய தொகுதி | C. No. 1748 ஒரு குயர் நோட்டுப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. கீழையூர் அஞ்சலைச் சேர்ந்த தெ. ஈசனூர் சோ. சுப்பையா என்பவர் கொடுத்தது. இவர் கோரக்கர் எழுதிய நூல்கள் அடங்கிய வேறொரு நோட்டும் கொடுத்துள்ளார். |
| 2. | பாலபோத விலக்கணம் | சி. எண் 2264 விசாகப் பெருமாளையர் எழுதிய இந்நூலின் ஐந்தாம் பதிப்பு சென்னையில் 1870 அச்சானது. அப்பிரதியின் படியெடுப்பு. |

| வ. எண். | நூற்பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 3. | நாலடியார் விருத்தி | சி. எண் 1387 - தருமபுரம் ஏடு பார்த்து எழுதப்பட்ட படி. |
| 4. | இலக்கண விளக்கம் | சி. எண் 2258 பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்களால் படியெடுத்து நூலகத்திற்கு வழங்கப்பட்டது. |
| 5. | கொடுந்தமிழ் | சி. எண் 2260 ,, |
| 6. | செந்தமிழ் | சி. எண் 2267 ,, |
| 7. | பிரயோக விவேகம் | சி. எண் 2274 ,, |
| 8. | இலக்கணக் கொத்து | சி. எண் 2275 ,, |
| 9. | மன்னர் சரபோஜி பற்றிய வேதநாயக சாஸ்திரியார் குறிப்பு | சி. எண் 1628 தஞ்சை மிஷின் பிஷப் வேதநாயகம் அவர்களிடமிருந்து திரு S. கோபாலையர் படியெடுத்துக்கொடுத்தது |
| 10. | இராஜசரித்திர வம்சாவளி | சி. எண். 1248 புதுவை மேயர் திருமுடி N. சேதுராமன் அவர்களால் 30—5—54ல் படியெடுத்து வழங்கப்பட்டது. |

# பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ் நூல்கள்

திருமதி **கே. இராமதிலகம்,** பி.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,
நூலகர் நிலை II,
**சரசுவதி மகால் நூலகம்.**

தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிசெய்த சோழப்பேரரசர்கள் திக்கெட்டும் சென்றும், கடல்கடந்து வென்றும் கொண்டுவந்த செல்வத்தைக் கோவில் கட்டுவதில் கொட்டினார்கள். இவர்களது ஆட்சிக் காலத்தில் ஆலயங்கள், கல்விக்களமாகவும், நூலகமாகவும் போற்றப்பட்டுவந்தமையைச் சாசனவாயிலாக அறியமுடிகிறது. அதனைத் தொடர்ந்தே மராட்டிய மன்னர் சரபோஜி **(1798—1832)** அவர்களால் விரிவுசெய்து நிறுவப்பட்ட தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தின்கண் உள்ள தமிழ்மொழி அச்சுப் புத்தகங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்துள்ள பதிப்புக்களைப்பற்றிய ஒரு விவர அட்டவணையை ஈண்டுக் காண்போம்.

உரிமை எழுச்சிக்கு அஞ்சிய ஆங்கிலத் துரைத்தனத்தார் இந்திய மொழிகளில் நூல்களை அச்சிடுதல் ஆகாது என்று சட்டம் செய்தனர். பின்னர் சில நல்லெண்ணம்கொண்ட ஆங்கில அலுவலர்களின் முயற்சியால் இத்தடை நீங்கியது. அவ்வமயம் "மருடாக்" என்பவர் ஓர் அட்டவணையை வெளியிட்டார். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் பதிவுபெற்ற பதிப்புகளின் விவர அட்டவணையை **1961**-ல் தமிழ்நாடு அரசினர் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற வெளியீடாக வந்துள்ளது.

இதுபோன்றதொரு காலகட்டத்தில் பல்லாயிரக்கணக்கான புது நூல்களும் பழைய நூல்களின் பதிப்புகளும் வெளிவந்துள்ளன. அவைகளில் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த நூல்கள் எத்தனை உள்ளன ? பதிப்பித்த ஆண்டு, என்னென்ன துறைசார்ந்த நூல்கள் போன்ற விவரங்கள் இதன்கண் உள்ளன. இப்பட்டியலில் **268** நூல்களுக்கான விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

பொருள் அட்டவணை

1. கணிதம்
2. பொறியியல்
3. விலங்கியல்
4. மருத்துவம்
5. சித்தியல்
6. இலக்கியம்
7. மொழி இயல்
8. மதம்
9. தத்துவம்

## தமிழ்நூல் விவரப்பட்டியல்

(பதிப்பிக்கப்பட்ட ஆண்டு வரிசைப்படி கொடுக்கப்பட்டுள்ளது)

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண். |
|---|---|---|
| **கணிதம்** | | |
| *1871* | கணக்கதிகாரம் | T *792* |
| **பொறியியல்** | | |
| *1885* | மனையடி சாஸ்திரம் | *10222* |
| **விலங்கியல்** | | |
| *1858* | தாபரசங்கம சாத்திரம் | *2504* |
| **மருத்துவம்** | | |
| *1863* | ஆத்மரட்சாமிருதம் | *9397* |
| *1869* | சுகாதாரவிளக்கம் | *2513* |
| *1869* | மச்சமுனி பெருநூல் வைத்திய காவியம் | *1223* |
| *1876* | பதார்த்த குணசார சங்கிரகம் | *1248* |
| *1879* | சட்டமுனி நிகண்டு | *1222* |
| *1879* | வைத்திய வல்லாதி 600 | *1272* |
| *1880* | அகத்தியமுனிவர் வைத்திய ரத்தினச் சுருக்கம் | *1249* |
| *1880* | ஆத்மரக்ஷாமிர்தம் | *1214* |
| *1880* | வயித்திய காவியம் | *8494* |
| *1881* | வைத்தியம் எண்பது | *1260* |
| *1886* | do | *1257* |
| *1881* | ஜயமுனி சூத்திர மொழிபெயர்ப்பு | *4201* |
| *1883* | தன்வந்திரி வைத்திய சிந்தாமணி *1200* | *1206* |
| *8183* | திருமூலர் வைத்திய காவியம் *1000* | *1196* |

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண். |
|---|---|---|
| 1883 | பலதிரட்டு ஜாலமும் சிதம்பர சக்கரம் | 1209 |
| 1883 | போகர் நிகண்டு 1200 | 1191 |
| 1884 | திருமூலர் கருக்கிடை வைத்தியம் 600 | 1199 |
| 1884 | போகர் முனிவர் பெருநூல் | 1187 |
| 1884 | வைத்திய தைல முறைகள் | 1273 |
| 1884 | ஜாலத்திரட்டு | 1201 |
| 1885 | அகத்தியர் வாத சூத்திரம் | 1213 |
| 1885 | ஆயுள்வேதம் | 7395 |
| 1885 | வயித்திய பாலவாகடம் | 8493 |
| 1885 | சிகிச்சா சார சங்கிரகம் | 1204 |
| 1886 | do | 4293 |
| 1886 | திருவள்ளுவர் ஞானவெட்டி | 1197 |
| 1888 | அகத்தியர் பூரணகாவியம் | 2376 |
| 1888 | நன்வந்திரி கருக்கிடை நிகண்டு 300 | 1207 |
| 1888 | தாதுவிர்த்தி போதினி | 1221 |
| 1888 | தேரையர் வைத்தியம் 1001 | 1192 |
| 1888 | நந்திநூல் சாத்திரம் 108 | 1235 |
| 1888 | பதார்த்த குணசிந்தாமணி | 7980 |
| 1888 | போகர் சத்தகாண்டம் 7000 | 1245 |
| 1888 | வயித்திய காவியம் ஆயிரம் | 4220 |
| 1890 | கருவூரார் பலதிரட்டு | 7995 |
| 1890 | பாலவாகட திரட்டு | 1274 |
| 1890 | வைத்திய சிந்தாமணி | 1250 |
| 1890 | வைத்திய சாரசங்கிரகம் | 1240 |
| 1891 | போகமுனிவர் 7000 | 1950 |
| 1891 | யாகோபு வாத திறவுகோல் | 1211 |
| 1891 | ஜால சூத்திரத்திரட்டு | 796 |
| 1891 | ஜால நிகண்டு 200 | 1281 |
| 1892 | பால வாகடம் சிமிட்டு ரத்தனங்கள் | 804 |
| 1892 | போகர் ஜெனனசாகரம் | 1189 |
| 1892 | வயித்திய சாரசங்கிரகம் | 4230 |
| 1892 | வைத்திய மலையகராதி | 1276 |

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண். |
|---|---|---|
| 1892 | ஜாலநிகண்டு 200 | 722 |
| 1893 | போகர் சரக்குவைப்பு 800 | 1188 |
| 1893 | போகமுனிவர் சரக்குவைப்பு 800 | 7991 |
| 1894 | அகத்தியர் வைத்தியம் | 1256 |
| 1894 | ஆயுர்வேதம் 1200 | 1283 |
| 1894 | தேரையர் வைத்தியம் 1500 | 1194 |
| 1895 | சரபோஜியின் வைத்தியராஜ பாலவாகடம் | 1214 |
| 1895 | சரபோஜியின் வைத்தியராஜ சிந்தாமணி | 1252 |
| 1898 | do | 1251 |
| 1895 | பிராணரக்ஷாமிர்த சிந்து | 4240 |
| 1895 | யூகிமாமுனிவர் பெருநூல் வைத்திய காவியம் 1000 | 1203 |
| 1896 | இந்து குடும்ப அனுபோக வைத்தியராஜ ரத்ன சிந்தாமணி | 1275 |
| 1896 | நாலுகாண்ட வைத்திய காவியம் 1200 | 1284 |
| 1896 | வைத்திய சதகம் | 1220 |
| 1897 | அகத்தியர் பூரண சூத்திரம் 216 | 1279 |
| 1897 | அகத்தியர் வைத்திய காவியம் 1500 | 1253 |
| 1897 | ஆத்மரட்சாமிர்தம் | 2555 |
| 1897 | கன்மகாண்டம் 300 | 1288 |
| 1897 | சட்டமுனிவர் வாதகாவியம் 1000 | 1212 |
| 1891 | தேரையர் வைத்தியம் 500 | 1193 |
| 1897 | பஞ்சபட்சி சாஸ்திரம் | 806 |
| 1897 | பூரண சூத்திரம் 216 | 10175 |
| 1897 | பேதவாத திரஸ்காரம் | 7210 |
| 1897 | மருந்து விஷமாற்றுத்திரட்டு | 791 |
| 1897 | வயித்திய காவியம் | 9416 |
| 1897 | வையித்திய காண்டம் பாண்டுவைப்பு - 600 | 1287 |
| 1898 | அகத்தியர் பரிபாஷைத்திரட்டு | 1280 |
| 1898 | ஆயுள்வேத களஞ்சியம் | 1242 |
| 1898 | வயித்திய ரத்தினச் சுருக்கம் | 7999 |
| 1899 | ஊர்வசி பஞ்சரத்னம் | 805 |
| 1899 | விஷவைத்திய சிந்தாமணி | 4495 |

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண் |
|---|---|---|
| **சித்தியல்** | | |
| 1882 | பட்டினத்துப் பிள்ளையார் புராணம் | 1976 |
| 1887 | பட்டினத்துசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு | 1131 |
| 1889 | சகாதேவ சாஸ்திரம் - நிமித்த சூடாமணி | 9464 |
| 1891 | வினோத ஜாலக்கண்ணாடி | 1239 |
| 1892 | சந்திர காவியம் | 6940 |
| 1892 | திருப்பாடற்றிரட்டும் உடற்கூற்றுவண்ணமும் | 8338 |
| 1893 | ஞானசாரநூல் சாத்திரம் | 1014 |
| 1892 | பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு | 1142 |
| 1893 | விசாரசாகரம் | 5836 |
| 1895 | சுகர்நாடி சோதிடம் | 4158 |
| 1895 | வள்ளலார் சாத்திரம் | 9881 |
| 1896 | பட்டினத்துப் பிள்ளையார் புராணம் | 1182 |
| 1899 | கேரள சோதிடம் | 10210 |
| **இலக்கியம்** | | |
| 1885 | மகாபாரதம் - வசனம் | 5664 |
| 1887 | அர்ச்சுணன் தபசு | 4170 |
| 1891 | மகாபாரதம் | 4052 |
| 1891 | do | 4053 |
| 1893 | உருக்குமணி கல்யாணம் | 9907 |
| 1889 | ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் | 5662 |
| 1861 | வைகுந்த அம்மானை | 10214 |
| 1869 | திருச்செந்தூருக்கு காவடியெடுத்த பரமாலை | 9554 |
| 1872 | நபுயுல்லாபேரில் தாலாட்டு | 1161 |
| 1883 | வைராக்கிய சதகம் | 7410 |
| 1878 | சக்கிலிச்சி சிங்காரப்பாட்டு | 1143 |
| 1878 | மானிடக்கும்மி | 1148 |
| 1882 | ஆறுமுக நாவலர் சரித்திரம் | 8314 |
| 1882 | தில்லாலேடப்பா சிங்காரப்பாட்டு | 1155 |
| 1884 | சாவல் பாட்டு | 1158 |
| 1887 | do | 1157 |

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண். |
|---|---|---|
| 1884 | ஸ்ரீ முத்துகுமாரசுவாமிபேரில் பதம் | 9467 |
| 1896 | do | 9471 |
| 1885 | சிதம்பரக்கும்மி | 303 |
| 1886 | சிங்காரப்பதம் | 1147 |
| 1886 | பிள்ளைவிடுதூதின் மறுப்பு என்கிற சிசுதௌத்திய திரணசண்ட மாருதம் | 8333 |
| 1887 | சீவக சிந்தாமணி | 1418 |
| 1887 | பெண்மதிமாலை, பெண்கல்வி (முதல்பதிப்பு) | 9570 |
| 1888 | மதுரைக்கோவை | 7121 |
| 1888 | ஸ்ரீ பக்த லீலாமிர்தம் | 7339 |
| 1888 | திருச்சிற்றம்பல வெண்பாவந்தாதி | 6459 |
| 1888 | வருணகுலாதித்தன் மடல் | 7130 |
| 1889 | பத்துப்பாட்டு மூலம் | 1419 |
| 1889 | மனோரஞ்சித அலங்காரம் | 1160 |
| 1889 | வீரராகவன்பட்டணம் வழிநடை சிந்து | 9664 |
| 1891 | கைலாசநாதர் சதகம் | 1178 |
| 1891 | ஸ்ரீதண்டபாணிவிருத்தம், ஸ்ரீமுத்துக்குமாரர் ஊசல் முதலியன | 8323 |
| 1891 | do | 6838 |
| 1891 | திருவெற்றியூர்க் கலம்பகம் | 6614 |
| 1891 | சிலப்பதிகாரம் | 6090 |
| 1893 | சீவகசிந்தாமணி வசனம் | 5310 |
| 1893 | தஞ்சைவாணன் கோவை | 9855 |
| 1894 | புறநானூறு — மூலமும் உரையும் (உ. வே. சா., முதல்பதிப்பு) | 6210 |
| 1894 | do | 2419 |
| 1894 | do | 2420 |
| 1894 | திருமாலைக்கு ப்ரதிபதம் | 9472 |
| 1894 | தனிப்பாடற்றிரட்டு | 6160 |
| 1895 | சாத்திரக்கோவையும் பெரியநாயகியம்மன் பதிகமும், நெஞ்சுவிடு தூதும் | 9917 |
| 1895 | do | 9873 |
| 1895 | do | 9917 |
| 1895 | do | 7228 |

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண். |
|---|---|---|
| 1895 | புறப்பொருள் வெண்பாமாலை | 6284 |
| 1896 | முத்துக்குமரரஸ்வாமிபேரில் சுப்ராமையர் பதம் | 9471 |
| 1897 | பெண்புத்திமாலை | 1172 |
| 1897 | கோம்பி விருத்தம் | 6315 |
| 1898 | மணிமேகலை (உ. வே. சா. பதிப்பு) | 2391 |
| 1898 | do | 6118 |
| 1899 | திராவிடப் பிரகாசிகை | 6194 |

## மொழியியல்

| | | |
|---|---|---|
| 1848 | கொடுந்தமிழ் | 279 |
| 1852 | ஆங்கிலம் - தமிழ் அகராதி | 1171 |
| 1858 | கிரந்தமந்தணகூடம் ! தொல்காப்பியம் நன்னூல் | 6860 |
| 1860 | சதுரகராதி | 6130 |
| 1868 | சேந்தன் திவாகரம் | 1169 |
| 1880 | do | 1170 |
| 1864 | நன்னூற் சுருக்கம் | 2499 |
| 1875 | நன்னெறிப் பதவுரை | 1165 |
| 1889 | சேந்தன் திவாகரம் | 7116 |
| 1889 | நன்னூற் மூலமும் காண்டிகையுரையும் | 8339 |
| 1890 | பிங்கல நிகண்டு | 9850 |
| 1893 | பேரகராதி | 1138 |
| 1895 | குவலயாநந்தம் | 6129 |
| 1897 | தமிழ் இலக்கணம் | 2500 |

## மதம்

| | | |
|---|---|---|
| 1805 | சிறுத்தொண்டநாயனார் சரித்திரக் கீர்த்தனை | 9469 |
| 1867 | ஹிந்துதர்ம சாஸ்திர சங்கிரகம் | 7884 |
| 1879 | ஸ்ரீசங்கர விஜயம் | 283 |
| 1881 | நித்திய கன்மநெறி | 8263 |
| 1881 | பஞ்சபத மகாவாக்கியம் | 7289 |
| 1882 | தலயாத்திரை பொதுவிதி காசிமான்மியம் | 2426 |
| 1885 | விநாயகரகவல் | 7247 |
| 1887 | தட்சிணாமூர்த்தி கேசரி | 4572 |

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண். |
|---|---|---|
| 1887 | திருசிராமலை புராணம் | 2422 |
| 1887 | சர்சமய சமரச கீர்த்தனைகள் | 1176 |
| 1889 | அரி கீர்த்தனைகள் | 9466 |
| 1889 | சிவதூஷண பரிகாரம் | 6271 |
| 1889 | சிவனடியார்கள் வரலாறு | 4567 |
| 1890 | விரதமான்மியம் | 7293 |
| 1890 | சிவாலய மான்மியக்கோவை | 4515 |
| 1890 | ஞானவாசிட்டம் | 4163 |
| 1890 | do | 7359 |
| 1891 | கண்ணப்பசுவாமிகள் சரித்திரக் கீர்த்தனம் | 6697 |
| 1891 | தாயுமானசுவாமிகள் பாடல் | 6125 |
| 1802 | நிஷ்டானுஷ்டான விதி | 1977 |
| 1893 | அருணாசல புராணம் | 10206 |
| 1893 | தஞ்சை மாநகர தலபுராணம் | 7186 |
| 1893 | தேவாரப்பதிக திருமுறை | 7373 |
| 1893 | தேவாரப் பதிகங்கள் | 7372 |
| 1893 | நித்யாநுஸந்தாநம் | 9473 |
| 1893 | ஜீவகாருண்ய ஒழுக்கம் | 8357 |
| 1895 | விநாயக புராணம் | 2453 |
| 1896 | சண்மத சமரச சாதீத சித்விலாச நாமாவளி | 8298 |
| 1896 | do | 6731 |
| 1896 | திருவிளையாடற் புராணம் | 2394 |
| 1896 | பெரிய புராணம் | 6100 |
| 1898 | do | 6103 |
| 1898 | do | 6104 |
| 1896 | மருதவன புராணம் (சிவக்கொழுந்து தேசிகர்) | 8065 |
| 1897 | சுப்ரமணியர் ஞானம் | 4541 |
| 1897 | திருவாசகம் | 9880 |
| 1897 | do | 6122 |
| 1897 | ஸ்ரீ நடராஜர் திருப்புகழ் | 8294 |
| 1897 | நிஷ்டானுபூதி மூலம் | 7404 |
| 1897 | do | 5846 |

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண். |
|---|---|---|
| 1897 | நூற்றெட்டு திருப்பதித் திருப்புகழ் | 8294 |
| 1897 | பிரமோத்தர காண்டம் | 7359 |
| 1898 | பெரிய புராணம் | 191 |
| 1898 | do | 192 |
| 1898 | do | 193 |
| 1898 | வேதாரணிய புராணம் | 7374 |
| 1899 | காளையார்கோவிற் புராணம் | 7378 |
| 1899 | திருநாவுக்கரசு நாயனார் சரித்திரம் | 6459 |
| 1899 | திருப்பாடற்றிரட்டு | 7250 |
| 1899 | திருவிடையூர்த்தலபுராணம் | 6187 |

**வைணவம்**

| | | |
|---|---|---|
| 1877 | ஸ்ரீபாகவத கீர்த்தனை | 6184 |
| 1878 | ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரம் | 8583 |
| 1880 | திருவாய்மொழி | 8549 |
| 1881 | பெரிய திருமொழி | 8614 |
| 1881 | முதலாயிரம் மூலமும் வியாக்யானமும் | 8563 |
| 1882 | do | 8569 |
| 1882 | வார்த்தா மாலை | 1949 |
| 1882 | do | 7371 |
| 1886 | தேசிகப்பிரபந்தம் - அமிர்தரஞ்சனி முதலான பிரபந்தங்கள் | 8565 |
| 1886 | தேசிகப்பிரபந்தம் | 8574 |
| 1886 | ராமாநுஜர் திவ்யசரிதை | 8568 |
| 1888 | திருவரங்கத்தந்தாதி | 4192 |
| 1888 | பக்தவிஜய அவதாரிகை | 10228 |
| 1888 | ஸ்ரீஹரிநாம சங்கிர்த்தனம் | 10213 |
| 1889 | இராமாநுஜநூற்றந்தாதி | 1946 |
| 1890 | முமுக்ஷுப்படி | 7346 |
| 1890 | do | 8557 |
| 1891 | இராமாநுச நூற்றந்தாதி மூலம் | 8555 |
| 1892 | ஆசார்ய ஹ்ருதய சாரசங்கிரகம் | 8560 |
| 1892 | குருபரம்பராப் பிரபாவம் | 8558 |
| 1894 | சீமந்தனி புராணம் | 6438 |
| 1895 | திருப்பல்லாண்டு | 8592 |
| 1897 | தசகாரிய மகாவாக்கியம் | 7318 |
| 1898 | நித்தியானுஸந்தானம் | 8562 |

| பதிப்பித்த ஆண்டு | தலைப்பு | புத்தக எண். |
|---|---|---|
| **கிறிஸ்துவம்** | | |
| 1830 | பழைய உடன்படிக்கையின் 3-ம் பங்கு | 1004 |
| 1852 | தேம்பாவணி | 2409 |
| 1888 | ஜெபபுத்தகம் விஸ்தரிப்பு | 8041 |
| 1898 | யோவான் எழுதின சுவிசேஷம் | 336 |
| **தத்துவம்** | | |
| 1859 | நீதி நூல் | 8125 |
| 1861 | சித்தாந்த சிகாமணி | 7267 |
| 1876 | ஆரியமத சித்தாந்த சங்கிரகம் | 2459 |
| 1878 | நீதிமஞ்சரி திறவுகோல் | 1167 |
| 1882 | ஆசௌபதீபிகை | 6709 |
| 1882 | வேதாந்த சூளாமணி | 7201 |
| 1861 | do | 7199 |
| 1885 | சசிவர்ண போதம் | 2433 |
| 1888 | பாஷிய இருதயம் | 7313 |
| 1889 | கைவல்லிய நவநீதம் | 4164 |
| 1889 | do | 7208 |
| 1891 | கீதாசாரத் தாலாட்டு | 4591 |
| 1891 | பிரஹ்மதத்வ நிருபணம் | 6732 |
| 1892 | உபதேச காண்டம் | 8133 |
| 1893 | நானாசீவவாதக் கட்டளை | 5684 |
| 1895 | அத்வைத கீர்த்தனாநந்த லஹரி | 7300 |
| 1895 | வேதாந்த தத்துவக் கட்டளை | 7390 |
| 1897 | உத்தமவாதம் | 7302 |
| 1897 | சசிவர்ண போதம் | 4176 |
| 1897 | வேதாந்த சங்கை நிவாரணம் | 6379 |
| 1898 | அத்வைத விளக்கம் | 7364 |
| 1898 | உண்மைநெறி விளக்கம் | 4181 |
| 1898 | சங்கற்ப நிராகரணம் | 4180 |
| 1898 | சித்தாந்த ஞானபோதம் | 2402 |
| 1898 | பிரபோத சந்ரோதயம் | 2418 |
| 1898 | மெய்ஞான விளக்கம் | 7173 |
| 1899 | திருக்குதிரிசிய விவேகம் | 7304 |
| 1899 | ஸ்ரீபகவத் கீதை | 6360 |
| 1862 | சித்தாந்த சங்கிரகம் | 7881 |

# சோழமண்டலச் சொற்றமிழ் அறிஞர்

புலவர். ப. சிவ. நாகராசன், பி. லிட்., விசாரத்,
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்,
சரசுவதி மகால் நூலகம்.

நம் செந்தமிழ்மொழி மிகத் தொன்மையான ஒன்று என்பதுடன் இலக்கிய வளத்தால் பெருங்கடலினும் மாணப் பெரியது. தமிழின் இலக்கியப் பரப்பைக் கூறவந்த புலவர்புராணமுடையார், "ஆயிரம் காலம் அகம்குவிந்து கற்றாலும் பாயிரமும் தீர்வரிய பன்னுதமிழ்த்தொன்னூல்கள்" என்கிறார்.

இவ்வாறு இயல், இசை, நாடகமாக விரிந்து பரந்துள்ள தமிழ் இலக்கியங்களைப் படைத்தளித்த புலவர் பெருமக்களின் வரலாறுகளைத் தொகுத்து, முறையாக வரையறுத்து ஆய்வது மிக்க பயன் தரும். இவ்வகையில் சங்ககாலப் புலவர்களிலிருந்து மிக அண்மைக் காலம் வரையான அறிஞர்கள் எல்லோரையும் பற்றிக் கிடைத்தவரை செய்திகளைத் திரட்டிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும், மதிப்பிற்குரிய பேராசிரியர். மது. ச. விமலானந்தம் அவர்களும் வெளியிட்டனர்.

இத்தமிழ் அறிஞர்களுள் சோணாட்டைச் சேர்ந்தவர்களின் பட்டியல் இது. எந்த ஒரு நாட்டில் பொருளாதார வளமும் நிலையான ஆட்சியும் இருக்கிறதோ அங்கு எண்ணிக்கையிலும் தரத்திலும் மேம்பட்ட இலக்கியமும், பிற கவின்கலைகளும் தோன்றும் என்பது பொதுவிதி. எனவே, வளமும், தொன்றுதொட்டுச் சிறந்த அரசியலமைப்பும் வாய்ந்த சோழ நாட்டில், தரமான இலக்கியங்கள் ஏராளமாகத் தோன்றியுள்ளதில் வியப்பேதுமில்லை.

இப்பட்டியல் முழுமையானதல்ல. ஏனெனில், ஓலைச் சுவடி அட்டவணைகள், அச்சேறியும் அதிகம் பரவாத நூல்கள் போன்றவை பார்க்கப்படவில்லை. வேறு பகுதியில் தோன்றிச் சோழ நாட்டில் வாழ்ந்த புலவர்களின் பெயர் இதில் இடம்பெறவில்லை.

இப்பட்டியலை மேலும் நன்கு ஆராய்ந்து, செப்பஞ்செய்து. இதில் இடம் பெற்றவர்களின் காலம் படைப்புகளின் முழு விவரங்கள், பிற சிறப்புகள் ஆகிய செய்திகள் அனைத்தும் முறையே திரட்டப்பெறவேண்டும். அத்தகைய சோழ மண்டலத் தமிழ் இலக்கிய வரலாறு தோன்ற வேண்டும் என்னும் அவாவில் விளைந்த முதல் முயற்சியே இத்தொகுப்பு.

1. அரிசில் கிழார்
2. ஆடுதுறை மாசாத்தனார்
3. ஆலங்குடி வங்கனார்
4. ஆலத்தூர் கிழார்
5. ஆவியார்
6. ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்
7. ஆவூர் கிழார்
8. ஆவூர் கிழார் மகனார் கண்ணனார்
9. ஆவூர் மூலங்கிழார்
10. ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச்சாத்தனார்
11. இடைக்காடனார்
12. இருப்பிடர்த் தலையார்
13. உலோச்சனார்
14. உறையூர் இளம்பொன் வாணிகனார்
15. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
16. உறையூர்க் கதுவாய் சாத்தனார்
17. உறையூர்ச் சல்லியன் குமாரன்
18. உறையூர்ச் சிறுகந்தனார்
19. உறையூர்ப் பல்காயனார்
20. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
21. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
22. உறையூர் முதுகூத்தனார்
23. உறையூர் முதுகொற்றனார்
24. எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்
25. ஐயூர் முடவனார்
26. ஐயூர் மூலங்கிழார்
27. ஒக்கூர் மாசாத்தனார்
28. ஒக்கூர் மாசாத்தியார்
29. கடம்பனூர்ச் சாண்டிலியன்
30. கடுவன் மள்ளனார்
31. கயத்தூர் கிழார்
32. கருவூர் ஓதஞானி
33. கருவூர் கிழார்

34. கருவூர்க் கண்ணம்பாளனார்
35. கருவூர்க் கண்ணம்புல்லனார்
36. கருவூர்க் கதப்பிள்ளை
37. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்
38. கருவூர்க் கலிங்கத்தார்
39. கருவூர்க் கோசனார்
40. கருவூர்ச் சேரமான் சாத்தன்
41. கருவூர் நன் மார்பன்
42. கருவூர்ப் பவுத்திரனார்
43. கருவூர்ப் பூதஞ்சாத்தனார்
44. கருவூர்ப் பெருஞ்சதுக்கத்து பூதநாதனார்
45. கழார்க் கீரன் எயிற்றியார்
46. காவற் பெண்டு
47. காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்
48. காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
49. காவிரிப் பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்
50. காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார்
51. கிடங்கில் காவிரிக் கீரங்கண்ணனார்
52. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்
53. கிடங்கில் குலபதி நக்கண்ணனார்
54. குடவாயிற் கீரத்தனார்
55. குடவாயிற் கீரனக்கனார்
56. கோக்குள முற்றனார்
57. கோப்பெருஞ்சோழன்
58. கோவூர்கிழார்
59. கோழிக்கொற்றனார்
60. சோணாட்டு முகையலூர் சிறுகருந்தும்பியார்
61. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
62. சோழன் நல்லுருத்திரன்
63. சோழன் நலங்கிள்ளி
64. நப்பூதனர்
65. நல்லாவூர் கிழார்
66. நல்விறையனார்

67. நொச்சி நியமங்கிழார்
68. புல்லூர் எயிற்றியனார்
69. பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்
70. பொத்தியார்
71. வெண்ணிக் குயத்தியார்
72. வெண்மணிப்பூதி
73. வெள்ளைக்குடி நாகனார்

74. அகோர முனிவர் (வேதாரணிய புராணம்)
75. அப்புலிங்கம் க. கலைவாணன் (அழியா அழகு)
76. அபிராமி பட்டர் (அபிராமி அந்தாதி)
77. அம்பலவாண தேசிகர் (பண்டாரசாத்திரம் பத்து)
78. அமித சாகரர் (யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை)
79. அமிர்தம் சுந்தர நாதம் பிள்ளை (ஆதிவயலூர் வெண்பாவந்தாதி)
80. அமிர்தம் பிள்ளை (பெண்மை நெறிவிளக்கம், யாப்புவினாவிடை)
81. அரங்கநாதன் தி. ஜ. (இதழியல், சிறுகதை)
82. அருணாசலக் கவிராயர் (இராமநாடகம்)
83. அருணாசலம் மு. (தமிழிலக்கிய வரலாறு)
84. அல்லி மரைக்காயர் மீ. (பிரபந்தக்கொத்து)
85. அளகைச் சம்பந்த முனிவர் (கமலாலய மான்மியம்)
86. அனந்தபாரதி அய்யங்கார் (திருவிடைமருதூர் நொண்டி)
87. அனந்தராமையர் இ. வை. (பதிப்பாசிரியர்)
88. ஆத்மநாத தேசிகர் (சோழமண்டல சதகம்)
89. இரட்டைப் புலவர்கள் (திருவாமாத்தூர்க் கலம்பகம்)
90. இராசகோபாலன் கலாநிலையம் (வில்லிபாரத உரை, இலக்கண விளக்கம்)
91. இராசமாணிக்கனார் மா. (பெரியபுராண ஆராய்ச்சி)
92. இராமச்சந்திரன் தி. ந., சேக்கிழாரடிப்பொடி
93. இஸ்மாயில் மு. மு. நீதிபதி
94. உமாபதி சிவாச்சாரியார் (சித்தாந்த அட்டகம்)
95. உமாமகேஸ்வரனார், தமிழவேள்
96. உலகநாதப்பிள்ளை எல். (வரலாற்று நூல்கள், சுவடி அட்டவணை)

97. ஊத்துக்காடு வேங்கடசுப்பையர் (இசைப்பாடல்கள்)
98. ஒட்டக்கூத்தர்
99. ஒப்பிலாமணிப் புலவர் (சிவரகசியம்)
100. கண்டராதித்தர்
101. கந்தசாமிப் பிள்ளை நீ. பள்ளியகரம்
102. கம்பர்
103. கமலை ஞானப்பிரகாசர் (திருமழபாடிப்புராணம், தந்திவனபுராணம்)
104. கருணாநிதி மு. கலைஞர் (குறளோவியம்)
105. கருவூர்த்தேவர்
106. காரைக்காலம்மையார்
107. காவிரிநாடன், செ. சோ. ராஜன் (தேனிலவு, புதுயுகம்)
108. காழிக் கண்ணுடை வள்ளல் (ஒழிவிலொடுக்கம்)
109. காழிச்சட்டைநாத வள்ளல் (சதாசிவரூபம்)
110. காழிச் சிவஞான வள்ளல் (வள்ளலார் சரித்திரம்)
111. காழிச் சிற்றம்பல நாடிகள் (துகளறுபோதம், திருச்செந்தூர் அகவல்)
112. காளமேகப் புலவர் (திருவானைக்கா உலா, சித்திரமடல்)
113. கிருஷ்ணசாமி ரெட்டியார் அ. வெ ரா.
114. கிருஷ்ணபாரதி (திருவிளையாடற் புராணக் கீர்த்தனை)
115. கிருஷ்ணமூர்த்தி, ரா. கல்கி, (புதினங்கள், இதழியல்)
116. கிருஷ்ணமூர்த்தி, கு. சா. (இசைப்பாடல்கள்)
117. குடந்தை. ப. சுந்தரேசனார்
118. கு ப ரா, கு ப. ராசகோபாலன் (சிறுகதைகள்)
119. குருஞானசம்பந்தர் (சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா)
120. குளத்தூர் வேதநாயகம் பிள்ளை (பிரதாப முதலியார் சரித்திரம்)
121. குருவிக்கரம்பை சண்முகம் (ஒரு குயிலின் குரல்)
122. குலாம் காதிறு நாவலர் (நாகூர்க் கலம்பகம், புராணம்
123. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், (சரபேந்திர பூபாலக் குறவஞ்சி)
124. கோதண்டபாணிப்பிள்ளை கு. (முதற்குறள் உவமை, சிம்பரும் மெய்ப்பாட்டியலும்)
125. கோபாலகிருஷ்ண பாரதியார் (நந்தன் சரித்திரக் கீர்த்தனை)
126. கோபாலய்யர், தி. வே. (பதிப்பாசிரியர்)
127. சக்தி சரணன், கே. கே. நரசிம்மன் (மதிவனம்)
128. சத்திமுற்றப்புலவர்

129. சதாசிவ பண்டாரத்தார், தி. வை.
130. சரவணத் தமிழனார், த. (இலக்கண நூலாசிரியர்)
131. சாந்தலிங்கக் கவிராயர் (தண்டலையார் சதகம்)
132. சாமிநாதய்யர், உ. வே. (பதிப்பாசிரியர்)
133. சாரண பாஸ்கரன், கவிஞர் திலகம் (யூசுப் சுலேகா)
134. சிதம்பரநாதன் செட்டியார், அ. (அகராதி)
135. சீவரத்தினக் கவிராயர், (மதீனக் கலம்பகம்)
136. சீனிவாசம் பிள்ளை. கே. எஸ். (தமிழ் வரலாறு)
137. சுரதா, இராசகோபால்
138. சுவாமி சரவணபவானந்தர். (இசைப்பாடல்கள்)
139. செயங்கொண்டார்
140 சேந்தனார்
141. சையது முகம்மது அண்ணாவியார் (சாந்தாதி அசுவமகம்)
142. சைவ எல்லப்ப நாவலர் (செவ்வந்திப் புராணம், திருவாரூர்க்கோவை)
143. சோடசாவதனம் சுப்பராய செட்டியார் (பதிப்பாசிரியர்)
144. ஞானசம்பந்தம், அ. ச. (இலக்கியக்கலை)
145. ஞானவரோதயப் பண்டாரம் (உபதேச காண்டம்)
146. ஞானியார் அடிகள்
147. தஞ்சைப் புலவர் தாமஸ் உடையார் (வேளாங்கண்ணி மாதா பிள்ளைத்தமிழ்)
148. தஞ்சைவாணன் (கூட்டுறவுக் குறவஞ்சி, தமிழ்த்தாயின் ஆணை)
149. தண்டபாணி தேசிகர், ச. (பதிப்பாசிரியர்)
150. தத்துவராயர், (மோகவதைப் பரணி. பாடுதுறை)
151. தாயுமானவர்
152. தியாகராச செட்டியார், சி. (மகாவித்வான் மாணவர்)
153. திரிசிரபுரம் வீ. கோவிந்தப் பிள்ளை
154. திருஞானசம்பந்தர்
155. திருப்பாணாழ்வார்
156. திருப்பூந்துருத்தி நம்பிகாட நம்பி
157. திருமங்கையாழ்வார்
158. திருமாளிகைத்தேவர்
159. திருலோக சீதாராம் (கந்தர்வகானம். இலக்கியப்படகு)
160. திருவரங்கத்தமுதனார் (இராமானுச நூற்றந்தாதி)

161 திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் (திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்)
162. திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் (திருவொற்றியூர் புராணம், பரபக்க உரை)
163. தில்லையம்பூர் சந்திரசேகர கவிராச பண்டிதர் (பதிப்பாசிரியர்)
164. தில்லைவிடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை (சிதம்பரேசர் விறலி விடு தூது)
165. துரைசாமி, வி, (கண்ணகி விருத்தம், அமுதக்கலசம்)
166. தொண்டரடிப்பொடியாழ்வார்
167. நம்பியாண்டார் நம்பி
168. நல்லசாமிப்பிள்ளை, ஜே. எம். (சைவ சாத்திர ஆங்கிலப் பெயர்ப்பு)
169 நவநீதகிருட்டின பாரதியார், (பாரதீயம், திருவாசக ஆராய்ச்சிப் பேருரை)
170. நாதமுனிகள்
171. நிரம்ப அழகிய தேசிகர் (சேது புராணம்)
172. பட்டினத்துப் பிள்ளையார்
173. பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்
174. பரஞ்சோதி முனிவர் (திருவிளையாடற்புராணம்)
175. பரஞ்சோதியார் (திருமலைநாதர் மைந்தர், சிதம்பரப்பாட்டியல்)
176. பவானந்தம் பிள்ளை (பதிப்பாளர்)
177. பழனி இளங்கம்பன் (வள்ளுவர் வாழ்த்துமாலை, இசைப்பாடல்கள்)
178. பாபநாச முதலியார்
179. பாபநாசன் சிவன் (இசைப்பாடல்கள்)
180. பாலசுப்ரமணியன் (திரையிசை)
181. பாவலரேறு பாலசுந்தரனார் (கரந்தைக் கோவை, தொல்காப்பியக் காண்டிகையுரை)
182. பிங்கல முனிவர் (பிங்கல நிகண்டு)
183. பிச்சமூர்த்தி, ந.
184. பிச்சை இபுராகீம் புலவர் (ஆதமலைத் திருப்புகழ், நாகூர்ப்பிள்ளைத் தமிழ்)
185. பிள்ளைப்பெருமாளய்யங்கார் (அட்டபிரபந்தம்)
186. புராணத்திருமலைநாதர் (சிதம்பர புராணம், மதுரைச் சொக்கநாதர் உலா)
187. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (தென்தில்லைக்கலம்பகம், உலா)
188. பெரியசாமி சிவன் (பெரிய புராணக் கீர்த்தனை)
189. பெரியவாச்சான் பிள்ளை (திவ்யப்பிரபந்த வியாக்கியானம்)

190. மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

191. மதிவண்ணன், இராசகோபாலன் (மலர்களால் ஒரு மாளிகை)

192. மறைமலையடிகள்

193. மாதை. திருவேங்கடநாதர் (பிரபோத சந்திரோதயம்)

194. மாரிமுத்தாப் பிள்ளை (இசைப்பாடல்கள்)

195. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, த. ச. (துறைசை ஆதீன வித்வான்)

196. முத்துசாமி ஐயர், வே., திராவிடக் கவிமணி
(திருவள்ளுவர் ஒருதுறைக் கோவை)

197. முத்துத்தாண்டவர், சீர்காழி (இசைப்பாடல்கள்)

198. முத்துவீரப்ப உபாத்தியாயர் (முத்துவீரியம்)

199. ராமன், மு. கோ., பாலகவி (நாராயணீயம்,
குருவாயூரப்பன் அலங்காரம்)

200. வடுகநாத தேசிகர் (வைத்தீஸ்வரன் கோவில் புராணம்)

201. வ ரா, வ. ராமசாமி

202. வன்மீகநாதன் ஜி. (தமிழிலக்கியங்கள் பற்றி ஆங்கில நூல்கள்)

203. வாலம், ஹா. சி., வாலாம்பாள் (மோகன முறுவல்)

204. விமலானந்தம். மது. ச, (தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்)

205. வெள்ளைவாரணனார், க. (தொல்காப்பிய உரைவளம்)

206. வேங்கடசாமி நாட்டார், ந மு. வே.

207. வேங்கடாசலம் பிள்ளை, கரந்தைக் கவியரசு

208. வைத்தியநாத நாவலர் (இலக்கண விளக்கம்).

# சரசுவதி மகால் நூலகத்தில் இடம்பெற்றுள்ள தமிழ் இலக்கிய, இலக்கணச் சுவடிகளின் அகரவரிசைப்பட்டியல்

திருமதி **ச. திலகம்** பி. லிட்.,
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

**முகவுரை**

சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் **3518** ஓலைச்சுவடிகள் உள்ளன. இச்சுவடிகள் இலக்கியம், இலக்கணம், தத்துவம், சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளைச் சார்ந்தனவாகும். இச்சுவடிகளில் இலக்கிய, இலக்கண நூற்சுவடிகள் மட்டும் அகரவரிசையில் அடைவுசெய்யப்பெற்று, ஒவ்வொரு தலைப்பிலும் எத்தனை சுவடிகள் உள்ளன என்னும் விவரத்துடன், அவற்றுக்கான சுவடி எண்களுடன் இங்குத் தொகுத்தளிக்கப்பெறுகின்றன. தத்துவம், சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளைச் சார்ந்த சுவடிகள் பின்னர் அகரவரிசையில் தொகுத்தளிக்கப்பெறும்.

இவ்விலக்கிய, இலக்கண நூற்சுவடிகளின் அகரவரிசை அடைவு, இந் நூலகத்தைப் பயன்படுத்தும் தமிழ் — தமிழியல் ஆய்வாளர்க்கும், அறிஞர்க்கும் துணையாக அமையும் என்பது உறுதி.

இவ்வடைவு, சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள், இராமாயண மகாபாரத நூல்கள், மகாபாரதக் கண்ட காவியம், பக்தி இலக்கியங்கள், இலக்கணம் - நிகண்டு நூல்கள், புராணங்கள், பிள்ளைத்தமிழ், கலம்பகம் முதலான சிற்றிலக்கியங்கள், கீர்த்தனைகள், நாடகங்கள், கதை நூல்கள் என்னும் பொருட்பாகுபாடுகளில் தனித்தனித் தலைப்புகளில் அகரவரிசை செய்யப்பெற்றுள்ளது.

## சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் பதினெண்மேற்கணக்கு நூல்களில் காலத்தால் பிந்தியதெனக் கருதப்படும் **திருமுருகாற்றுப்படை** மட்டுமே சரசுவதி மகால் நூலகத்தில் இடம்பெற்றுள்ளது.

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | — | 227, 803 (c), 973, 1283 (b), 1587 (b), 1607. | -6 |

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், திரிகடுகம் ஆகிய மூன்று நூற்சுவடிகள் மட்டுமே இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| திரிகடுக வெண்பா | — | 1097 | -1 |
| திருக்குறள் | — | 68 (a), 69 (a), 70, 71, 72, 74, 75, 77, 331 A, 735, 803 (k), 902, 1418, 1610, 1612, 1614, 1629, 1634, 1641, 1730, 1762, 1763, 1870, 1873-a, 1876, 1934, 1970. | -27 |
| நாலடியார் | — | 78, 79, 80, 82, 89, 1873 (b). | -6 |

**ஐம்பெருங் காப்பியங்கள்**

ஐம்பெருங்காப்பியங்களில் சிந்தாமணியும், சிலப்பதிகாரமும் மட்டுமே இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| சிந்தாமணி | — | 82, 144, 145, 146, 147, 148, 516, 517, 631 (k), 1168, 1169. | -11 |
| சிலப்பதிகாரம் | — | 306 b, 417 b. | -2 |

**இராமாயண, மகாபாரதப் பெருங்காவியங்கள்**

| | | | |
|---|---|---|---|
| உத்தரராமாயணம் | — | 1364 | -1 |
| கம்பராமாயணம் | — | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19 (a), 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29 (a), (b), 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 48, 51-b, 229 (b). 705 (c), 1162, 1382, 1459, 1679. | -54 |
| சதமுக இராமாயணம் | — | 1790-A. | -1 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஸ்ரீராமவிஜயம் | — | *1365, 1366, 1367.* | *-3* |
| நடை இராமாயணம் | — | *1742.* | *-1* |
| **பாரதம்** | | | |
| வில்லி பாரதம் | — | *64, 84, 85, 86, 87, 88*-a, *90*-a, *91, 92*-a, *93, 760, 803* (m), *852, 983, 984, 985, 986, 987, 988, 1004, 1009, 1166.* | *-22* |
| பெருந்தேவனார் பாரதம் | — | *65, 66.* | *-2* |
| கிருஷ்ணன் தூது | — | *1585, 1821.* | *-2* |
| கிருஷ்ண விலாசம் | — | *1700.* | *-1* |
| **மகாபாரதக் கண்ட காவியம்** | | | |
| நளவெண்பா | — | *192, 1768, 1870* (a) | *3-* |
| நைடதம் | — | *177, 178, 179, 180, 181, 182, 183, 184, 185, 186, 187, 188, 189, 190, 191, 904.* | *-16* |
| **பக்தி இலக்கியங்கள்** (சைவம்) | | | |
| அகத்தியர் தேவாரத்திரட்டு | — | *1553* (a), *1598* | *-2* |
| கயிலைத் தேவாரப் பதிகம் | — | *703* (c) | *-1* |
| திருவூடல் (தேவாரத்திரட்டு) | — | *682.* | *-1* |
| தேவாரத்திரட்டு | — | *311* (c), *365, 613, 683, 803* A, *2001.* | *-6* |
| தேவாரப் பதிகங்கள் | — | *73, 260* A, *292* B, *436* B, *437*-B, *441.* | *-6* |
| தேவாரம் | — | *427, 428, 429, 430, 431, 432 682, 939* b, *1600.* | *-9* |
| தேவாரம் (தலமுறை) | — | *425*-G, *426*-g. | *-2* |
| திருவாசகம் | — | *257*-A, *296, 297, 298* (a), *380, 381* (a), *383, 384, 435* (d), *686, 687, 803* (b), *1553, 1554, 1555* (a), *1595, 1913, 1960, 1963, 1972.* | *·20* |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| **திருப்புகழ்** | | | |
| சத்துரு சங்காரத் திருப்புகழ் | — | 1339, 1787 (m). | -2 |
| சூரசங்காரத் திருப்புகழ் | — | 837 (c) | -1 |
| திருப்புகழ் | — | 149, 150, 151, 152, 153, 154, 155, 156, 157, 158, 159, 160, 161, 162, 163, 803 (d), 1193, 1705, 1849, 1850, 1881 (a), 1922. | -22 |
| மயிலம் திருப்புகழ் | — | 1176 (e) | -1 |
| சௌந்தரியலகரி | — | 458, 459 (a), 460, 461, 462, 463 (a), 464, 465, 466, 467, 468, 469, 1325. | -13 |
| **வைணவ சமய நூல்கள்** | | | |
| அரிவிளக்கம் | — | 1099 | -1 |
| இரத்தினகரண்டகம் (வியாக்யானம்) | — | 1205 | -1 |
| இயற்பா | — | 959, 1121 a | -2 |
| இரகசிய த்ரயசாரம் (வியாக்கியானம்) | — | 1131, 1132, 1133, 1134, 1135, 1136. | -6 |
| இராமாநுச நூற்றந்தாதி | — | 1121 (b) | -1 |
| உபயுக்த திருவாய்மொழி | — | 1141 (a) | -1 |
| கண்ணிநுண் சிறுத்தாம்பு (வியாக்கியானம்) | — | 1123 (a) | -1 |
| கீதாசாரத் தாலாட்டு | — | 1476 | -1 |
| கிருஷ்ணசாமி தோத்திரம் | — | 878 (e) | -1 |
| குருபரம்பராசாரம் | — | 1138 | -1 |
| சிறிய திருமடல் (வியாக்கியானம்) | — | 434 (h), 1122 (a) | -2 |
| திருவாய்மொழி | — | 559, 560, 561, 562, 1092, 1093, 1112, 1113, 1114, 1115, 1116, 1117, 1119. | -13 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| திருவிருத்தம் (வியாக்கியானம்) | — | *1122* (b), *1123* (b) | -2 |
| திருவெழுக்கூற்றிருக்கை (வியாக்கியானம்) | — | *128* (b), *558*, *1122* (c). | -3 |
| தேசிகப்பிரபந்தம் | — | *1126*, *1141* (b) | -2 |
| நாலாயிர திவ்வியப்பிரபந்தம் | — | *1465*, *1466* | -2 |
| பரமதபங்கம் (வியாக்கியானம்) | - | *1127*, *1128*, *1129*. | -3 |
| பரமபதசோபானம் | — | *1130*. | -1 |
| பெரிய திருமொழி | — | *1118*. | -1 |
| முதலாயிரம் | — | *1120*. | -1 |

**இலக்கணம், நிகண்டு நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| அகப்பொருள் விளக்கம் | — | *81*, *631* (c), *636* (b), *639* (b) *651*, *652*, *653* | -7 |
| இலக்கணக்கொத்து | — | *971* (d) | .1 |
| இலக்கணச் சுருக்கம் | — | *954* | -1 |
| இலக்கண தீபம் | — | *649* (a) | -1 |
| இலக்கண விளக்கம் (எழுத்து) | — | *949* | -1 |
| இலக்கண விளக்கம் (சொல்) | — | *950* | -1 |
| இலக்கண விளக்கம் (பொருள்) | — | *953*, *961*, *962* | -3 |
| கவிலட்சணம் (பா· இலக்கணம்) | - | *1148* | -1 |
| காரிகை | — | *83*, *631* (e), *636* (d), *639* (c), *642*, *643*, *644*, *1590*, *1602*, *1628* (d), *1643*, *1644*. | -12 |
| கொடுந்தமிழ் | — | *951*, *952* | -2 |
| சிதம்பரப் பாட்டியல் | — | *631* (f), *636* (e). | -2 |
| செந்தமிழ் | — | *958* | -1 |
| தண்டியலங்காரம் | — | *631* b, *636* f, *639* d, *710*, *711*(a) *712* (a), *713* (a), *971* (c). | -8 |
| தொல்காப்பியம் | — | *622*, *623*, *626* (a), *626* (b) *627*, *628*. *629* (a), (b), *630*, *1597* *1950*. | -10 |
| தொல்காப்பியத் தத்துவம் | — | *1001*. | -1 |
| தொன்னூல் விளக்கம் | — | *1146*, *1147*. | -2 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
| --- | --- | --- | --- |
| நன்னூல் | — | 166 A, 631 (a), 632, 633, 634, 635, 636 (a), 637, 638, 639(a), 640, 641, 971 (b), 1149, 1618, (b), 1659, 1628 (a), | -17 |
| நாற்கவிராசநம்பியகப்பொருள் | - | 971 (a). | -1 |
| நேமிநாதம் | — | 631 (j), 645 (c), 655, 656: 963, | -5 |
| பன்னிருபாட்டியல் | — | 649 (b), 1631. | -2 |
| பாலபோத இலக்கணம் | — | 955 | -1 |
| யாப்பருங்கலம் | — | 631 (d), 636 (c), 645 (b), 710 (b), 1145. | -5 |
| வெண்பாப்பாட்டியல் | — | 631 (g), 645 (a), 646, 647, 648, 1602, 1628 (f) | -7 |

**நிகண்டு**

| | | | |
| --- | --- | --- | --- |
| வீரசோழியம் | — | 657 | -1 |
| அகராதி நிகண்டு | — | 524, 525 | -2 |
| அரும்பொருள் விளக்கநிகண்டு | - | 1144 | -1 |
| ஆசிரிய நிகண்டு | — | 919, 967, 1824 (b) | -3 |
| இறையனார் அகப்பொருள் | — | 631 (b) | -1 |
| உரிச்சொல் நிகண்டு | — | 480 (c), 845 | -2 |
| சேந்தன் திவாகரம் | — | 474, 475, 476, 477, 478, 479, 480 (a), 481, 482, 483 (a), 484(a), 485, 487, 488, 1593(a) 1642, 1648, 1663, 1858. | -19 |
| சூடாமணி நிகண்டு | — | 486, 489, 490, 491, 492, 493, 494, 495, 496, 497, 498, 499, 500, 501, 502, 503, 504, 505, 506, 507, 508, 510, 511, 512, 513, 514, 515, 522, 705 (d), 807 (a) 909, 938, 1591, 1593, 1637, 1649, 1866. | -37 |
| திருச்சிற்றம்பல நிகண்டு (பாயிரம் மட்டும்) | — | 1593 | -1 |
| பிங்கள நிகண்டு | — | 1653 | -1 |
| நிகண்டு | — | 1633, 1664, 1929 (c) | -3 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| **புராணங்கள்** | | | |
| அருணகிரிப் புராணம் | — | 292 (a), 293 (a). 294, 1896 1911 | -5 |
| அருணாசல புராணம் | — | 761, 981, 1415, 1740 (a), 1741 1859 | -6 |
| அரிச்சந்திர புராணம் | — | 303, 304, 305, 306 (a), 307, 308, 309, 310. | -8 |
| அவிநாசிப் புராணம் | — | 285 (b), 328. | -2 |
| ஆத்தி சூடிப் புராணம் | — | 980 | -1 |
| ஆதித்த புராணம் | — | 378 | -1 |
| உத்தரகோசமங்கை தலபுராணம் | — | 1877 (a) | -1 |
| உபதேசகாண்டம் | — | 241, 242, 243, 246 | -4 |
| ஏகாதசிப் புராணம் | — | 379 | -1 |
| கந்த புராணம் | — | 234, 235, 236, 237, 238, 239 240, 244, 245, 247, 247-A 1158, 1925. | -13 |
| கமலாலய புராணம் | — | 319. | -1 |
| காசிக்காண்டம் | — | 262, 263, 264. | -3 |
| கும்பகோணப் புராணம் | — | 114 (b), 283, 283-B, 284. | -4 |
| கூர்ம புராணம் | — | 265, 266, 267. | -3 |
| கூவப் புராணம் | — | 1877 (a). | -1 |
| கோயிற் புராணம் | — | 287 (b), 290 (a), 302, 313, 621-A, 693 (b) 1903, 1926. | -8 |
| கைசிக புராணம் | — | 1142. | -1 |
| சானந்த புராணம் | — | 1385. | -1 |
| சிதம்பர புராணம் | — | 285 (a), 287, 288, 289, 1939. | -5 |
| சீர்காழிப் புராணம் | — | 1330 | -1 |
| மாகயிலை மான்மியம் | — | 1871 (b) | -1 |
| சரபபுராணம் | — | 279 (a) | -1 |
| ஸ்ரீ புராணம் | — | 1072. | -1 |
| சம்பராரிப்புராணம் | — | 753, | -1 |
| செப்பறைத் தலமான்மியம் | — | 1924 (a) | -1 |
| சேக்கிழார் புராணம் | — | 255 (c), 256 (c), 285 (c), 291 (b). | -4 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| சேது புராணம் | — | 280, 281, 282 | -3 |
| ததீசி புராணம் | — | 279 (b) | -1 |
| தடுத்தாட்கொண்டபுராணம் | — | 1944 (e) | -1 |
| தாமிரபரணிப் புராணம் | — | 1889 (b) | -1 |
| திருக்காளத்திப் புராணம் | — | 1872, 1882 (a). | -2 |
| திரிக்கூடத்தல புராணம் | — | 1889 (c) | -1 |
| திருச்செந்தூர்ப் புராணம் | — | 1772. | -1 |
| திருவாதவூரர் புராணம் | — | 274, 275, 276, 277, 278, 382, 583(b), 978, 1370, 1805, 1889, 1940. | -12 |
| திருவிளையாடற்புராணம் | — | 901, 1157 | -2 |
| திருவெண்காட்டுப் புராணம் அல்லது சுவேதவனப் புராணம் | — | 291 (b), 321. | -2 |
| திருவையாற்றுப் புராணம் | — | 290 (d), 366-a. | -2 |
| திருநள்ளாற்றுப் புராணம் | — | 301 | -1 |
| தேரூர்ந்த சோழ புராணம் | — | 320 | -1 |
| திருப்பெருந்துறைப் புராணம் | — | 327 (a) | -1 |
| நாசி கேது புராணம் | — | 314, 1410 (b), 1728 | -3 |
| நல்லூர்ப்புராணம் | — | 322 | -1 |
| பெரிய புராணம் | — | 252(c), 253, 254, 255(a), 256 (a), 257 (a), 258, 259 (a), 261, 286, 295, 712 (b), 1151, 1152, 1154, 1555 (b) 1916 (b), 1920, 1329. | -19 |
| பெரிய புராணம் (சுருக்கம் - உரைநடை) | — | 1153 | -1 |
| விருத்தகிரிப் புராணம் | — | 268, 269, 270, 271, 272, 273, 979, 1940 A | -8 |
| வன்னியர் புராணம் | — | 1179 | -1 |
| விருத்தாசல புராணம் | — | 1414, 1910, 1914, 1926 (b), 1945 | -5 |
| வினாவிடைப் புராணம் | — | 279 (c) | -1 |
| வலைவீசு புராணம் | — | 299 | -1 |
| வீரசைவ மகாத்மியம் | — | 293 (b) | -1 |

| நூற்பெயர் | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| **சிற்றிலக்கியங்கள்** | | |
| **பிள்ளைத்தமிழ்** | | |
| கமலாலயம்மன் பிள்ளைத்தமிழ் | 455 | -1 |
| காந்திமதி பிள்ளைத்தமிழ் | 1461, 1462 | -2 |
| குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் | 454 | -1 |
| சத்தியஞான பண்டார பிள்ளைத்தமிழ் | 448 | -1 |
| சிவயோகநாயகிபிள்ளைத்தமிழ் | 451, 453 | -2 |
| தணிகை பிள்ளைத்தமிழ் | 960 (a) | -1 |
| திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் | 1526, 456 | -2 |
| திருஞானசம்பந்தர் ,, | 444, 445, 447, 564-a | -4 |
| திருநெல்லைப் பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ் | 1410 | -1 |
| மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் | 943, 1929-b | -2 |
| முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | 449, 452-A | -2 |
| வீரவேலாயுதசுவாமி பிள்ளைத்தமிழ் | 452-B | -1 |
| **பரணி** | | |
| அஞ்ஞானவதைப் பரணி | 1191, 1770 | -2 |
| கலிங்கத்துப்பரணி | 208, 209, 210, 211, 212, 213, 563. | -7 |
| **கலம்பகம்** | | |
| காசிக்கலம்பகம் | 167, 168-A, 169 | -3 |
| தணிகைக் கலம்பகம் | 960 (b). | -1 |
| திருவரங்கக் கலம்பகம் | 170, 171, 172, 173, 174, 440, 711 | -7 |
| திருவாமாத்தூர்க் கலம்பகம் | 176 | -1 |
| நந்திக் கலம்பகம் | 1949 | -1 |
| மதுரைக் கலம்பகம் | 175, 1594 (b), 1774. | -3 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| **கோவை** | | | |
| அம்பிகாபதிக்கோவை | — | *409, 410, 414, 1616* | -4 |
| ஆரூர்க்கோவை | — | *385* | -1 |
| இராசைக் கோவை | — | *509* (a) | -1 |
| சிதம்பரச் செய்யுட்கோவை | — | *1602*-b | -1 |
| சிதம்பர மும்மணிக்கோவை | — | *1617* (c), *1618* (a) | -2 |
| தஞ்சைவாணன் கோவை | — | *423, 424.* | -2 |
| திருக்கோவையார் | — | *1469, 1628* (i), *1773.* | -3 |
| திருச்சிற்றம்பலக்கோவை | — | *411, 415, 416, 417* (a), *418, 419, 420, 421, 422.* | -9 |
| திருவரங்கத்தமுதனார் திருப்பதிக்கோவை | — | *233* (e) | -1 |
| திருப்பதிக்கோவை | — | *233* (c), *425* (a), *426* (b) | -3 |
| திருவிடைமருதூர் மும்மணிக் கோவை | — | *689*-c | -1 |
| நெல்லைவருக்கக்கோவை | — | *332, 333* | -2 |
| பட்டினத்தார் மும்மணிக் கோவை | — | *1606* | -1 |
| **மாலை** | | | |
| அகிலாண்டமாலை | — | *329* | -1 |
| அம்பிகைமாலை | — | *338, 339, 1711* | -3 |
| அணியாபரணமாலை | — | *866* (j) | -1 |
| ஆனந்தமாலை | — | *771* (c) | -1 |
| உபதேசரத்னமாலை | — | *233* (f) | -1 |
| கதிர்காமமாலை | — | *813* (a), *1706, 1707* | -3 |
| கலியுகமாலை | — | *334* (a) | -1 |
| கும்பேச்சுரமாலை | — | *335* | -1 |
| குருக்ஷேத்திரமாலை | — | *344* | -1 |
| சச்சிதானந்தமாலை | — | *894* | -1 |
| சண்முகமாலை | — | *1396* | -1 |
| சதுர்கோணமாலை | — | *893* (a), *1384* | -2 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிதம்பர சிவகாமியம்மன்பேரில் இரட்டைமணிமாலை | - | 1617 (b) | -1 |
| சிவசெந்தில்மாலை | — | 1712 | -1 |
| சிவானந்தமாலை | — | 298 (f) | -1 |
| சுப்ரமணியர்மாலை | — | 849 | -1 |
| சோபனமாலை | — | 1082 | -1 |
| திரிபுரைமாலை | — | 1040, 1395 (a) | -2 |
| திருச்செந்தூர்மாலை | — | 813 (b) | -1 |
| திருப்பரங்குன்றத்து மாலை வெண்பா | — | 1528 | -1 |
| திருவாரூர்ப்பன்மணிமாலை | — | 330, 331 (a) | -2 |
| திருமேனிக்கருப்பு அம்பிகை மாலை | — | 882 (a) | -1 |
| திருவாரூர் இரட்டை மணிமாலை | - | 439 (c) | -1 |
| திருவேங்கடமாலை | — | 713 (b) | -1 |
| திருவள்ளுவமாலை | -- | 69 (b), 1628 (h) | -2 |
| தெண்டாயுதபாணிமாலை | — | 1397 | -1 |
| நமச்சிவாயமாலை | — | 343 | -1 |
| நவமணிமாலை | — | 697 (b) | -1 |
| நவரத்னமாலை | — | 92 (b) | -1 |
| நாற்பத்துமுக்கோணமாலை | — | 1453 | -1 |
| பஞ்சாட்சரதேசிகமாலை | — | 1628-J | -1 |
| பரமராசியமாலை | — | 341 | -1 |
| பழனிமாலை | — | 336 | -1 |
| புலந்திரன் களவுமாலை | — | 1702 | -1 |
| பூரணமாலை | — | 1549 | -1 |
| மனோன்மணி மாலை | — | 1041 | -1 |
| மல்லிகார்சுன மாலை | — | 271 (b) | -1 |
| மீனாட்சியம்மன் இரட்டை மணிமாலை | — | 1617 (a) | -1 |
| வராகிமாலை | — | 771 (b), 838 (e), 866 (o), 898 (a), 1034, 1300 | -6 |
| வேங்கடமாலை | — | 1620 | -1 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| **அந்தாதி** | | | |
| அபிராமி அந்தாதி | — | 132, 133, 134, 459 (b), 298 (c), 483 (b), 1889 (f), 1891 (d) | -8 |
| அரங்கத் தந்தாதி | — | 1766 | -1 |
| அருணகிரி அந்தாதி | — | 135, 136, 137, 480 (d), 910. | -5 |
| அழகரந்தாதி | — | 233-a | -1 |
| ஆறெழுத்தந்தாதி | — | 843 | -1 |
| இராமானுச நூற்றந்தாதி | — | 131, 1121, 1124, 1992, 1994 | -5 |
| உலகந்தாதி | — | 1798 | -1 |
| கடவுளந்தாதி | — | 1021, 1045, 1283, 1326 | -4 |
| கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி | - | 1786 (a), 1891 (a) | -2 |
| கலைசை அந்தாதி | — | 1891 (e) | -1 |
| குடந்தை அந்தாதி | — | 139 | -1 |
| சடாட்சர அந்தாதி | — | 1580, 1908 (a) | -2 |
| சித்தரந்தாதி | — | 127, 128 (a), 129, 298-d, 459(c) | -5 |
| சிவபூசை அந்தாதி | — | 537 | -1 |
| செழுவை அந்தாதி | — | 825 | -1 |
| தணிகை அந்தாதி | — | 977 | -1 |
| திருத்தொண்டர் திருவந்தாதி | — | 252 (b), 256 (c), 291 (c) | -3 |
| திருப்புகலூரந்தாதி | — | 138 | -1 |
| திருவரங்கத்தந்தாதி | — | 125, 126, 230, 1096. | -4 |
| திருவாய்மொழி நூற்றந்தாதி | — | 231 | -1 |
| திருவேங்கடத்தந்தாதி | — | 233-h | -1 |
| நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி | - | 434 (b) | -1 |
| பதிற்றுப்பத்தந்தாதி | — | 1891 (c) | -1 |
| புல்லையந்தாதி | — | 233 (g) | -1 |
| மருதூரந்தாதி | — | 141, 142, 143, 698, 747 | -5 |
| முருகரந்தாதி | — | 1187 | -1 |
| வெண்பாவந்தாதி | — | 1891 (b) | -1 |
| **உலா** | | | |
| ஏகாம்பரநாதருலா | — | 200, 1890 (b) | -2 |
| கனகசபைநாதர் உலா | — | 197 (a) | -1 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஞான உலா | — | 1421, 1787 (n) | -2 |
| தணிகை உலா | — | 960-c | -1 |
| தியாகராசசுவாமி உலா | — | 1594-a | -1 |
| திருக்கழுக்குன்றத்துலா | — | 1940-A | -1 |
| திருவானைக்கா உலா | — | 196, 197, 1890 (d) | -3 |
| திருஉலா | — | 199 | -1 |
| தில்லை உலா | — | 195 | -1 |
| விக்கிரமசோழன் உலா | — | 194, 1890 | -2 |
| **மடல்** | | | |
| வருணகுலாதித்தன் மடல் | — | 222, 223, 225, 705-b | -4 |
| **தூது** | | | |
| செண்டலங்காரன் விறலிவிடு தூது | — | 99 | -1 |
| நண்ணாவூர் சங்கமேசுவரி மேல் விறலிவிடுதூது | — | 799 | -1 |
| விறலிவிடு தூது | — | 96, 97, 98 | -3 |
| **சதகம்** | | | |
| அறப்பளீசுர சதகம் | — | 1824 (a) | -1 |
| குமரவேல் சதகம் | — | 1713 | -1 |
| குமரேச சதகம் | — | 805, 908, 1024, 1238, 1670 | -5 |
| தண்டலையார் சதகம் | — | 989 | -1 |
| திருவாலவாய்க் கட்டளைத் திருச்சதகம் | — | 1611 (b) | -1 |
| தொண்டைமண்டல சதகம் | — | 1908 (b) | -1 |
| நாராயணசதகம் | — | 233 (b), 471, 472, 473, 1403 | -5 |
| மணவாள நாராயண சதகம் | — | 470 | -1 |
| வடிவேல் சதகம் | — | 1406 | -1 |
| வைராக்கிய சதகம் | — | 1181 | -1 |
| **குறவஞ்சி** | | | |
| கும்பேசர் குறவஞ்சி | — | 1869 | -1 |
| குற்றாலக் குறவஞ்சி | — | 1797, 1931 | -2 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| சரபோஜிராஜன் குறவஞ்சி | — | 599 | -1 |
| ஞானக்குறவஞ்சி | — | 821 | -1 |
| தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் - குறவஞ்சி | | 614 (a) | -1 |
| தியாகராசர் குறவஞ்சி | — | 606 | -1 |

**பள்ளு**

| | | | |
|---|---|---|---|
| தியாகராசர் பள்ளு | — | 607, 608, 609 | -3 |
| திருவேட்டை நல்லூர் அய்யனார் பள்ளு | — | 1865 | -1 |
| மன்னார் மோகனப்பள்ளு | — | 19 (b) | -1 |

**அகவல்**

| | | | |
|---|---|---|---|
| அகத்தியர் திரட்டு அகவல் | — | 1933(c) | -3 |
| அனுஷ்டான அகவல் | — | 1948 (a), 1959 (d) | -2 |
| ஆறுமுகநயினார் அகவல் | — | 837 (d) | -1 |
| கணபதி அகவல் | — | 770 | -1 |
| கபிலரகவல் | — | 1512, 1513 | -2 |
| சரசுவதிபேரில் அகவல் | — | 831 (d) | -1 |
| சனியீசுபரன்பேரில் அகவல் | — | 831 (e) | -1 |
| சிவகாமி அகவல் | — | 1889(h), 394 B, 395 | -3 |
| சிவபுராணத்தகவல் | — | 1919 | -1 |
| சிவபூசை அகவல் | — | 387 (b), 704 (d) | -2 |
| சிவானந்த அகவல் | — | 990 (c) | -1 |
| சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல் | — | 1201 | -1 |
| சுப்பிரமணியர் அகவல் | — | 866 (b), 1720 (a), 1727, | -3 |
| தாயுமானவர் சரித்திரச் சுருக்க அகவல் | — | 1199 (b) | -1 |
| தாயுமானவர் திருவகவல் | — | 1777 (d) | -1 |
| திருஞானசம்பந்தர் சரித்திரச் சுருக்க அகவல் | — | 1199 (a) | -1 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல் | - | 1200 | -1 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| தில்லை அகவல் | — | 1787 (i) | -1 |
| நித்யகன்ம அகவல் | — | 704 (a) | -1 |
| பழனியாண்டவரகவல் | — | 856 (d) | -1 |
| பூசைத்திருவகவல் | — | 68 (b) | -1 |
| மாணிக்கவாசகர் சரித்திரச் சுருக்க அகவல் | -- | 1203 | -1 |
| மீனாட்சிஅம்மன் அகவல் | — | 751 (b), 759 (a), 831 (b), 833 (b), 866 (d), 1395 (b), 1684 (b) 1856. | -8 |
| முருகன் அகவல் | — | 1847 (b) | -1 |
| வயிரவசுவாமி அகவல் | — | 1853 | -1 |
| விநாயகரகவல் | — | 803 (g), 856 (a) | -2 |

**வண்ணம்**

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுகொண்டான் வண்ணம் | - | 1184 | -1 |
| செண்டலங்காரப் பிள்ளை வண்ணம் | — | 694 (b) | -1 |
| செண்டலங்காரன் வண்ணம் | — | 1236 | -1 |
| சேதுபதிபேரில் வண்ணம் | — | 790-c | -1 |
| சொக்கநாதர் வண்ணம் | — | 620-b | -1 |
| தஞ்சை நாயகம்பிள்ளை பேரில் வண்ணம் | — | 692-a | -1 |
| தாயுமானவர் வண்ணம் | — | 1777-c | -1 |
| மூவரையன் வண்ணம் | — | 1237 | -1 |
| வண்ணத் திரட்டு | — | 619, 702, 1864 | -3 |
| வராககிரி வீரசின்னையன் பேரில் வண்ணம் | — | 620-a | -1 |
| வீரராகவமுதலியார் பேரில் வண்ணம் | — | 692-c | -1 |

**அம்மானை**

| | | | |
|---|---|---|---|
| அதிரியரம்மானை | — | 546 (b) | -1 |
| அரிச்சந்திரன் அம்மானை | — | 1386, 1574, 1691, 1749 | -4 |
| அல்லி-அரசாணி அம்மானை | — | 965 | -1 |
| ஆலாசிய அம்மானை | — | 757 | -1 |
| இராமய்யன் அம்மானை | — | 405 (a) | -1 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| இராமரம்மானை | — | 217, 218, 219, 404 (b) | -4 |
| கஞ்சனம்மானை | — | 396, 397, 398, 399 | -4 |
| காஞ்சிமன்னனம்மானை | — | 407, 694 (a) | -2 |
| சித்திரபுத்திரர் அம்மானை | — | 400, 401, 402, 403, 404 (a), 1737 | -6 |
| சுந்தரி அம்மானை | — | 1825, 1826 | -2 |
| ஞான அம்மானை | — | 543 (s) | -1 |
| துரோபதை அம்மானை | — | 1551 | -1 |
| தேவமாதாவின் அம்மானை | — | 546 (a) | -1 |
| பாரத அம்மானை | — | 59, 60, 61, 62, 63, 1388 | -6 |
| பொன்னர்-சங்கர் அம்மானை | — | 1701 | -1 |
| மதுரைவீரன் அம்மானை | — | 1692 | -1 |
| மார்க்கண்டன் அம்மானை | — | 1566 | -1 |
| விரையன் அம்மானை | — | 997, 1417, 1458, 1861 | -4 |
| வைகுண்ட அம்மானை | — | 1750 | -1 |

**பிற்கால நீதி நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| ஆத்திசூடி | — | 1704, 1953 | -2 |
| இராசகோபாலமாலை | — | 1708, 1709, 1827, 1828 | -4 |
| உலகநீதி | — | 813(d), 859, 1703 | -3 |
| கொன்றைவேந்தன் | — | 762 | -1 |
| நல்வழி | — | 718(c) | -1 |
| நீதிசாரம் (தருமநெறிநீதிகள்) | — | 1405, 1831, 1835 | -3 |
| நீதிவெண்பா | — | 376(a), 1931(b) | -2 |
| மூதுரை (வாக்குண்டாம்) | — | 718(b), 813(c), 815(a), 878(g) 1182, 1183, 1613, 1715 | -8 |

**கும்மி**

| | | | |
|---|---|---|---|
| கட்டபொம்மன் கும்மி | — | 1806 | -1 |
| காத்தவராயசுவாமிபேரில் கும்மி | — | 1581 | -1 -1 |
| கும்மிப் பாடல்கள் | — | 1685 | -1 |
| சீரங்கர் கும்மி | — | 1213 (a) | -1 |
| தாது வருஷத்துக் கரிப்புக் கும்மி | - | 1218-b | -1 |
| பாரதக்கும்மி | — | 1023 | -1 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| பாலையானந்தசுவாமிகள் ஞானக்கும்மி | — | 1294 | -1 |
| மாரியம்மன் கும்மி | — | 1213 (b) | -1 |

**கீர்த்தனைகள்**

| | | | |
|---|---|---|---|
| அரிச்சந்திர நாடகக் கீர்த்தனைகள் | — | 1508 | -1 |
| இராமநாடகக் கீர்த்தனை | — | 817, 982, 1567, 1654 | -4 |
| இராமாயணக் கீர்த்தனை | — | 1671 | -1 |
| கீர்த்தனைகள் | — | 1868 | -1 |
| பராங்குசதாசர் கீர்த்தனைகள் | — | 1733 | -1 |

**நாடகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| அரவான் களப்பலி | — | 1819, 1860 | -2 |
| அரிச்சந்திர நாடகம் | — | 603, 604, 605, 1474 | -4 |
| உருக்குமாங்கதன் நாடகம் | — | 1867 | -1 |
| குச, லவ நாடகம் | — | 1730, 1845 | -2 |
| சாத்தூர் நொண்டி நாடகம் | — | 863 | -1 |
| சாரங்கதாரா நாடகம் | — | 610, 611, 612 | -3 |
| சம்பர நாடகம் | — | 1387 | -1 |
| சிறுதொண்டர் நாடகம் | — | 616, 1815 | -2 |
| தருமர் நாடகம் | — | 1699, 1751 | -2 |
| பாண்டிகேளிவிலாச நாடகம் | — | 170 | -1 |
| புரூரவச்சக்கரவர்த்தி நாடகம் | — | 601 | -1 |
| மதனசுந்தர பிரசாத சந்தான விலாசம் | — | 600 | -1 |
| மார்க்கண்டேய நாடகம் | — | 1402 | -1 |
| மன்மத நாடகம் | — | 1820 | -1 |
| வள்ளி நாடகம் | — | 1837 | -1 |

**கதைகள்**

| | | | |
|---|---|---|---|
| அசுவமேத யாகத்தின் கதை | — | 1378 | -1 |
| அரிச்சந்திரன் கதை | — | 202, 203, 204, 205, 206, 207-a | -6 |
| அனுமந்தவாசகம் | — | 216 | -1 |

| நூற்பெயர் | | சுவடிகளின் எண்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| எமனாசூரன் கதை | — | *1563* | -1 |
| ஏகாதசிக்கதை | — | *1924* (b) | -1 |
| கந்தபுராணக்கதை | — | *1932* | -1 |
| கர்ணமகாராசன் சண்டை | — | *1823* | -1 |
| குசலவர் கதை | — | *100, 101, 102, 103, 710* (c) | -5 |
| கௌமுதிக் கதைகள் | — | *1078* | -1 |
| சித்திரபுத்திரன் கதை | — | *408* (b), *1546, 1632* | -3 |
| தமிழறிமடந்தை கதை | — | *104, 229* a | -2 |
| தருமர் கதை | — | *862* | -1 |
| தருமநந்தனர் சாந்தாதி அசுவமேதியாகக் கதை | — | *1379* | -1 |
| திருவிளையாடற்புராண வசனம் | — | *324, 1596* | -2 |
| தீபாவளி நோன்புக் கதைகள் | — | *1073, 1074, 1077* | -3 |
| தேசிங்குராசன் கதை | — | *226* | -1 |
| தேரூர்ந்த சோழன் கதை | — | *215* | -1 |
| நளச்சக்கரவர்த்தி கதை | — | *1380, 1870* (a), *1940* (c) | -3 |
| நாலுமந்திரி கதை | — | *112, 1810* | -2 |
| பஞ்சதந்திரக் கதை | — | *105, 733*-a, *1530* | -3 |
| பிரகலாதன் மாக்கதை | — | *1450* | -1 |
| பெருங்கதை வசனம் | — | *1627* | -1 |
| புரூரவச்சக்கரவர்த்தி கதை | — | *1381* | -1 |
| மாயாராவணன் கதை | — | *20* | -1 |
| முப்பத்திரண்டு பதுமை கதை | — | *122* | -1 |
| வள்ளியம்மை கதை வசனம் | — | *110, 111, 408*-a, | -3 |
| விக்கிரமாதித்தன் கதை | — | *113, 732*-b, *733*-b, *1578, 1871*-c. | -5 |
| வீரமாறன் கதை வசனம் | — | *229*-c, *1931*-a | -2 |
| வேதாளக்கதை | — | *115, 116, 117, 118, 119, 120, 121, 732*-a | -8 |
| வைத்தியநாதசுவாமி திருவிளையாடல் | — | *374* | -1 |
| ஜீவதயாஷ்டமி நோன்புக் கதைகள் | — | *1075* | -1 |

# பாரதிதாசன் கவிதைகளில் முன்னை இலக்கியத் தாக்கம்

ம. மணிகண்டன்,
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

**முகவுரை**

சுப்புரத்தினம் என்பது அவரின் இயற்பெயர். பாரதிதாசன் என்பது அவரின் புனைபெயரும் புகழ்ப்பெயரும். "புரட்சிக்கவி" எனும் குறுங் காவியத்தையும் புரட்சி எண்ணங்கள் பொலியும் பல கவிதைகளையும் படைத்துப் "புரட்சிக் கவிஞர்" ஆனவர் அவர். தமிழ்ப் பாட்டிலக்கிய வரலாற்றில் தன்னுடைய இடத்தையும் ஏற்றத்தையும் பெருமிதத்துடன் எண்ணிப்பார்த்து "நானோர் பாவேந்தன்" எனத் தன் பாடல் அடியொன்றால் பறைசாற்றிய "பாவேந்தர்" அவர்.

தெ. பொ. மீ. ஒருமுறை குறிப்பிட்டதுபோல அவர் தமிழை நரம்பறிந்து கற்றுத்துறைபோகியவர். பல்காலும் பைந்தமிழ் இலக்கியங்களில் படிந்தெழுந்த அவர், தன் கவிதை இலக்கியங்களில் முன்னைத் தமிழ் இலக்கியங்களைக் குறித்த தன் கருத்துரைகளை, புகழ்மொழிகளை, குறைமொழிகளைப் பதிவு செய்திருக்கின்றார். "பாரதிதாசனும் தமிழ் இலக்கியங்களும்" என்னும் பொருளில் சிந்திக்கையில் முன்னைத் தமிழிலக்கியங்கள் குறித்துப் பாரதிதாசன் கொண்ட கருத்துகளை எடுத்துரைக்கும் அவரின் கவிதைப்பகுதிகளைத் திரட்டிக் காணுதல் ஒருநிலை. முன்னைத் தமிழ் இலக்கியங்களின் தாக்கத்தில் மலர்ந்த அவரின் கவிதைகள் சிலவற்றைத் திரட்டிக்காணுதல் இன்னொருநிலை. இந்த இரண்டாவது நிலைகுறித்த பொருண்மையில் இக்கட்டுரை மலர்கின்றது.

இங்கு நாலாயிரப் பாடல், பட்டினத்தார் பாடல், நீதிவெண்பாப் பாடல், இராமச்சந்திரக் கவிராயர் பாடல், விவேகசிந்தாமணிப் பாடல் ஆகியவற்றின் தாக்கத்தில் முகிழ்த்துள்ள பாரதிதாசனின் கவிதைகளையும் தாக்கத்தை ஏற்படுத்திய மூலப்பாடல்களையும் காண்போம்.

## நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடலும் பாரதிதாசன் கவிதையும்

யாவற்றையும் பரம்பொருளாகக் காணும் உயரன்பு - பக்தி நிலையைப் பக்தி இலக்கியங்களில் நாம் காண்கின்றோம். வைணவ பக்தி இலக்கியமான நாலாயிரத்தில், உண்ணும் சோற்றையும் பருகும் நீரையும் தின்னும் வெற்றிலையையும் 'எல்லாம் கண்ணன் எம்பெருமான்' என்று நினைந்து உருகிப் பக்திப் பரவசநிலையில் நம்மாழ்வார் பாடல் அருளியிருக்கின்றார்.

கடவுள் இல்லையென்றும் கடவுளின் இடத்தில் தமிழை வைத்துப் பார்த்தும் வாழ்ந்த பாரதிதாசனிடத்தில் நம்மாழ்வாரின் இப்பாடல் ஏற்படுத்திய தாக்கமானது, பாரதிதாசனை "உண்ணும் உணவும் பருகும் நீரும் எல்லாம் தமிழே!" எனப் பாடவைத்தது.

### தாக்கம் பெற்ற பாரதிதாசனின் பாடல்

எங்களின் வாழ்வும் எங்களின் வளமும்
எங்கள் தாய்மொழி இன்தமிழ்ச் செல்வமே!
தமிழ்எங் கள்உயிர், தமிழ்எங் கள்உடல்
தமிழ்வாழ் வதனால் யாம்வாழ் கின்றோம்
தமிழ்எம் உணர்வு! தமிழ்எம் உணர்ச்சி!
**உண்ணும் உணவும் பருகும் நீரும்**
**தமிழே!** தமிழே! சாவா மருந்து!
தேனின் இனிமை! செழுமல ரின்மணம்!

பாரதிதாசன் கவிதைகள் - **தமிழ்**

### தாக்கத்தை ஏற்படுத்திய நம்மாழ்வாரின் பாடல்

**உண்ணும்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்**
**கண்ணன் எம்பெருமான்** என்றென்றே கண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளமிக் கவனூர் வினவி
திண்ண மென்இளமான் புகுமூர் திருக்கோளூரே.

நம்மாழ்வார்—ஆறாம்பத்து, ஏழாம் திருவாய்மொழி

## 3

## பட்டினத்தார் பாடலும் பாரதிதாசன் பாடலும்

பட்டினத்தாரின் 'ஒருமடமாது ஒருவனு மாகி' எனத்தொடங்கும் உடற்கூற்று வண்ணப்பாடல் தமிழின் தனிச்சிறப்புவாய்ந்த பாடல்களுள் ஒன்றாகும். நிலையாமைத் தத்துவத்தை எடுத்துக்கூறி இறைவனின் பதம்பற்றத்தூண்டும் பாடல் இது. மனித உயிர்-உடல்-உருப்பெறத் தொடங்குவதுமுதல் மனித வாழ்க்கை முற்றுப்பெறுவதுவரை வாழ்வின் முக்கியமான அனைத்துக் கூறுகளையும் இயல்புகளையும் அற்புதமாகப் படம்பிடித்துக்காட்டும் இப்பாடல், பாரதிதாசனின் இளமையில் அவரை ஈர்த்திருக்கின்றது. விளைவு, அவர் பக்திப் பாடல்களைக் கனகசுப்புரத்தினமாக இருந்து இயற்றிக்கொண்டிருந்த காலகட்டத்தில் அவர் இயற்றிய "மயிலம் சுப்பிரமணியர் துதியமுது" நூலில் 'உளமொத்த ஒருவனிடம்' என்னும் பாடலாகப் பாரதிதாசனின் கவிதைமொழி நடையில் அப்பாடல் மலர்ந்திருக்கின்றது.

பட்டினத்தாரின் 'ஒருமடமாது ஒருவனுமாகி' பாடலின் பாடுபொருள் தான், அதே உத்திதான் இப்பாடலிலும் இடம்பெற்றுள்ளது. பட்டினத்தாரின் சொல்லாட்சிகள்கூடப் பாரதிதாசனால் பின்பற்றப்பட்டிருக்கின்றன. பட்டினத்தாரின் பாடல் முழுதும் சந்தம் பயில்கின்றதென்றால் பாரதிதாசனின் பாடலில் இடையிடையே முடுகியற் சந்தமும் பயில்கின்றது. இப்படிப் பாடுபொருள், உத்தி, சொல்லாட்சி, ஓசை என எல்லாக் கோணங்களிலும் பட்டினத்தாரை அடியொற்றுகின்ற பாரதிதாசனின் பாடல் குறிப்பிடத் தக்கது.

### தாக்கம் பெற்ற பாரதிதாசனின் பாடல்

கஜல்

உளமொத்த ஒருவனிடம் ஒருத்தி போகம்
விளைவித்த விந்துசுரோ ணிதமேற் பாயக்
களிமொய்க்க அவள்வயிற்றில் கருநி றைந்து
வளர்பத்து மாதத்தில் மதலை யாகி

துரிதம்

மலர்புவி தனிற்பிறந் தனுதினம் பிணிகளில்
உலவியைந் துவயதை யடையுமிச் சிறுவனைத்
திருவுளத் தெண்ணா — திருந்தால்
செய்வதே தெண்ணா ! — உமையாம்
பரைதருந் தேனே ! — மயில்மேல்
பவனிவரு வோனே — என்கோனே

கஜல்

குருவையடைந் துயர்கலைகள் கற்றுத் தக்க
பருவமுறு மங்கையர்கள் மோகம் கொள்ளும்
உருவமொடு திருவனையாள் தனைம ணந்து
மருவிடுசு கோததியில் ஆழ்ந்து பின்பு

துரிதம்

வளநிதி வருவித மதில்மன தினைவிட
விளைவன கெடுதிகள் பலபல வாகுமிந்

நலியினா லுருகா — திருக்கும்
நிலையருள் முருகா ! — தமிழ்த்தேன்
குலவுமலர் வாயா ! — என்நேயா
குளிர்செய்காங் கேயா ! — நற்றூயா !

கஜல்

வாலிபம்போய் வலிவெலாம்போய் நரைமி குத்துக்
காலிருந்த இடநோக்கித் தலையும் சாய
மூலைவிட்டு நகர்வதெனில் முனைந்து கையிற்
கோலையெடுத் தூன்றநடை கோணி வீழச்

துரிதம்

சிறுவய தினரிதை நகைபுரி கையில்மன
முறுசின மதில்வசை மொழிவரி வைபலவும்

வருவதன் முன்னே — நின்பார்வை
வசத்திலாக் கென்னை — கயிலா
புரியினோன் பாலா ! — நன்மூலா
பூணுங் கதிர்வேலா ! — நற்சீலா

கஜல்

நாச்சற்றும் நிலைநிற்க மாட்டாது நனிகுழறப்
பேச்சற்று விழியினிலே ஒளியற்றுப் பிரக்ஞையற்றுப்
போச்சுதுயிர் எனஉற்றார் பிடிப்பற்று வாடுமுடல்
மூச்சற்றுப் போகுமுன்னே இவ்வேழை மகனுக்கு

துரிதம்

முழுமதி நிகரது முகமொடு விழிமலர்
அழகொடு பெருகிய அருளொடு விரைவிலென்

அப்பனே வந்தாள் — இப்போதே
மெய்ப்பதந் தந்தாள் — உன்தாஸன்
சுப்புரத் நந்தான் — தருந்தேன்
ஒப்புமா றேநான் — சொரிந்தேன் (அப்பனே)

(மயிலம் சுப்பிரமணியர் துதியமுது)

## தாக்கத்தை ஏற்படுத்திய பட்டினத்தாரின் உடற்கூற்று வண்ணப் பாடல்

ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
உணர்வுகலங்கி யொழுகியவிந்து
ஊறுசுரோணித மீதுகலந்து —
புனியிலொர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற —
உருவமுமாகி யுயிர்வளர்மாதம்
ஒன்பதுமொன்று நிறைந்துமடந்தை
உதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து —
மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்துகவிழ்ந்து
மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து —
ஒளிநகையூற லிதழ்மடவாரும்
உவந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப —
உடைமணியாடை யரைவடமாட
உண்பவர்தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து —
அஞ்சுவய தாகிவிளை யாடியே ;

உயர்தருஞான குருவுபதேச
முந்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து —
மயிர்முடிகோதி யறுபதநீல
வண்டிமிர்தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க —
மதனசொரூப னிவனெனமோக
மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு —
மனதுபொறாம லவர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி —
ஒருமுதலாகி முதுபொருளாயி
ருந்ததனங்களும் வம்பிலிழந்து
மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து —
வளமையுமாறி யிளமையுமாறி
வன்பல்விழுந்திரு கண்களிருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து —
செங்கையினி லோர்தடியு மாகியே;

வருவதுபோவ தொருமுதுகூனு
மந்தியெனும்படி குந்திநடந்து
மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல்வி டாமல்மொழிந்து —
துயில்வருநேர மிருமல்பொறாது
தொண்டையுநெஞ்சுமு லர்ந்துவறண்டு
துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு —
கலியுகமீதி லிவர்மரியாதை
கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச
கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து —

தெளிவுமிராம லுரைதடுமாறி
சிந்தையுநெஞ்சமு லைந்துமருண்டு
திடமுமழிந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதெனநொந்து —
மறையவன்வேத னெழுதியவாறு
வந்ததுகண்டமு மென்றுதெளிந்து
இனியெனகண்ட மினியெனதொந்தம்
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற —
கடன்முறைபேசு மெனவுரைநாவு
றங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று —
நெஞ்சுதடு மாறிவரு நேரமே;

வளர்பிறைபோல வெயிறுமுரோம
முஞ்சடையுஞ்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து —
வலைகொடுவீசி யுயிர்கொடுபோக
மைந்தரும்வந்துகு னிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து —
பழையவர்காணு மெனுமயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று —
பலரையுமேவி முதியவர்தாமி
ருந்தசவங்கழு வுஞ்சிலரென்று
பணிதுகிறொங்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை —
வரிசைகெடாம லெடுமெனவோடி
வந்திளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து —
விறகிடைமூடி யழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்கள்
உருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை —
நம்புமடி யேனையினி யாளுமே.

## நீதிவெண்பாப் பாடலும் பாரதிதாசனின் பாடலும்

ஒருபெண் தன் திருமணத்திற்குப் பின் தன் கணவனுக்கு எவ்வகையி லெல்லாம் துணையாக இருந்து இல்லறத்தை இனிது நடத்தவேண்டுமென்பதை, பொறுமையில் தாய்போன்றும் பணிவில் பணிப்பெண்போன்றும் சுகமளிப்பதில் தாசிபோன்றும் ஆலோசனை கூறுவதில் அமைச்சர்போன்றும் விளங்க வேண்டும் எனக் கூறுகின்ற வடமொழிச் சுலோகம் ஒன்றுண்டு. அக்கருத் தையே தமிழில் நீதிவெண்பா, நீதிசாரம் முதலிய இலக்கியநூற் பாடல்களும் எடுத்துரைக்கின்றன. நீதிவெண்பாவில் இடம்பெற்றுள்ள அப்பாடல் அப் படியே பாரதிதாசனின் மொழிநடையில் பாட்டாகியிருப்பது நம் பார்வைக் குரியது.

### தாக்கத்தை ஏற்படுத்திய நீதிவெண்பாப் பாடல்

அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண். -நீதிவெண்பா - 30

### தாக்கம் பெற்ற பாரதிதாசனின் பாடல்

பெண்கள் இட்ட பிச்சைதான்—ஆண்கள்
பெற்ற இன்பம் அனைத்தும்—அழகிய
பெண்கள் இட்ட பிச்சைதான் !
கண்ணைக் கவர்வார் எண்ணம் கவர்வார்
காதலால் இன்ப வாழ்வளித்திடும்
—பெண்கள் இட்ட பிச்சைதான் !

அன்னை தயையுடையார் — பணிவினில்
அடியவர் போன்றார் — மலர்ப்
பொன்னின் அழகுடையார் — பொறுமையில்
பூமிக் கிணை ஆவார்.
இன்பம் அளிப்பதில் தாசிகள் — அவர்
எண்ணம் அளிப்பதில் அமைச்சர்கள் — அழகிய
பெண்கள் இட்ட பிச்சைதான் !

......... ......... ......... .........
......... ......... ......... .........

'25. இன்பம் அனைத்தும்'
— பாரதிதாசன் கவிதைகள் - தொகுதி 4

## இராமச்சந்திரக்கவிராயர் பாடலும் பாரதிதாசன் பாடலும்

'தனிப்பாடல்திரட்டு'களில் இடம்பெற்றுள்ள இராமச்சந்திரக் கவிராயரின் 'கல்லைத்தான் மண்ணைத்தான்' எனத்தொடங்கும் பாடல், அதன் உத்திச் சிறப்பால் தமிழின் குறிப்பிடத்தகுந்த பாடலாக ஒளிர்கின்றது. 'தான்' 'தான்' எனும் விகுதிபெற்ற சீர்கள் பாடல் முழுமையையும் அணிசெய்யும் அப்பாடலின் தாக்கத்தால் திரைப்படப் பாடல்கள் (கண்ணதாசன்) சிலவும் மலர்ந்து மக்கள் நெஞ்சில் மங்காத இடத்தைப் பெற்றுள்ளன. அந்த உத்தியை மனங்கொண்டு, 'தான்' 'தான்' எனும் விகுதிகள் பாடல் முழுவதும் அழகுறப் பயிலுமாறு பாரதிதாசன் பாடல் இயற்றியுள்ளமை கண்டுமகிழத்தக்கது. முன்னவர் பாடல் விருத்தப்பாடல். பின்னவர் பாடல் சிந்துப்பாடல்.

### தாக்கம் பெற்ற பாரதிதாசனின் பாடல்

எனை,

மணக்கத்தான் பணத்தைத்தான்
குவிக்கத்தான் புறப்பட்டான்
மறப்பானோ தோழிப்பெண்ணே ! என் அத்தான்—மனம்
மாறமாட்டான் மாற்றுயர்ந்த பொன்அத்தான் !

நல்ல,

குணத்தில்தான் செயலிற்றான்
அணைப்பில்தான் மிகுந்திட்டான்
குற்றமில்லான் தோழிப்பெண்ணே ! என் அத்தான் — ஒரு
கோவைப் பழத்தைக் கிளிவிடுமா தின்னத்தான் ?

என்,

சிரைத்தான் கோரித்தான்
தேரிற்றான் ஏறித்தான்
திரும்புகின்றான் தோழிப் பெண்ணே ! என் அத்தான்-அவன்
விரும்புவதும் உலகத்திலே என்னைத்தான் !

என்,

பேரைத்தான் எண்ணித்தான்
ஊரைத்தான் நோக்கித்தான்
பெயர்கின்றான் தோழிப்பெண்ணே ! என் அத்தான் — நீ
துயரத்தில் ஏன் தள்ளிக்கொண்டாய் உன்னைத்தான் ?

'பொன் அத்தான்'
பாரதிதாசன் கவிதைகள் - தொகுதி - 4

## தாக்கத்தை ஏற்படுத்திய இராமச்சந்திரக் கவிராயரின் பாடல்

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித் தானா
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியிற்றான் பண்ணி னானே.

*இராமச்சந்திரக் கவிராயர் - தனிப்பாடற்றிரட்டு-1*

## விவேகசிந்தாமணிப் பாடலும் பாரதிதாசன் பாடலும்

பயணம்செய்யும்போது உடன் எடுத்துச்செல்லவேண்டிய பொருட்களின் பட்டியலை எடுத்துச்சொல்லும் விவேகசிந்தாமணிப்பாடல் தனிச்சிறப்புடையது. இப்பாடலின் தாக்கத்தில் பாரதிதாசன் 'யாத்திரை போகும் போது' எனுந் தலைப்பில் ஒரு பாடல் புனைந்துள்ளார். பொருட்பட்டியலில் காலமாற்றத்திற் கேற்பச் சில பொருள்கள் மாறுதல் பெற்றுள்ளன. விவேகசிந்தாமணிப் பாடலில் உள்ள சக்கிமுக்கி, கைராந்தல் என்பவை தீப்பெட்டி, பாட்டரிவிளக்கு எனப் பாரதிதாசனின் பாடலில் காலத்திற்கேற்ப மாறுதல் பெற்றுள்ளமையும், இன்னும் சில பொருள்கள் குறைந்தும் மாறியுமுள்ளமையும் நோக்கத்தக்கது.

## தாக்கம் பெற்ற பாரதிதாசனின் பாடல்

சீப்புக்கண் ணாடி ஆடை
சிறுகத்தி கூந்த லெண்ணெய்
சோப்புப்பாட் டரிவி ளக்குத்
தூக்குக்கூ ஜாதாள் பென்சில்
தீப்பெட்டி கவிகை சால்வை
செருப்புக்கோ வணம்ப டுக்கை
காப்பிட்ட பெட்டி ரூபாய்
கைக்கொள்க யாத்தி ரைக்கே.

'யாத்திரை போகும் போது'
பாரதிதாசன் கவிதைகள் - முதல்தொகுதி.

## தாக்கத்தை ஏற்படுத்திய விவேகசிந்தாமணிப் பாடல்

தண்டுல மிளகின் றாள்புளி யுப்பு
தாளிதம் பதார்த்த மிதேஷ்டம்
தாம்புநீர் தோற்ற மூன்றுகோ லாடை
சக்கிமுக் கிக்கை ராந்தல்
கண்டகங் காண்பான் பூசை முஸ்தீபு
கழற்குடை யேவல்சிற் றுண்டி
கம்பளி ஊசி நூலெழுத் தாணி
கரண்டகங் கண்டமேற் றங்கி
துண்ட மூறியகாய் கரண்டிநல் லெண்ணெய்
துட்டுடன் பூட்டுமே கத்தி
சொல்லிய வெல்லாம் குறைவறத் திருத்தித்
தொகுத்துப்பல் வகையினி தமைத்துப்
பெண்டுகள் துணையோ டெய்துவா கனனாய்ப்
பெருநிலை நீர்நிழல் விறகு
பிரஜையுந் தங்கு மிடஞ்சமைத் துண்டு
புறப்படல் யாத்திரைக் கழகே.

*விவேகசிந்தாமணி—135*

### மற்றுமொருவகைத் தாக்கம்

முன்னை இலக்கியங்களின் முழுப்பாடல்களின் தாக்கத்தில் பிறந்த முழுப் பாடல்களாக இல்லாமல், முன்னை இலக்கியங்களில் இடம்பெற்ற அருந்தொடர்கள் சில, பாரதிதாசனின் கவிதைகளில் அப்படியேயும் சிறு உருமாற்றத்துடனும் இடம்பெற்றுள்ளமை, பாரதிதாசன் கவிதைகளில் முன்னை இலக்கியங்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் இன்னொருவகையாகும்.

பட்டினத்தார், ஔவையார், குமரகுருபரர், பாரதியார் முதலியோர் பாடல்களின் அருந்தொடர்கள் பாரதிதாசன் கவிதைகளுள் அவரின் கவிதையடிகளாகவே பல இடங்களில் பதிந்துகிடக்கின்றன.

"பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போனதுவே" (பொது - 52) என்னும் பட்டினத்தாரின் பாடலடி, "கதையாகிக் கனவாய்ப் போகும் நிகழ்ந்தவை" (குடும்பவிளக்கு - முதியோர் காதல், ப. 100) எனப் பாரதிதாசன் பாடலில் இடம்பெற்றுள்ளமையும், "ஈதலறம்" எனத் தொடங்கும் ஔவையாரின் தனிப்பாடல் வெண்பாவில் இடம்பெற்றுள்ள "எஞ்ஞான்றும் காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்னும் அடி "காதலிருவர்களும் — தம்/ கருத்தொரு மித்தபின்/ வாதுகள் வம்புகள்ஏன்? — இதில்/ மற்றவர்க் கென்னஉண்டு?" ('15 - காதற் பெருமை -பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி.') என்னும் பாரதிதாசனின் பாடலடியாகப் பளிச்சிடு

கின்றமையும் இவ்வகைத் தாக்கத்திற்குச் சான்றுகளாகச் சுட்டத்தக்கன. இவ்வாறான இடங்கள் மேலும் பல உள.

**நிறைவுரை**

ஆழங்காற்பட்ட தமிழிலக்கியப் புலமையை உடையவர் பாவேந்தர் பாரதிதாசனார். அவர் தமிழிலக்கிய மரபில்நின்று கவிதைபாடியவர். மரபை அடியொற்றி மணிக்கவி பல புனைந்தவர். அவர் தனக்கு முந்தைய புலவர் பெருமக்களின் சிறந்த பாடல்களின் தாக்கத்தில் சில பாடல்களை இயற்றி யுள்ளார். அப்பாடல்கள் அவருடைய முன்னை இலக்கியப் பயிற்சியை - ஈடு பாட்டை - மரபு போற்றுதலைப் பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன. தமிழிலக்கிய மரபில் நிறுத்திப் பாரதிதாசனாரின் இடத்தைச் சரியாக மதிப்பிட இக்கோணத்தில் ஆய்ந்து எழுதப்பெறும் கட்டுரைகளும் உதவும். அவ்வகையி லான சிறுமுயற்சியாக இக்கட்டுரை இங்கு உருப்பெற்றுள்ளது. ஆய்வுலகம் இந்நோக்கில் மேலும் முயல வாய்ப்புகள் பல உள.

## துணை நூற் பட்டியல்


**தனிப்பாடற்றிரட்டு (முதற்பாகம்),** கா. சு. பிள்ளை உரையுடன் கூடிய பதிப்பு, இரத்தின நாயகர் ஸன்ஸ், சென்னை, 1957.

**நாலாயிர திவ்வியப் பிரபந்தம்,** ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமிகளால் பார்வையிடப்பட்டு ஸ்ரீ வி. என். தேவநாதனவர்களால் பதிப்பிக்கப்பட்டது, சென்னை, 1971.

**நீதிவெண்பா,** "நீதிநூற்கொத்து" - இரண்டாம் பாகம், கழக வெளியிடு, சென்னை, 1958.

**பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடல்கள் (இருபகுதிகள்),** கழக வெளியீடு, சென்னை, 1973.

**பாரதிதாசன் கவிதைகள் - தமிழ்,** பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1992.

**பாரதிதாசன் பாடல்கள் (1, 2, 3, 4 தொகுதிகள் அடங்கிய நூல்),** தொகுப்பு: டாக்டர் தொ. பரமசிவன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, (முதற்பதிப்பு) 1993.

**மயிலம் சுப்பிரமணியர் துதியமுது,** கனக சுப்புரத்தின முதலியாரவர் களால் இயற்றப்பட்டது, சைகோன் சின்னையா சன்ஸ் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது, புதுவை, 1926.

**விவேகசிந்தாமணி,** ஸ்ரீ தனலட்சுமி புத்தக நிலையம், சென்னை, 1985.

# தங்கத் தஞ்சைத் தரணியின் மும்மணிகள்

**பு. ம. பத்மநாப சர்மா,**
*முன்னாள் வடமொழிப் பண்டிதர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

பாரினில் சிறந்த நாடான நம் பாரத தேசத்தின் தென் திசையில், வேங்கடம் முதல் குமரி வரை, பரந்து இருக்கும் நாடு நம் தமிழகமாகும். அதில் தற்கால திருச்சி, தஞ்சை, திருச்சி மாவட்டங்களை ஒருங்கிணைத்த குறுநிலம் "சோழதேசம்" என அக்காலத்தில் வழங்கப்பட்டது. காரணம், அக்காலத்தில் சோழவமிசத்திலுதித்த மாமன்னர்கள், இக்குறு நிலத்தை சுவர்க்கபூமியாக ஆக்கி நல்ல முறையில் ஆட்சி செய்து வந்தனர்.

இந்த தேசம் நம் தமிழகத்தின் நடுவில் இருக்கிறது என்பதை யாவரும் அறிவர். மனிதன் உடலின் நடுவில் இருப்பது அவன் ஹிருதயமல்லவா ! அது நல்ல முறையில் இயங்கினால் ஏனைய உடல் முழுவதும் நல்ல முறையில் இயங்குகிறது எனச் சொல்லலாம். அதுபோல நடுநாயகமாக விளங்கிய சோழ தேசமும் ஏனைய தமிழகத்திற்குச் சக்தியையும், கலையையும் அளிக்கும் ஆசானாகத் திகழ்ந்தது என்றால் மிகையல்ல. இயற்கையும் இந்நாட்டைச் செழிப்பாக்கியது. காவிரியும் அதன் கிளை நதிகளும் இந்நாட்டை நெற் களஞ்சியமாக்கின. இதை ஆண்ட மன்னர்களோ, கலைக்களஞ்சியமாகவும் ஆக்கிவிட்டனர். "சோழநாடு சோறுடைத்து" என்ற பழமொழி இதனால் அல்லவோ ஏற்பட்டது. உடல், மனம் இரண்டிற்கும் உணவளிக்கிறது என்று பொருள் காண்க.

இத்தகைய பெருமை வாய்ந்த சோழ தேசத்திற்குத் தலைநகரம் தஞ்சைத்தரணியாகும். இது பட்டினியால் வாடும் மக்களுக்கும், கலைத்தாகம் கொண்டவர்களுக்கும் தஞ்சமளிப்பதால் அப்பெயரைத் தாங்குகிறதோ ? இந் நகரம் தோற்றத்தால் ஏனைய நகரம் போல அழகு பொருந்தியதாகத் தோன்றாவிடினும். கலைகளால், பக்தியால், அதன் பயனாகக் கட்டப்பட்ட ஆலயங்களால், நூலகத்தால் மற்றும் கலைக்கல்லூரிகள், பல்கலைக்கழகம், அதன் பயனால் ஏற்பட்ட அறிவு, ஆற்றல் இவைகளால் எவ்விதம் நோக்கி னாலும் அகத்தில் அழியாத அழகு படைத்ததாகக் காணப்படுகிறதல்லவா.

பரு-த

இலந்தைப் பழம் புறத்தில் அழகாக இருப்பினும் அகத்தில் புழு படைத்ததாக இருக்கும். பலா புறத்தில் அழகாக இல்லாவிட்டாலும் அகத்தில் ரசமுள்ள பழங்களைப் படைத்திருக்கும். ஆகவே எங்கள் "தஞ்சைத்தரணி" அளவு இல்லாத, அகஅழகு படைத்தவள்.

இங்குள்ள காவிரியின் இரு கரைகளிலும் "பசுமைப் புரட்சி" நடந்து கொண்டிருக்கும் என்றால் கரைகளிலுள்ள வீடுகளில் அறிவொளி இயக்கமும் நடந்துகொண்டிருக்கும். வயல்களில் பயிர்கள், கதிர்களை வெளிப்படுத்தி, மக்களுக்கு அளிக்கக் காத்திருக்கும் என்றால், அங்குள்ள வீடுகளில் மாணாக்கர்கள் கல்விப் பயிரை வெளிப்படுத்தி, ஏனைய மனிதர்களுக்கும் அதன் பயனை அளிக்கத் தயாராக இருப்பார்கள். இவ்வாறு உடலுக்கு உணவையும், உள்ளத்திற்குக் கல்வியையும் அளிக்கத் தகுதி பெற்ற மக்கள் ஏராளம் ஏராளம். இந்தச்சோழ தேசத்தின் புலவர்களைப் பட்டியல் இட்டுக் காட்ட முடியு மானாலும் கட்டுரை நீளும் என்ற காரணத்தால் மேலே செல்கிறோம்.

இவ்வளவு சீரும் சிறப்பும், இந்த தேசத்திற்கு உண்டென்றால் அதன் புகழ், இதை ஆண்ட மன்னர்களையே சாரும் என்பதில் ஐயமுண்டோ. "அரசன் எவ்வழியோ, அவ்வழியோ மக்களும்" என்றபடி. அரசர்கள் படித்த, பண்புள்ள, புலமை வாய்ந்தவர்களாக இருந்தால், மக்களையும் அவ்வாறே ஆக்கப் பாடுபடுவார்கள். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்ற மொழிக்கேற்ப அரசர்கள், படித்த, பண்பு, புலமை மிகு புலவர்களையே குடியமர்த்தி, அவர்கள் மூலம் மக்களையும் படிப்பாளியாகவும், பண்புள்ளவர்களாகவும் ஆக்கிவிடுகின்றனர். படிப்பும், பண்புமிருந்தால் பணம் தானாகவே அவர்களை நாடி வரும். பொருளாதாரமும் நன்கு அமைந்துவிட்டால் அமைதி நிலவும். நாடும் "அமைதிப்பூங்காவாக" ஆகி விடும். இவ்வாறு நல்ல விதத்தில் மக்களையாண்ட பெருமை சோழ மன்னர் களுக்குண்டு. சோழமன்னர்கள் மன்மதன் போல் அழகாக இருந்தாலும் வீரத்திலும் குறைந்தவர்களல்ல. தன் காம்பீர்யத்தால் பிறர் மனதில் பயத்தை உண்டு பண்ணினாலும், பணிவாலும், பேச்சினாலும் பிறர் மனதைக் கவர்ந்தவர்கள். செல்வந்தர்களிடம் சிறிது கடுமையைக் காட்டினாலும், ஏழை எளியவர்களிடம் கருணைக் காட்டுபவர்கள். விரோதிகளிடம் வீரத்தைக் காட்டினாலும், பலமற்றவர்களிடம் இரக்கம் காட்டுபவர்கள். அதிகமேன் ? தன் அரசின்கீழ் உள்ள மக்களைத் தன் மக்களைப் போல் பாகுபாடு இல்லாமல் காப்பவர்கள். அவர்களின் திறமைக்கேற்ற வேலைகளை அளித்து, அவர் களும் பட்டினியால் வாடாமல் பேணிக்காப்பவர்கள். கரிகாலன், குலோத்துங்கன், ராஜராஜன் போன்ற சோழ மன்னர்கள் உலகம் வியக்கும் வண்ணம் ஆண்டார்கள். ஆயினும் என் கட்டுரையில் என் பார்வைப்படி மும்முடி மன்னனாம் ராஜராஜ மன்னனுக்கு முதலிடம் தருகிறேன்.

பவிஷ்யோத்தர புராணத்தில் கூறியபடி ராஜராஜ மன்னன் சிறந்த படிப்பாளி. சான்றோர்களின் நன்மொழிகளை அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என எண்ணுபவர். கடவுள் பக்தி, அதிலும் விசேஷமாக சிவனிடம் அளவிலா பக்திகொண்டவர். எப்பொழுதும் திருநீறும், உருத்திராட்சமும் அணிபவர். "அன்பே சிவம்" "ஓம் நமச்சிவாய" என்ற மந்திரங்களை அவர் வாய் முணுமுணுத்துக்கொண்டே இருக்கும். சிவனடியார்களிடமும், வேதமோதும் அந்தணர்களிடமும் பரிவுடன் மரியாதையைக் காட்டுபவர். மக்களைக் கவனிக்கும் நேரம் போக, மற்ற நேரங்களில் கலைகளிலும், இலக்கியங்களிலும் நாட்டமுடையவரானதால் இலக்கியமன்றங்களிலமர்ந்து, அதன் சுவையைச் சுவைப்பவர். இம்மன்னன், சிவனுக்கு ஓர் ஆலயம் எழுப்பி, அதில் "சிவன்தான் பெரியவன்" என்று எடுத்துக்காட்டுவதற்குப்போல, மாபெரும் லிங்கத்தை ஸ்தாபித்து, அதற்கேற்றபடி சிவன் பரிவாரமான நந்தியையும் நிலைநாட்டி, மற்றும் ஏனைய சிவ பரிவாரங்களையும் அமைத்து, பார்த்து மகிழ வேண்டும் என்று எண்ணினான்.

கற்கள் கிடைக்காத தஞ்சையில், கற்களாலேயே சிவாலயத்தை எழுப்ப வேண்டும் என்று எண்ணினால் நடக்குமா? "மனமிருந்தால் வழியுண்டு" என்ற முதுரைப்படி, மன்னன் ராஜராஜன், பக்தியால் உந்தப்பட்டு, எவ்விதமோ மாபெரும் கோவிலையே படைத்துவிட்டான். என்னே பக்தியின் எல்லை! வானளாவிய கோபுரமும், மிகப்பெரிய அகன்ற பிராகாரங்களும் உயிர் ஊட்டப்பட்டது போன்ற மாபெரும் நந்தியும், அதற்கேற்ற வகையில் மாபெரும் லிங்கமும், அதற்குரிய சிவபரிவாரங்களும் இவ்விதமான கலை அற்புதங்கள் எல்லாம் இங்கே காணக்கிடைக்கின்றன. இவைகளைக் கண்டு மயங்காதவர் தரணியிலுண்டோ? அந்த அரசன் உள்ளம் போல் எல்லாம் உயர்ந்தது, பெரியது. இவைகளைக் காண்பவர், பக்தி வெள்ளத்தில் மிதந்தாலும், தாங்களும் அவ்வுள்ளத்தைப் பெறவேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டும். இவ்வளவு பெரிய கோவிலை, பற்பல சித்திரங்களாலும், பதுமைகளாலும் அழகுபடுத்தி, காண்பவர்களின் உள்ளத்திலும், ஆச்சரியத்துடன் சிவபக்தியையும் ஊட்டி மாக்களை மக்களாக மாற்றினான். அம்மன்னன் என்றால், அவனுக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் தெரிவிக்கிறோம். அத்துடன் அம்மன்னனை, சோழப் பேரரசர்களிலே முதல் இடத்தில் அமர்த்தி, அவன் காலத்தில் சோழநாடு பொன்னாடாயிற்று என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு சோழ மன்னர்களின் ஆட்சி மங்கவே, நம் நாட்டில் அன்னிய மதத்தினர் புகுந்து, தங்கள் அதிகாரத்தை நிலை நாட்டத் தொடங்கினர். பாரதத்தில் வட திசையில், பல ராஜ்யங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வீழ்ச்சியடைந்தன,

அங்குள்ள அரசர்கள் பலமற்றவர்களாக இருந்தனர் என்பது சொல்லப்பட்ட காரணம். அவர்களுள் ஒற்றுமையில்லை என்பது சொல்லப்படாத காரணம். அதன் எதிரொலி தென் திசையிலும் ஒலிக்கத் தொடங்கியது. காலத்தின் முடிவை நாமறியாவிட்டாலும் காலம் ஏதோ ஒன்றை முடிவாகச் செய்யத்தான் நினைக்கிறது.

ஆந்திர தேசத்தின் விஜயநகரத்தில், ஹரிஹரன், புக்கன் இவர்களின் ஆசியுடன் விஜயநகர சாம்ராஜ்யம் உதயமாயிற்று கிருஷ்ணதேவராயர் சிறந்த அறிஞரானபடியால் மாற்றான் ஆதிக்யத்தைத் தென் திசையில் நுழைய விடாமல், தென்னாடுகளைக் காப்பாற்ற எண்ணினார். அதனால், வேலூர், தஞ்சை, மதுரை முதலான தமிழக நகரங்களிலும் தன் பிரதிநிதிகளை நியமித்தார். அதன் காரணமாக, நம் தஞ்சையிலும் நாயக்கர்களின் ஆட்சி அமையத் தொடங்கியது.

நாயக்க மன்னர்களில் செவ்வப்ப நாயகன், அச்சுத நாயகன், ரகுநாத நாயகன் போன்றோர் நன்கு படித்த, பண்புள்ள அரசர்களாவார்கள். அவர்கள் மொழியால் மாறுபட்டவர்களாயினும், மதத்தால் ஒன்றுபட்டவர் களாய் இருந்ததால் மக்களிடம் சோழ மன்னர்களின் காலத்தில் இருந்தது போன்ற உணர்வே மேலோங்கி இருந்தது. ஆகவே நாட்டில் அமைதி நிலவியது. மேலும் நாயக்க மன்னர்களின் மொழி, தெலுங்காக இருந்தாலும் அதுவும் நம் தமிழ் வழி மொழியே என்ற காரணத்தாலும், கல்வி, கலாசாரம், பண்பு போன்ற விஷயங்களில் மாறுபடாதவர்களாயிருந்ததாலும் மக்களிடம் சலசலப்பு ஏற்படக் காரணமில்லை. மேலும் நம் நாட்டில் பலதரப்பட்ட தெய்வ வழிபாடு இருந்தது. சங்கரர் ஸ்தாபித்த அத்வைத நெறிப்படி, "ஓர் குலம், ஓர் தேவன்" என்ற நிலை இருந்தாலும், அந்நிலையை அடைய விக்ரக ஆராதனை புகுத்தப்பட்டது. ஆகாயத்திலிருந்து விழுந்த தண்ணீர், குளம் குட்டைகளில் தங்கினாலும், கடைசியில் கடலைத்தான் அது அடைகிறது என்ற கொள்கைப்படி, எந்தெந்த தெய்வத்தை உருவத்தில் படைத்து வணங்கி னாலும், அதெல்லாம், எல்லாம் வல்ல இறைவனை அடைந்துவிடும் என்று எண்ணி, பலர் பலவித விக்ரகங்களில் பற்பல தெய்வங்களைத் தங்கள் விருப் பப்படி ஆராதித்தனர் என்பது கண்கூடு. ஆனால் இதில் ஒரு முறை இல்லாது தான் தோன்றித் தனமாகப் பலர், பல தெய்வங்களை வழிபடும் நிலை ஏற்பட்டு, மதமே சீர் குலைந்துவிடும் என்ற வேளையில் அதே சங்கரர் ஆறு தெய்வ வழிபாட்டு முறையை, அதாவது 'ஷண்மத ஸ்தாபனத்தைச்' செய்தார். அதன்படி, சூரியன், வினாயகர், முருகன், சிவன், சக்தி, விஷ்ணு என்ற தெய்வங் களில் ஏதாவது ஒன்றைத் தன் இஷ்ட தெய்வமாகக் கருதி, அதன் வழிபாட்டு மூலம் பக்தி மார்க்கத்தைக் கடந்து, ஞானத்தால் கடவுளை அடையலாம் என்ற சாத்வீகமான ஓர் வழியைக் காண்பித்தார் சங்கரர். இதனால்,

தெய்வத்தின் பெயரால் மது உண்ணுதல் பலி கொடுத்தல் போன்ற சமூக விரோதச் செயல்கள் தடுக்கப்பட்டன. அதனால் ஷெ கூறிய ஆறில் சிவனை யும், விஷ்ணுவையும் இஷ்ட தெய்வமாகக் கருதி வழிபட்ட மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. "அரியும் சிவனும் ஒன்றே, இதை அறியாதவன் வாயில் மண்ணே" என்று பழமொழி ஏற்பட்டதன் காரணமாக நாயக்க மன்னர்கள் வைணவர்களாக இருந்தாலும் அவர்கள்பால் மக்களிடம் பக்தி குறைய வில்லை.

நாயக்க மன்னர்களுள் செவ்வப்ப நாயக்கன் பல நற்காரியங்கள் செய்ததுடன் தற்கால சீனிவாசபுரம் பக்கம் ஒரு மாபெரும் ஏரியை அமைத்து, அதனடியில் கட்டுமான முறையில் குழாய்களை அமைத்து, நகரிலுள்ள கிணறு களுக்கு நீர்வரச் செய்து, குடிநீர்ப் பிரச்னையை நீக்கினான் என்பது குறிப் பிடத்தக்கது. அவன் பிள்ளை அச்சுத நாயகன் சிறந்த அறிவாளியும், வீரனு மானான். அவனுக்குச் சிவனின் மறு அவதாரம் என்று போற்றப்படும் கோவிந்த தீக்ஷிதர் என்ற அந்தணர் அமைச்சராக இருந்தார். அரசன் இல்லாத நேரங்களில் அவரே ஆட்சியை நடத்தினார் என்றால் மிகையாகாது. மக்கள் அவரை 'அய்யர், அய்யர்' என்றே அன்புடனும், பணிவுடனும் அழைக்க லானார்கள். அய்யன்கடை, அய்யன்குளம் என்று பல இடங்களுக்கு அவர் விரும்பாவிடினும், அவர் பெயர் வழங்கலாயிற்று. அச்சுதப்பன் காலத்தில் கோவிந்த தீக்ஷிதரால் தஞ்சை மாவட்டத்தில் பற்பல கோயில்களும், மாபெரும் குளங்களும் அமைக்கப்பட்டன. திருவாரூரிலுள்ள கமலாலயமும், மன்னார்குடி யிலுள்ள ஹரித்ரா நதியும், கும்பகோணத்தில் மகாமகக்குளம் போன்ற பல குளங்களும் வெட்டப்பட்டன என்பதையும் அறிய முடிகிறது. தஞ்சையில் நடுநாயகமாக விளங்கும் அரண்மனையும், வெங்கடேசப்பெருமாள் கோயிலும் அமைக்கப்பட்டன. அக்காலத்திய இந்த அரண்மனை பல நூற்றாண்டுகளைக் கடந்தும், தற்காலம் கட்டப்பட்டதுபோல் காட்சியளிக்கிறது என்றால் அக்காலத்திய கட்டிடக்கலை எவ்வளவு உறுதியானது என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்த அச்சுதப்பன் காலத்தில், யக்ஞநாராயண தீக்ஷிதர், அனந்த நாராயண தீக்ஷிதர் போன்ற மாபெரும் புலவர்களும் கௌரவிக்கப்பட்டனர். சித்தியடைந்த காஞ்சி முனிவர் ஒரு சமயம் குறிப்பிட்டது போல், அச்சுத, அனந்த கோவிந்த என்று சொன்னால் எல்லா வியாதிகளும் தீரும் என்று ஓரிடத்தில் சொல்லப்பட்டிருப்பது போல், அச்சுத, அனந்த, கோவிந்த என்று சொன்னால், அச்சுதப்ப நாயக்கன் காலத்தில், நடக்காத காரியம் எதுவு மில்லை, மக்கள் கஷ்டம் தீரும் என்று துணிந்து சொல்லி விடலாம். இவ்வாறு அச்சுத நாயக்கன், அனந்த நாராயண தீக்ஷிதர், கோவிந்த தீக்ஷிதர், இம் மூவரின் கூட்டு, மக்களுக்கு நன்மை செய்வதில் போட்டி போட்டது.

இந்த அச்சுதநாயக்கனின் மைந்தன்தான் ரகுநாதநாயக்கனாவான். இவன் பிறவியிலேயே படிப்பாளி, கவி, ஆராய்ச்சியாளர், சிறந்த ராம பக்தர். இவருக்குத் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் போன்ற மொழிகளில் சிறந்த புலமை உண்டு. அவற்றில் இலக்கியங்களைப் படைப்பதிலும் கைதேர்ந்தவர். நல்ல குணமும், நன்னடத்தையும் இவருக்கு உயிர்நாடி. காலையில் எழுந்து ஸ்நானம் செய்து, ராம மந்திரில் பூஜை செய்து, அங்கு வந்துள்ள அந்தணர்களுக்கு ஏற்ற தான, தர்மம் செய்து, பிறகுதான் காலைச் சிற்றுண்டி உண்ணுவார் என்று நேரில் பார்த்த கவிஞர் கூறுகிறார். தர்பார் மண்டபத்தில் ஏனைய மந்திரிகளுடன் மக்களுடைய குற்றம் குறைகளைவிசாரிப்பதிலும், அதற்குப் பரிகாரம் செய்வதிலும், நீதிபதிகள் இவரிடம் பாடம் படிக்க வேண்டும். மற்ற நேரங்களில் இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாசங்களைப் படித்து இன்புறுவார். இவர் படித்த ஏடு சுவடிகள், எங்கள் நூலகத்தில் இன்றும் காணக் கிடைக்கின்றன. இவர் மக்களிடம் மட்டற்ற அன்பு கொண்டவர். இவர் புன்சிரிப்புடன் இனிமையாகப் பேசுவதில் ராமனைப் போன்றவர். இவர், மக்கள் சேவையே மகேசன் சேவை'' எனக் கருதுபவர். வீரத்திலும் இவர் ராமனே. எவ்வாறு ராமன் தீயோரை வென்று, நல்லோரைக் காத்தாரோ, அவ்வாறே தீயவர்களைக் கருணையுடன் அடக்குபவர். பல குறுநில மன்னர்கள் இவரை எதிர்த்தாலும் இவர் அவர்களை வென்று, ''நாற்றைப் பிடுங்கி மறுபடியும் நடுவது'' போல, அவர்களின் ராஜ்யத்திலேயே அவர்களை அரசனாக்குபவர். அதனால் விரோதிகள் கூட இவரை பயபக்தியுடன் வணங்கினர், என்றால் நல்லோரைப் பற்றித் தனியாகச் சொல்ல வேண்டுமோ ?

கர்னாடகம், நேபாளம் போன்ற இடங்களில் இவ்வாறு செய்ததாக அறியப்படுகிறது. சிங்களத்திலுள்ள ஓர் அணங்கை இவர், கைப்பிடித்தார் என்பது ஓர் நாடகாசிரியரின் கற்பனையாகும். இவ்வாறு இவர், எவ்விதம் நோக்கினாலும் பத்தரைமாத்துத் தங்கமாக மிளிர்கிறார். இவர் காலத்தில் சத்யமங்கலம் சீனிவாச தீக்ஷிதர், ராஜசூடாமணி தீக்ஷிதர், அப்பய்ய தீக்ஷிதர் போன்ற சைவ மதப் பண்டிதர்களும், காஞ்சி குமாரதாத்தய்யா, வரதராஜன் தாதாசாரியர் போன்ற வைணவப் பண்டிதர்களும் கௌரவிக்கப்பட்டனர் என்றால் இம்மன்னனின் மனப்பான்மையை ஓரளவு நாம் அறிந்துகொள்ள முடியும். ஆயினும் இந்தப் பண்டிதர்களுக்குள்ளே, சைவ, வைணவ சம்பிரதாயத்தின் சலசலப்பு ஏற்பட்டு ஒட்டுதல், வெட்டுதல் வடிவில் பல நூல்கள் இயற்றப்பட்டன. அதனால் நம் இலக்கியம்தான் வளர்ந்ததே தவிர அவர்களுடைய சண்டையல்ல. அப்பய்ய தீக்ஷிதர் போன்றோர் அத்வைதியாக இருந்தும், பிறரால் உசுப்பப்பட்டு வைணவத்தைக் கண்டித்தாரே தவிர, விஷ்ணுவை அல்ல. சிவனை உயர்த்தினாரே தவிரச் சைவர்களை அல்ல. கடைசியில் அதற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்வது போல விஷ்ணு

வையும், சிவனையும் இணைத்துப் பல செய்யுள்களை எழுதினார். இவ்வாறு நாயக்க மன்னர்களும், வைணவர்களாயிருந்தும் சமரச சன்மார்க்கத்தைக் கடைபிடித்தனர்.

இம்மன்னன் காலத்தில் நிகழ்ந்த ஒரு நற்செய்தி. வைணவப்பெரியார் மணவாளரும், சைவப்பெரியார், சூரியனார்கோவில் ஆதினத்தை ஸ்தாபித்த, சிவாக்ர யோகீந்திரரும் பட்டிமன்றம் நடத்தி, "நான்காவது வர்ணத்தவர்கள் சன்யாசம் வாங்கலாம். இது ஆகமப்படி சரியே" என்ற விஷயத்தை இம் மன்னன் முன்னிலையில் நிலைநாட்டினர் என்ற விவரம் சிவாக்ர யோகீந்தரின் "சன்யாச பத்ததி" என்ற நூலில் காணலாம். இதனால் தருமபுரம், திருவாவடுதுறை போன்ற ஆதினங்களின் ஆதினகர்த்தர்கள் மகிழ்ச்சியுற்றனர் என்ற செய்தி, நமக்கும் மகிழ்ச்சியளிக்கிறதல்லவா.

இம்மன்னனே, பாரிஜாதஹரணம், நளாப்யுதயம் போன்ற நாடகங் களை, ஈரடி, நாலடி பாட்டுகளுடன் இயற்றி, அவைகளை நடிகர் மூலம் நடிக்கச்செய்து, அதைக் கண்டு களிப்பதுண்டு என்று இம்மன்னனின் அவையி லுள்ள கவிஞர்கள் கூறுகின்றனர். ஆக இம்மன்னன், ராஜராஜசோழனைப் போல் பக்தியை ஊட்டி மாக்களை மக்களாக்கினான் என்பதால், இவருக்குச் சிரம் தாழ்த்தி வணக்கம் செய்வதோடு, இம்மன்னனாலும் சோழநாடு பொன்னாடாயிற்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு நாயக்க வமிசத்தவர்களின் ஆட்சி, பல விதத்தில் தேய்வு பெற்றது. அதைக் காப்பாற்ற என்ன வழி? நாயக்கர் களில் கடைசி மன்னன், பீஜப்பூரிலுள்ள முகமதிய மன்னனின் உதவியை நாடினான். அக்காலத்தில் வடக்கில் மகாராஷ்டிர தேசத்தைச் சேர்ந்த சாஹஜி, ஜீஜாபாய் தம்பதிகளுக்கு வீரமகனாகப் பிறந்த சிவாஜி, கையில் ஆயுதமேந்தி, பகைவரை வென்று மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்துச் சத்ரபதியானான். அந்த சிவாஜியின் தம்பி ஏகோஜி பீஜப்பூர் முகமதியர் களுடன் கூடியவனாய்ப் படைகளுடன் தஞ்சையை ஆக்ரமித்துக்கொண்டு, பற்பல சூழ்நிலைகளால் அவனே தஞ்சை மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். இவ்வாறு தஞ்சையில் மராட்டிய மன்னராட்சி உதயமாயிற்று.

ஏகோஜி மன்னனுக்குத் தன் மனைவி தீபாம்பாவிடம் மூன்று பிள்ளைகள் பிறந்தன. ஷாஜி, சரபோஜி, துக்கோஜி என்பவர்களே அவர்கள். ஷாஜி மூத்த குமாரனானதால், தன் தந்தைக்குப் பிறகு தஞ்சை அரியாசனத்தில் அமர்ந்தான். ஷாஜி பிறவியிலேயே கவி, பண்டிதன், கலைஞன், வாக்கேய காரன், ஆட்சி புரிவதில் சிறந்த அறிஞன் என்று புகழை அடைந்தான்.

அவனிடமுள்ள புலமையும், திறமையும் எவரிடமும் இருக்க முடியாது என்ற எண்ணத்தை ஏற்படுத்தினான். அவன் கவிதையைக் கேட்ட, அக்காலத்திய புலவர்கள், அவனை, "அபிநவபோஜன்" என்றழைத்துப் பாராட்டினர். ஷாஜியும், பற்பல கவிகளையும், புலவர்களையும் ஆதரித்தான். "பாஸ்கரராய புரம்" "தீபாம்பாபுரம்", "ஏகோஜிபுரம்" "ஷாஜிராஜபுரம்" எனப் பற்பல கிராமங்களைப் படைத்து, புலவர்களுக்கு மான்யமாக அளித்து, அவர்களை அங்கு குடியேற்றினான். தஞ்சை மாவட்டத்தில் காவிரி எங்கெல்லாம் ஓடுகிறதோ, அங்கெல்லாம் இரு கரைகளிலும் பண்டிதர்களையும், புலமை வாய்ந்த துறவிகளையும் அமர்த்தினான். இதன் மூலம், தான் ஒரு "ராஜரிஷி" என்பதை வெளிப்படுத்தினான். இவனுக்கு மராட்டி, தெலுங்கு, தமிழ், சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளிலும் நிகரற்ற புலமை உண்டு.

சங்கீதம், பரதம் முதலியவை அவனுக்குப் பிடித்தமான கலைகள். ஏனைய மொழிகளைப் போலவே வடமொழியையும் வளர்க்க விரும்பினான். இவன் காலத்தில் மாபெரும் புலமை வாய்ந்த, பல நூல்களைப் படைக்கும் ஆற்றல் படைத்த, பற்பல பண்டிதர்கள் இருந்தனர். ராமபத்திர தீக்ஷிதர், ராமனாதமகி, நிருஸிம்ஹாத்வரி, ஸ்ரீதரவேங்கடேச அய்யாவாள், யக்ஞேசுவர தீக்ஷிதர், நல்லா தீக்ஷிதர் இம்மாதிரியான கவிகளின் கூட்டம் சோழ நாட்டையே இலக்கிய நாடாக்கியது. மற்றொருபுறம் பரமசிவேந்திர சரஸ்வதி [காஞ்சி பீடாதிபதி], சதாசிவ பிரும்மேந்திரர், சிதம்பரபிரும்மம், கிருஷ்ணானந்த சரஸ்வதி, ராமானந்தசரஸ்வதி முதலிய மாபெரும் ஞானிகள், ஆங்காங்கு மாணாக்கர்களுக்கு உபநிடதங்களைப் போதித்து, சோழ நாட்டையே ஞான பூமியாக்கினர். இந்தப் பட்டியலில் உள்ளவர்கள் வெகு சிலரே. முழு அளவில் பட்டியலிட்டுக் காட்டினால், வியப்பு அடையாதவர் எவருமிலர். பட்டியலிலுள்ள புலவர்களின் விஸ்தாரமான குறிப்பு எமது வெளியீடுகளின் முகவுரையில் காண்க.

இம்மன்னனின் காலத்தில், நூற்றுக்கணக்கான நூல்களாலும், சாத்திரப் படைப்புகளாலும், ஏனைய மொழிகளைப் போல் வடமொழியும் உன்னத நிலையில் இருந்தது என்றால் அது மிகையாகாது. இந்த மன்னனுக்குத் திருவாரூர் தியாகேசனும், கமலாம்பிகையும் மூல தெய்வமாகும். இவன் சங்கீதத்திலும் நிபுணனானபடியால், பற்பல சுத்த ராகங்கள், மிச்ர ராகங்கள், அபூர்வ ராகங்கள் இவைகளில், தாள ஸ்வர பத்தமாய், தெலுங்கு, மராட்டி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் பற்பல கீர்த்தனைகளை இயற்றி, தானும் ஒரு வாக்கேயகாரன் என்பதை நிலைநாட்டியுள்ளான். இவை எங்கள் நூலகத்தில் சுவடி வடிவில் இருக்கின்றன. சில வெளியிடப்பட்டாலும், பல வெளியிடப்படாமலுமிருக்கின்றன.

நம் நாட்டில் போற்றப்படும் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகப்பிரும்மத்தின் தாய்வழிப்பாட்டனார் "கிரிராஜ கவி" என்ற சங்கீத கலைஞர் இம்மன்னன் அவையிலிருந்தார் என்பது சங்கீத உலகமறியும். அப்பொழுது இவர், ஷாஜியின் கீர்த்தனைகளைப் பார்த்தும், கேட்டுமிருப்பாரல்லவா. பாட்டன் சொத்து பேரனை அடைவது போல, இந்த விஷயம் தியாகப்பிரும்மத்தையும் ஏன் அடைந்திருக்கக்கூடாது? அதனால் உந்தப்பட்டு, தானும் தன் குல தெய்வமான ராமன் பெயரில் பற்பல கீர்த்தனைகளை இயற்றினார் என்று சொன்னால் ஆராய்ச்சியாளர்களின் கணிப்பில் உண்மையில்லை என்பது இல்லை. இந்த சொற்றொடர்களின் கருத்து, ராமபக்தரான தியாகப்பிரும்மத்திற்கு களங்கம் கற்பிப்பதல்ல. ஷாஜி மன்னனும் ஓர் பக்தன், அவனும் ஓர் வாக்கேயகாரன் என்று நிரூபிப்பதாகும்.

இம்மன்னன் பரதத்திலும் பற்பல ஜதிவகைகளைத் தீட்டியுள்ளார். இம்மாதிரியான சுவடிகளும் எங்கள் நூலகத்திலுள்ளன. அதிகமேன். பரதத்திலும் இம்மன்னன் ஓர் "பிராமாணிகனாக" போற்றப்பட்டான். சர்வகலா வல்லவனான இம்மன்னன் காலத்தில், சாதி பாகுபாடு இன்றி, பலர் வடமொழியையும் நன்கு பயின்று சாத்திரங்களிலும் நிபுணர்களாக இருந்தனர் என்பதற்கு "பானைக்கு ஓர் சோறு" என்ற முறையில் விஷயமொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் கோனேரிராஜபுரத்தில் வாழ்ந்த உமாமகேசுவரர், பாஸ்கரர் என்ற இரு வேளாளர் வகுப்பைச் சேர்ந்த மகான்கள், "அப்பா சாஸ்திரி", "நிருஸிம்மாச்ரமி", போன்ற அறிஞர்கள் மூலம் வடமொழியுடன் வேதாந்த சாத்திரத்தையும் நன்கு பயின்று, அத்வைத தத்துவத்தை நிலை நாட்டும் வகையில் வடமொழியிலேயே சிறந்த நூல்களை எழுதியுள்ளனர். இவை அச்சில் ஏறாமல் எங்கள் நூலகத்திலுள்ளன. இவ்வாறு சாதிப் பாகுபாடின்றி எல்லோரும் தேன்மொழியாம் தென்மொழியுடன் வடமொழியையும் பயின்று இரண்டையும் வளமாக்கினர். அம்மொழிகளும், கங்கை, யமுனை போன்று வாழ்ந்தன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சுட்டிக் காட்டினோம்.

இக்கட்டுரையாளர் கூடச் செய்யுள் வடிவில் இந்நூலகத்தின் சிறப்பை எழுதியுள்ளார். இங்கு வள்ளுவனும் வியாசரும், கம்பனும் காளிதாசனும், இளங்கோவடிகளும் கிருஷ்ணதேவராயரும், தொல்காப்பியரும் பாணிநியும், சேக்கிழாரும் சூத முனிவரும் சுவடி வடிவில் கூடி மகிழ்ச்சியுடன் குலாவிக் கொண்டிருக்கின்றனர். நூலகத்தைக் காணவரும் பெருமக்களும் இங்குள்ள இலக்கியச் சுவையை சுவைப்பதுடன் இந்தப் பண்பின் படிப்பினையையும் ஏற்றுச்

செல்லுங்கள். அப்பொழுதுதான், சரஸ்வதிமகால் நூலகத்தை ஸ்தாபித்தவரின் குறிக்கோள் நிறைவேறும். இந்த நூலகம் நாயக்க மன்னர்களால் ஆரம்பிக்கப்பட்டு, மராட்டியர் காலத்தில் "அரண்மனை நூலகம்" என்ற பெயரில் வளர்க்கப்பட்டு, சரபோஜி மன்னரால் சரஸ்வதி நூலகமாகப் பெயரிடப்பட்டுக் கலைக்களஞ்சியமாகத் திகழ்கிறது. இதன் பெருமை, மன்னர்களின் திலகமான ஷாஜிக்கும் உண்டு. இவன் காலத்திலும், சோழ நாடு பொன்னாடாக மிளிர்ந்தது. இம்மன்னனுக்கும் சிரம் தாழ்த்தி வணக்கம் செய்துவிட்டு, கட்டுரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

நேயர்களே! இக்கட்டுரையின் நோக்கம், சோழ மன்னர்களில் ராஜராஜனும், நாயக்க மன்னர்களில் ரகுநாத மன்னனும், மராட்டிய மன்னர்களில் ஷாஜி மன்னனும் கல்வி, கலை, திறமை, பண்பு, பக்தி இவ்வழிகளில் மாக்களை மக்களாக்கி, தனித்தன்மை வாய்ந்தவர்களாக ஆண்டு, தஞ்சைத் தரணியைத் தங்க நாடாக்கினர் என்பதே.

எங்கள் தஞ்சைத் தரணியும், காலத்தின் மாறுதலால் தன் தாய் மொழியாம் தமிழுடன், தெலுங்கு, மராட்டி, சம்ஸ்கிருதம், சமீப காலத்தின் ஆட்சியால் ஆங்கிலம் முதலிய மொழிகளில் நிகரற்ற தேர்ச்சியைப்பெற்று, பன்மொழிப் புலவராக விளங்குகிறாள். அவள் கைகளில் சரஸ்வதி மகால் என்ற கலைக்களஞ்சியம் மின்னுகிறது. அதை உலக மக்களுக்கு அள்ளி அள்ளி வாரி வழங்க விரும்புகிறாள். உலக மக்கள் பயன்படுத்திக்கொள்வார்களாக. எங்கள் தாயான தஞ்சைத் தரணி, தன் தாய்மொழித் தமிழ் என்பதால், இங்கு அமைக்கப்பட்ட தமிழ்ப்பல்கலைக்கழகத்தால் பெருமைப்படுகிறாள். சமீபத்தில் உலகத் தமிழ் மகாநாடு நடக்கவிருப்பதை எண்ணி, மகிழ்ச்சியால் பூரிக்கிறாள்.

வாழ்க தஞ்சைத் தரணி! வளர்க அவள் மகிழ்ச்சி.



# சிவ ரஹஸ்யம்

தேதியூர் **எஸ் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்**,
ஸம்ஸ்க்ருத மேனிலைப் பண்டிதர்,
சரஸ்வதி மஹால் நூலகம்,

கர்மபூமியெனப்படும் நம் பாரத நாடு பண்டைக்காலம் முதல் முதிர்ந்த நாகரிகவுணர்வு, இறையுணர்வு, பண்பாட்டு நெறிமுறைகள், கலைத்திறன் இலக்கிய-மொழியறிவு இன்ன பிறச்சிறப்புக்களுடன் உலகின் பிற நாடுகளுக்கும் வழிகாட்டியாக விளங்கிவருவது யாவரும் அறிந்த ஒன்றே.

மஹாபாரத இதிஹாஸப் பற்றிய ஒரு பழமொழி "இந்நூலில் உள்ள பல கருத்துக்கள் பிற நூல்களிலும் காணப்படும். ஆனால் இதில் சொல்லப் படாத கருத்து வேறெங்கிலுமே காணவியலாது" என்ற கருத்தமைந்த "यदिहास्ति तदन्यत्र यन्नेहास्ति न तत् क्वचित्" எனபதாகவுண்டு. அதுபோன்றே நம் நாட்டில் பின்பற்றப்படும் நெறிமுறைகளும், பண்பாடுகளும் இன்னபிறவும் பிறநாடுகளில் பின்பற்றப்பட்டாலும் இங்கில்லாத சிறப்பு அம்சங்கள் எதுவும் பிறநாடுகளில் எங்கிலும் காணக்கிடைப்பதில்லை.

பிற சமயங்கள் யாவுமே மத தூதுவர்கள் எனப்படும் பெரியவர்களாலும், தனிப்பட்ட அறிஞர்களாலும் கூறப்பட்ட கருத்துக்களின் தொகுதிகளாகவுள்ள நூல்களையே பின்பற்றுபவை. நம்நாட்டின் தலையாய சமயமோ "எழுதாக் கிளவி" யெனப்படும் வேதங்களில் கூறப்பட்ட நெறிகளையும் அவற்றின் விரிவாக்கமாக—அவற்றின் வழிவந்த ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராண, ஆகம, நூல்களில் கூறப்பட்டுள்ளவற்றையுமே பின்பற்றுவதாகும். மேலும் இந்நாட்டில் உள்ளது போன்ற சமயச் சுதந்தரம் வேறெங்கிலும் கிடையாது.

"தென்னாடுடைய சிவனே போற்றி - எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" எனச் சிறப்பாகக் கூறப்படும் கருத்திற்கிணங்க நம்நாட்டில்-அதிலும் தமிழ் நாட்டில்தாம் சைவநெறி அதிகச் சிறப்புடன் விளங்குகிறது. வேதங்களிலும், சைவ ஆகமங்களிலும் புராணங்களிலும் சிறப்பித்துக் கூறப்படும் சைவ சமயக் கருத்துக்கள் மிகவும் விரிவானவை. தமிழ்நாட்டுச் சைவ சமயக் குரவர்கள் சைவநெறிபற்றிக் கூறியது போன்று வேறு எங்கும் எவராலும் இறைநெறி பற்றி விரிவாகக் கூறப்படவில்லை.

பாரதத்தின் வேத வேதாந்தத் தத்துவங்கள், கர்ம காண்டக் கருத்துக்கள் பற்றிய பழைய நூல்கள். இலக்கணம், தர்க்கம், யோகம், இதிஹாஸங்கள், புராண—உபபுராணங்கள், இலக்கியங்கள், ரஸ—அலங்கார நூல்கள், ஆகம நூல்கள் ஆகியவற்றைச் செங்கற்களைத் தளத்தில் பரத்துவது போன்று இணைத்துப் பரப்பினால் ஒரு சதுர மைல் பரப்பளவுக்கு இடையின்றி அடுக்க முடியும் என்று கூறப்படுவதுண்டு. இதுவரையில் வெளிவந்துள்ள பழமையான நூல்களைப் பற்றியே இவ்வாறு கூறப்படுமானால் நமது சரஸ்வதி மஹால் நூலகம் போன்று நாட்டில் பல நூலகங்களிலும் இதுகாறும் வெளிவராமல் சுவடி நிலையிலேயேவுள்ள பழைய நூல்கள் எத்தனையெத்தனையோ !

இவ்வாறு இதுவரை வெளியிடப் படாமல் உள்ளதும் நமது **சரஸ்வதி மகால் நூலகம்** தவிர வேறெங்கிலுமே இல்லாததுமாகிய "**சிவரஹஸ்யம்**" எனும் ஸம்ஸ்க்ருத நூல் அவற்றில் ஒன்றாகும்.

கந்தபுராணத்தின் பகுதியாக "சிவரஹஸ்யம்" என்ற பகுதி ஒன்று உண்டு. அதுவும் இதுவும் ஒன்றல்ல. பலவகைச் சந்தங்களால் அமைந்த ஒருலக்ஷத்து இருபதினாயிரம் செய்யுட்கள் (சுலோகங்கள்) அடங்கிய இந்த நூல் எப்பொழுது யாரால் இயற்றப்பட்டது என்பதற்கான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. 1. மாகேச்வர 2. பவ 3. ஹர 4. சிவ 5. பர்க 6. சங்கர 7. உக்ர 8. பீம 9. சதாசிவ 10. ஈச்வர 11. மஹாதேவ 12. ஈச எனும் பெயர்களுடன் பன்னிரண்டு (அம்சங்கள்) பகுதிகள் அடங்கிய இந்நூலின் 3, 4, 5, 6 பாகங்கள் மட்டும் இந்நூலகத்தின் வாயிலாகக் கடந்த 1971, 1983 ஆண்டுகளில் தஞ்சாவூர் திரு **சுவாமிநாத ஆத்ரேயர்** எனும் பேராசிரியரால் வெளியிடப்பட்டன.

முதல் இரண்டு பாகங்களோ 1913ம் ஆண்டில் சென்னை சதாசிவ செட்டியார் எனும் அன்பரால் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அந்தப் பிரதிகளும் கிடைப்பதற்கு அரியதாகிவிட்டதால் முதல் இரண்டு (அம்சங்களும்) பாகங்களும் 7 முதல் 12 பாகங்கள் முடிய வுள்ள 6 (அம்சங்களும்) பகுதிகளும் இக்கட்டுரை ஆசிரியரால் பதிப்பிக்கப்பட்டு அச்சிடத்தயாராகவுள்ளன.

சிவ-பார்வதி சம்பாஷணை வடிவில் உள்ள இந்தச் சிவரஹஸ்யம் எனும் நூல் ஒரு மாபெரும் இதிஹாஸம் என்றே இந்நூலில் கூறப்படுகிறது.

1. **மாகேச்வர அம்சத்தில்** (முதல் பகுதியில்) நைமிச வனத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் நடைபெறும் யாகத்தினிடையே சூதபௌராணிகரின் வருகை. சௌனகர் முதலான முனிவர்களின் வேண்டுகோளின்படி சூதபௌராணிகர் சிவரஹஸ்யக் கருத்துக்களைக் கூறுவது. சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்யும் ஜைகீஷவ்யர் எனும் முனிவருக்குச் சிவனார் அருள்

புரிதல் கந்தப் - பெருமான் - ஜைகீஷவ்ய முனிவர் சந்திப்பு, சிவனார் பார்வதிதேவிக்கு அருளிச் செய்த சிவதத்துவ (ரஹஸ்ய)ங்களை உடன் இருந்து செவிமடுத்த கந்தப்பெருமான் வாயிலாக அவற்றைக்கேட்கத் தம் ஆவலைக் கூறுவது. திருமால், நந்தியம்பெருமான் மற்றும் கணநாயகர்களின் முன்னிலையில் கந்தப்பெருமான் சிவரஹஸ்யங்களைக் கூறுவது. ஸத்யோஜாதர், வாமதேவர், அகோரர் தத்புருஷர், ஈசானர் ஆகியவர்கள் செய்த சிவஸ்துதி. கைலாய வர்ணனை, ஓங்காரம் முதலான பன்னிரண்டு லிங்கங்கள் அமைந்த இடங்கள், ஸ்வர்ண, ரத்ன, வெள்ளி - சிற்சபைகளில் சிவபெருமானின் தாண்டவ தியானம் பற்றி கந்தப்பெருமான் செய்த வர்ணனை, கைலாயம் செய்த தவம் - விக்ரஹ பூஜையைக் காட்டிலும் அருவ உருவமான சிவலிங்க பூஜையின் சிறப்பு முதலான கருத்துக்களும்

2 ஙவ அம்சத்தில் (இரண்டாவது பகுதியில் தேவியின் குறிக்கோளற்ற தவம், தேவி செய்த சிவஸ்துதி, தேவிக்குச் சிவபெருமான் அருள் புரிதல், கணவன் அனுமதித்தால் பெண்டிரும் சிவலிங்க பூஜை செய்யலாம் எனக் கூறல், தேவி தமக்கென்று தனியாகச் சிறந்த இடத்தை நிர்மாணம் செய்தருள வேண்டுமெனச் சிவனிடம் வேண்டுதல், மகிழ்ந்த சிவபெருமான் கோடி சூர்யப் பிரகாசமான 'மணித்வீபம் எனும்' தீவினை நிர்மாணித்தல், சிவம் தேவியுடன் மணித்வீபம் செல்லுதல், மணித்வீப வர்ணனை. சிந்தாமணிக்ருஹ வர்ணனை, ஸ்ரீசக்ர வர்ணனை. அவர்கள் கைலாயம் செல்லுதல், இமவான்-ஈச்வரன் சந்திப்பு. மேனா தேவிக்கு கைலாயத்தின் சிறப்பினைக் காண்பித்தல் இமவான். கைலாய மலைச் சிறப்பையும் ஸகல புவனங்களையும் காணுதல், இமவான் செய்த சிவஸ்துதி, மேனாதேவியின் வேண்டுகோளையேற்று சிவபெருமான் தேவியை இமயம் செல்லவும், அங்கு தவம் செய்யும் துர்வாச முனிவருக்கு அருள் புரியுமாறும் கூறுதல், தேவி பரிவாரங்களுடன் இமயம் செல்லுதல், இமயத்தில் துர்வாசரின் தவம், துர்வாசர் அகந்தை மிகுந்த இந்திரனுக்கு "உனக்கு நான் அளித்த மாலையை யானையின் தலைமீது வைத்ததால் அல்லவா இந்த யானை அதனைத் தரைமீது எறிந்து பாழாக்கியது. நீ அரசை இழந்தும் பொலிவிழந்தும் போவாயாக" எனச் சாபமிடல்'

"मालां मौलौ गजस्यास्य पातयस्यनिदुर्मते ।

विनष्टभ्रष्टराज्ञो निःश्रीकस्त्वं भविष्यसि ॥"

என்றவாறு. தேவி இமயத்திலிருக்குங்கால் கேதாரேச்வர லிங்கபூஜை செய்தல் முதலான கருத்துக்களும்

**3. ஹர அம்சத்தில்** (மூன்றாவது பகுதியில்) காயத்ரீதேவி செய்த தவம், காயத்ரீ சிவ அனுக்ரஹம் பெறுவது. தேவி கைலாயம் செல்ல விரும்புவதாக இமவானிடம் கூறுதல், சிவபெருமான் தேவியை அழைத்துவருமாறு நந்திகேச்வரை அனுப்புதல், தேவி பரிவாரங்களுடன் இமயம் விடுத்துக்

கைலாயம் புறப்படுதல், வழியில் வானுலகில் உள்ளோரும் ஸத்ய வைகுண்ட லோகத்தில் உள்ளோரும் தேவியை உபசரித்தமையால் தாமதமாவது கண்ட சிவனார் கணேசரையும், கந்தனையும் அனுப்புதல், தேவி சிவ சமீபம் செல்லுதல், ருத்ர வீணையின் நாதம் கேட்டு மகிழ்ந்த தேவி ருத்ரவீணையின் பெருமை கூறுமாறு கேட்டல், பிரயாகையில் சிவபெருமான் ஸித்தேசர் எனப் படுகிறார்- அங்கு "ஹாஹூஹூ" எனும் கந்தர்வனின் மனைவியர் சிவ வழிபாடு செய்து ருத்ர வீணையாக மாற்றும்படி தம்மை வேண்டியதாகச் சிவபெருமான் கூறுதல், மேலும்-சிவனார் தமக்குக்கைலாயம், கௌரியின் இதயம், காசித்தலம் சிவ பக்தர்களின் உள்ளம், இவற்றில் வசிக்கவே விருப்பம் என்பதாகக்கூறி வில்வ மரத்தின் பெருமையைக் கூறும் முகமாக சிவ வழிபாடு செய்யும் முனிவர் கள்தான் வில்வ மரமாக உள்ளனர் என்று கூறல், ஸ்ரீசைலம் தலத்தில் ஒரு ஏழையின் மகன் விளையாட்டாக ஏதோ செய்ததை சிவனார் தம் வழிபாடாக ஏற்றுக்கொண்டு, அச்சிறுவனை சிவ கணத்தில் இணைத்தது, அவனுடைய தந்தையும் கைலாயம் சென்றது, ஸ்ரீசைலத்தின் அருகில் சிவ வழிபாடு செய்த வேடுவனுக்கு நாரத முனிவர், சிலாத முனிவர்- அகத்தியர்- கௌதமர்- முதலானோர் சிவ வழிபாடு செய்து உயர்ந்தது பற்றியும், சிவ வழிபாட்டைப் பரிகசித்த தக்ஷன் அழிவுற்றது பற்றியும் கூறல், குரு நாட்டு மன்னர் வசிட்டரிடம் சிவ தர்ம உபதேசம் பெறுதல், மணிமுத்தா நதிக்கரையில் சிவ வழிபாடு செய்த மன்னர் வரலாறு, திராவிட தேசத்தில் சூரசேனன் எனும் மன்னன் வியாசர் மூலமாக பிரதோஷ காலத்தில் சிவ பூஜை செய்வதன் பெருமையறிந்தும், திருநீறு, ருத்ராக்ஷ மகிமையறிந்தும் நற்பேறு பெறுதல், விச்வாவசு எனும் சிவ பக்தன் நந்திகேச்வரனிடம் சிவ தர்மம் பற்றிக் கூறுமாறு கேட்க, நந்திகேசனும் சிவ—பார்வதீ சம்பாஷணையில் கூறப்பட்ட கருத்துக் களைக் கூறும் முகமாக சிவ தர்ம உபதேசம் செய்தல், சித்ரகேது மற்றும் நிடத மன்னரான புரஞ்ஜய மன்னன் வரலாறு, ஸத்யவிரதன் எனும் அந்தணர் வாயிலாக திருநீறு, ருத்ராக்ஷம், ஸ்ரீருத்ர மந்திரஜபம், வில்வ இதழ்கள் கொண்டு பூசித்தல், சிவனுக்கு நிவேதனம் செய்ததைப் புசித்தல் ஆகிய ஐந்தும் சிவ தர்மங்களாவன எனக்கூறல், ஸத்யவிரதன்-சுகவாணி சம்பாஷணை வாயிலாக பிரசண்டன் எனும் அசுரனின் வரலாறு, பார்வதி தேவியின் இளமைக்கால வருணனை. "ஆண்-பெண் இருபாலருமே நித்ய விரதமாக மேற்கொள்ளவேண்டியது யாது" என்ற சுகவாணியின் கேள்விக்கு. வில்வத் தால் அர்ச்சனை செய்தலும் சிவராத்ரி விரதமும், நித்ய விரதமெனக்கூறி அதற்குச் சான்றாக, கோதாவரீ நதிக்கரையில் கௌதமரும்-திருமாலும் சந்தித்தல், அங்கு நான்கு குரங்குகள் சிவ பக்தர்களாகவிருப்பதுபற்றி கௌதமர் திருமாலுக்குக் கூறுவது. புலஸ்த்தியர் எனும் முனிவர் தம் ஆசிரமம் வந்த நான்கு குரங்குகளையும் கண்டு, இவை நமது வழிபாட்டில் தடை செய்ப வர்கள் எனக்கருதி அக்குரங்குகளை எரித்தல், அவை சிவலோகம் ஏகுதல், மறுபிறவியில் அக்குரங்குகள் வாலி, சுக்ரீவன், அங்கதன், அனுமன் எனும் வடிவில் தோன்றுதல், சிவ பக்தர்களை எரித்ததால் புலஸ்தியர் ராவணனாகப்

பிறத்தல், சிவராத்திரியில் சிவ வழிபாடு செய்யாதிருந்த திருமால் மனிதனாகப் பிறத்தலும். ராவணனை அழித்தலும் பற்றிக் கூறுதல், பிரதோஷ காலத்திலும் சிவராத்ரியிலும் சிவ வழிபாடு செய்யாதிருந்தால் பெரும் பாவம் ஏற்படும் எனக்கூறி ஸ்ரீருத்ரம்-சமகம் எனும் மந்திரங்களைக் கொண்ட வேதபாதத்துதி பார்வதீ மகிமைத்துதி பற்றிக் கூறுதல் முதலான கருத்துக்களும் (33000 ஸம்ஸ்க்ருத ச்லோகங்களால்)

4. "சிவா"ம்சத்தில் (நான்காவது பகுதியில்) நந்தியம்பெருமான், சண்டீசர், ப்ருங்கீ, உபமன்யு, மார்க்கண்டேயர், கௌதமர், சுகர், அகத்தியர், ததீச முனிவர், கண்வர் முதலானோரின் வரலாறுகள், இடபதேவருக்குச் சிவனார் அருளியது பற்றிய கருத்துக்களும்,

5. "பர்க" அம்சத்தில் (ஐந்தாவது பகுதியில்) பன்னிரண்டு ஜ்யோதிர் லிங்கத் தலங்களான மஹாகாலம், ஓங்காரம், கேதாரேச்வரம், சோமநாதம், நாகநாதேச்வரம், குஸ்ருணேசம், வைத்யநாதம், த்ரியம்பகம், கோகர்ணம், ஸ்ரீசைலம், சேதுபந்தம், புஷ்கரபீமேச்வரம தலங்களின் சிறப்புப்பற்றிக் கூறும் முகமாக பல வரலாறுகளும்,

6. "சங்கர" அம்சத்தில் (ஆறாவது பகுதியில்) பகவத்கீதை உள்ளடங்கியதால் மஹாபாரதம் பெருமையுற்றதுபோல் இந்த 6வது பகுதியில் ருபுகீதை என்ற வேதாந்தத் தத்துவங்கள் அடங்கிய பகுதி கூறப்படுவதாலேயே "சிவரஹஸ்யம்" சிறப்புள்ளதாகிறது என்று காஞ்சி ஜகத்குருக்களான ஸ்ரீ மஹாஸ்வாமிகள் கூறியதுபோல் இந்தப் பகுதியில் சிவபெருமான் கைலாயத்தில் சிவ பக்தனான "ருபு" எனபவருக்கு வேதாந்த உபநிஷத்துக்களின் திரண்ட கருத்துக்களை உபதேசித்தருளினார், ருபு என்பாரும் பல தலங்களுக்குச் சென்றுவிட்டு, கேதாரம் சென்றபோது அங்குள்ளோர் பலரும் சிவபெருமானின் திருவருளால் தாங்கள் பெற்ற ஞானத்தை எங்களுக்கும் உபதேசிக்கவேண்டும் என வேண்டிக்கொண்டதும், ருபுவினால் அவர்களுக்கு உபநிடதக் கருத்துக்கள் கூறப்பட்டன. சிவனாரிடமிருந்து நான் அறிந்தவாறு கூறுகிறேன் எனத்தொடங்கி, "நீயே பரம்பொருள், கண்ணால் பார்க்கப்படும் யாவும் பொய்யானவை—உண்மைபோன்று தோன்றுபவை, ப்ரம்மமே உண்மையானது, நிறைந்த பேரானந்த வடிவிலுள்ளது ப்ரம்மமே, இதனை அனுபவித்துத்தான் உணரமுடியும்" என்பதுபோன்ற

"तस्माद्यथागृहीतं वच्मि, त्वमेव परं ब्रह्मेत्युपदेशः, दृश्यं सर्वं मिथ्या, चिदाभास-रूपम् , ब्रह्मैव सत्यम् , अखण्डैकरसं ब्रह्मेत्यखण्डानुभूत्युपदेशः ॥

கருத்துக்களும், ருபுவின் சீடரான நிதாகர் என்பவர் இதனைக்கேட்டு சிவானுபூதியால் ஜீவன்முக்தராகுதல், ஜைகீஷவ்யர் கந்தனின் கருணையால் இந்த ருபு கீதையை அறியலானோம் என உளமாற மகிழ்ச்சியடைதல், சௌனகர் முதலானோர் சூத பௌராணிகரைப் புகழ்ந்து போற்றுதல் முதலான கருத்துக்களும்,

7. "உக்ர" அம்சத்தில் (7வது பகுதி மிகவும் பெரியது என்பதால் இரு பகுதியாகவுள்ளது) அதில் சூதபௌராணிகர் கூறுகிறார், ஒரு சமயம் கந்தப்பெருமான் சிவனாரிடம் எக்காரியத்திலும் வெற்றிதரவல்ல சாதனம் எதுவென்று வினவ, சிவனார் சகலமங்களங்களையும் தரவல்ல ஆயிரம் நாமாக்களை (பெயர்களை)க்கூறியருளினார். அதனைக் கேட்ட கந்தனும் மனம் நெகிழ்ந்து சிவனை,

"நமஸ்தே நமஸ்தே மஹாதேவ சம்போ
நமஸ்தே நமஸ்தே ப்ரபன்னைகபந்தோ।
நமஸ்தே நமஸ்தே தயாஸாரஸிந்தோ
நமஸ்தே நமஸ்தே நமஸ்தே மஹேச" எனத் தொடங்கி
"வேதாந்தவேத்யாய மஹாதயாய
கைலாஸவாஸாய சிவாதவாய।
சிவஸ்வரூபாய ஸதாசிவாய
சிவாஸமேதாய நமச்சிவாய"

என்று துதித்தார் — சிவனார் மகிழ்ந்து வரம் அருளினார் என்றும், காசித்தலத்தின் பெருமை, ஜீவர்கள் மரணமடைந்த தம்பக்தர்களைத் தம் மடிமீது அமர்த்தி முக்தி தரும் சிவ மந்தர உபதேசம் செய்வதாகவும், மேலும் காசித் தலத்தின் பெருமையைக் கூறும் முகமாக, சிவமூர்த்தி என்பவருடைய வரலாறு, காசித் தலத்தின் உள் பிராகாரத்தினை வலம் வருவதன் பெருமை, காசியில் சிறு அளவு புண்யம் செய்தாலும் அதன்பயன் மேருமலை போன்றதாக வளர்ச்சியுறும் என்றும், சிறிதளவு பாவம் செய்தாலும் மேருமலை போன்று எத்தனை பிறவிகள் எடுத்தாலும் அனுபவித்துத் தீராததாகிவிடும் என்றும், காசித் தலத்தில் பாபிகள் தங்கமுடியாதபடி இடையூறுகள் தடைசெய்யும், பிழை செய்யாமல் செய்யப்படும் "பஞ்சக்ரோச"யாத்திரையின் சிறப்பு, யாத்திரை செய்யும் வழி முறைகள், ஞானவாபியின் சிறப்பு, முக்தி மண்டபப் பெருமை, தண்டபாணி வீரேச்வரன், பசுபதீச்வரர் வரலாறு

ப்ரம்மனின் வேதபாத ஸ்துதி, காலாஷ்டமீயின் பெருமை, தாமே எல்லோராலும் வணங்கத் தக்கவர் எனத் தற்பெருமை பேசிய ப்ரம்மதேவனின் தலையை சிவனார் உக்திரவினால் வீரபத்ரன் துண்டித்தல், சிவனையோ, சிவபக்தனையோ, நந்திகேச்வரனையோ யாரேனும் நிந்தித்தால் இதுபோன்ற கதிதான் ஏற்படும்.

"சிவம் வா சிவபக்தம் வா நந்திகேசம் சிவப்ரியம் ।
யோ திக்கரோதி தஸ்யேயம் கதிர்பவதி ஸர்வதா ॥"

என்றும், பைரவப் பெருமானை வழிபடுவதின் அவசியம், பைரவருக்கு அர்க்யம் அளிக்க வேண்டியதன் அவசியம், திருமால் வரம் பெற்றது, காசியாத்திரை செய்யும் விதிமுறைகள், சிவவழிபாட்டில் ஈடுபாடும், சிவபக்தியும் இருந்தாலன்றி காசியாத்திரை மேற்கொள்வது பயன் தராது என்றும், கண்வ முனிவர் கச்யபர் சம்பாஷணை வாயிலாக

"சிவாபிதம் மஹஸ்ஸேவ்யம் ஸர்வவேதாந்தஸம்மதம் ।
தத்ஸேவயைவ ஸர்வேஷாம் முக்திர்பவதி சாச்வதீ ।
கதாபி ஜனனீகர்பம் ந விசந்த்யேவ ஸர்வதா"

"சிவமெனும் பேரொளியையே வழிபட வேண்டும். அதன் வாயிலாகவே தான் முக்தி பெற இயலும். தாயின் கருப்பையில் குடிபுகும் நிலை ஏற்படாது" என்றும் கூறப்படுகிறது.

மேலும் சௌனகர் முதலானோர் சூதரிடம் இல்வாழ்க்கை சுவையுள்ளதுபோல் தோன்றுகிறதே. அது சுவையற்றதென்ற உண்மை அறிவு எப்படி ஏற்படும் என வினவ சூதபௌராணிகர் ஒரு சமயம் சிவனார் நந்திகேசனைத் தவம் செய்யும் முருகனைக் கண்டுவருமாறு கூற அவர் முருகன் சமீபம் சென்று பேசும்பொழுது பெருமானே ! சிவத்தலங்கள் பற்றிக் கூறுங்கள் என வினவ, முருகன், சிவ மகிமை, சிவாபராதம் செய்து அழிந்த தக்ஷனின் வரலாறு, சிவபூஜை செய்வதற்கான தகுதி, பூஜை விதிமுறைகள் பற்றிக்கூறி, சுவர்ணமுகீ நதிக்கரையில் உள்ள தக்ஷிண கைலாஸம் எனப்படும் ஸ்ரீசைலம் காஞ்சீபுரம், திருவண்ணாமலை, விருத்தாசலம், சிதம்பரம், கும்பகோணம் மத்யார்ஜுனம் எனப்படும் திருவிடைமருதூர் முதலான தலங்கள் யாவும் காசித்தலத்திற்கொப்பானவையே எனக் கூறப்படுகிறது.

7a (7வது பாகத்தின் 2ம் பகுதியில்) சிவபெருமான் அகத்தியரைத் தென்திசை செல்லும்படி கூற அகத்தியர், கமண்டலத்தில் கங்கை நீர் ஏந்தி விந்திய மலையைத் தாழச் செய்து, குடகுமலையடைதல், காவிரியின் தோற்றம், அதன் கரைகளில் உள்ள சிவத்தலங்களில் திருவையாறு, சமீவனம் எனும் தஞ்சையில் (தஞ்சன் எனும் அசுரன் பெயரால் விளங்குமிடம்) கொங்கணேச்வர லிங்கத்தை

வசிட்டரும், அதற்குத் தென்புறம் சங்கர லிங்கத்தை நாராயணரும் (திருமால்) அதற்கு அருகில் கங்கைபோன்ற சிவகங்கையெனும் தடாகத்திற்கருகில் சோளேச்வரர் எனும் மாபெரும் லிங்கத்தைக் குபேரனும் அமைத்தார்கள். இதுபற்றி,

"ஸ கொங்க்கணாக்யேச்வர நாம லிங்கம்
ப்ராஸ்த்தாபயத்* ஸித்த தீர்த்தஸ்ய பஸ்ச்சாத் ॥
நாராயண: சங்கர நாம லிங்கம்
தத்தக்ஷிணே ஸ்தாபயதி ப்ரதிஷ்ட்ட: ॥
ப்ராதா புரா வை ஷ்ருதபுஷ்பகோऽப்யகாத்
தனாதிபோ ராவணேன அதிதுக்காத் ॥
சமீவனே தத்ர ஸமர்ச்ய சங்கரம்
லேபே தனேசத்வம்......
சோளேச்வரம் தத்ர சிவாலயம் வ்யதாத்
உத்துங்கலிங்கஸ்ய ச தீர்த்ததீரே
கங்கேவ ஸாபூத் சிவலிங்கஸங்கத:" என்று கூறப்படுகிறது.

மேலும், நல்லூர் பட்டீச்வரம் திருவலஞ்சுழி, சுவாமிமலை, கும்பகோணம், திருநாகேச்வரம், திருவிடைமருதூர், ஸ்ரீவாஞ்சியம், திருவீழிமிழலை, திருவெண்காடு, காவேரிபட்டணம். வைத்தீச்வரன்கோயில், சீர்காழி, மயிலாடுதுறை, (கமலாலயம்) திருவாரூர், வேதாரண்யம், பாண்டிய

---

* சமீவனம் என்ற பெயருடன் இருந்த பகுதியில் தஞ்சாசுரன் கொடுமைப் படுத்தியதால் திருமால் சண்டையிட்டு அவனிடம் தோற்றார் என்றும் அவ்வசுரன் தீயெனச்சுட்டதால் திருமால் நீலமேகத் திருமேனி பெற்று விளங்குகிறார் என்றும், ஆனந்தவல்லி தேவி தம் சூலத்தினின்றும் எட்டு சக்திகளைத் தோற்றுவித்து அந்த அசுரனின் படைகளை எட்டு திசைகளில் இருந்துகொன்றதாயும்---தஞ்சாசுரனை தேவி– "த்ரிசூலபாதேன ததாப்பிகாZவதீத்" சூலாயுதத்தால் கொன்றதாயும், வசிஷ்ட முனிவர் தம் பெயரால் கொங்கணேச்வரர் எனும் சிவலிங்கத்தை சித்த தீர்த்தம் குளத்தின் மேல்புறத்தில் நிறுவியதாயும், திருமால் அதற்குத் தென்புறத்தில் சங்கர எனும் லிங்கத்தை நிறுவியதாகவும் சிவரஹஸ்யம் 7வது அம்சத்தின் இரண்டாவது பாகத்தின் 13வது அத்தியாயத்தில் கூறப்படுகிறது தஞ்சாசுரன் கொல்லப் பட்டது முதல் அன்று வரை சமீவனேசர் என்ற பெயருடன் விளங்கிவந்த சிவபெருமான் தேவர்களால் துதிக்கப்பட்டு தஞ்ஜேசர் ஆனார்,

शमीवनेशो विजयप्रदेश: तञ्जेश्वरोऽभूत् स तदा महेशः ।
देवै: स्तुतोऽसौ परिपूजितस्तदा मुनीश्वरैस्तैश्च सुधाब्धिनीतटे ॥
स्थानप्रभावं त्वभिवीक्ष्य हृष्टो लिङ्गप्रतिष्ठामकरोद्वसिष्ठः ।
तीर्थं च लिङ्गं च स्वनामतो मुनि: सिद्धस्तथा कोङ्कणनामक: स्वयम् ॥

शिवरहस्यम् — 7th AMSA / II Part 13th Adhyaya.

நாட்டில் மதுரை, நெல்லை, (சாலிவாடீ) திருக்குற்றாலம், பாபநாசம், ராமேச்வரம் முதலான சிவத்தலமகிமை கூறப்படுகிறது.

8. பீம அம்சம் (8வது அம்சத்தில்) பாம்பு சிவனார் உடலில் அணிகலனாக விளங்குவதற்குக் காரணம், பாம்புகளின் தலைவனாகிய ஆதிசேஷன், கருடனின் பயத்தால் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்தமை, திருநீற்றுச் சிறப்பு, 14 முகங்கள் வரை உள்ள ருத்ராக்ஷ லக்ஷணங்கள், ஸ்ரீ ருத்ர மந்திரப் பெருமை, வில்வமகிமை, கருடனுக்கும் நாகராஜனுக்கும் சிவன் அருள் புரிதல் முதலான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

9. சதாசிவ அம்சம் (9வது பகுதியில்) மூன்றாவது முறையாக சிவஸஹஸ்ரநாமங்கள், க்ருத, த்ரேதா, த்வாபர யுகங்களின் இயல்புகள் பற்றிக் கூறி, கலியுக தர்மங்கள் பற்றிக் கூறும் முகமாக கல்கி அவதாரம், பாஷண்ட கண்டனம் பற்றிக் கூறப்படுகிறது. மேலும் ஜீவர்கள் கலிதர்மத்தினால் துயருற்றிருப்பர் என்பதைக் கேட்ட தேவியின் துயரம் கண்ட சிவனார், சிவ பக்தியால் இல்வாழ்க்கைத் துயரத்தை விலக்கிக் கொள்ள முடியும் என்று கூறுவதுடன் சிவ பக்தர்களின் வரலாறும் கூறப்படுகிறது.

முதலில் சங்கர பகவத்பாதர்களின் அவதாரமும் அவர்கள் ஜைன-பௌத்த-கர்மவாதிகளை வென்று அத்வைத மதத்தை ஸ்தாபித்து காஞ்சியில் சித்தியடைந்தது பற்றியும், விரிவாக சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தோற்றம் கமலாலயத்தில் (திருவாரூரில்) வசித்தல், சிவாலயங்கள் சென்று துதித்தல், இடையே கமலாம்பிகை தவம் செய்யும் காரணம், சுந்தரமூர்த்தி சுவாமிகள், கமலினியை மணந்து கொள்வது பற்றியும், தில்லையில் திருநீலகண்டர் வரலாறு-இயற்பகை நாயனார்-அமரநீதி-வீரபக்தர்-ஏனாதிநாதர்-கண்ணப்ப நாயனாரின் விரிவான வரலாறு-கலாநாதர், மூர்த்திநாதர்-ஸ்கந்தநாதர்-திருநாளைப்போவார் (நந்த) நாயனார்-விசாரபக்தர்-குலபக்ஷநாயனார் வரலாறு விரிவான திருஞான சம்பந்தர் வரலாறு, திருநாவுக்கரசர், புனிதவதீ, மாணிக்கவாசகர், அப்பூதியடிகள், கிலகாமர், தண்டபக்தர், மாரநாயனார், பரஞ்சோதி அடிகள் முதலான அறுபத்தி மூவர் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன.

10. ஈச்வர அம்சம் (10வது பகுதியில்) தேவி, சிவபெருமானிடம் முக்தி நிலை பெறுவதற்கான உபாயம் பற்றி வினவ, சிவனார்: சிவ பக்தி, திருநீறு

அணிதல், திருவைந்தெழுத்து மந்திரம் ஓதுதல், யஜுர் வேதத்திலுள்ள ஸ்ரீருத்ரம் எனும் பகுதியை ஜபித்தல், ருத்ராக்ஷம் அணிதல், பிரதோஷம்-சோமவாரங்கள்-தேய்பிறை எட்டாம் நாள் (கிருஷ்ணபக்ஷம் அஷ்டமீ) பகலில் உணவருந்தாமல் இருந்து இரவில் சிவபூஜை செய்தல் முதலான முக்திபெறும் வழிகள், விரிவாகத் திருநீறு தயார் செய்யும்முறை-அணியும் விதிமுறைகள்-மங்கணர் வரலாற்றைக் கூறும்முகமாகத் திருநீற்றுச் சிறப்பு-விரதங்களைக் கடைபிடிக்கவேண்டிய முறைகள்-ருத்ராக்ஷ உற்பத்தி, இடையில் த்ரிபுராசுரன் வரலாறு. இயல்பாகவே துவாரம் உள்ள ருத்ராக்ஷங்களை அணியுங்கால் சொல்லவேண்டிய மந்திரங்கள்-யஜுர் வேதத்திலுள்ள "சதருத்ரீயம்" எனும் மந்திரச் சிறப்பு - ருத்ர அபிஷேகம் செய்யும்முறை, "ருத்ர ஏகாதசினீ". "அதிருத்ரம்", "மஹாருத்ரம்" எனப்படும் சிவ வேள்விகளைச் செய்யும் விதிமுறைகள், பலனை விரும்பிச் செய்யப்படும் சில மந்திர ஜப—ஹோமம். பஞ்சாக்ஷர-ஷடக்ஷரச் சிறப்பு, படைத்தல்-காத்தல்-அழித்தல்-மறைத்தல்-அருளுதல் எனும் ஐவகைச் செயல்புரியும் ஸத்யோஜாதம், வாமதேவம்-அகோரம்-தத்புருஷம்-ஈசானம் எனும் ஐவகை முகங்களிலிருந்து பஞ்சாக்ஷரம் தோன்றியது-குருமுகமாகவே இம்மந்திரம் பெறவேண்டும் எனக் கூறி ஜபவிதிமுறைகள், குரு-சீடர்களின் இலக்கணம், லிங்கம் எனும் சொல்லின் உண்மைப்பொருள்-லிங்க வகைகள்-விரிவான பூசைவிதிமுறைகள்-காமிக-காரண-வீர-மகுட-லலித-கிரண-வாதுல முதலான ஆகமங்கள் சிவனாரின் உடல் உறுப்புக்களே என்றும் கூறப்படுகிறது.

மேலும், சிவத்யானமே சிறந்த பூஜையென்றும், பூஜைக்குரிய சிவலிங்க அளவு-வகைகள் பற்றியும், ரஸ-பாண லிங்கச் சிறப்பு—சிவ பூஜை செய்யாமல் உணவு அருந்தலாகாது என்றும், பூஜிக்கப்படும் சிவலிங்கம் உடைந்துவிட்டால் இணைக்கக்கூடியதாயின் இணைத்துப் பூஜிக்கத் தடையில்லையென்றும்-இயலாதெனில் நீர்நிலைகளில் அதனைத் தியாகம் செய்துவிட்டு, முன்புள்ளதுபோன்றதொரு லிங்கத்தில் பூஜிக்கலாம் என்றும், தம் கையால பறிக்கப்பட்ட வில்வத்தால் பூசித்தாலும், பால்-தயிர்-தேன் அபிஷேகம் செய்தாலும் ஏற்படும் நற்பயன், சாஷ்டாங்க நமஸ்காரம்-சிவனுக்கு அரைப் பிரதக்ஷிணமே என்றும், சிவ நிர்மால்யத்தை (பூஜையில் பயன்பட்ட மலர்கள் முதலியன) தாண்டலாகாது என்பது போன்ற கருத்துக்களும் கூறப்படுகின்றன.

11. மகாதேவ அம்சத்தில் (11வது பகுதியில்) பிறப்பு-இறப்பு எனும் சுழலினின்றும் விடுதலை பெற்று முக்திநிலை பெறுவதற்கான சிவ தர்மங்

களுக்குள் சிவ பூஜை செய்யும் வழி விதிமுறைகள் - சிவலிங்கத் தோற்றம் - லிங்கப் பிரதிஷ்டை வழி முறைகள்-சிவாலயங்கள் புதியதாக அமைப்பதைவிட பழைமையான கோயில்களைப் பழுதுபார்த்துப் பூசித்தலே சிறந்தது என்பது பற்றிக் கூறி-பால், இளநீர் முதலியனவற்றால் அபிஷேகம் செய்தல், சிவபூஜைக் குரிய மலர் வகைகள், ஒவ்வொரு திதி-வார-நக்ஷத்திரங்களிலும் சிவபூஜை செய்வதன் பலன்-அதிலும் காசி, பிரயாகை போன்ற தலங்களில் சிவ பூஜை செய்வதன் சிறப்பு, சித்திரை முதலான 12 மாதங்களிலும் சிவ பூஜை செய்யும் முறைகள்-பயன்கள்-சோமவார விரதம் அனுஷ்டிக்கவேண்டிய முறைகள் மற்றும் பிரதோஷ-சனிப்ரதோஷ விரதம், சிவராத்ரி (மாதச்சிவராத்ரிகளும்) அஷ்டமீ (காலாஷ்டமீ) வ்ரதம்-சிவபூஜை செய்யாதிருப்பின் ஏற்படும் இன்னல் கள், அவற்றை விலக்கும் உபாயமாக சாந்தி ஸ்துதி மற்றும் பசுவின் உடல் எல்லா தேவதைகளின் இருப்பிடம் எனவும் கூறப்படுகிறது. மேலும் சிவ-சக்தி பீடங்களின் விரிவான வருணனையும் கூறப்படுகிறது.

12. ஈச அம்சத்தில் (22வது பகுதியில்) சிவ-கௌரீ திருமணம் பற்றிக் கூறும் முகமாக தக்ஷயாகம், நான்கு வேதங்கள் செய்யும் சிவத்துதி-தக்ஷன் செய்த சிவ நிந்தனை-அதனைச் சகியாத முனிவர்கள் கூறும் அறிவுரை-தக்ஷனின் பிடிவாதம்-சதி (தாக்ஷாயணி) தன் உடலை அக்னியிலிடுதல்-வீரபத்ர அவதாரம் - திருமாலுடன் போர்-பணிந்தபிரம்மாதிதேவத்துதி - சதியைப் பிரிந்த சிவனார் தவத்திலிருத்தல்-சதி, இமவானின் மகளாகத் தோன்றுதல், கௌரீ தவமியற்றுதல், தாரகாதி அசுரர் தொல்லையால் தேவர்கள் துயரம், காம தகனம்-சிவ-கௌரீ திருமண ஏற்பாடுகள், விச்வகர்மன் திருமண மண்டபம் அமைத்தல், தபோவனத்திலிருந்து கௌரியை அழைத்து வருதல் கணநாதர் தோற்றமும், அவருக்கு கௌரியே முதற்பூஜை செய்தலும், சிவனார் கௌரியை மணந்துகொள்ள வருதல், சிவகௌரீ திருமணம், கந்தப் பெருமான் தோற்றம், தாரகாசுரன் முதலான அசுர வதம், தேவர்கள் செய்த ஸ்கந்த ஸ்துதி, சிவ கௌரீவேத பாதத் துதி, சிவரஹஸ்யம் முதல் பாகம் தொடங்கி கூறப்பட்டவற்றைத் தொகுத்துரைத்தல், கந்தப் பெருமான் சகஸ்ரநாமத் துதி, கவசத்துதி முதலானவை கூறப்பட்டு முடிவில் ஜைகீஷவ்யர் முதலானோர் காசித்தலம் சென்று சிவவழிபாடு செய்தல் என்பது வரையில் கூறப்படுகிறது.

ஸம்ஸ்க்ருத மொழியில் அமைந்த இந்த நூல் ஆங்காங்கு இலக்கண வழிகளை மீறியும், ஒரே செய்யுளின் இடையில் சந்தங்களில் மாற்றம் செய்தும்

இருப்பது குறையாக இருப்பினும் செய்யுள் நடை மிக் அபூர்வமாகவுள்ள ைதயும் கூறாமலிருப்பதற்கில்லை. இது பண்டைய நூலாக இருக்கும் எனத் துணிந்து கூறமுடியவில்லை. எனினும் சுமார் ஐயாயிரம் பக்கங்கள் எழுத வேண்டிய 120000 செய்யுட்கள் உள்ள இந்த நூலில் கூறப்படும் சைவ சமயக் கருத்துக்கள் வேதங்கள், ஜாபால உபநிடதம், சிவபுராணம், கந்தபுராணம் ஆகியவற்றின் கருத்துக்களின் அடிப்படையிலானவை என்பதில் ஐயமில்லை. ஒரு சில இடங்களில் இந்த நூல் வீரசைவ நிலையை எட்டிவிடுகிறதையும் காணமுடிகிறது.

மிகப் பெரிய இந்நூலின் கருத்துக்களைப் பகுதி பகுதியாகவேனும் தமிழ்-ஆங்கில மொழிகளில் வெளிவருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படு மானால் பலரும் இந்நூலின் சிறப்பை உணர முடியும். இந்நூலில் பலவிடங் களிலும் இலக்கணப் பிழைகள் மிகுந்திருக்கவே செய்கின்றன. ஆனால் அவ் விடங்களில் அமைந்துள்ள சொற்களை நீக்கிவிட்டு இலக்கணத் தூய்மை கருதி வேறு சொற்களைப் புகுத்த முயற்சித்தால், செய்யுளையே மாற்றம் செய்யும்படியாகும் என்பதாலும் சொல் நயச்சிறப்பைக் கருதியும் பொருள் காண்பதில் சிரமம் இல்லாததாலும் செய்யுட்கள் அமைந்த நிலையில் இருப்பதுதான் நல்லது.

சைவ சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு இந்த நூல் மிகவும் பயனுள்ளது.

अनर्गलं मङ्गलमस्तु नित्यं
यन्मङ्गालायाः पतिसुप्रसादतः ।
स्वस्ति प्रजाभ्यो द्विपदां चतुष्पदां
सदा विपद्वारणमस्तु मह्याम् ।।

சிவம்

சுபம்

# தஞ்சை மராட்டியர் வரலாறு கூறும் வடமொழி இலக்கியச் சுவடிகள்

ஸாஹித்ய சிரோமணி,
திருமதி **எஸ். இராஜலக்ஷ்மி,**
சமஸ்கிருதப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

"சோழவளநாடு சோறுடைத்து" என்ற பழமொழிக்கு இணங்க நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சிக்குலாவும் தஞ்சையம்பதியில் சோழப் பேரரசுக்குப் பின்னர் 15 ஆம் நூற்றாண்டு தொடங்கி நாயக்க மன்னர்களின் ஆட்சி நிலவத் தொடங்கியது.

கி. பி. 1676 முதல் தஞ்சையில் மராட்டிய மன்னர் ஏகோஜி என்கிற வெங்கோஜி முடிசூட்டிக்கொண்டார். பின்னர் இவருடைய புதல்வர்களும் முறையே ஒருவர்பின் ஒருவராக இத்தஞ்சையை அரசுபுரிந்தனர். இவர்கள் போசல குலத்தைச் சார்ந்தவர்கள்.

போசலகுல மராட்டிய மன்னர்களின் ஆட்சியில் தஞ்சை மண்டலம் ஒரு சிறந்த கல்விக் கேந்திரமாக விளங்கியது. ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு மராட்டி ஆகிய பன்மொழிப் புலவர்களால் எண்ணிறந்த நூல்கள் படைக்கப் பட்டன. இவர்கள் இயற்றிய நூல்களில் ஆங்காங்கே மன்னர்களாற்றிய பணிகளையும் தொண்டுகளையும் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இச் செய்திகள் தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரலாற்றை அறிய உதவுகின்றன. அவற்றை இனிக்காண்போம்.

**தீபாம்பா மாஹாத்ம்யம்**[1]

முதலாம் ஏகோஜியின் பட்டத்து இராணியாக விளங்கியவர் தீபாம்பாள். இவரது வரலாற்றுச் செய்திகளைக்கொண்டு எழுதப்பட்ட நூலே "தீபாம்பா மாஹாத்ம்யம்" என்னும் சிறுகாப்பியமாகும்.

தஞ்சை மராட்டிய அரசின் சரித்திரத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பவரும், மராட்டிய மன்னர்களின் வாழ்வுக்கும், வரலாற்றுக்கும் ஓர்

1. **சுவடி எண். D. No. 23560—நூலகப் பருவஇதழ் Vol. 33—1984**

ஒளிவிளக்காகவும் திகழ்ந்தவர் அரசி தீபாம்பாள். இவரைத்தவிர இம்மன்னனுக்குச் சயிபாயி சாஹேப், அனுபாயி சாஹேப் முதலிய ஆறு மனைவியர் இருந்தனர். இருப்பினும் இவர் மூத்த பட்டத்து ராணியாகத் திகழ்ந்தார். இவர் "இங்கிலே" என்ற குலமரபில் வந்தவர்.

**தீபாம்பாள் காலத்தெழுந்த இலக்கியங்கள்**

தொன்னெடுங்காலமாகப் பாரதப் பண்பாட்டில் பெண்களுக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. அவர்கள் கடைபிடிக்கவேண்டிய நெறிகளைப் (தர்மங்களை) பல தர்ம சாஸ்த்ரங்களிலிருந்து தொகுத்து எளிமையாக மக்களுக்கு வழங்கவேண்டும் என்று கருதினார் தீபாம்பாள். இக்கருத்தை அமைச்சரும், பெரும்புலவருமான "த்ரயம்பகராயமகி" என்பவரிடம் தெரிவித்து அதைப்பற்றிய நூலொன்றைப் படைக்குமாறு கேட்டுக்கொண்டார். அரசியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அமைச்சர் "த்ரயம்பகராயமகி" அரும்பாடுபட்டு வேதம், புராணம், ஸ்ம்ருதி, தர்மசாஸ்த்ரம் ஆகியவைகளை ஆராய்ந்து "ஸ்த்ரீ தர்ம பத்ததி" என்னும் நூலை இயற்றி அரசி தீபாம்பாளிடம் சமர்ப்பித்தார். இதைப்பெற்ற அரசி தீபாம்பாள் தனது அரசவைப் புராணிகரான "துண்டிவியாசர்" என்பவர் மூலமாக மக்களிடையே பரவச் செய்தார்.

மேலும் காசியிலிருந்து இராமேச்வரம் வரையுள்ள பகுதிகளில் பாத யாத்திரை செய்வோருக்கும், மற்றோருக்கும் உதவும்பொருட்டுத் தங்கும் விடுதிகளை (சத்திரங்களை)யும் தண்ணீர்ப் பந்தல்களையும் ஏற்படுத்தினார். மேலும் பல அக்ரஹாரங்களை ஏற்படுத்தி அதில் சாஸ்த்ரம், வேதம், இசை ஆகிய துறைகளில் பாண்டித்யம்பெற்ற வல்லுநர்களை அவற்றில் குடியிருக்கச் செய்து, அவர்களின் வாயிலாகப் பல அரிய கருத்துப்பேழைகளான நூல்களை எழுதச்செய்தார். இவருக்கு மூன்று புதல்வர்கள் தோன்றினர். அவர்கள் முறையே சகஜி, சரபோஜி, துக்கோஜி என்னும் துளஜா ஆகியோர். சகஜி மன்னன் கலையிலும், கல்வியிலும் சிறந்து விளங்கினார். இவர் தாய் தீபாம்பாளின் கருத்துக்கு இசைந்து வாழ்ந்தவர். இவர் கி. பி. 1684 ஆம் ஆண்டு அரசரானார்.

இம்மன்னர் மதுரை நாயக்க மன்னரால் கைது செய்யப்பட்ட சேதுபதியை விடுதலை செய்யச் செய்தார். இதனால் மகிழ்ந்த சேதுபதி மன்னன் சகஜியைச் சேதுநாட்டிற்கு அழைத்தார். அவரது விருப்பத்தை நிறைவேற்றத் தனது தாய் தீபாம்பாளுடன் சேது சமஸ்தானம் சென்றார். சேதுமன்னர் அவருக்கு மிகச்சிறந்த வரவேற்பைக்கொடுத்தார். தனது மகன் மன்னன் சகஜியுடன் சேதுநாடு சென்ற தீபாம்பாளும் சேதுக்கடலில் நீராடி பல

தானங்களைச் செய்துவிட்டு, மிகப்பெரிய தானமான "அதிதானம்" எனப்படும் "ஸ்வர்ண துலாபாரம்" ஏறினார். இந்த தானத்தைச் செய்தது அர்த்தோதய புண்யகாலம் என்று சுவடி கூறுகிறது. இந்த "அர்த்தோதய புண்யகாலம்" வந்த ஆண்டு 18—1—1691 என்று அறியமுடிகிறது. இதைப்போலவே திருவையாறிலும் ஒரு துலாபாரம் ஏறியுள்ளார். இவற்றிலிருந்து வந்த பொருட்களைக்கொண்டு பல அறப்பணிகளைச்செய்தார்.

## மன்னர் சகஜியைப்பற்றிக் கூறும் நூல்கள்

### சாஹேந்த்ர விலாசம்[1]

இந்த நூலை இயற்றியவர் ஸ்ரீதரவேங்கடேச அய்யாவாள் ஆவார். இவர் சம்ஸ்க்ருத மொழியில் சிறந்த புலமைபெற்றவர். சகஜியின் அரசவைப் புலவராக விளங்கியவர். சாஹேந்த்ர விலாசம் என்னும் இந்நூல் சிறு காப்பியம் எனினும் இம் மன்னன் காலத்தில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் பிணைய யாத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தஞ்சை மன்னன் சகஜியின் உதவியைச் சேதுநாட்டு மன்னன் கிழவன் சேதுபதி வேண்டினான். அவனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட மன்னன் சகஜி தனது படையைப் போருக்கு அனுப்பினான். அந்தப்போரில் தஞ்சைப் படைகள் வெற்றிபெற்றன. இதனால் மகிழ்ந்த சேதுபதி அவ்வெற்றியைக் கொண்டாட ஒருவிழா ஏற்பாடுசெய்தான். அவ்விழாவிற்குத் தனது தாய் தீபாம்பாளுடன் மன்னன் சென்றிருந்தான். தனது வெற்றிக்கு உதவிய சகஜி மன்னனுக்கு அடையாளமாக அறந்தாங்கி வரையுள்ள பகுதிகளைத் தஞ்சைக்குக் கொடுத்ததாகவும், பின்னர்ச் செஞ்சியின்மீது ஔரங்கசீப் படையெடுக்கும் செய்தியினை அறிந்த சகஜி தனது படையைச் செஞ்சிக்கு அனுப்பி அவர்களுக்கு உதவியாகப் போர்புரியச்செய்து வெற்றிபெறச்செய்தான் என்பது போன்ற பல வரலாற்றுச் செய்திகளும், மேலும் தஞ்சை அரண்மனையின் கட்டிட அமைப்புகளைப் பற்றிய செய்தியும், தர்பார் வர்ணனை போன்ற பிற செய்திகளும் இந்நூலில் காணக்கிடைக்கின்றன.

### தர்மவிஜயசம்பூ[2]

இந்த நூலில் இரண்டாம் சகஜி மன்னரின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. இந்நூல் சகஜி மன்னர் காலத்தில் நடைபெற்ற இசைவிழாக்கள், நாட்டியங்கள், நாடகங்கள்

---

1. சுவடி எண். D. No. 4230—சரசுவதி மகால் வெளியீடு—1952.
2. சுவடி எண். D. No. 4231—சரசுவதி மகால் வெளியீடு—1980.

போன்றவைகளைப் பற்றியும், அக்காலத்திய புலவர்களைப் பற்றியும் விவரிக்கின்றது. பொதுவாக இந்நூல் இலக்கியம்பற்றி ஆராய்வோருக்குப் பெரிதும் பயனளிக்கும்.

**காந்திமதி பரிணயம்***

இந்த நாடகம் சொக்கநாதகவி என்னும் புலவரால் இயற்றப்பட்டது. இவர் சகஜி மன்னரின் அவைப்புலவர். இந்நூல் காந்திமதிக்கும், சகஜி மன்னனுக்கும் நடந்த காதல் (கற்பனை) திருமணத்தைப் பற்றிக் கூறுகிறது. இதில் பல சரித்திரச் செய்திகள் உள்ளன. அவை வருமாறு :

இந்நாடகத்தின் மூன்றாவது அங்கத்தில் சேது மன்னனுக்கு சகஜி உதவி செய்ததும், அதில் தஞ்சைப்படை வெற்றிபெற்ற செய்தியும் கூறப் பட்டுள்ளது. இதில் குறிப்பிட்டுள்ள சேதுமன்னன் கிழவன் 'சேதுபதி' இவர் கி. பி. 1674 முதல் 1708 வரை ஆட்சிசெய்தவர். இவரது ஆட்சிக் காலத்தில் மதுரைப்படை சேதுநாட்டின்மீது படைதொடுக்கவே, மதுரையை எதிர்த்துப் போரிடத் தஞ்சையின் உதவிகேட்டுத் தூது அனுப்பினான் சேது மன்னன். அப்பொழுது சகஜி தனது படைத்தலைவன் 'பாவாஜி'யின் தலைமை யில் மறவர்களுக்கு உதவப் பெரும் படையை அனுப்பி, இப்போரில் வெற்றி பெறச்செய்தான். இப்போர் கி. பி. 1700க்கும் 1702க்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்றிருக்கும் என்று கருதலாம். உரிய நேரத்தில் உதவிய தஞ்சை மன்னன் சகஜிக்குக் கிழவன் சேதுபதி பாம்பாற்றுக்கு வடக்கேயும் பட்டுக்கோட்டைக்குத் தெற்கேயும் உள்ள நிலப்பகுதிகளைத் தஞ்சைக்கு அளித்தார்.

மன்னன் சகஜி தஞ்சையில் ஆட்சிசெய்தபோது சேதுநாட்டைக் கிழவன் சேதுபதி ஆட்சிசெய்து கொண்டிருந்தார். இவரின் ஆட்சிக்காலத்தில் அதிராம்பட்டினம் வரையுள்ள கடற்பகுதிகளையும், மன்னார்குடி வரையுள்ள நிலப்பகுதிகளையும் மறவர்களே ஆக்ரமித்துக்கொண்டிருந்தனர் என்பதைத் தஞ்சாவூர் கெஜட்டியரும் கூறுகிறது.

பாண்டிச்சேரியின் அருகில் 'பாகா' என்ற நகரம் உள்ளது. இந்த 'முகமதியர் ஆக்ரமித்தனர்' என்ற செய்தி இந்நாடகத்தின் மூன்றாவது அங்கத்தில் கூறப்படுகிறது. இந்தச் செய்தியைப்பற்றி இந்நாடகத்தைத் தவிர இம்மன்னர் காலத்தில் தோன்றிய வேறு எந்த நூலிலும் கூறப்பட வில்லை என்று அறியமுடிகிறது. மேலும் 'பாகா' நகரின் அருகில் 'ரணதீரன்' என்பவன் சகஜியின் குறுநில மன்னனாக ஆட்சிசெய்தவன் என்றும், இவன் மூலமாகவே மொகலாயரிடம் இருந்து ஏற்பட இருந்த இடர் களையப்பட்டது. என்பதும் ஆராய்ச்சிக்குரிய செய்திகள்.

---

* சுவடி எண் D. No. 4350—சரசுவதி மகால் வெளியீடு—1984.

## முதலாம் சரபோஜியின் காலத்திய வரலாற்று நூல்கள்

### போசல வம்சாவளி சம்பூ[1]

தஞ்சை மராட்டிய மன்னர்களில் மூன்றாவது மன்னராகத் திகழ்ந்தவர் முதலாம் சரபோஜி (கி.பி.1711-1729). இவர் தமது ஆட்சிக் காலத்தில்பின்வரும் சந்ததியினர் வளமும் பெருமையும் பெறத்தக்க பல்வேறு பணிகளை நிறைவேற்றியுள்ளார். அவற்றுள் கரிகால் பெருவளத்தான் எழுப்பித்த கல்லணையைச் செப்பனிட்டதும், தஞ்சைப் பெரியகோவிலுக்குக் குடமுழுக்கு செய்வித்ததும் குறிப்பிடத்தக்கவை. அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த மாமன்னர் சரபோஜியின் புகழ் காவியமாக எழுதப்பட்டுள்ளது.

அரசர்கள் கல்வி, கலையில் கொண்ட ஈடுபாடு, அவர்கள் பயின்ற போர்ப்பயிற்சிகள் முதலியன குறிக்கப்படுகின்றன.

உதாரணமாக, அவர்கள் அசைந்துகொண்டேயிருக்கும் இலக்கை அம்பெய்தி வீழ்த்தவும், சக்தி, தோமரம் முதலிய ஆயுதங்களைப் போர்களில் பயன் படுத்தும் முறைகளையும், யானையேற்றம் குதிரையேற்றம் ஆகியவற்றையும் இசை, நாட்டியம், நாடகம் முதலிய நுண்கலைகளின் நுட்பங்களையும் காவியம், அலங்காரம் முதலிய நூல்களையும், இராமாயணம், மஹாபாரதம் முதலிய இதிஹாசங்களையும், சகுனம், கணிதம், ரத்னபரீக்ஷை, ஓவியம் முதலிய கலைகளையும் கற்று, பன்மொழிகளிலும் சிறந்து விளங்கினர். மன்னர்கள் பட்டத்து யானையான "சத்ருஞ்ஜயம்" என்ற யானையின்மீது ஆரோகணித்து பேரீ, மிருதங்கம், கொம்பு, சங்கு ஆகியவைகள் ஒலிக்க ஊர்வலம் செல்வார்கள். அவ்வமயம் மக்கள் மனமகிழ்வுடன் வீதியில் குழுமி இருந்ததாகவும், முத்துகளைத் தோரணங்களாகக்கட்டி இருந்ததாகவும் வாழை, கமுகு, கொடி முதலியவைகளால் தஞ்சை நகரம் அலங்கரிக்கப்பெற்று இருந்ததுவுமாகிய பல செய்திகள் இந்நூலிலிருந்து அறியப்படுகின்றன.

### சரபராஜ விலாசம்[2]

இந்த நூலிலும் முதலாம் சரபோஜியின் காலத்திய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவை கீழே வருமாறு:-

---

1 சுவடி எண் D. No. 4240-- சரசுவதி மகால் வெளியீடு—1987.

2 சுவடி எண், D. No. 4241—சரசுவதி மகால் வெளியீடு—1990.

"தஞ்சையைச் சுற்றிலும் தென்னை, பனை, நாகை, மா, பலா முதலான எண்ணற்ற மரங்கள் சூழப்பெற்ற குளங்களும், ஆறுகளும் நிறைந்து வளம் மிக்கதாக விளங்கியது மட்டுமின்றி நகரைச்சுற்றிலும் அகன்று பரந்த ஆழம் மிக்க நீர் நிறைந்த அகழிகள் பெரிய முதலைகளுடன் விளங்கின. உயர்ந்த மதிற்சுவர்களில் பல்லோரை ஒருசேரக் கொல்லும் திறன்படைத்த பீரங்கி போன்ற ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருந்தமையாலும், பகையரசர்களின் யானைகள் முட்டி மோதித் திறக்க இயலாதவாறு கோட்டைக் கதவுகளில் கூர்மையான ஆணிகள் வெளியில் நீட்டிக்கொண்டிருந்தமையாலும், ஆங்காங்கு எப்பொழுதும் போர்வீரர்கள் குழுக்குழுவாக வாள், கேடயம், வில், அம்பு ஈட்டி, உலக்கை முதலான ஆயுதங்களுடன் காவல் புரிந்தும், பயிற்சியும் பெற்றுவந்தமையாலும் தஞ்சை நகர் பகையரசர்களால் எளிதில்புக முடியாததாக விளங்கியது. ஆனால் புலவர்களும், கலைஞர்களும் அரண் மனைக்குள் சென்றுவர எவ்விதத்தடையும் இருந்ததில்லை.

நகரின் வீதிகளில் பன்னாட்டுக் குதிரைகளும், மனிதர்களும், தேர்களும் பல்லக்குகளும் வந்துசென்ற வண்ணம் இருந்தமையாலும், மலர்களும் மாவிலைத் தோரணங்களுடன் விளங்க எப்பொழுதும் இடையறாத் திருவிழாக் கோலம் பூண்டிருக்கும் நிலையையும் காணமுடிந்தது. தஞ்சையைச் சுற்றிலும் விவசாயிகளுக்குக் குடியிருப்புகள் அழகுற அமைத்துக் கொடுக்கப்பட்டன.

அரண்மனையினுள் எளிதில் எவரும் நுழையமுடியாது, எனினும் முறையுடன் அனுமதி பெற்றுவரும் வெளிநாட்டுத் தூதர்களும், சிற்றரசர்களும் தகுந்த முறையில் வரவேற்கப்பட்டனர். வேற்றுநாட்டு அரசர்களால் அனுப்பப்பட்ட தூதர்கள் அரண்மனையின் முதல் பிராகாரத்திலும் இரண்டாம் பிராகாரத்திலும் நவரத்னக் கற்கள் பதித்த பல்வகை அணிகளை அணிந்துகொண்ட மன்னர்கள் பொன்மயமான ஆசனங்களில் அமர்ந்து மன்னர் சரபோஜியின் தரிசனத்திற்காகக் காத்திருந்தனர். மூன்றாம் பிராகாரத்தில் அரசருக்கு மிகவும் நெருக்கமானவர்களும் வக்கீல்களும் அரசாங்க அலுவலர்களும் நிறைந்து இருந்தனர். இதுமட்டுமின்றி மன்னனின் அன்றாட நிகழ்ச்சிகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

**அனங்க விஜய பாணம்***

இந்நூல் நாடக வகைகளுள் ஒன்று. இத்தகைய பாணங்கள் மற்ற அரசர்களைத் துதிபாடும் இலக்கியங்கள் போலல்லாது, அக்காலச் சமுதாய வாழ்க்கையையும், மக்கள் வாழ்க்கை நிலையையும், தெளிவுபட

---

* சுவடி எண் D. No. 4577—சரசுவதி மகால் வெளியீடு—1986.

உணர்த்துகின்றன. தரும சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள சட்டங்களை மீறிச் செயல்படும் மனிதர்களைப் பற்றிய விபரங்களை இவைபோன்ற இலக்கியங்களில்தான் காணமுடிகிறது.

விழாக்காலங்களில் ஒரு நகரின் தோற்றம் எப்படி இருக்கும் என்பதையும் அவற்றில் மாதர்களின் பங்கைப்பற்றியும் இவற்றிலிருந்து நாம் அறிய முடிகிறது. பெண்கள் சுதந்திரம் எந்த அளவுக்கு அக்காலத்தில் போற்றப் பட்டது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் நிறைந்து காணப்படுவதும் இவ் வகை இலக்கியங்களில்தான். மேலும் 'அனங்கவிஜயபாணம்' வெளிப்படுத்தும் சமுதாய நிலைகளின் பல்வேறு குறிப்பிடத்தக்க அம்சங்கள் நமது சரித்திரம் மற்றும் சமுதாய ஆய்வாளர்களால் குறிப்பிடப்படாதவை. சமுதாயத்தில் ஏமாற்றுதலும், பொய்யுரையும், கள்ளத்தனமும் எவ்வாறு ஊடுருவியிருந்தன என்பதனை இந்நாடகத்தின் மூலம் எடுத்துக்காட்டுகிறார் நூலாசிரியர்.

மேலும் கலைகளிலும், பொழுதுபோக்குகளிலும் சிறந்து விளங்கியது, சரபோஜி மன்னரது காலம் என்பதற்கான சிறந்ததொரு அத்தாட்சியாக விளங்குகிறது இந்த அனங்க விஜய பாணம்.

## செஞ்சி மராட்டியர் பற்றிய நூல்கள்

### ராஜாராம சரிதம்[1]

கேசவ பண்டிதரால் எழுதப்பட்டுள்ள 'ஸ்ரீராஜாராம சரிதம்' என்ற வடமொழிநூல் வீரசிவாஜியின் குமாரர்களில் ஒருவரான இராஜாராமின் வரலாற்றில் ஒரு சிறு பகுதியைத் தெள்ளத் தெளியக் காட்டுகிறது. 1690ஆம் ஆண்டுக்குச் சில ஆண்டுகள் முன்பிருந்து மராட்டிய வரலாற்றை உள்ளபடி அறிவதற்கு இந்நூல் பேருதவி புரிகின்றது.

இந்நூலாசிரியர் மராட்டிய வீரராக விளங்கிய சத்ரபதி சிவாஜியிடமும் அவருடைய மைந்தர்களான சம்பாஜி, இராஜாராம் ஆகியோரிடமும் கருவூலக் காப்பாளராகப் பதவி வகித்தவர். புராண இதிகாசங்களில் செம்மையான பயிற்சி உடையவர். எனவேதான் ஒரு மாபெரும் வரலாற்றை அறிஞர்கள் விரும்பியேற்கும் வண்ணம் திட்டமிட்டு அதற்கேற்பச் செஞ்சி மன்னன் ராஜாராமைக் காவிய நாயகனாக்கி, பரமேஸ்வரன், நாரதர், இந்திரன் ஆகியவர்களின் சம்பாஷணை வடிவில் இக்காவியத்தை உருவாக்கியிருக்கிறார்.

---

1. சுவடி எண். D. No. 4229—சரசுவதி மகால் வெளியீடு—1994.

**சாஹித்ய மஞ்ஞுஷா[1]**

தாஜி எனும் புலவர் மராட்டிய வம்சாவளியினை 'சாஹித்யமஞ்சூஷா' என்ற சிறுநூலாக வடமொழியில் எடுத்தியம்பியுள்ளார். இதில் சிவாஜியைப் பற்றிக்கூறும்போது 'பகைவனுக்கு அருளும், நன்நெஞ்சம் கொண்டவன் சிவாஜி' என்றும், 'பகையுணர்வை வெறுக்கவேண்டுமேயன்றி பகைவனை வெறுக்கக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டவன் சிவாஜி' என்றும் இந்நூலில் கூறுகிறார். மேலும் இவரது பரந்த சாம்ராஜ்யத்தில் பல முஸ்லிம் கள் பெரும்பதவியில் இருந்தனர். இவரது நாட்டில் எல்லாமதத்தினரும் சுதந்திரமாய் இறைவழிபாடு செய்யமுடிந்தது போன்ற கருத்துகளை இந்த நூலில் குறித்திருப்பதுடன் சிவாஜியின் வம்சாவளியையும் தெளிவுபட எடுத்தியம்பியுள்ளார்.

**மராட்டிய மாவீரன் சத்ரபதி சிவாஜியின் வரலாறு கூறும் நூல்கள்**

**சிவபாரத சரித்திரம்[2]**

மராட்டிய சாம்ராஜ்யத்தை நிறுவிப்புகழ்பெற்ற சத்ரபதி சிவாஜியின் சரித்திர நிகழ்ச்சிகளைக் கூறுவது இந்நூல். இந்த நூல் சரஸ்வதி மகால் நூலகத்தில் மட்டுமே உள்ளது. இந்நூலின்கண் விரித்துரைக்கப்பட்டுள்ள செய்திகள் பல. அவற்றின் தொகுப்பொன்றை ஆசிரியர் தந்துள்ளார். பல ராஜாக்களுடைய சரித்திரங்களும், யானை, குதிரைகளுடைய இலட்சணங்களும், கோட்டை, கொத்தளங்களுடைய இலட்சணங்களும், ராஜாக்களுடைய நீதி முறைகளும், சூரியவம்சத்திலே உதித்தவர்களுடைய கதைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

**பர்ணால பர்வத க்ரஹணாக்யானம்[3]**

சத்ரபதி சிவாஜி புனேயின் அருகிலுள்ள 'பர்ணாலா'க் கோட்டையைக் கைப்பற்றிய வரலாற்றுத் தொடர்புடைய செய்தியைக்கூறுவதே இந்தநூலின் நோக்கம். இந்நூலகத்தின் வடமொழிப்பிரிவில் இதன் இரண்டு சுவடிகள் உள்ளன. D. No. 4227, 4228 ஆகிய எண்களில் அவை பாதுகாக்கப்பெற்று வருகின்றன.

---

1. சுவடி எண். D. No. 4223—சரசுவதி மகால் பருவ இதழ்—1984.
2. சுவடி எண். D. No. 4223 to 4226,
   தமிழ்ச்சுவடி எண். D. No. 630 - சரசுவதி மகால் பருவ இதழ்—1972.
3. சுவடி எண். D. No. 4227 — கல்யாண், டாணே (பம்பாய்) 1923.

இந்த நூலின் ஆசிரியர் ஜயராம கவி. இவரது மற்றொரு நூல் செஞ்சி மன்னன் ராஜாராமின் வரலாற்றைக் கூறும் நூலாகும். இது முன்னர் குறிக்கப்பெற்றுள்ளது.

இந்த நூலின் செய்திகளை 'தஞ்சை மராட்டிய மன்னரும்' சத்ரபதி சிவாஜியின் இளவலுமான ஏகோஜி எனும் வெங்கோஜியிடம் கூறியதாகவும் அச்செய்திகளையே காவியமாக எழுதியுள்ளதாகவும் இந்நூலாசிரியர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இப்புலவர் ஏகோஜியிடம் கூறிய காலம் சகம் **1595** **(AD *1673*)** என்றும், இடம் பெங்களூர் அரண்மனையிலுள்ள கௌரீ விலாஸ சபையாகவும் இருக்கும் வாய்ப்புகள் உள்ளன. இந்நூலில் குறிப்பிடப்படும் செய்திகள்: சக ஆண்டு **1592**ல் (கி. பி. **1671**) சிவாஜிக்கும், ஔரங்கசீப்பிற்கும் போர் தொடங்கியது. இந்நிலையில் சிவாஜியைக்கொல்லுமாறு பணியாளர் களுக்குக் கட்டளையிட்டான் சுல்தான் ஔரங்கசீப். இதனை நிறைவேற்ற மனமின்றிப் பெங்களூர் ஜாகிர் 'அல்லியதில்ஷா' சிவாஜியுடன் ஓர் உடன்பாடு செய்துகொள்ள முயற்சி செய்கிறார். அச்சமயம் ஔரங்கசீப் சிவாஜியின்மீது படையெடுக்கப் போர் தொடங்குகிறது.

அந்நிலையில், (*1672*இல்) அல்லியதில்ஷா காலமாகிறார். இவருக்குப் பின் இவரது மகன் சிக்கந்தர் சிறுவனாக இருந்தமையால் ஆட்சிசெய்ய 'கவாஸ்கான்' நியமிக்கப்படுகிறான். இவன் ஔரங்கசீப்பின் அந்தரங்க ஆள். இதனை அறிந்த சிவாஜி மாறுவேஷங்கொண்ட படைகளைப் பர்ணாலா கோட்டைக்குள் அனுப்பி அக்கோட்டையைக் கைப்பற்றுகிறான்.

அனாஜி பண்டித். கொண்டாஜிபர்ஜன், கனோஜி மாமா, மோத்யாஜி மாமா ஆகியோர் கூடையில் ஆயுதங்களுடன் மாறுவேஷமணிந்து செல்கின்றனர். மேலும் முக்கியமான படைகளை அனுப்பிக் கோட்டையை முற்றுகையிட்டும், ஏணிமேல் ஏணிவைத்து படைத்தலைவர்களின் வீடுகளுக்குள் புகுந்தும் அவர்களைக் கைது செய்கின்றனர். இக்கோட்டையின் தலைவனான 'நாகோஜி பண்டிட்' கோட்டையிலிருந்து சென்று 'பர்னாலாக் கோட்டை'யைக் கைப்பற்றிய செய்தியைச் சிவாஜிக்குத் தெரிவிக்க சிவாஜி முறைப்படி தெய்வத்தையும், குருவையும் வழிபட்டு 'பர்ணாலாக்' கோட்டையை அடைகிறான்.

## 10

சிவாஜி பர்ணாலாக் கோட்டையைக் கைப்பற்றிய செய்தியறிந்து பிஜப்பூர் சுல்தான் மகன் 'சிக்கந்தர்' தனது படைத்தலைவர்களைக்கொண்டு கோட்டையைப் பிடிக்க உத்திரவிடுகிறான். இவர் போரிடுவதற்காகப் பாசறையிலிருக்கும்போது சிவாஜி, பிரதாப்ராவ், ஆனந்தராவ் போன்றோருடன் ஆலோசனைசெய்து தனது எதிரிகளின் பாசறையை முற்றுகையிட்டுப் போர் செய்து வெற்றிபெற்றான் என்னும் செய்திகளைக் கொண்டுள்ளது இச்சுவடி.

### முடிவுரை

இந்நூலகத்தில் வடமொழிப்பிரிவில் காணப்படும் சுவடிகள் பல வரலாற்றுச் சின்னங்களாகத் திகழ்கின்றன எனில் மிகையில்லை. மராட்டியரின் வரலாற்றினை முறைப்படி தீட்டுவதற்குக் கல்வெட்டுகள், நாணயங்கள், ஆவணங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொள்வது போன்றே அவர்தம் காலப் பன்மொழி இலக்கியங்களையும் ஒருமுறை ஆய்ந்தறிவது மிகவும் அவசியம். இவ்விலக்கியங்கள் வரலாற்றுச்செய்தி பொதிந்தவையாக இருப்பினும், அந்நாளைய மக்களின் வாழ்க்கை முறைகளையும் விளக்குவதாக அமைகின்றன.

# தஞ்சையில் நடைபெற்ற ஸம்ஸ்க்ருத நாடகங்கள்

(17, 18ஆம் நூற்றாண்டுகளில் அரங்கேறியவை)

வேதாந்தசிரோமணி, தமிழ்வித்வான்

**N. ஸ்ரீநிவாஸன்**

ஸம்ஸ்க்ருத பண்டிதர்,

சரஸ்வதி மஹால் நூலகம்.

தஞ்சை கலைகளின் தாயகம். இம் மண்ணில் பல்வேறு பாரம்பரியமிக்க கலைகள் தோன்றி இந்திய நாட்டின் ஒரு தனித்தன்மை கொண்ட மரபாகவே வளர்ந்து வருகின்றன. இசை, நாட்டியம், நாடகம் போன்ற நுண்கலைகளை 'இது தஞ்சாவூர் சம்பிரதாயம்' என்று கூறியும் பாராட்டியும் வருகின்றனர்.

இத்தகைய அரிய மரபைப் பேணி வளர்த்தனர் தஞ்சை மண்டலத்தை அரசாண்ட மன்னர்கள் இதற்காகப் பல்வேறு மொழிப் புலவர்களையும், கலைஞர்களையும் இம் மண்ணில் குடியமர்த்தியும், இறையிலி நிலங்கள் கொடுத்தும், அரசவைக் கலைஞர்களாகப் பதவியளித்தும் அவர்களை ஆதரித்தனர். இதனால் கலைஞர்களும், கவிஞர்களும் தங்களது ஆற்றலை, படைப்புக்களாக எழுதினர். இப்படி இலக்கியங்களும், இலக்கணங்களும், சாஸ்திரங்களும் இசைப்பாடல்களும், நாடகங்களும் இயற்றி நமது தொன்மையான மரபுகளைப் பேணிக் காத்தனர். பல நூல்களையும், நாடகங்களையும் மன்னர்களும் இயற்றியுள்ளனர் எனில் மிகையில்லை.

இவ்வாறு தோன்றிய நுண்கலைகளில் நாடகக்கலை உன்னதமான நிலையைப் பெற்றிருந்தது. பற்பல நாடகங்கள் தோன்றி மக்களைப் பரவசப் படுத்தியது. இவற்றில் பல நாடகங்கள் மறைந்கிவிட்டன. பல நாடகங்கள் இன்னும் சுவடி வடிவிலேயே இந்நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து சில நூல்களை அச்சிட்டு ஆய்வாளர்களுக்கு உதவியும் வருகிறது இந்த நூலகம்.

இங்குள்ள நாடகச் சுவடிகளை ஆராயும்போது மூன்றுவிதமான நிலைகளில் நாடகங்கள் நடிக்கப்பட்டுள்ள செய்திகள் கிடைக்கின்றன.

1. அரண்மனையில் அரசர்கள், தேவியர்கள் சிறந்த அறிஞர்கள் மற்றும் அரண்மனைப் பணியாளர்கள் காண்பதற்கு மட்டுமே இயற்றப்பட்டு நடிக்கப் பெற்ற நாடகங்கள்.

2. ஆலயங்களில் நடைபெறுகின்ற திருவிழாக்களில் (அதாவது வஸந்தோற்சவம், பிர்மோற்சவம் மற்றும் மகாமகம் போன்ற அரிய திருவிழாக்களில்) மக்களுக்காக நடைபெறுகின்ற நாடகங்கள்.

3. பல நாட்கள் இயற்றும் அரிய சிறப்பு வாய்ந்த யாகங்களில் கலந்து கொள்ளும் அடியார்கள் இரவு வேளைகளில் கண்டுகளிக்கத்தக்க நாடகங்கள் என்பன.

**நாடகங்கள் :** வடமொழியிலுள்ள நாடகங்களை ரூபகங்கள் என்று அழைப்பர். இது பத்து வகைப்படும். அவைகள்: 1. நாடகம் 2. ப்ரகரணம் 3. பாணம் 4. வ்யாயோகம் 5. சமவாகாரம் 6. டிமம் 7. ஈஹாம்ருகம் 8. அங்கம் 9. வீதி 10. ப்ரஹஸனம் என்பன. இவற்றைத் தவிர, 1. நாடிகா 2. ப்ரேக்ஷணகம் 3. சட்டகம் என்ற பிரிவுகளுமுண்டு. இவற்றில் நாடகம் பாணம் ஆகிய இரண்டு பிரிவுகளில் பல நாடகங்கள் தஞ்சையில் தோன்றியுள்ளன.

இந்த நாடகங்களில் பெரும்பாலானவை சிவாலயங்களிலும், விஷ்ணுவாலயங்களிலும் நடைபெறும் வஸந்தோத்சவ்[1], பிர்மோத்சவங்களில்[2] மக்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப்பட்டு நடிக்கப்பட்டவைகள். ஆதலால் தஞ்சை மற்றும் தஞ்சையைச் சார்ந்துள்ள புகழ் பெற்ற ஆலயங்களில் நடைபெற்றுள்ள நாடகங்களைப் பற்றிய செய்திகள் மட்டுமே இக்கட்டுரையில் குறிக்கப்பெற்றுள்ளன. இந்த நாடகங்களில் பல சுவடிகளாகவேயுள்ளன. நாடகத்துறையில் ஆராய்ச்சி செய்வோர்களுக்குப் பயனாக இருக்கும் பொருட்டு நாடகத்தின் ஆசிரியர், நாடகம் நடைபெற்ற இடம், காலம் ஆகியவற்றைத் தொகுத்து எழுதப்பட்டுள்ளது.

---

1. வஸந்தோத்ஸவம் — வஸந்தகாலத்தில் (சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில்) நடைபெறும் திருவிழா.) இது அந்த அந்த ஆலயங்களில் காணப்படும் மரபுகளின்படி நடைபெறும். சில ஆலயங்களில் பங்குனி மாத அமாவாஸைக்குப் பிறகு தொடங்கும். இதனை திருக்கல்யாண உத்ஸவம் என்றும் கூறுவர்.

2. பிர்மோத்ஸவம் — அந்த அந்த ஆலயங்களில் உள்ள மரபுப்படி சித்திரை-வைகாசி-ஆவி மாதங்களில் நடைபெறும். பொதுவாக 'பிர்மதேவனால் தொடக்கிவைக்கப் பட்ட திருவிழா' என்ற பொருளில் பிர்மோத்ஸவம் என்று அழைக்கப்படுகிறது.

# தஞ்சை நாயக்க மன்னர் காலத்து நாடகங்கள்

## மதனமஞ்ஜரீ நாடகம்

தஞ்சையை அரசு செய்த நாயக்க மன்னர்களின் காலத்தில் பல நாடகங்களும், இசை நாட்டிய நாடகங்களும் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுள்ளன. அவற்றிலொன்றாக விளங்குவது 'மதன மஞ்ஜரீ நாடகம்.' இதனை இயற்றியவர் 'வீழிநாதன்'. இவர் தஞ்சைமாவட்டம் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள 'திருவீழிமிழலை' என்னும் புகழ்பெற்ற சிவஸ்தலத்தில் ஹரிநதி என்னும் அரசலாற்றின் கரையில் கோயில்கொண்டுள்ள 'திருவீழிநாதஸ்வாமி' ஆலயத்தின் 'சித்திரைப் பெருவிழா'வில் மக்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளது.[1]

இந்த நாடகத்தை இயற்றிய வீழிநாதகவி விஷ்ணுபுரம் என்ற கிராமத்திலுள்ள அக்ரஹாரத்தில் வாழ்ந்தவர். இந்த அக்ரஹாரத்தை ஏற்படுத்தி (அதில் வேத - வேதாங்க - சாஸ்திரங்களில் புகழ்பெற்ற புலவர்களுக்குக் கொடையாக அளித்தவர் விஜயநகரப் பேரரசர் 'அச்சுதராயர்' (கி. பி. 1529–1542). அப்போது தஞ்சையை அரசு செலுத்தியவர் செவ்வப்பன். வீழிநாதகவியின் பாட்டனார் யக்ஞநாராயணசுதீ. தந்தை கனகசபாபதி. இது அரங்கேறிய காலம் நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலம் என்று கருதமுடிகிறது.

**ஸுபத்ரா பரிணயம்:** – இந்த நாடகம் மஹாமகத் திருவிழாவில் மக்கள் முன்னிலையில் நடித்துக்காண்பிக்கப்பட்டுள்ளது. 'மஹாமகம்' என்பது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் கொண்டாடப்படும் மிகப்பெரிய விழா. (17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இது அரங்கேறி நடிக்கப்பட்டுள்ளது)[2] இந்த நாடகத்தை இயற்றியவர் சுதீந்திரர். இவர் த்வைத சித்தாந்தத் துறவி. விஜயீந்தர தீர்த்தரின் சீடர். ஸ்ரீ விஜயீந்த்ர தீர்த்தர் தஞ்சை மன்னன் ரகுநாத நாயக்கனுக்கு (1614 – 1633)க் குருவாக விளங்கியவர். இவருடைய ஸ்ரீமடம் கும்பகோணத்தில் காவிரிக் கரையில் அமைந்துள்ளது. இவருக்கு நெல் விளையும் நிலங்களுடன் சில கிராமங்களையும் தானசாஸனம் செய்துள்ளார் மன்னன் ரகுநாத

---

1 अहो मकुटावतंसभट्टो त्रिभवधवलीकृतचोलावनीमण्डलस्य समुत्तुङ्गहरितदीतरङ्गसङ्ग-तालवृन्तापनीयमान[illegible]ताण्डवपरिश्रमस्य पुण्ड्रकोदण्डतन्त्रसिद्धान्तविभूषितवामभागस्य भगवतस्तेजिनीवनेश्वरस्य प्रवृत्त एव चैत्रयात्रामहोत्सवः ।

D. No. 4430 / B. No. 10684

2 ...विचित्र महामखयात्रायां समागतानस्मानसमानकविताभिनयाद्विनोदयाद्येति ।

(V. B. N. Collection M S. No. 271)

நாயக்கர். விஜயீந்த்ர தீர்த்தருக்குப்பின் இந்த நாடக ஆசிரியரான சுதீந்திரர் ஸ்ரீமடத்தின் தலைவராக விளங்கியுள்ளார். இவர் பீடாதிபதியாக விளங்கிய காலத்தில் 'ஸுபத்ராபரிணயம்' நடிக்கப்பட்டுள்ளது. அதாவது 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நடிக்கப்பெற்றிருக்கலாம்.[1]

**பாரிஜாத நாடகம்** — இந்த நாடகத்தை இயற்றியவர் குமார தேசிக தாதாசார்யர். தஞ்சையின் நாயக்க மன்னனாகத் திகழ்ந்தும், வரலாற்றுச் சிறப்புவாய்ந்த மன்னனுமான ரகுநாத நாயக்கனின் குருவாகவும், ஆஸ்தான வித்வானகவும் விளங்கியவர், இவரால் பல நூற்கள் இயற்றப்பட்டுள்ளன.

இவரியற்றிய 'பாரிஜாத நாடகம்' தஞ்சை அரண்மனையில் நடைபெற்ற மஹாநவமி (நவராத்திரி) திருவிழாவில் ரகுநாதனின் கொலுமண்டபத்தில் அவன் முன்பே நடித்துக்காட்டப்பட்டது. அங்கு குழுமியிருந்த புலவர் குழாங்களால் 'மிகச்சிறந்த நாடகம்' என்று புகழப்பெற்றது என்று இந்த நாடகத்தின் பிரஸ்தாவனையில் குறிக்கப்பட்டுள்ளது.[2]

**ரகுநாதவிலாஸம்** — இந்த நாடகத்தை இயற்றியவர் யக்ஞநாராயண தீக்ஷிதர். இவரது தந்தை கோவிந்த தீக்ஷிதர். இவர் நாயக்க மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் அமைச்சராக இருந்து நற்பணிகளைச் செய்துள்ளார். மிகப் பெரிய அறிவாளி. 'ஸங்கீதஸுதா' என்ற நூலை இயற்றியவர். இவருடைய மகன் 'யக்ஞநாராயணதீக்ஷிதர்' அவர்களால் இந்த நாடகம் இயற்றப்பட்டு மன்னன் முன்னிலையில் தஞ்சை அரண்மனையில் நடித்துக்காட்டப்பட்டது. மன்னன் ரகுநாதனின் ஆட்சிக்காலம் கி. பி. 1614—1633. இம்மன்னனின் சரித்திரக் குறிப்புக்களுடன் கூடிய நாடகமிது. இவரியற்றிய வேறு நூற்கள் ரகுநாத பூப விஜயம், சாஹித்ய ரத்னாகரம்.

---

1 यमनियमाद्यारवणनिरतयतिराजराजस्य सुरेन्द्रगुरोः, करसरसीरुहसमुद्भवो गणनातीत-गम्भीरगुणसान्द्रः कुवलयचन्द्रः विजयीन्द्रो नाम संयमीन्द्रः तदन्तेवासिना सुधीन्द्र-यतीन्द्रेण रचितम् ।। V. B. No. Collection M. S. No. 271

2 ......शुद्धान्तसुगतसिद्धान्तमध्याभिरहमहमिकया समाराधितस्य रघुनाथजननाथेन्दोः प्रकृतजनप्रलोभनाभिनीयमाने पुनरस्मत्प्रयोगेऽप्यनुकम्पा । ......

असौ किल दृगासेचनकवेषपेशलैः कुशेशयरमणशशाङ्कवंशालङ्कारैः कतिपयैरेव राजन्यकुमारैराश्रितपार्श्वभागो निरतिशयषड्दर्शनीकौशलैरपश्चिमैर्विपश्चिद्भिरप्युपास्यमानो महानवमीमहोत्सवसन्दिदृक्षया साक्षादिव सहस्राक्षस्सिंहासनमध्यास्ते ।।

— पारिजातनाटकप्रस्तावनायां

## தஞ்சை மராட்டியர் காலத்து நாடகங்கள்

தஞ்சையில் மராட்டிய மன்னர்களின் ஆட்சி கி. பி. 1676-ஆம் ஆண்டு உதயமாயிற்று. முதல் மன்னனாக விளங்கிய முதலாம் ஏகோஜி (1676-1683)க்கு மூன்று புதல்வர்கள். இவர்களில் மூத்த தனயனாக விளங்கியவன் இரண்டாம் சகஜி ஆகும். இவன் 1684—1710 வரை தஞ்சையை ஆட்சிசெய்தான். இவனுடைய ஆட்சிக்காலத்தில் தோன்றி அரங்கேற்றம் செய்யப்பட்ட நாடகங்களை இனிக்காண்போம்.

அத்புத பஞ்ஜரம் — இந்த நாடகத்தை இயற்றியவர் நாராயணன் என்பவராவார். இந்த நாடகம், மன்னன் சகஜிக்கும் லீலாவதிக்கும் நடைபெற்ற திருமணத்தைப்பற்றிக்கூறும் கற்பனை நாடகமாகும். தஞ்சை மன்னர்களின் வரலாற்றுத் தொடர்புடைய பல செய்திகளை இந்த நாடகத்தில் காணலாம்.

இந்த நாடகம் கும்பகோணத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் 'மஹாமகத்திருவிழா' வில் மக்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளது தஞ்சை அரசனும், இந்நாடகத்தின் பாட்டுடைத் தலைவனுமாகிய சகஜி மன்னன், இவனது தாயார் தீபாம்பாள், சகோதரர்களான முதலாம் சரபோஜி, முதலாம் துளஜா ஆகியோருடன் இந்த நாடகத்தைக் கண்டு ரசித்துள்ளான். இந்த நாடகம் கி. பி. 1705-ஆம் ஆண்டு நடைபெற்றதாக, வடமொழி அறிஞர் டாக்டர் வீ. ராகவன் குறிப்பிடுகின்றார்.

மேலும், ஔரங்கசீப்பின் படையெடுப்பால் காசியிலுள்ள ஸ்ரீ விசுவநாதர் ஆலயத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்களையும் இந்த நாடகம் சித்தரிக்கின்றது.[1] இந்நாடகச் சுவடி சரஸ்வதி மஹால் நூலகத்திலிடம்பெறவில்லை. இது அடையாறு. திருவனந்தபுரம் ஆகிய நூலகங்களில் காணப்படுகின்றன.

காந்திமதீ பரிணயம்: இந்த நாடகத்தை இயற்றியவர் சொக்கநாதமகி. இந்த நாடகத்தின் கதாநாயகன் தஞ்சை மன்னன் சகஜியே. இது இம்மன்னனுக்கும் காந்திமதீ என்ற தலைவிக்கும் நடைபெறுகின்ற (கற்பனை) காதல் திருமணத்தைப்பற்றிக் கூறுவது.

இந்த நாடகம் கும்பகோணத்துக்கு அருகிலுள்ள திருவிடைமருதூரில் கோயில்கொண்டு அருள்பாலித்துவரும் ஸ்ரீமஹாலிங்க ஸ்வாமியின் பிர்

---

1. Sahendra Vilasam. Ed. Dr. V. Raghavan. Page 52, 53.

மோத்ஸவத்தில் மக்கள் முன்னிலையில் நடிக்கப்பட்டுள்ளதாக இச்சுவடி குறிப்பிடுகிறது.[1]

**ஸ்ரீராகவாப்யுதயம் :** இந்த நாடகத்தை இயற்றியவர் 'பகவந்தராய மகி' இவர் தஞ்சை மராட்டிய மன்னன் இரண்டாம் சகஜியின் அரசவைப் புலவர். இவரது தந்தை கங்காதரமகி. இவருக்கு மூன்று புதல்வர்கள் இவர்கள் முறையே நரஸிம்மராயமகி, த்ரயம்பகராயமகி, பகவந்தராயமகி. ஸ்ரீபகவந்தராயமகியின் தமயன்மார்களான நரஸிம்மராயமகியும், த்ரயம்பகராயமகியும் இம்மன்னரிடம் அமைச்சர்களாகப் பணிபுரிந்தவர்கள். த்ரயம்பகராயமகி சுவாமிமலையில் வாழ்ந்தவர். ஆதலால் இவர் நடத்திய யாகம் சுவாமிமலையில் நடைபெற்ற போழ்து 'ராகவாப்யுதயம்' என்னும் இந்த நாடகம் நடைபெற்றது. இந்த நாடகத்தை மன்னன் சகஜியும், த்ரயம்பகராயர், ராமபத்ர தீக்ஷிதர் போன்ற புலவர்களும் மக்களும் கூடியுள்ள அரங்கில் நடிக்கப்பட்டது.[2]

## தஞ்சை அரண்மனையில் நடைபெற்ற இசைநாட்டிய (யக்ஷகான) நாடகங்கள்

இம்மன்னன் காலத்தில் சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராட்டி ஆகிய நான்கு மொழிகளிலும் நாட்டிய நாடகங்கள் பல தஞ்சையில் நடைபெற்றுள்ளன. இதற்கு மோடி ஆவணங்களில் பல சான்றுகள் உள்ளன. ஆனால் சம்ஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டு நடிக்கப்பெற்ற நாடகங்கள் இரண்டு தான் கிடைத்துள்ளன. ஏனைய செய்திகள் தெரியவில்லை. இந்த நாடகங்களும் நடைபெற்றதற்கான சான்றுகளும் கிட்டில. அரண்மனையில் ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்களான விநாயக சதுர்த்தி, ஸ்ரீராமநவமி போன்ற உத்ஸவங்களில் சுமார் 40 நாட்கள் வரை தினந்தோறும் இரவில் நாடகங்கள் நடைபெற்றுள்ளன. ஆதலால் இவ்விரண்டு நாடகங்களும் அரண்மனையில் நடந்திருக்கக்கூடும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இங்கு எழுதியுள்ளேன்.

---

1 सूत्रधारः– बृहत्कुचनायिकावल्लभस्य भगवतो मध्यार्जुनेशस्य,
"चैत्रोत्सवं द्रष्टुमिहोपयातैः वैदेशिकैरस्मि समीरितोऽहम् ।
प्रख्यातकीर्तेः नृपतेश्चरित्रं प्रयुज्यतां रम्यगुणं त्वयेति ।।"

2 अद्य खलु भरद्वाजकुलजलधिकौस्तुभ त्र्यम्बकरायमखिना समारब्धस्य क्रतोर्दिदृक्षयाऽऽगतेन नानादिगन्तवासिना विद्वज्जनसमाजेन सबहुमानमाहूय समादिष्टोऽस्मि ।।

— राघवाभ्युदयप्रस्तावनायां

மேலும், ஏனைய நாடகங்களில் குறிப்பிட்ட விழாவில் நடிக்கப்பட்ட செய்திகள் இருக்கும். ஆனால் இசை நாட்டிய நாடகங்களில் இத்தகைய குறிப்புக்களுடன் எழுதப்படும் மரபு இல்லை.

1. சந்த்ரசேகர விலாஸம் : இந்த நாடகத்தை இயற்றியவர் தஞ்சை மன்னனான இரண்டாம் சகஜி. இவர் ஒரு தலைசிறந்த வாக்யேய காரர். பலநாடகங்களை இயற்றியவர். தெலுங்கு, மராட்டி, சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இசை நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார். பஞ்ச பாஷாவிலாஸம் என்னும் நாடகம் ஐந்து மொழிகளில் (சம்ஸ்கிருதம், தமிழ், கன்னடம், தெலுங்கு, மராட்டி) இயற்றப்பட்டுள்ளது. இம்மன்னரால் இயற்றப்பட்ட சந்திரசேகர விலாசம் தஞ்சையில் நடைபெற்ற இசை நாட்டிய நாடகத்தின் தொன்மை மரபைக் காத்து நமது ஆராய்ச்சி களுக்குச் சான்றாகத் திகழ்கின்றது. இது தோடய மங்களம், தருக்கள், வசனம், சுலோகம், மங்களம் ஆகியவற்றைக் கொண்டது. இந்த நாடகம் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமுதம் பெற்ற வரலாற்றை மையமாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ளது. இது அரண்மனை யில் நடிக்கப் பெற்றிருக்கலாம்.

மோஹினீ விலாஸ குறவஞ்சி : இதன் ஆசிரியர் சப்தரிஷி. இவர் திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த லால்குடி என்னும் ஊரினர் என்று அறிய முடிகிறது. இது சகஜி மன்னரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது. தமிழில் காணப்படும் 'குறவஞ்சி'யைப் போல் "சம்ஸ்கிருத மொழியில் இயற்றப்பட்ட ஒரே ஒரு குறவஞ்சியாகும் இது." இதில் வரும் விருத்தங்கள் "தமிழிலுள்ள யாப்புக்களான வெண்பா, அகவல், கட்டளைக் கலித்துறை, ஆறுசீர் விருத்தங்கள் வடமொழி சொற்களைக்கொண்டு புனையப் பட்டுள்ளன." இந்த நாடகம் தஞ்சை அரண்மனையில் சகஜி மன்னன் காலத்திலேயே நடிக்கப்பட்டிருக்கும் வாய்ப்புள்ளது.

## முதலாம் சரபோஜி (1711 — 1727 கி. பி.) யின் காலத்திய நாடகங்கள் :

ரதிமன்மத நாடகம் : இந்த நாடகத்தை இயற்றியவர் ஜகன்னாத பண்டிதர். இவர் முதலாம் சரபோஜி காலத்தில் வாழ்ந்தவர். இம்மன்னன்மீது இவர் 'சரபராஜவிலாஸம்' என்ற இலக்கியத்தை இயற்றியவர். இவர் பால கிருஷ்ண பண்டிதர் - லக்ஷ்மீ தம்பதியருக்குப் பிறந்தவர். இவரது தந்தை சரபோஜியின் அமைச்சராகப் பணியாற்றியவர். இவர்கள் மராட்டிய நாட்டிலிருந்து தஞ்சையில் குடியேறியவர்கள். இதனால் 'தேசஸ்த பிராமணர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள். இளமைக் காலத்தில் இவர் மன்னனைப் போற்றினாலும், பின்னாளில் சக்தி வழிபாட்டில்

(ஸ்ரீவித்யா) ஈடுபாடுகொண்டு பாஸ்கரராயர் என்னும் மஹானிடம் சீடராக தீக்ஷை பெற்றவர். இவரது தீக்ஷாநாமம் 'உமானந்த நாதர்'. தீக்ஷைஅடைந்த பின் இவரது எழுத்து ஆன்மீக நூல்களை உருவாக்கியது. இத்தகைய சிறந்த ஆசிரியரால் எழுதப்பட்ட நாடகம் ரதி மன்மதம்.

இந்த நாடகம் தஞ்சை நகருக்கு அருகிலுள்ள வெண்ணாற்றங்கரையில் ஆனந்தவல்லீ உடனுறை தஞ்சபுரீச்வரர் ஆலயத்தில் நடைபெற்ற வஸந்தோத்ஸவத்தில் மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. மராட்டிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயம் சிறப்புற்று விளங்கியது. இது தொன்மை வாய்ந்த ஆலயமாகும். இந்த நாடகம் இதுவரை இன்னும் அச்சேறாமல் சுவடியாகவே உள்ளது. இச்சுவடி 21—11—1755-ஆம் ஆண்டு படியெடுத்ததற்கான குறிப்பு சுவடியில் காணப்படுகிறது.

**வித்யா பரிணயம் :** இந்த நாடகத்தை இயற்றியவர் அனந்தராயமகி. இவர் தஞ்சை மராட்டியமன்னன் முதலாம் ஏகோஜியின் காலத்திலும் அவருக்குப்பின் அவரது மகன் இரண்டாம் சகஜி, மற்றும் முதலாம் சரபோஜியின் காலத்திலும் அமைச்சராகப் பணிபுரிந்தவர். இந்த நாடகம் முதலாம் சரபோஜியின் காலத்தில் இயற்றப்பட்டு அரங்கேறியது.

'வித்யா' என்ற சொல் பிர்ம்மவித்யையையும், ஸ்ரீவித்யையையுமே குறிக்கும். 'கர்மாக்களினால் சித்தம் தெளிவடைந்து இறுதியில் ஜீவன் பிர்மத்துடன் கலந்து இரண்டற்ற நிலையை எய்துகிறான்' என்ற அத்வைதத் தத்துவத்தை மையப் பொருளாகக்கொண்டு புனையப்பட்டுள்ளது. இக்கருத்தை எதிர்த்து வாதிடும் தத்துவ சாஸ்திரங்களை உருவகப்படுத்தி நாடகப் பாத்திரங்களாக உருவாக்கியுள்ளார்.

இந்த நாடகமும் வெண்ணாற்றங்கரையில் கோயில்கொண்டுள்ள தஞ்சபுரீச்வரஸ்வாமியின் ஆலயத்தில் மன்னன், மக்கள் முன்னிலையில் நடிக்கப் பெற்றுள்ளது.[1]

**'பாணம்' ஒரு அறிமுகம் :** இது பத்துவிதமான ரூபங்களிலொன்று. ஏனைய நாடகங்களுக்கும் பாணங்களுக்கும் வேறுபாடுகளுண்டு. ஏனைய

---

1 अत्र तञ्जोरनगरे देशान्तरादागताः पौरजानपदाजनाः भगवत्यास्तावदानन्दवल्ल्यम्बायाः महोत्सवदिदृक्षया संङ्घीभूताः ......

நாடகங்கள் இலக்கியங்களைக் கலைக் கண்ணோட்டத்துடன் மக்களைத் திருத்தி நல்வழி காட்டும் அல்லது பொழுது போக்க உதவும். ஆனால் பாணம் என்பது அக்காலச் சமுதாயத்தையும், மக்கள் வாழ்க்கை நிலையையும் தெளிவுபட உணர்த்தும். தர்ம சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள சட்டங்களை மீறிச் செயல்படும் மனிதர்களைப் பற்றிய விவரங்களையும், ஏமாற்றுதல், பொய்யுரைத்தல், கள்ளத்தனங்களைப் புரிதல் ஆகியவற்றை இத்தகைய நாடக இலக்கியங்களில்தான் காணமுடியும்.

இதில், விழாக்காலங்களில் ஒரு நகரின் தோற்றம், அன்றைய மகளிர் வாழ்வுநிலை, பொழுது போக்கு, கலை, சமயம், பண்பாடு ஆகியவற்றை கண்ணாடிபோல் காட்ட வல்லது 'பாணம்' என்ற வகை நாடகங்கள்.

இத்தகைய நாடகங்களில் ஒரே ஒரு நடிகனே மேடையில் தோன்றுவான். பல பாத்திரங்கள் உரையாட வேண்டியதை இவனே உரையாடியும், நடித்தும் காட்டுவான். இவனே வேறு பாத்திரமாகப் பேசும் போது எழுப்பிய வினாவுக்கு மற்றொரு பாத்திரமாக அதற்கு பதிலும் உரைப்பான். இந்த நாடகத்தில் வரும் நாடகத் தலைவன் 'விடன்' என்ற பெயரில் அழைக்கப் படுவான். 'ஆகாச பாஷிதம்' என்றபடி ஏதோ இவனுக்கு மட்டும் காதில் கூறுவது போல அதற்கு பதிலும் உரைப்பான். (உதாரணமாக தொலைபேசியில் பேசுகின்றவர் எதிராளியின் கேள்விக்கு பதில் சொல்வதிலிருந்தே எதிராளியின் கேள்வியைப் புரிந்து கொள்வதுபோல இங்குப் நடைபெறும்)

இத்தகைய 'பாணம்' என்ற ரூபகத்திலிருந்தே நாளடைவில் வெவ்வேறு பாத்திரங்களும், காட்சிகளும் மேடையில் தோன்ற வழிவகுத்தன' என்று கருதுகிறார் D. R. மன்கட் என்ற அறிஞர். இத்தகைய 'பாணம்' என்ற வகை ரூபகங்கள், தமிழகத்தில்தான் நாடகத்திற்கு அடுத்தபடி அதிகமாக எழுந்துள்ளன, எனில் மிகையில்லை. சரஸ்வதி மஹால் நூலகத்தில் 'பாணம்' என்ற ரூபகம் மராட்டிய மன்னராகிய முதலாம் சரபோஜியின் காலத்தில் தான் முதன் முதலாக எழுந்துள்ளது. அந்த நூலின் பெயர் 'அநங்கவிஜய பாணம். அதனைப்பற்றி இனி சுருக்கமாகக் காண்போம்.

**அநங்க விஜய பாணம் :** இதனை இயற்றியவர் ஜகன்னாத பண்டிதர். இவர் ஸ்ரீநிவாஸன் ஸோயிராபாயி என்ற தம்பதிகளுக்கு மகனாகத் தோன்றினார். இவர் முதலாம் சரபோஜியின் காலத்தவர். இந்த 'அநங்க விஜய பாணம்', தஞ்சை நகரத்தின் மையப் பகுதியில் விளங்கும் ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கடேசப்பெருமாள் ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் 'வஸந்த

விழாவில்' மக்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளது. ஆனால், இதனைக் கண்டுகளிக்க மன்னன் வந்ததற்கான சான்றில்லை [1]

## முதலாம் துளஜா (கி. பி. 1729—35) காலத்திய நாடகம்

தஞ்சை மராட்டிய மன்னர்களில் நான்காவது மன்னனாகத் திகழந்தவன் முதலாம் துளஜா ஏகோஜிக்கும் குலவிளக்கு தீபாம்பாளுக்கும் தஞ்சை மண்ணில் பிறந்தவன். தஞ்சை மண்ணுக்கேயுரிய இசையில் புலமைபெற்று சிறந்த இசை ஆராச்சி நூலான 'ஸங்கீத ஸாராம்ருதம்' என்னும் நூலை இயற்றிப் புகழ் பெற்றவன். இவன் காலத்திலும் நமது பாரம்பரியம் மிக்க கலைகள் வளர வழிவகுக்கப்பெற்றன. இம்மன்னனது அவையில் பல புலவர்கள் ஆஸ்தான வித்வான்களாக விளங்கினர். இவனது அமைச்சராக விளங்கியவர்களில் 'கனச்யாம பண்டிதர்' என்பவர் புலவராகவும் திகழ்ந்தார். இவர் வடமொழியில் பல நூல்களை இயற்றியவர்.

**மதன சஞ்ஜீவன பாணம் :** இதன் ஆசிரியர் கனச்யாம பண்டிதர். இந்த நாடகம் சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனத்தில் மக்கள் முன்னிலையில் அரங்கேறியது[2] என்ற செய்தி இந்த நூலின் பிரஸ்தாவனையின் வாயிலாக அறியமுடிகிறது.

## இரண்டாம் துளஜா (கி. பி. 1765—1787) காலத்திய நாடகங்கள்

**கலா நந்தகம் :** இந்த நாடகத்தை இயற்றியவர் ராமச்சந்திரசேகரர். இவர் இரண்டாம் துளஜாவின் அவைப்புலவர். இவர் காலத்தில் மராட்டிய மொழி நாடகங்கள் பல நடைபெற்றுள்ளன. பிரதாபசிம்மனுக்குப்பின் அவர் மகன் துளஜா ஆட்சிக்கு வந்தார். இவர்கள் இருவரும் கண்டுகளிக்கும் பொருட்டு 'கலாநந்தகம்' என்னும் நாடகம் தஞ்சை அரண்மனையில்

---

1 सूत्रधारः - अत्र खलु तञ्जानगरे कञ्जासनपुरशासपाकशासनवन्दितचरणारविन्दस्य निखिलजनानन्दस्कन्दस्य निरुपमनिरवधिकनिजलावण्यलक्ष्मीविनिर्जित पञ्चसायकस्य निखिलभुवनैकनायकस्य प्रसन्नवेङ्कटनायकस्य वसन्तमहोत्सवदिदृक्षया नानादेशादागतै-निखिलकलाविदग्धैः सामाजिकैरादिष्टोऽस्मि । -अनङ्गविजयभाणे-प्रस्तावना,

2 ...... यदिदानीं पुण्डरीकपुरवास्तव्यस्य पुण्डरीकनयनप्रमुखपुङ्खानुपुङ्खरिङ्खदसंख्य-निखिललेखलेखावन्द्यमानास्थानमण्डपस्य भगवतः शिवकामिनीसखस्य कनकसभापते-रार्द्रादर्शनमहोत्सवाय मिलिताः...... -मदनसञ्जीवनभाणे - प्रस्तावना.

நடிக்கப் பெற்றுள்ளது. இந்த நாடகத்தை மன்னர்களும், அரசவைப் பிரதிநிதிகள் மற்றும் அரண்மனையில் பணிசெய்வோர்களும் கண்டுகளித்துள்ளனர். இந்த நாடகம் இன்னும் அச்சேறாமலுள்ளது. இந்த நாடகத்தை அரசனின் ஆணையின் பேரில் இயற்றப்பட்டுள்ளதாக இந்த நாடகத்தின் பிரஸ்தாவனைப் பகுதி குறிப்பிடுகிறது.[1]

**ஸீதா நந்தம் :** இந்த நாடகத்தை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. ஸ்ரீமத் ராமாயணத்தில் 'ஸீதா கல்யாணம் வரையுள்ள பகுதியை நாடகமாக இயற்றியுள்ளார். இந்த நாடகம் கும்பகோணத்திலுள்ள கோமலவல்லீ உடனுறை சாரங்கபாணி ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்ற சித்திரைப் பெருவிழாவில் மக்கள் முன்னிலையில் நடிக்கப்பட்டுள்ளது. ஏனைய செய்திகள் அறியக் கூடவில்லை.[2] இது இன்னும் அச்சிடப்படவில்லை.

## தஞ்சை சிவாஜி மன்னர் காலத்து நாடகம்

சத்ரபதி இரண்டாம் சரபோஜியின் காலத்தில் நடிக்கப்பட்டதாக உள்ள நாடகங்கள் இதுவரை கிடைக்கவில்லை அவருடைய மகன் சிவாஜி (Last Sivaji A. D. 1832—1855)யின் காலத்தில் இந்துமதீ பரிணயம் என்னும் நாடகம் நடிக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

**இந்துமதீ பரிணயம் :** இந்த நாடகம் தஞ்சாவூர் பெருவுடையார் திருக்கோயிலின் சித்திரைப் பெருவிழாவில் புலவர்களும், பொதுமக்களும் கூடியுள்ள அரங்கில் நடைபெற்றுள்ளது.[3]

---

1 सूत्रधारः – अद्य खलु श्रीमत्प्रतापरामचन्द्रसुन्दरतरचरणारविन्दद्वन्द्वनिष्यन्दमानमकरन्द बिन्दुसन्दोहसमास्वादनामन्दानन्दतुन्दिलमनोमलिन्दराजस्य "प्रतापसिंममहाराजस्य" सम्पूर्णतपोविशेषैः परमेश्वरस्य कुमार इव कुमारस्तूर्णमवतीर्णः "तुलजमहाराजः" रामचन्द्रशेखरपौण्डरीकयाजिनं सामाहूय स्वविलासेन परमाद्भुतवस्तुनन्दकचरितं परिकल्प्य नाटकीकर्तव्यमिति समादीदिशत् ...
(D. No. 4337 / B. No. 5247)

2 अस्यां कुम्भघोणाभिधानायां महानगर्यां कोमलवल्ली सहचरस्यास्यास्यदेवस्य चैत्रोत्सवसेवासमागतैः अत्र भवद्भिः ...... D. No. Nil / B. No. 10666

3 ...सर्वमङ्गलाङ्गीकृतवामभागस्य, सज्जनहृदयारविन्दभृङ्गस्य, विविधलीलाविलोलबालकालङ्कृतोत्सङ्गस्य, निरवधिककृपासारपूरिताङ्गस्य, भद्रनिकरस्य भगवतो बृहतीश्वरस्य चैत्रोत्सवयात्रायां मिलितेन सुगुणगणललितेन सकलकलाविशेष सद्रत्न निकराकरेण विद्वत्प्रकरेण ......

**முடிவுரை :**

தஞ்சைப் பகுதியில் 'ஸம்ஸ்கிருத நாடகங்கள்' நாயக்க மன்னர் காலந்தொடங்கி மராட்டிய மன்னராட்சிக் காலம் வரை தொடர்ந்து கோயில் விழாக்களிலும், அரண்மனையிலும் நடைபெற்றுள்ளன.

"தமிழகத்தைப் பொருத்தவரை தஞ்சையிலும், அதற்கு அடுத்த நிலையில் காஞ்சீபுரத்திலும் அதிகமான நாடகங்கள் நடைபெற்றுள்ளன. மூன்றாவது இடமாக மதுரை மீனாக்ஷியம்மன் திருச்சன்னிதியில் நடைபெற்றுள்ளன" என்பதைப் பல சான்றுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

## துணை நூற் பட்டியல்


| நூற்பெயர் | பதிப்பாசிரியர் | வெளியீடு |
|---|---|---|
| சாஹேந்திர விலாசம் | Ed. Dr. V. ராகவன் | சரஸ்வதி மஹால் நூலக வெளியீடு |
| காந்திமதி பரிணயம் | பு. ம. பத்மநாபசர்மா | ,, |
| ராகவாப்யுதயம் | ,, | ,, |
| மதனமஞ்சரீ பாணம் | ,, (பருவ இதழ்) | ,, |
| சந்திரசேகரவிலாஸம் | V. சுந்தரசர்மா ( ,, ) | ,, |
| இந்துமதி பரிணயம் | கோபாலையங்கார் ( ,, ) | ,, |
| மோகினீ விலாஸ குறவஞ்சி | N. ஸ்ரீநிவாஸன் | ,, |
| அநங்க விஜய பாணம் | A. V. அனந்தநாராயணன் | ,, |

**Descriptive Catalogue of Sanskrit MSS. Vol. VIII**

**Copied volums and Palm leaf, Paper MSS.**

# வைணவ இலக்கியங்களில் தமிழ்-தமிழர்

**ஆ. வீரராகவன்**, எம்.ஏ., பி.எட்.,
வடமொழிப்பண்டிதர்,
*சரஸ்வதி மஹால் நூலகம்,*

அறுவகைப் பக்திமார்க்கங்களுள் ஒன்றாகிய வைணவ சமயம் ஆழ்வார்களின் காலத்திற்கு முன்பே தோன்றியதென்றும் ஆழ்வார்கள் தோன்றிய காலத்தைப் பக்தி மார்கத்தின் அருணோதய காலம் என்றும் குறிப்பிடலாம். ஆழ்வார்களென்றால் பகவத் குணானுபவங்களிலே ஆழங்காற்பட்டவர்கள் என்பது பொருள். ஆழ்வார்கள் பன்னிருவரும் மற்றும் ஆசார்யர்களும் இயற்றிய பிரபந்தங்களில் தமிழ்-தமிழர் என்ற சொல்லாட்சி முறைகள் சிலவற்றைப் பற்றி உரையாசிரியர்களின் வாயிலாகச் சிறிது பார்ப்போம்.

## வைணவ இலக்கியங்கள்

வைணவ இலக்கியங்கள் என்ற சொல்லால் இங்கு நாலாயிரதிவ்ய பிரபந்தம், இராமானுச நூற்றந்தாதி, தேசிகப் பிரபந்தம், ஆர்த்திப் பிரபந்தம், உபதேசரத்தினமாலை, திருவாய்மொழிநூற்றந்தாதி, அஷ்டப்பிரபந்தம் ஆகிய நூல்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவைகளை முறையே ஆழ்வார்களும், ஸ்ரீதிருவரங்கத்தமுதனாரும், ஸ்ரீ வேதாந்த தேசிகரும் ஸ்ரீமணவாளமாமுனிகளும், ஸ்ரீ பிள்ளைப் பெருமாள் அய்யங்காரும் இயற்றியுள்ளார்கள்.

## தமிழ் — தமிழர்

இச்சொற்கள் பெரும்பாலும் பாடல்களின் பலனுரைக்கும் பகுதிகளில் காணப்படுகின்றன. அவைகளில் தமிழ்ச் சொற்களை மட்டும் கீழ்க்கண்டவாறு பிரித்துணர முடிகின்றது.

1. அகத்தியர் மற்றும் திவ்யபிரபந்தத்திற்கு ஏற்றம் கூறுபவை.
2. ஸர்வாதிகாரமுரைப்பவை.
3. திவ்யப்பிரபந்தத்தின் வளமுரைக்க வந்தவை.
4. ஆழ்வார்களைப் போற்றுபவை முதலியன.

1. (அ) அகத்தியருக்கு ஏற்றம் கூறுபவை

இதனைச் செந்தமிழ், தமிழ்மலயக் காற்று என்பது போன்ற சொல்லாட்சிகள் மூலம் நாமறியலாம். "செந்தமிழ்" என்ற சொல்லைச் "செந்தமிழ் நூல் வகுத்த சிறுமாமனிச்சர்" என்பதாக அமிர்தரஞ்சனியில் ஸ்ரீவேதாந்த தேசிகர் கையாண்டுள்ளார். அதில் கடல்நீர் முழுவதையும் அகத்தியர் தனது உள்ளங்கையிலடக்கிப் பருகியதுபோல ஆசார்யர்கள் வேதாந்தஸாரங்களையெல்லாம் மனத்தில் நிறுத்தி நமக்குப் போதிக்கின்றார்கள் என்று ஆசார்யர்களின் மேன்மையையுரைக்கின்றார். இதற்கு அகத்தியரை எடுத்துக்காட்டாகக் கொடுத்து அவரது பெருமையையும் உயர்த்துகின்றார் போலும். "தமிழ் மலயக்காற்று" என்ற சொல்லைத் திவ்யகவியாகிய ஸ்ரீபிள்ளைப்பெருமாளய்யங்கார் தனது அழகரந்தாதியில் கையாண்டுள்ளார். அதாவது பொதிய மலையிலிருந்து வரும் காற்றைத் தமிழ் மலயக்காற்று என்கிறார். அம்மலையில் சிற்றகத்தியம், பேரகத்தியம் ஆகிய இலக்கணநூலை அகத்தியர் தனது சீடர்களுக்குப் போதித்தார் என்பதை நினைவுகூரும் வகையில் அமைந்தது இச்சொல். இதனால் அகத்தியரின் பெருமையும், ஆசிரியரின் தமிழபிமானமும் வெளிப்படுகின்றது.

(ஆ) திவ்வியப்பிரபந்தத்திற்கு ஏற்றம் கூறுபவை

இதனை, சங்கமலிதமிழ்மாலை, ஈரத்தமிழ், மாந்தர்க்கு உணவாக ஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள் செய்தான் ஆகிய சொல்லாட்சிகளின் மூலம் அறியலாம். "சங்கமலிதமிழ்மாலை" என்ற சொல்லாட்சியைத் திருமங்கை மன்னனியற்றிய பெரியதிருமொழியில் காணமுடிகிறது. இச்சொல்லிற்கு வ்யாக்யானச் சக்ரவர்த்தி ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையவர்கள் — "சங்கப் புலவர்கள் திரளவிருந்து தமிழ் கொண்டாடப்புக்கால் இத்தையே கொண்டாட வேண்டும்படியான தமிழ்த்தொடை" என்று சிறப்பித்துள்ளார். மேலும் "குருகைப்பிரான் அமுதத்திருவாய் ஈரத்தமிழ்" என்ற வாக்கியத்தினைத் திருவரங்கத்தமுதனார் அவர்கள் தமது இராமானுச நூற்றந்தாதியில் குறிப்பிடுகிறார். இதற்கு உரையிடுகையில் ஸ்ரீ பிள்ளைலோகார்ய ஜீயரவர்கள், "நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திருவாய்மொழி ஸம்ஸாரதாபத்தைத் தணிக்கவல்ல ஈரமான தமிழ்" என்றே கூறியுள்ளார். "மாந்தர்க்குக்கலையுணவாக ஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள் செய்தான்" என்பது ஆர்த்திப்பிரபந்தத் தனியன். இது இப்பிரபந்தத்தின் ஸாரமான பொருளை எடுத்துரைக்கின்றது. இவ்வார்த்திப் பிரபந்தத்தையியற்றிய ஸ்ரீமணவாள மாமுனிகள், "மன்னியசீர் மாறன் கலையுணவாகப் பெற்றோம்" என்று 55-ஆம் பாட்டில் கூறியுள்ளார். அதாவது மனிதன் பாடுபடுவது வயிற்றுக்காகத்தானே. அவ்விதம் எம்பெருமானையனுபவிக்க நமக்குக் கிட்டியது மாறன் கலை உணவு. இதனால் வேறெதிலும் நாட்டங்கொள்ளாது எம்பெருமான்மீது பக்தி கொள்ளுவோம் என்று புகழ்ந்தேத்துகின்றார்.

2. ஸர்வாதிகாரமுரைப்பவை

இதனைச் "செஞ்சொலால் மொழிந்தமாலை", "தூயதமிழ்" என்ற சொற்களால் நாமறியலாம். "செஞ்சொலால் மொழிந்த மாலை" 5-9-10ஆம் பாசுரத்தேயமைந்த இவ்வாக்கிய உரையில் பெரியவாச்சான்பிள்ளையவர்கள் "அதிக்ருதாதிகாரமான வேதார்த்தத்தை ஸர்வாதிகாரமான சொல்லாலே அருளிச்செய்தாராய்த்து" என்று குறிப்பிடுகின்றார். தானதிகரித்த வேதத்தின் பொருளை மற்ற எல்லோரும் தங்குதடையின்றி அறியுமாறு தமிழில் அருளிச் செய்தார் என்பது கருத்து.

தூயதமிழ்

பெரியாழ்வார் தனது திருமொழியில் கையாண்டுள்ள இச்சொல்லிற்கு ஸ்ரீ மணவாள மாமுனிகள் உரையிடுகையில், "ஸம்ஸ்க்ருத சப்தம்போலே இருண்டு பொருள் தெரியாதபடியிருக்கையன்றிக்கே, பெண்ணுக்கும் பேதைக்கும் அறியலாம்படி ஸ்வார்த்த பிரகாசமாயிருக்கும் தூய்மையுடைத்தான திராவிட பாஷையாய்" இருக்கிறதென்று ஸர்வாதிகாரத்தையருளிச் செய்தார்.

3. திவ்யப்பிரபந்தத்திற்கு வளமுரைப்பவை

திவ்யப்பிரபந்தத்திற்கு வளமுரைப்பவையாக அந்தமிழ், இன்தமிழ், நற்றமிழ்" போன்ற சொற்களை உதாரணமாகக் கொள்ளலாம்.

4. ஆழ்வார்களின் ஏற்றத்தைக் கூறுபவை

ஆழ்வார்களின் ஏற்றத்தைக் கூறுபவையாகத் "தமிழ்க்கலியன், தண்டமிழ் செய்த நீலன், தமிழ்ப்பாணன், தமிழான் மாறன்" போன்ற சொற்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

மேலும் கேரள தேசாதிபதியான ஸ்ரீ குலசேகராழ்வார் தமது பிரபந்தமான பெருமாள் திருமொழி என்கிற 105 பாடல்களில் "மெய்யில் வாழ்க்கையை" எனத்தொடங்கும் பதிகத்தைத் தவிர மொத்தம் 10 முறை "தமிழ்" என்ற சொல்லைக் கையாண்டிருக்கிறார். இதனால் குலசேகரர் தமிழ்மீது மிக்க அன்புகொண்டவர் என்பது தெரியவருகிறது.

தமிழர் என்ற சொற்களிலும் சில, ஆழ்வார்களையே சுட்டிக்காட்டு கின்றது. நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியில் "பாலேய்தமிழர்" என்ற சொல்லிற்குப் பால்போலே இனிய தமிழையுடையவர்கள் — முதலாழ்வார்கள் என்று ஆளவந்தாரின் நிர்வாகத்தை ஈடு முப்பத்தாராயிரப்படி இயம்புகின்றது. முதலாழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வார் தன்னைப் "பெருந்தமிழன் — பெரிய திராவிடப் பண்டிதன்" என்று கூறிக்கொள்வதும் ஈண்டு நினைக்கத்

தக்கது. திருக்கோவிலூரில் திருமாலைக் கண்டு "திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன்" என்று, தான் கண்டவாறே தமிழுலகுக்குத் தந்ததால் தமிழ்த் தலைவரானார் பேயாழ்வார். மேலும் ஆய்வாளர்களின் பயன் கருதித் திவ்யப்பிரபந்த ஒப்புமைப் பாடல்களும், தமிழ்-தமிழர்-அகரவரிசைப் பட்டியலும் பின்னிணைப்பாகக் கொடுக்கப்படுகின்றன.

## திவ்யப்பிரபந்த ஒப்புமைப்பாடல்கள்

தமிழ் மறையான திவ்யப்பிரபந்தங்களிலும், தேவாரத் திருமுறைகளிலும் காணப்படும் பல பாடல்களில் கருத்தொற்றுமை, சொல்லாட்சி வைப்புமுறை ஆகிய ஒப்புமைகள் காணக்கிடைக்கின்றன. அவற்றில் தமிழ்—தமிழர் என்ற சொல்லாட்சியுடைய பகுதிகள் இங்கு ஒப்புமையாகக் கொடுக்கப்படுகின்றன.

பெரிய திருமொழி — திருமங்கையாழ்வார்: 7 - 8 - 7

"பந்தணைந்த மெல்விரலாள் சீதைக் காகி
பகலவன்மீ தியங்காத விலங்கை வேந்தன்
அந்தமில்திண் கரம்சிரங்கள் புரண்டு வீழ
அடுகணையா லெய்துகந்த வம்மான் காண்மின்
"செந்தமிழும்" வடகலையும் திகழ்ந்த நாவர்
திசைமுகனே யனையவர்கள் செய்மை மிக்க
அந்தணர்த மாகுதியின் புகையார் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த வமரர் கோவே".

தேவாரம் — திருஞானசம்பந்தர்: 286 - 3

"அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
'செந்தமிழ்க் கீதமும்' சீரினால் வளர்தர
பந்தணை மெல்விர லாளொடும் பயில்வுஇடம்
மந்தம்வந்து உலவுசீர் மாமழ பாடியே".

நாச்சியார் திருமொழி — ஆண்டாள் : 9 – 10

"செந்தமிழ்பத்தும் வல்லார் திருமாலடி சேர்வர்களே".

திருவாய்மொழி – நம்மாழ்வார் : 6–5

"செந்தமிழ் பத்தும்வல்லார் அடிமைசெய்வார் திருமாலுக்கே".

தேவாரம் - திருஞானசம்பந்தர் : 109 & 116

"செந்தமிழ்பத்தும்வல்லார் திருவொடு புகழ்மல்கு தேசினரே".
"செந்தமிழ்பத்தும் வல்லார்நிறைந்த உலகினில் வானவர்
கோனொடும் கூடுவரே".

பெரிய திருமொழி — திருமங்கையாழ்வார் : 2 - 9

"சீர்மன்னு செந்தமிழ்மாலை வல்லார்".

தேவாரம் — திருஞானசம்பந்தர் : 43

"செந்தமிழ்மாலை பத்திவை பாடவல்லார்".

பெரியதிருமொழி — திருமங்கையாழ்வார் : 3-9

"சங்கமலி தமிழ்மாலை பத்திவை வல்லார்கள்"

தேவாரம் — திருஞானசம்பந்தர் : 332

"சங்கமலி செந்தமிழ்கள் பத்துமிவை வல்லவர்கள்".

பெரியதிருமொழி — திருமங்கையாழ்வார் : 3-3

"ஊனமர் வேற்கலிகன்றி வொண்தமிழொன்பதோடொன்றும்
தானிவை கற்றுவல்லார்மேல் சாராதீவினைதாமே".

தேவாரம் — திருஞானசம்பந்தர் : 260

"ஞானசம்பந்தன் ஒண்தமிழ்மாலைகொண்டு
ஆம்படி இவையேத்தவல்லார்க் கடையாவினையே".

திருவாய்மொழி — நம்மாழ்வார் : 10-8

"சொல்லார் தமிழ் ஆயிரத்து ளிவைபத்தும்
வல்லார், தொண்டராள்வது சூழ்பொன்விசும்பே".

தேவாரம் — திருஞானசம்பந்தர் : 171

"சொல்லார் தமிழ்மாலை பத்தும் தொழுதேத்த
வல்லாரவர், வானவ ரோடு றைவாரே".

---

## தமிழ் — தமிழர் அகரவரிசைப் பட்டியல்

| | | |
|---|---|---|
| அங்கத்தமிழ் | — | அழகரந்தாதி காப்புச் செய்யுள் |
| அருந்தமிழ் | — | மு-திரு-தனியன் |
| அந்தமிழ் | — | பெரு-தி-1:4 |
| ஆணிகவித்தமிழ் | — | அழகரந்தாதி-34 |
| இன்தமிழ் | — | நா-தி-1, பெரு-தி-6, பெ-தி-7-7, 8-9, 9-10: 9, 10. |

| | | |
|---|---|---|
| இருந்தமிழ் | — | இ-திரு-74. |
| இயலின் தமிழ் | — | பெரு-தி-10. |
| இசைத்தமிழ் | — | பெரு-தி-7. |
| ஈரத்தமிழ் | — | இரா-நூற்-20. |
| ஒண் தமிழ்(கள்) | — | பெரி-தி-4-6, பெ-தி-3-3, 7-10, தி-மொ-4-7, 5-1, 7-8, 9-1, ஆர்த்திப்பிரபந்தத் தனியன். |
| கோதைதமிழ் | — | நா-தி-7, 8. |
| கோவைத்தமிழ் | — | பெ-தி-5-2. |
| சங்கத்தமிழ் | — | திருப்பாவை-30. |
| சங்கமலிதமிழ் | — | பெ-தி-3-9. |
| சங்கமுகத்தமிழ் | — | பெ-தி-3-4. |
| சந்தமிகு தமிழ்மறையோன் | — | பிரபந்தஸாரம்-(தே-பி)-18. |
| செந்தமிழ் | — | பெரி-தி-2-4, 3-9, நா-தி-9, பெ-தி-2-9, அமிர்தரஞ்ஜனி-(தே-பி)-23, நவமணிமாலை (தே-பி)-10. |
| செந்தமிழ் வேதம் | — | தி-மொ-தனியன் |
| செந்தமிழாரணம் | — | இரா-நூற்-19. |
| செந்தமிழும் | — | பெ-தி-7-8: 7. |
| ஞானத்தமிழ் | — | இ-திரு-1 |
| தண்டமிழ் | — | பெ-தி-2-2, 3-1, உபதேசரத்தினமாலை-20. |
| தமிழ் | — | பெரி-தி-1-4, 1-5, 1-10, 2-6, பெரு-தி-2, 4. பெ-தி-4-1, 4 8 6-1, 8-7, தி-மொ-4-9, அதிகாரஸங்கிரஹம்-(தே-பி)-2, பரமபதஸோபாநம் (தே-பி)-18. |
| தமிழ்க்கலியன் | — | திருவேங்கடத்தந்தாதி-78. |
| தமிழ்ச்சங்கத்தழகர் | — | அழகரந்தாதி காப்புச் செய்யுளுரை. |
| தமிழ்சொல் மாறன் | — | திருவரங்கத்துமாலை-108. |
| தமிழ்த்தலைவன் | — | இரா-நூற்-10. |
| தமிழ்நூற்புலவன் | — | பெ-தி-1-7. |
| தமிழ்ப்பாடல் | — | திருவரங்கத்து மாலை-110. |
| தமிழ்ப்பாணன் | — | சீரங்கநாயகரூசல்-காப்புச்செய்யுள். |
| தமிழ்ப்பாஷை | — | பெ-தி-உள்ர-1-8: 1. |
| தமிழ்மறை(கள்) | — | அதிகாரஸங்கிரஹம் (தே-பி)-6, ஆர்த்திப்பிரபந்தம்-31, தி-மொ-தனியன். |

| | | |
|---|---|---|
| தமிழ் மலயக்காற்று | — | அழகரந்தாதி-17. |
| தமிழ்மாலை | — | திருவேங்கடத்தந்தாதி-79, பெரி-தி-4-8, பெரு-தி-1, 8, 9. பெ-தி-1-5, 2-4, 3-6, 3-7, 3-8, 5-6, 6-2, 6-7, 8-1, 8-3, 11-3, திருநெடுந்தாண்டகம்-30, தி-மொ-5-6, 6-2, 8-9, 10-6, பிரபந்தஸாரம் (தே-பி)-4, நூ-தி-அந்தாதி-38, திருவரங்கக்கலம்பகம்-101 |
| தமிழ்வேதம் | — | ஸ்ரீரங்கநாயகரூசல்-6, திருவரங்கத்தந்தாதி-2, அதிகாரஸங்கிரஹம் (தே-பி)-22. |
| தமிழ்வேதபாராயணா | — | திருவேங்கடமாலை-காப்புச்செய்யுள். |
| (பெரும்) தமிழன் | — | இ-திரு-74. |
| (பாலேய்) தமிழர் | — | தி-மொ-1-5. |
| தமிழான் மாறன் | — | நூ-தி-அந்தாதி-71. |
| தமிழால் | — | திருவரங்கக்கலம்பகம்-சிறப்புப் பாயிரம். திருவேங்கடத்தந்தாதி-காப்புச்செய்யுள். |
| தமிழும் | — | ஸ்ரீரங்கநாயகரூசல்-16. |
| தமிழோசை | — | திருநெடுந்தாண்டகம்-4, |
| தூயதமிழ் | — | பெரி-தி-3-8, நா-தி-6. |
| தென் தமிழன் | — | பெ-தி-6-6: 5. |
| தென்னந்தமிழ் | — | பன்னிருநாமம் (தே-பி) சிறப்புத்தனியன். |
| தென்னந்தமிழை | — | பெரிய திருமடல்—கண்ணி—131. |
| நற்றமிழ் | — | பெரு-தி-5, அழகரந்தாதி-89. |
| நற்றமிழை | — | நான்முகன் திரு-81. |
| பண்ணார் தமிழ் | — | தி-மொ-9-8. |
| பசுந்தமிழ் | — | இரா-நூற்-29, 64. |
| பாடலான தமிழ் | — | தி-மொ-9-10. |
| முத்தமிழ் | — | திருவரங்கத்துமாலை-23, அதிகாரஸங்கிரஹம்-(தே-பி)-40. |
| முத்தமிழன் | — | ஸ்ரீரங்கநாயகியாரூசல்-காப்புச்செய்யுள். |
| வண்டமிழ் | — | பெ-தி-1-8, திருக்குறுந்தாண்டகம்-20. |
| வியன் தமிழ் | — | பெரி-தி-5-1. |
| வேதம் தமிழ் செய்த மாறன் | — | கண்ணிநுண் சிறுத்தாம்பு—தனியன் |
| வேதம் தமிழ் செய்த மெய்யன் | — | உபதேசரத்தினமாலை—14. |

## அகரவரிசைப் பட்டியலில் காணப்படும் குறியீடுகளின் விளக்கம்

1. மு - திரு — முதல் திருவந்தாதி
2. பெரு - தி — பெருமாள் திருமொழி
3. நா - தி — நாச்சியார் திருமொழி
4. பெ - தி — பெரியதிருமொழி
5. இ - தி — இரண்டாம் திருவந்தாதி
6. இரா - நூற் — இராமானுச நூற்றந்தாதி
7. பெரி - தி — பெரியாழ்வார் திருமொழி
8. தி - மொ — திருவாய்மொழி
9. தே - பி — தேசிகப்பிரபந்தம்
10. நூ - தி - அந்தாதி — நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி

## துணை நூற் பட்டியல்

| | | |
|---|---|---|
| அஷ்டப் பிரபந்த உரை | — | திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் |
| ஆர்த்திப் பிரபந்த உரை | — | திரு டி. எஸ். ராஜகோபாலன் |
| இராமானுச நூற்றந்தாதி உரை | — | பிள்ளைலோகார்ய ஜீயரவர்கள் |
| ஈட்டின் தமிழாக்கம் | — | திரு. புருஷோத்தம நாயுடு |
| திவ்யப்பிரபந்த உரைகள் | — | பெரியவாச்சான் பிள்ளையவர்கள் |
| — | — | வடக்குத்திருவீதிப்பிள்ளையவர்கள் |
| — | — | மணவாள மாமுனிகள் |
| திவ்யப் பிரபந்த ஸாரம் | — | திரு. பி ஸ்ரீ. |
| தேவாரம் (இரண்டு பாகங்கள்) | — | திரு தி. வே. கோபாலய்யர் |
| தேவார ஒளிநெறி(ஆறு பாகங்கள்) | — | திரு. செங்கல்வராயப்பிள்ளை |
| தேசிகப் பிரபந்த உரை | — | திரு. வ. ந. ஸ்ரீராமதேசிகாச்சாரியார் |
| நாலாயிரதிவ்யப்பிரபந்தம் | — | மர்ரே திரு. எஸ். ராஜம் |
| பெரியதிருமொழி மூலமும், உரையும் | — | திரு. ஞானசுந்தரம் |
| வைணவ உரைவளம் | — | ,, |

|| श्रीः ||

॥ श्रीमद्विखनसमहागुरवे नमः ॥

### விச்வகுணாதர்ச சம்பூ காவ்யத்தில்

# தஞ்சாவூர் மற்றும் சோழ நாட்டு வர்ணனை

**எஸ். சுதர்சனன், M. A.,**
சமஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

**முன்னுரை :**

வடமொழியில் கத்யகாவ்யம், பத்யகாவ்யம், சம்பூகாவ்யம் என காவ்ய மானது மூன்று வகைப்படும் என்பர் சான்றோர். இம்மொழியில் பல சம்பூ காவ்யங்கள் இருப்பினும் வேங்கடாத்வரியின் விச்வ குணாதர்ச சம்பூ காவ்யம் சிறப்பான ஒன்று எனில் அது மிகையாகாது. உரைநடையும், பாட்டும் ஒன்றாய்க் கலந்து படிப்பவரின் மனதைக் கொள்ளைக்கொள்ளும் அளவிற்குக் கற்பனைரசம் ததும்ப யாத்துள்ள இந்நூலின்கண் வர்ணிக்கப்பட்டுள்ள தஞ்சபுரீ (ஸஞ்சீபுர) வர்ணனை மற்றும் சோழநாட்டு வர்ணனை ஆகிய இரண்டை மட்டும் இக்கட்டுரையின் மூலம் படித்து இன்புறுவோம்.

## ॥ विश्वगुणादर्शचम्पूः ॥

श्रीराजीवाक्षवक्षःस्थलनिलय रमाहस्तवास्तव्यलोल-

ल्लीलाब्जान्निष्पतन्ती मधुरमधुझरी नाभिपद्मेमुरारेः ।

अस्तोकं लोकमात्रा द्रियुगमुखशिशोराननेष्वर्प्यमाणं

शङ्कप्रान्तेन दिव्यंपय इति विबुधैः शङ्क्यमानापुनातु ॥

செந்தாமரைக் கண்ணனும், ஸ்ரீமானுமான ஸ்ரீமஹாவிஷ்ணுவின் வக்ஷ:ஸ்தலத்தில் உள்ள மஹாலக்ஷ்மி தனது கையில் வைத்திருக்கும் தாமரை மலரை விளையாட்டாக அசைக்கின்றாள். அதனின்று பெருகிய தேன்மாரி விஷ்ணுவின் கொப்பூழில் வீழ்ந்தது. இதனைக் கண்ட தேவர்கள் ஜகன்மாதா வான லக்ஷ்மிதேவி நான்முகனென்ற குழந்தையின் வாய்களில் அளவிலா அமுதத்தை ஊற்றுகின்றனளோ என சந்தேகித்தனர். அத்தகைய தேன்மாரி நம்மை புனிதமாக்கட்டும்.

विश्वावलोकस्पृहया कदाचिद्विमानमारुह्य समानवेषम् ।
कृशानुविश्वावसुनामधेयं गन्धर्वयुग्मं गगने चचार ॥

कृशानुरकृशासूयः पुरोभागिपदं गतः ।
विश्वावसुरभूद्विश्व गुणग्रहणकौतुकी ॥

முன்னொரு காலத்தில் க்ருசானு, விச்வாவஸு என்ற இரு கந்தர்வர்கள் இவ்வுலகைச் சுற்றிப்பார்த்து வரவேண்டும் என்ற ஆவலுடன் ஒரேவிதமான ஆடைகளை அணிந்துகொண்டு, விமானத்தில் ஏறி ஆகாயத்தில் சுற்றி வந்தார்கள். அவ்விருவருள் க்ருசானு என்பவன் அதிகப் பொறாமையுள்ளவன். எதிலும் குற்றம் குறைகளையே காண்பவனாக இருந்தான். விச்வாவஸுவோ உலகிலுள்ள நற்குணங்களை மட்டுமே (வர்ணிப்பதில் ஆவலுள்ளவன்) காண்பவனாக இருந்தான்.

இவ்வாறு இருவரும் புறப்பட்ட விமானமானது முதலில் கிழக்குத் திசையை நோக்கிச் சென்றது. கிழக்கு திசையின் அதிபதியான சூரிய பகவானைப் பார்த்து விச்வாவஸு வணங்கித் துதிக்கிறான். குற்றங்களையே காணும் க்ருசானு உலகை உலர்த்தும் சூரியனைப் போய் ஏன் வணங்குகிறாய்? என்கிறான்.

विश्वावसुः —

वृष्टिं वृष्टिभिरारचय्य जगतस्तुष्टिं सरीसर्ष्टि यः
पुष्टिं द्राग्विशिनष्टि दृष्टिषु नृणां ध्वान्तं विनष्टिस्थिरम् ।
प्राज्ञानामपवर्गमार्गदममुं पद्मागृहोल्लासिनं
को न स्तौति? समस्तलोक सुहृदं व्योमभूषणं पूषणम् ॥

விச்வாவஸு:

*[கீழ்க்கண்டவாறு சூரியபகவானின் பெருமைகளை எடுத்துரைக்கிறான்]*

சூரியபகவான் தன் கிரணங்களால் மழையைப் பொழிந்து உலகத்தை மகிழ்விப்பவர்; மக்களுடைய கண்பார்வையில் பலத்தை உண்டுபண்ணுபவர்; நிலைத்து நிற்கின்ற இருளை ஒழிப்பவர்; ஞானிகள் மோக்ஷத்தை அடைய வழிவகுப்பவர்; மஹாலக்ஷ்மியின் இருக்கையான கமலங்களை (தாமரை மலர்களை) மலரச் செய்பவர்; உலகமனைத்திற்கும் நண்பனாகவும்; ஆகாயத்திற்கு அலங்காரமாகவும் விளங்கும் சூரியக்கடவுளை எவன்தான் துதி செய்ய

மாட்டான்? இவ்வாறு எடுத்துக் கூறுவது போன்ற முறையில் அமைந்துள்ளது இந்த சம்பூ காவ்யம்.

க்ருசானுவும் விச்வாவஸுவும் ஏறிப் பயணம் செய்துவரும் விமானம் தொண்டைநாடுகளையெல்லாம் சுற்றிக்கொண்டு ஸஞ்சீபுரமென்னும் இத் தஞ்சைநகரை அடைகிறது.

சம்பூ காவ்யத்தில் விச்வாவஸுவும், க்ருசானுவும் எவ்வாறு வர்ணிக்கின்றனரென்று காண்போம்.

## ॥ सञ्जी (तञ्ज)पुरी वर्णनम् ॥

खञ्जीकृताखिल हृदां रमणी मणीनां
मञ्जीर मञ्जुतरशिञ्जित रञ्जितेन ।
चञ्जीपुरी युवगणेन चकास्तिपूर्णा
सञ्जीवितोग्र परिवञ्जितपञ्चबाणा ॥

ऋक्सामयोश्च यजुषां च निवासभूताः
पूताद्विजाः स्मृतिपुराणकलाधुरीणाः ।
कुर्वन्ति वासमिह कर्कशतर्कशब्द
तन्त्र त्रयीशिखर सिन्धुतलस्पृशोऽमी ॥

## தஞ்சை நகர வர்ணனம்

உலகில் மற்ற இடங்களிலுள்ள பெண்களின் உள்ளங்களைச் செருக்கற்றனவாகச் செய்யும் தஞ்சாவூர்ப் பெண்களின் கால் சிலம்புகளின் இனிமை மிக்க ஒலியினால் பரவசப்படுத்தப்பட்டுள்ள வாலிபர்கள் நிறைந்த தஞ்சாவூர், சிவன் எரித்த மன்மதனை உயிர்பெறச் செய்கின்றது போல் விளங்குகிறது. இங்கு வாழும் அந்தணர்கள் ருக், யஜுஸ், ஸாமம் ஆகிய மூன்று வேதங்களுக்கும் இருப்பிடமானவர்கள், புனிதமானவர்கள், ஸ்ம்ருதி; புராணங்கள்; கலைகள் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுக் கடினமான ந்யாய சாஸ்த்ரம்; இலக்கணம்; மீமாம்ஸை; வேதாந்தம் முதலியவற்றின் கரையை நன்கு கண்டவர்கள்.

**कृशानुः — सहासम्**

नैतद्विभाति नगरं नगरस्थदुर्ग
प्राकार साधन दशासु विशां पतीनाम् ।
युद्धोन्नमद्भट शिरस्तटनिस्सृतासृक्-
स्रोतः महस्रभरविस्रपलास्थिसान्द्रम् ॥

க்ருசானு — சிரித்துக்கொண்டே

இவ்வூரிலுள்ள போர்வீரர்கள் அரசர்களுக்காக மலைபோன்ற அழகான கோட்டைகளைக் கைப்பற்றும் சமயங்களில் சண்டையிடும்போது தங்கள் எதிரிகளின் மேல் பாய்ந்து போரிடுகின்றனர். அப்போர்வீரர்களின் தலைகளினின்றும் பெருகும் ஆயிரமாயிரம் ரத்தப்பெருக்குகளும், பச்சைமாமிச நாற்றமும், எலும்புகளும் நிறைந்துள்ள தஞ்சாவூர் நன்றாக இல்லையே!

**विश्वावसुः —**

वयस्य ! गुणान्वयस्य पुनरस्य नगरस्य निन्दाच्छद्मना प्रशंसामेव भवान् कृतवान् ।

**यतः**

पुरातनानां हि पुरन्तराणां प्रशासितारोऽपि दिशासुभूपाः ।
पुरं तदेतद्धपुरन्तमाजौ हन्ताभ्युपेत्याप्यलमर्थयन्ति ॥

விச்வாஸு :—

நண்பா ! நற்குணங்களுள்ள இந்நகரை இகழும் வ்யாஜத்தால் நீ புகழவே செய்துவிட்டாய்.

ஏனெனில், பத்து திக்குகளிலுமுள்ள அரசர்கள் யாவரும் மற்றப் பழைய நகரங்களை ஆள்கின்றவர்களாயினும், ஆஹா ! போர் புரிந்து உயிரைத் துறந்தாவது தஞ்சாவூரை அடைய விரும்புகின்றனரன்றோ !

**कृशानुः — निरूपणमभिनीय सास्वरसम्**

हन्त ! चिरन्तनानामिदानीन्तनानां च वसुन्धरा धुरन्धराणां अवारणीयोऽसावविवेकः ।

க்ருசானு — கவனிப்பதாக நடித்துச் சந்தோஷமின்றி

அந்தோ! முற்காலத்திய அரசர்களுக்கும் இக்காலத்திய அரசர்களுக்கும் உள்ளவிவேகமின்மை இத்தகையது.

पश्य

प्राज्येहन्तधनेस्थितेऽपि नृवरोराज्येऽपि सत्यूर्जिते
संभोगानुगुणा विलोचन गुणैरम्भोजदम्भद्रुहः ।
कल्याणीस्तरुणीरुपेक्ष्य करुणा हीनः ससेनः स्वयं
हर्तुं शत्रुधरां चिरादभिलषन् मर्तुंरणेजृम्भते ॥

பார்

அதிகமான செல்வம் உளது; ராஜ்யமும் செழிப்பானது; ஆயினும் தங்கள் அழகான கண்களால் தாமரைகளின் கர்வத்தைப் போக்கிகொண்டு, மங்கள குணங்களுடன் கூடிய சுகபோகத்திற்குகந்த வயதுப் பெண்களை விட்டு இந்த இரக்கமற்ற அரசர்கள் எதிரியின் பூமியை அபகரிக்க விரும்பி, வெகுகாலம் போர் தொடுத்து, சைன்யத்துடன் போரில் உயிர் துறக்கவும் துணிகின்றனரே! அந்தோ கஷ்டம்!

विश्वावसु :—

विरुद्ध बुद्धे ! विवेकमेव तावदविवेकमाकलयसि ।

तथाहि

संपद्धन्यसरिज्झरी सहचरीशम्पासमं प्रभावं
नार्यः सूर्यकरावलीढरजनीच्छायासुहृद्यौवनाः ।
देहःस्नेहविहीनदीपसख इत्यालोच्य पृथ्वीश्वराः
प्राणान्जुह्वति नाकमाकलयितुं शुद्धाहि युद्धानले ॥

शृणु च इमं चमत्कारम्

रक्तेभटे रणमुखे रुधिरेण तस्मिन्
रक्ता भवत्यमरयोषिदनुव्रतेव ।
शूरः सचेदतनुसायक खण्डिताङ्गः
साप्युच्चकैरतनुसायकखण्डितेव ।

किञ्च

दीप्रेति प्रभमाश्रितक्षितितलं दिव्ये विमानेस्थितो
गाढाश्लिष्टकृपाणपाणि च करमस्तामरस्त्रिस्तनः ।
तत्सन्दत्तनखक्षतोबहुतर प्रत्यर्थिबाणक्षतं
युद्धाग्नौ हुतजीवितं निजवपुर्वीरामुदावीक्षते ॥

விச்வாவஸு :—

நன்மை தீமையறியாத புத்தியுள்ளவனே! அரசர்கள் விவேகத்துடன் செய்வதை விவேகமற்ற செயலெனக் கூறுகிறாயே!
எவ்வாறெனில்

பரிசுத்தமான அரசர்கள், செல்வம் காட்டாற்றின் சிறு ஓடை போன்றது; அரசுரிமை மின்னலுக்குச் சமம்; பெண்களின் யௌவனம் சூரிய கிரணங்கள் பரவும்வரையே இருக்கக்கூடிய இரவின் இருளைப் போன்று விரைவில் அழியக்கூடியது என்று எண்ணி மேலுலகத்தை அடைவதற்குப் போராகிய அக்னியில் உயிரை விடுகின்றனர்.

இந்த அதிசயத்தையும் கேள்!

போர் முனையில் ரத்தத்தினால் சிவந்த அந்தப் போர்வீரனை, பதிவ்ரதை கணவனை விரும்புவது போலத் தேவலோகப்பெண் விரும்புகிறாள். யுத்தத்தில் அந்த வீர புருஷனின் அங்கங்கள் அனேக அம்புகளால் வெட்டப் படுவது போல் அவளும் மன்மதனின் அனேக பாணங்களால் தாக்கப்படுகிறாள். (அவனைக் காதலிக்கிறாள் என்பது கருத்து)

மேலும்,

ஒளியுடன் கூடிய வீரன் தேவ விமானத்தில் இருந்துகொண்டு, கைகளினால் தேவப்பெண்ணின் தனங்களைப் பற்றிக்கொண்டிருக்கிறான். அத்தேவப் பெண்ணின் கைநகங்களால் ஏற்பட்ட புண்களை உடையவனாக ஆகிறான். அவன் தான் முன்பு பூமியில் வாழும்போது உறுதியாய்க் கத்தியைக் கையில் பிடித்து, அனேக எதிரிகளின் அம்புகளால் ஏற்பட்ட புண்களை ஏற்று, போராகிய அக்னியில் உயிரை ஆகுதி செய்து, ஒளியுடன் விளங்கும் தன் உடலை மகிழ்ச்சியுடன் பார்க்கிறான்.

**இவ்வாறு விச்வகுணாதர்ச சம்பூ காவ்யத்தில்**
**ஸஞ்சீ (தஞ்ச) புரீ வர்ணனம் முற்றும்.**

# ॥ चोलदेश वर्णनम् ॥

## சோழ நாட்டு வர்ணனை

*"சோழநாடு சோறுடைத்து" என்பர் அந்நாட்டைப்பற்றி விச்வகுணாதர்ச சம்பூ காவ்யத்தில் விச்வாவஸுவும், க்ருசானுவும் எவ்வாறு வர்ணிக்கின்றனரென்று காண்போம்.*

व्यालाधिपेशय शुभस्थलभूषितेलाः
श्वेडाशनायतन सान्द्रतरान्तरालाः ।
चोलाविभान्ति पवमान विहारवेला-
दोलायमानस हकार नव प्रवालाः ॥

निपुणं विभाव्य सोत्कण्ठम्

नागवल्लीमतल्लीभिः सुमुखीभिरिवादरात् ।
परिरब्धाः प्रमोदन्ते क्रमुकाः कामुका इव ॥

इतश्च भवानवेक्षताम्

अभ्रंलिहानहह पश्य मरुद्वृधाया ।
रोधोरुहः पृथुफलानिह नारिकेलान् ॥
आगच्छते सवितृमण्डल माश्रिताय
देवायभक्तित इवात्तनवोपहारान् ॥

मम तु एवं मतिः

लोलद्दीर्घदला बृहत्तरफला वातोल्ललद्धूलिभि-
श्छन्नाः प्रांशुतमाः स्फुरन्तिपुरतो ये नारिकेलद्रुमाः ।
धूमास्वादनपात्रधारिण इमे द्राघिष्ठचञ्चज्जटा
भस्मोद्धूलितमूर्तयो विवसनाः पाखण्डिभेदा इव ॥

साहसमन्यतो निर्दिश्य

पद्मिन्याकर्षोचित गन्धप्रसवान् प्रपश्य पुन्नागान् ।
अतनूप्राशुगकलनात् संप्राप्तानधिकरेणु सम्पर्कम् ॥

पार्श्वतोवीक्ष्य

अहो महोन्नता जनपदानाममीषामभिजातता ।

पश्य

ज्योतिष्टोमस्तोम उक्थ्योऽतिरात्रो-

ऽप्याप्तोर्यामः षोडशो वाजपेयः ।

प्रौढा यज्ञाः पौण्डरीकादयो ये

चोलेष्वेते चित्रमौपासनन्ति ॥

किञ्च

गृहे गृहे पश्य कृताग्निहोत्रा

शास्त्रौषधोल्लघहृदो विदोषाः ।

पुण्योत्तराः पण्डित पुण्डरीकाः

पुनन्ति वेदैकधना जगन्ति ॥

பாம்புகளின் தலைவனான ஆதிசேஷனைச் சயனமாகக் கொண்டு, மங்களங்களைக் கொடுக்கும் விஷ்ணுவின் க்ஷேத்ரங்கள் அலங்கரிக்கும் இச் சோழநாடு, தன் இடையே சிவன் கோயில்களையும் நெருக்கமாகக்கொண்டு விளங்குகின்றது. இங்கு காற்று வீசும்பொழுது மாமரத்தின் தளிர்கள் ஊஞ்சல்கள்போல் அசைகின்றன.

உற்றுப்பார்த்து ஆவலுடன்

நல்ல அழகு வாய்ந்த பெண்களால் ஆசையோடு ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்ட காமுகர்கள் போல, வெற்றிலைக் கொடிகள் படர்ந்த உயர்ந்த பாக்கு மரங்கள் மனத்துக்கு சந்தோஷத்தை அளிக்கின்றன.

இங்கிருந்து நீ பார்

வானளாவிய தென்னை மரங்கள் காவிரியின் கரையில் வளர்ந்து, பெருங்குலைகளுடன் சூரிய மண்டலத்திற்கு எழுந்தருளும் நாராயணனுக்குப் பக்தியுடன் அளிப்பதற்கு, புதிய பரிசுகளை வைத்துக்கொண்டிருப்பவை போன்றிருக்கின்றன. என்ன ஆச்சரியம்! எனக்கு இவ்விதம் தோன்றுகிறது.

காற்றினால் அசையும் நீண்ட இலைகளுடன் கூடிய எதிரிலுள்ள தென்னை மரங்களின் காய்கள் உருவில் பருத்துள்ளன. காற்றினால் மேலெழும்பும் தூசிகள் மரங்களை மறைக்கின்றன. இம்மரங்கள் ஆடாமுடி

யுடன் புகையைக் குடிப்பதற்காக இருக்கும் (ஹுக்கா என்னும்) பாத்திரங்களைக் கையில் தாங்கி, சாம்பலை உடலில் பூசிக்கொண்டு வஸ்த்ரமில்லாத ஒருவகை நாத்திகத் துறவிகளைப் போன்று விளங்குகின்றன.

*சிரித்துக் கொண்டே வேறுபக்கம் காட்டி*

இங்குள்ள புன்னை மரங்கள் பத்மினிச் சாதிப் பெண்களை வசீகரிக்கத் தக்க நறுமணமுள்ள பூக்களுடன் கூடியவை. பெரிய பயங்கரக்காற்றால் எழும்பும் தூசியை உடையனவாகையால் மதநீருடன் கூடிய பெண்யானைகளை அடைந்த ஆண் யானைகளைப் போலுள்ளன.

*அருகில் பார்த்து*

ஆஹா ! இந்த சோழ நாட்டின் உயரிய பண்பைப் பார்.

இச் சோழ நாட்டில் ஜ்யோதிஷ்டோமம், உக்த்யம், அதிராத்ரம், அப்தோர்யாமம், ஷோடசீ, வாஜபேயம் முதலிய பெரிய யாகங்களும் தினந்தோறும் செய்கின்ற ஔபாஸனம் போல் ஸாதாரணமாக நடக்கின்றன.

*என்ன ஆச்சர்யம் !*

மேலும், சாஸ்திரங்களைக் கற்று அதையே ஔஷதமாகக்கொண்டு, மனோவியாதியற்று, பாபம் நீங்கி, வேதத்தையே செல்வமாகக்கொண்டு, அதிகப் புண்ணியத்தை அடைந்த சிறந்த பண்டிதர்கள் வீடுதோறும் அக்னிஹோத்ரத்தைச் செய்துகொண்டு, உலகைப் புனிதமாக்குகின்றனர்.

**कृशानु :**

एतद्विषय विषयाश्लाघा शाखानुशाखं न कर्तव्या ।

यत एतद्देशे वसतां सतामप्यनेक प्रकारादुराचारा उपलभ्यन्ते ।

स्नान्ति प्रातरधिस्रवन्तिविधिवत्सन्ध्यादि कर्माचर-

न्त्यग्नीनादधते मखान्विदधते शास्त्राणि चाधीयते ।

अभ्यर्चन्ति सुरान्पराघ्र्य कुसुमैरर्चन्ति किञ्चातिथी-

नन्नैः किन्तु पुरातनैस्तनुममी पुष्यन्ति दुष्यन्त्यतः ॥

पुनर्निरूप्य सविस्मयम्

कष्टमेतद्देश वासिनीनां विलासिनीनां नित्यमेव लज्जाप्युत्पत्तिराहित्यम् ।

तथाहि

अपिहन्त चोलवामस्थैर्युवतीनां चिराय युवतीनाम् ।
अपकञ्चुलिका बन्धौ कुचकुम्भाविति विरुद्धमुपलब्धम् ॥

किञ्च

अगूढगाढस्तन कुम्भिकुम्भमम्भोजढम्भोदय जैत्रनेत्रम् ।
चित्ते विधत्ते बतचोलदेशस्त्रैणं प्रवीणं रतिकान्तबाणम् ॥

अपि च

नावर्तवमहोत्सवे ननु सहस्रशः सङ्गता
गृहाद्बहिरशङ्कितं गदितकामगाथाशताः ।
अहार्यकठिनस्तन प्रकटनादनागस्विनो
मुनेरपिघनांधृतिं चुलुकयन्ति चोलाङ्गनाः ॥

க்ருசானு :—

இந்தச் சோழ நாட்டைப் பற்றி நீ கூறிய புகழுரை தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பொருந்தாது. ஏனெனில் இந்நாட்டில் வாழும் நல்லவர்களிடமும் பலவிதமான கெட்ட நடத்தைகள் காணப்படுகின்றன.

இந்தச் சோழநாட்டுப் பெரியோர்கள் அதிகாலையில் ஸ்நானம் செய்கின்றனர். ஸந்த்யாவந்தனம் முதலிய கர்மங்களை முறைப்படிச் செய்கின்றனர். அக்னியையும் வளர்க்கின்றனர். தர்சபூர்ணமாஸம் முதலிய யாகங்களையும் செய்கின்றனர். பூர்வமீமாம்ஸை முதலிய சாஸ்த்ரங்களைப் பயில்கின்றனர். விஷ்ணு, சிவன் முதலிய தேவர்களை நறுமணமுள்ள பூக்களால் பூஜிக்கின்றனர். மேலும் அதிதிகளையும் கௌரவிக்கின்றனர். ஆனால் பழைய சோற்றைத் தின்று தங்கள் உடலை வளர்க்கின்றனர். அதனால் அவர்கள் குற்றம் உள்ளவர்களே.

மறுபடியும் பார்த்து ஆச்சர்யத்துடன்.

இந்நாட்டில் பெண்கள் அந்தோ ! எப்பொழுதுமே வெட்கமென்பதே அறியாதவர்கள்.

எவ்வாறெனில்

சோழநாட்டில் நிலையாக வாழும் யுவதிப் பெண்களின் பருத்த ஸ்தனங்கள் சட்டை முடி நீக்கப்பட்டு காட்சியளிக்கின்றன. இது தகாதது.

மேலும் சோழ நாட்டின் பெண்கள் யானையின் கும்பஸ்தலம் போன்ற கடினமான ஸ்தனங்களை மறைத்துக்கொள்ளாமல், தாமரையைத் தோற்கடிக்கும் கண்களுள்ளவர்களாய் எப்பொழுதும் காமத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் சோழநாட்டுப் பெண்கள் முதன்முதலாக ருதுவாகும்பொழுது அதை உத்ஸவமாகக் கொண்டாடுகின்றனர். அப்பொழுது வீட்டிற்கு வெளியே அவர்கள் ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடி பயமின்றி காமமூட்டும் பேச்சுக்களைப் பேசிக்கொண்டும், வெட்கமின்றி பர்வதம் போன்ற ஸ்தனங்களைக்காட்டி, எந்தப் பாவமும் அறியாத மன நெறியாளர்களின் மிக உறுதியான தைரியத்தையும் அபகரிக்கின்றனர்.

**विश्वावसु :—**

वयस्य मा स्म निन्द चोलमण्डलवासिनो जनान् ।

याभिः सर्वपदार्थ शुद्धिरुदिता तास्वप्सु देवार्पितं
निक्षिप्तं निशिरक्षितं शुचिह विभक्ष्येत चेत्काक्षतिः ? ।
त्याज्यं शास्त्रनिषेधतस्तदिति चेत्साज्यं स तैलं चत-
द्भोज्यं पर्युषितं स्मरन्ति यदतो योज्यं न तद्दूषणैः ॥

पातिव्रत्यमुपेत्य नित्यमनघाचारावदातात्मनां
चोलीनां यदिकञ्चुकी न कुचयोर्मालीमसी का ततः? ।
नारीणां सुरतोपयोग्य वयवस्पष्टीकृतिर्दोषइ-
त्युक्तं चेदधरापि धानमपि किं न स्यात् सदावाससा ? ॥

॥ इति चोलदेशवर्णनं समाप्तम् ॥

**விச்வாவஸு :—**

*தோழா ! சோழநாட்டில் வாழும் மக்களைத் தூற்றாதே !*

*தண்ணீரால் எல்லாப் பொருள்களும் சுத்தமாகுமென்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அப்படிப் புனிதமான தண்ணீரால் பகவானுக்கு நிவேதனம் செய்தபின் இரவில் எறும்பு, எலி முதலியவைகளிடமிருந்து காப்பாற்றுவதற்காக வைக்கப்பட்ட சுத்தமான உணவை (பழையதை) உண்டால் அதில் என்ன*

குற்றம்? மிகுந்ததை உண்ணக் கூடாது என்று சாஸ்த்ரம் தடுக்கிறது என்றால், நெய்யுடன் கூடிய உணவும், எண்ணெயில் வேகவைத்த உணவும் பழையதாயிருந்தாலும் உண்ணத்தக்கது என்று சாஸ்த்ரம் கூறுகிறதே! ஆகையால் சுத்தமான உணவான பழையதை உண்பது நிந்தனைக்குரியதல்ல.

பதிவ்ரதைகளான சோழநாட்டுப் பெண்கள் எப்பொழுதும் புனிதமான நடத்தையுடன் பரிசுத்தமானவர்கள். அவர்கள் உள்சட்டை அணியாமலிருந்தாலும் களங்கமற்றவர்களே. சுரதத்திற்குத்தக்க பெண்களின் அவயவங்களை மறைக்காமலிப்பது குற்றமானால், அப்பொழுது உதட்டையும் எப்பொழுதும் துணியால் மறைத்துக் கொள்ளவேண்டியதுதானே?!

**இவ்வாறு சோழதேச வர்ணனம் முற்றும்**

# தஞ்சையில் குறவஞ்சி நாடகங்கள்

**ந. விசுவநாதன்,**
*முன்னாள் தெலுங்குப்பண்டிதர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

தஞ்சையிலும், சுற்றுப்புற ஊர்களிலும் பல பன்மொழி நாடகங்கள் நடந்துள்ளன. பதினேழாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இப்பன்மொழி நாடகங்கள் அதிக அளவில் நடந்துள்ளன என அறிய முடிகின்றது. தமிழ், தெலுங்கு, வடமொழி, மராட்டி முதலிய மொழிகள் பன்மொழி நாடகங்களுக்குப் பயன்பட்டன. நாயக்கர் மற்றும் மராட்டியர் போன்ற மன்னர்களின் காலத்தில் இப்பன்மொழி நாடகங்கள் வெளி வந்துள்ளன. இந்நாடகங்கள் நம் தேசீய ஒருமைப்பாட்டினைக் கொண்டதாகும். இசைப் பாட்டுடன் கூடிய நாடகங்களைக் கூத்து என்று அழைப்பர்.

இதில் தமிழ்க் கூத்து நாடகங்கள் மிக தொன்மை வாய்ந்தவை. தமிழ்க் கூத்து நாடகங்களில், வரிக் கூத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இன்று, காலத்தால் முந்திய தெலுங்கு யக்ஷகான நாடகங்களிலும் வரிக்கூத்துப் பாடல்கள்தான் இடம்பெற்றுள்ளன. ஸுக்ரீவ விசயம், விஷ்ணு மாயா விலாசம், வாசந்திகா பரிணயம், கருடாசல விலாசம் போன்ற தெலுங்கு மொழி யக்ஷகான நாடகங்களில் வரிப்பாடல்களெனக் குறிக்கப்பட்டுள்ளன. அவை ஜம்ப ரேகு - திரிபுட ரேகு - அட தாள ரேகு - குறுச ஜம்பை ரேகு-மடிம ரேகு என்பனவாகும். பொதுவாக ஆந்திர யக்ஷகான நாடகங்களுக்குத் தமிழ் வரிக்கூத்துப் பாடல்கள்தான் வழிகாட்டிய பாடல்களாகத் திகழ்ந்துள்ளன எனலாம். மேலும், வரிக்கூத்துப் பாடல்களையே "தாளவரிக்கூத்துப் பாடல்கள்" என யக்ஷகான ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பதினேழாம் நூற்றாண்டில் மலர்ந்த பன்மொழி நாடகங்களில் வரிக் கூத்துப் பாடல்களெனக் குறிப்பிடப்பெறவில்லை. அதற்குப் பதிலாக தரு, பதம், ஏலபதம், தண்டலாஸ்யம், கந்துகக்ரீடை, ஸுவ்வி, தவளம், சோபனம், கொப்பிபதம், கோலாட்ட தரு, ஓ பாட, லக்ஷ்மீ கல்யாணபாட, மங்கள தரு, தோடய மங்கள தரு, சரணு தரு என்கிற பல தலைப்புகளில் வரிக் கூத்துப் பாடல்களைப் பெயர் கொடுத்து அழைக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற கானல் வரி, கந்துக வரிப் பாடல்களை இங்கு நினைவுகூருதல் அவசிய மாகிறது. பந்தாட்டம், கோலாட்டம் போன்ற ஆடல்களுக்குக் கந்துகவரி, தண்டலாஸ்ய வரிக் கூத்துப் பாடல்கள் பண்டைய காலத்தில் பயன்பட்டன.

தெருக்கூத்து, யக்ஷகானம், கதகளி, பாகவதமேளம் எனப் பெயரிட்ட நாடகங்களைத் தமிழ்க்கூத்து, வடுகக்கூத்து, கன்னடக்கூத்து, பாகவதமேளா கூத்து எனப் பெயர் கொடுத்து அழைத்தால் தவறு ஏதுமில்லை. தஞ்சை அரண்மனையில், ஆடவர் பங்கேற்று நடத்திய கூத்தை "பாகவதமேள" மென்றனர். மேலும், பெண்கள் பங்கேற்று நடத்திய கூத்தைச் "சங்கீதமேள" மென்றனர். இரகுநாத நாயக்கர், விசயராகவ நாயக்கர் மற்றும் சகசி மன்னர் போன்ற மன்னர்களின் காலத்தில் இவ்விரு மேளக்கூத்துகள் தஞ்சை அரண்மனையில் நடந்துள்ளன. சங்கீதமேளம்தான் இன்று சின்னமேளம் என்றழைக்கப்படுகிறது.

தமிழகத்தில் நடக்கின்ற பெரும்பாலான தெருக்கூத்து நாடகங்கள் புராணக் கதைகளைத் தழுவியதாகவே உள்ளன. தெலுங்கு நாட்டில் இடம் பெற்ற யக்ஷகான நாடகங்கள் புராண நாடகங்களாகவே உள்ளன. தஞ்சாவூர் பன்மொழி நாடகங்களும், மற்றும் ஊத்துக்காடு, தேப்பெருமாநல்லூர், சாலிய மங்கலம், மெலட்டூர் போன்ற சிற்றூர்களில் நடைபெறும் பாகவதமேளா நாடகங்களும் புராணக் கதைகளைத் தழுவியதாகவே உள்ளன. பொதுவாகத் தென்னகமெங்கும் சரிதை, விலாசம், பரிணயம் அல்லது கல்யாணம், விசயம், விஹாரம், கலாபம் மற்றும் குறவஞ்சி எனப்பெயர் கொண்ட நாடகங்களே நடைபெறுகின்றன. இப்பெயர்கள் கொண்ட நாடகங்களிலும் குறவஞ்சி ஆடலுக்கு ஓரிடமும் கொடுக்கப்பெற்றுள்ளமை நாம் கவனிக்கத்தக்கது

தமிழகம் மற்றும் ஆந்திர மாநிலத்தில் குறவஞ்சி ஆடலுக்கு ஒரு சிறப்பிடம் கிடைத்துள்ளது. அய்யல ராமபத்ரராஜு என்பவர் இயற்றிய இராமாப்யுதயம் என்னும் நூலில் இடம்பெற்ற செய்யுள் பின்வருமாறு :

"அணுநிப மத்யலாக்ரியலு நாபரிபாஷலு நொப்ப சிந்து ஜக்-
கிணி குறவஞ்சி மேளமுல சேளிக ஸம்பிரி தேலுதா நடீ
மணுலகு பொம்மவெட்டு க்ரிய மர்த்தள தாள நினாத பத்ததின்
ரணதுரு நூபுர ஜணம்ஜணமுல் மெறயன் பதாஹதின்."

அய்யல ராமபத்திரராஜு என்பவர் 16-ஆவது நூற்றாண்டில் வாழ்ந்தவ ராவார். 16-ஆவது நூற்றாண்டிலேயே குறவஞ்சி மேளம் ஆந்திரத்தில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

முதலில் தோன்றிய 'குறம்' என்ற சிற்றிலக்கியம் மீனாட்சியம்மை குறமாகும். இதனை இயற்றியவர் ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். குமரகுருபரர், தஞ்சை ரகுநாத நாயக்கர், விசயராகவ நாயக்கர் போன்ற மன்னர்களின் சமகாலத்தவர். விசயராகவ மன்னர் காலத்தில் வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி எனும் குற இலக்கியம் வெளிவந்துள்ளது. மேலும்

குறப்பாடல் மற்றும் குறவஞ்சிப்பாடலுக்கேற்பப் பெண்கள் ஆடல் பாடல்கள் புரிந்ததாக விசயராகவ மன்னர் காலத்திய நூல்கள் சான்றளிக்கின்றன. மேலும் தஞ்சை விஜயராகவ மன்னன் நாட்டியங்களில் காணப்படும் பல்வேறு பிரிவுகளில் வல்லவராகத் திகழ்ந்துள்ளார் என்பதற்குக் கீழே காணும் பாடல் சான்றாகத் திகழ்கின்றது.

கோபாலுனகு வேடுகோலு விண்ணப்பமுலு
தருவு லொனர்சு நௌதார்ய துர்ய
ஏலலு விடிபதால் ஹெச்சு சங்கீர்த்தன
லத்யாத்ம லொனரிஞ்சு நதுலசர்ய
வால்வீசி குஜ்ஜரி வில்வேடு தண்ட
லாஸ்யமு கந்துகக்ரீட யல்லிகயுனு
குறவஞ்சி சுபலீல குஜராதி தேசி சௌ
பதமு ஜக்கிணி துருபதமு மதன
பலதூத்யமுனு ஜோகி பதசாளி சாரதா
சாம்ராஜ்யமுனு சிந்து ஸவதிமச்ச
ரம்புனு நாட்யகதம்பம்பு மொதலைன
நாட்யமுல் ஹவணிஞ்சு நவரஸக்ஞ

விசயராகவன் காலத்தில் குறப்பாடலுக்கேற்ப அபிநய ஆடலும் குறவஞ்சிப் பாடலுக்கேற்பக் குறவஞ்சி நாட்டியமும் நடந்துள்ளன. மன்னாரு தாசவிலாசம். விசயராகவகல்யாணம் விசயராகவசந்திரிகாவிஹாரம் போன்ற நூல்கள் இதற்குச் சான்று நூல்களாகும். “குறமு கோமலவல்லி குறவஞ்சி விரிபோண்ட்லு கொந்தரு வினுபிஞ்சி ரபுடு” எனும் தெலுங்கு மொழி வரிகள் இரகுநாதநாயகாப்யுதயம் எனும் நூலில் காணப்படுகின்றன. இந்நாடகங்களில் உலா, பவனி, தாது, குறத்திவருதல், குறிகூறுதல் போன்ற வாழ்வியலின் கூறுகள் இடப்பெற்றுள்ளன. அவை:-

விசயராகவ சந்திரிகாவிஹாரம் என்னும் நாடகத்தில் காணப்படும் தருப்பாடல்:-

வச்செனு தருவு பாடுகொண்ட—தானு
விச்சலவிடி ராஜவீதுல வெண்ட
தீரைன புட்டி சேபட்டி—மஞ்சி
பாருடாகுல சீர கட்டி பச்சபொட்டு பெட்டி

மன்னாருதாச விலாசத்தில் காணப்படும் பாத்திர பிரவேச தருவின் வரிகள் :

ராகம் : **காம்பேதி]** **திவிபதை** [தாளம் : ஆதி

"செலுவ மன்னாரு தாஸுபை வலபு நிலுபலேக
கலுவரிம்புசுன்ன காந்திமதிகி
தலஞ்சின தலம்பெல்ல தார்க்காணகா நெல்பன்
அல செங்கம்ம எறுகதயை வச்செனு"

**மன்னாருதாசவிலாசம்**

ராகம் : **மாளவி]** குறவஞ்சி தரு [தாளம் : அட

வச்செ நெறுகத பெளுகு குலுகெடு வலஜபுலு ஜுகு
ஹெச்சு பச்சலபுட்டி கைகொனி யிம்புநடலு மிஞ்சகா

**விஜயராகவ கல்யாணம்** தரு

ஸ்ரீலசே விலஸில்லு சின்னி நெம்மோமு
சால ராணிம்ப வஜ்ராலசே மிஞ்சு
மலஸின அபரஞ்சி மாந்தாளி பூனி
திலகம்பு தீருகா தித்தி சென்னுதுட
வன்னெகா கீல்கண்டு வைசி அந்தமுகனு

சரிகை வேலைப்பாடுகள் மிகையாக உள்ள சந்திரக் காவிச்சேலை, பச்சை, சிவப்பு, வைரம் போன்ற கற்கள் பதிந்த மாலைகள், முத்து மாலைகள், கஸ்தூரி திலகம், சம்பங்கி கொண்டை, குறக்கூடை, மந்திரக்கோல் முதலிய அணிகலன்களோடு வந்தாள் குறவஞ்சி என விசயராகவ மன்னர் காலத்து நூல்கள் பகர்கின்றன.

விசயராகவனுக்குப் பின்பாக வந்தவர் சகசி மன்னர் ஆவார். இவர் காலத்தில்தான் முதன்முதலாகக் குறவஞ்சி எனும் தலைப்பில் தமிழ்மொழியில் இரண்டு நாடக நூல்கள் வெளிவந்துள்ளன. அவை சகசிராசன் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி எனும் நாட்டிய நாடக நூல்களாகும். சகசி மன்னர் காலத்தில் வைத்தியநாத தேசிகர் வாழ்ந்தவர் ஆவார். இப்புலவர் இயற்றிய இலக்கண நூற் பாட்டியலில் குறவஞ்சிப் பிரபந்த இலட்சணம் குறிப்பிடப் பட்டுள்ளது.

சகசி மன்னருக்குப் பின்புதான், விசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவரான திரிகூடராசப்பக் கவிராயர் திருக்குற்றாலக்

குறவஞ்சியை இயற்றினார். சகசி ராசன் குறவஞ்சி, தியாகேசர் குறவஞ்சி திருக்குற்றாலக் குறவஞ்சி நூல்கள் முறையாகவும் ஒன்றன்பின் ஒன்றாகவும் மலர்ந்த தமிழ்க் குறவஞ்சி நூல்கள் என்றே கூற முடிகின்றது. சகசி மன்னர் காலத்திய புலவர் கிரிராஜகவி என்பவர் இராஜமோகன குறவஞ்சி எனும் தெலுங்கு மொழிக் குறவஞ்சி நாடகத்தை இயற்றியிருக்கிறார். கிரிராஜகவி என்பவர் திருவையாறு தியாகபிரம்மத்தின் தாய்வழிப்பாட்டன் ஆவார். சகசி மன்னர் காலத்தில் வாழ்ந்த மற்றொரு வடமொழிப் புலவர் சப்தரிஷி என்பவர் மோகினிவிலாச குறவஞ்சி நூலை இயற்றியுள்ளார். சகசி மன்னர் காலத்திய பன்மொழிக் குறவஞ்சி நாடகங்கள் தேசீய ஒருமைப்பாட்டிற்குக் கிடைத்த குறவஞ்சி நாட்டிய நாடக நூல்களாகும். சங்கீத மேளம், பாகவத மேளம் போன்ற மேளங்கள், குறப்பாடலுக்கும், குறவஞ்சி ஆடலுக்கும் ஓரிடம் கொடுத்து, அபிநயாதிகள் புரிந்துள்ளன.

சகசி ராசனுக்குப் பின்வந்த பிரதாபசிம்மன் எனும் மன்னரின் காலத்தில் வாழ்ந்த புலவர் இராம பண்டிதர் என்பவர். இவர் பிரதாபராமர் குறவஞ்சி என்ற பெயரில் மராட்டிய மொழியில் நாட்டிய நாடக நூல் இயற்றியுள்ளார். இந்த மராட்டிய மொழிக் குறவஞ்சி நாடகத்தில் மறைமுகமாகத் தமிழ் யாப்பு கையாளப்பட்டுள்ளது. இனி பிரதாபராமர் குறவஞ்சிப் பாடலைக் கவனிப்போம்.

பிரதாபராமர் குறவஞ்சியில் இடம்பெற்ற பாடல் பின்வருமாறு:—

ராகம்: ஆஹிரி] ஷேறலாபதம் [தாளம்: ஆதி

ஸகல ராஹுநே துஜ கிலுனி
உகிதாம் ஸஹஜ—சந்த்ர மாரே
மாயாவதீ தவ ம்ஹணுநி
மாயா துஜ அயோக்ய மன்மதாரே

பிரதாபராமர் குறவஞ்சி நாடகத்தில் இராமர் பவனி வருதலும், தலைவியான இராஜமோஹினி தலைவன் பேரில் காதல் கொள்ளுவதும், தலைவன் வருகைக்காகத் தன் தோழி மோகனரேகையைத் தூதுவிடுதலும், இதற்கிடையில் மலைக்குறவஞ்சி வருதலும், தலைவிக்கு குறத்தி தன் வாழ்வியல் அனுபவங்கள் கூறியும், பின்பு கைக்குறி, அங்க லட்சணம் அறிந்து உண்மைக்குறி கூறுதலும், பின்பு குளுவ நாடகத்தில் சிங்கி–சிங்கனின் சம்வாதங்கள் நடப்பதும், முடிவாக இராஜமோகினி பிரதாபராமரிடம் அடைக்கலம் புகுவதாகவும் இராம பண்டிதர் மராட்டிய மொழியில் குறவஞ்சி நாடகம் இயற்றியுள்ளார். பிரதாபராமர் குறவஞ்சிக்குப் பின்புதான் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் வெளிவந்துள்ளது. இக்குறவஞ்சியை இயற்றிய புலவர் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் என்பவர் ஆவார். இரண்டாம் சரபோஜி மன்னருக்காக இயற்றப்பட்ட குறவஞ்சிப் பிரபந்த நூலாகும் இந்நூல்.

தமிழகத்தில் இடம்பெற்ற குறவஞ்சி நாடகங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். திருக்குற்றாலக்குறவஞ்சி, சரபேந்திர பூபாலக்குறவஞ்சிகள் தமிழ் இலக்கிய நயங்கொண்ட நாடகக் காப்பியமாகும். தியாகேசர் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி போன்றவை இசை உருப்படிகள் அதிகம் இடம் பெற்ற நாட்டிய நாடகங்கள் ஆகும்,

குறவஞ்சி வாழ்வியல் கூறுகளை நான்காகப் பிரிக்கலாம். தெய்வக் குறத்தி, மலைக்குறத்தி, காட்டுக்குறத்தி மற்றும் சேரிக்குறத்தி எனப் பாகுபாடு வைத்தும், குறத்தியின் குணாதிசயங்களைக் கூறலாம். பொதுவாகத் தெய்வக்குறத்தி மற்றும் மலைக்குறத்தியின் வாழ்வியல் கூறுகளை வைத்துத் தான் பல புலவர்கள் குறவஞ்சி இலக்கியங்களைச் சித்திரித்துக் காட்டுகின்றனர். தலைவிக்குக் குறி சொல்லக் குறத்தி வேடத்தில் பல தெய்வங்களே மாறுவேடமணிந்து வருதலும், குறவஞ்சி நாடகங்களில் இடம்பெற்றுள்ளன. சைவ-வைணவ பக்தி நாடகங்களாகவும் குறவஞ்சி நாடகங்கள் மலர்ந்துள்ளன. இன்றுகூடப் பரத நாட்டிய நிகழ்ச்சி நிரலில் குறவஞ்சி ஆடலுக்கு ஓரிடம் தந்துள்ளனர் ஆடலாசிரியர்கள். தஞ்சையில், 17-ஆம் நூற்றாண்டு முதல் 19வது நூற்றாண்டு வரையில் உள்ள காலகட்டத்தில் குறப்பாடலுக்கும் குறவஞ்சி ஆடலுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பது போற்றுதலுக்குறியது. இதனால் தஞ்சையில் நடைபெற்ற நாட்டியக் கச்சேரிகளில் தொன்றுதொட்டு குறவஞ்சி ஆடல் ஆடும் மரபு பின்பற்றப்பட்டு வருகிறது.

# மோடி ஆவணம் - ஓர் அறிமுகம்

**இராக. விவேகானந்தகோபால்,**
*மோடி வல்லுநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

சுவடியியல் ஆய்வில், சுவடிகளைப் பலவிதமாகப் பாகுபடுத்தலாம். அவற்றுள் முதலாவதாக, மொழிவாரியாகச் சுவடிகள் பிரிக்கப்படுகின்றன. பின்னர், எழுதப்பட்ட பொருளின் அடிப்படையில் ஓலைச்சுவடிகள், காகிதச் சுவடிகள் எனப் பிரிக்கப்படுகின்றன. இந்தியாவில் இவையிரண்டு வகையே பெரிதும் காணப்படுகின்றன. அடுத்த நிலையில், அவை தலைப்பு வாரியாகப் பகுக்கப்படுகின்றன. அவ்வாறு பகுக்கும்போது வரலாற்றுச் செய்திகளைத் தாங்கிய சுவடிகளை வேறுபடுத்துகின்றோம். இச்சுவடிகளுள் இலக்கியமாக எழுதப்பட்டவைகளையும் நிகழ்வுப் பதிவாக எழுதப்பட்டவைகளையும் காணலாம். இலக்கியமாக எழுதப்பட்டவை செய்யுள் வடிவில் கற்பனை கலந்ததாக இருக்கும். இதிலிருந்து வரலாற்றுக் குறிப்புகளையோ சில செய்திகளையோ தெரிந்துகொள்ளலாம். சான்றாக, சாகித்ய மஞ்சுஷா, போன்ஸ்லே வம்ச சம்பு, ராஜாராம சரித்திரம் முதலிய சமஸ்கிருதச் சுவடிகளில் மராட்டியர் வரலாறு கூறப்படுகின்றது. நிகழ்வுப் பதிவுச் சுவடிகளை ஆவணங்கள் (Records) என அழைக்கலாம். இவை வரலாற்று நிகழ்வுகளை உள்ளது உள்ளபடியே கூறுவனவாகும். இவற்றின் அடிப்படையிலேயே ஓர் அரசின் வரலாறு, சமூக பொருளாதாரம், பண்பாடு, கலை ஆகியவற்றினை அறிய இயலும். வரலாற்றுப் பதிவுகளான கல்வெட்டு, செப்பேடு, நாணயம் ஆகியவற்றோடு ஆவணங்களும் வரலாற்று ஆய்விற்குப் பெரிதும் துணை புரிகின்றன. அந்த அடிப்படையில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் ஆவணங்களான மோடி ஆவணங்களைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## மோடி என்றால் என்ன?

'மோடி' என்ற சொல் பொதுவாக மறைபொருளைக் குறிப்பதாக நாம் உணர்கின்றோம். உண்மையில் பிறரறியா வண்ணம் ஒருவகைச் சுருக்கெழுத்து முறையில் மராட்டிய மொழியில் ஆவணங்களை எழுதிவைக்கும் எழுத்து வடிவத்திற்கு 'மோடி எழுத்து' என்று பெயர். இந்த எழுத்தில் எழுதிவைக்கப்பட்ட ஆவணங்கள் 'மோடி ஆவணங்கள்' என அழைக்கப் படுகின்றன.

'மோடணே' என்ற மராட்டிச்சொல் 'உடைதல்' என்ற பொருளை உடையது. இதிலிருந்து 'மோடி' என்ற சொல் உருவாகியிருக்கக்கூடும். கி. பி. 12ஆம் நூற்றாண்டில், தேவகிரியை (இன்றைய தௌலதாபாத்) ஆண்ட யாதவ அரசர்களான இராமதேவ யாதவ், மகாதேவ யாதவ் ஆகியோரின் அவையில் ஆவணக் காப்பாளராக இருந்த 'ஹேமாடுபந்த்' என்னும் அறிஞர் மோடி எழுத்து முறையை உருவாக்கினார் என்பர். அரசவை ஆவணங்களை விரைவாகவும், மறைவாகவும் எழுதிவைக்க அவர் இவ்வெழுத்து முறையை உருவாக்கினார். இவ்வெழுத்துத்தோன்ற அடிப்படைக் காரணமாக அமைந்தது பார்சி மொழிக்குப் பயன்பட்ட 'சிகஸ்த' என்னும் எழுத்து வடிவமேபாகும். 'சிகஸ்த' எனின் 'உடைதல்' என்றே பொருள். இதுவும் ஒருவகைச் சுருக்கெழுத்து முறையே. முகலாயர்களின் தாக்கத்தினால் இந்தியாவில் பார்சிமொழி வழங்கப்பட்டது. அம்மொழியுள் காணப்பட்ட 'சிகஸ்த' எழுத்துமுறை ஹேமாடுபந்தைக் கவர்ந்ததால் அவர் அப்போது வழக்கிலிருந்த தேவநாகரி எழுத்தை உடைத்துச் சிதைந்து 'மோடி' எழுத்தை உருவாக்கினார். இவ்வெழுத்தைப் பயன்படுத்தி அரச ஆவணங்களை மட்டும் எழுதத் தொடங்கினார். அவருக்குப்பின் வந்த ஆவண எழுத்தர்களும் அரசர்களும் மோடி எழுத்துப் பயன்பாட்டைத் தொடர்ந்து கைக்கொண்டதன் விளைவாக, இன்றைக்கு ஏராளமான மோடி ஆவணங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

## மோடி எழுதும் முறை

மோடி எழுத்துப் பயன்பாடு வழக்கிற்கு வந்தபின்னர் முதலில் கற்களிலும், பின்னர் செப்பேடுகளிலும் எழுதிவந்தனர். நாளடைவில் கையால் காகிதம் செய்யும் முறையை அறிந்த பின்னர், காகிதங்களை நீளவாக்கில் ஒரே

அளவாக வெட்டி வைத்துக்கொண்டு அவற்றில் எழுதினர். எழுதுமுன் காகிதத்தின் இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்திற்குக் கோடுகளை ஒன்றன் பின் ஒன்றாக இட்டுக்கொண்டு எழுதத் துவங்குவர். கையினைக் காகிதத்தி லிருந்து எடுக்காமல், சொற்களைப் பிரிக்காமல் எழுதிக்கொண்டே செல்வர். இதனால் ஒரு சொல்லுக்கும் அடுத்த சொல்லுக்கும் இடையே இடம் இருக்காது. படிப்பவர் சொற்களைப் பிரித்துப் படித்துக்கொள்ளவேண்டும். தொட்டு எழுதும் எழுதுகோலினால் கடுக்காய் மையைத் தொட்டு எழுதுவது வழக்கம். இதனால் எழுதத் தொடங்கும் இடத்தில் மை அதிகமாகவும் முடிக்கும் இடத் தில் குறைவாகவும் காணப்படும்.

மோடி எழுத்தில் குறில், நெடில் வேறுபாடுகள் கிடையா: இடத்திற்குத் தக்கவாறு படிப்பவர் பொருளுணர வேண்டும். மோடி எழுத்திற்கு அச்சு நூல்கள் இல்லையாதலால் மோடி எழுத்துக்கள் எழுதுபவர்களின் கையெழுத் திற்குத் தக்கவாறு வடிவம் மாறுகின்றன. அவ்வாறே இடத்திற்கு இடம் வடிவமும் மொழிநடையும் மாறுபடுகின்றன. இதனால், மோடி எழுத்தில் பயிற்சி பெற்றவர்களும் கூடப் புதிதாக ஓர் ஆவணத்தினைப் படிக்கும்போது சற்று நேரம் திணர வேண்டியதாகிறது. அந்த ஆவணத்திலுள்ள கையெழுத் தினைத் தன்வயப்படுத்திக் கொண்ட பின்னரே தொடர்ச்சியாகவும், எளிமையாக வும் படிக்க இயலும். இது மோடி ஆவணங்களைப் படிப்பதிலுள்ள நடை முறைச் சிக்கலாகும்.

### மோடி ஆவணங்களில் குறியீடுகளும் முத்திரைகளும்

மோடி ஆவணங்களில் குறியீடுகள் அதிகம் பயன்படுத்தப் படுகின்றன. மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும் சொற்கள் சுருக்கக் குறியீட்டின் மூலம் எழுதப்படுகின்றன. ரா ॥ ரா ॥ என இடப்படும் குறியீடு ராஜமான்ய, ராஜஸ்ரீ என்ற விரிவைக் கொடுக்கும்; மு ॥ என்ற குறியீடு 'முகாம்' என்பதைக் குறிக்கும். இவ்வாறான சுருக்கக் குறியீடுகள் எல்லா வகையான மோடி ஆவணங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன.

இவை தவிர, முத்திரைகளும் தேவைப்படும் இடங்களில் பயன்புடுத்தப் படுகின்றன. ஆவணத்தின் தலைப்பில் இடப்படும் முத்திரைகளும், இடதுஓரத்தில் இடப்படும் முத்திரைகளும் ஆவணத்தை எழுதி அனுப்பும் அரசனின் முத்திரை களாகும். ஆவணம் எழுதி முடிக்கப்படும் இடத்திலுள்ள முத்திரை செய்தியின் முடிவினைச் சுட்டுவதாக அமையும். ஆவணத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள முத்தி

ரைகள் ஆவணத்தை அனுப்பும் அலுவலரின் முத்திரையாக இருக்கும். இம்முத்திரைகள் மராட்டியிலும், பாரசீகத்திலும் எழுதப்பட்டிருக்கும்.

## தஞ்சை மோடி ஆவணங்கள்

மகாராட்டிரத்தை ஆட்சி செய்த மன்னர்கள் தங்களது அரசவை ஆவணங்களை மராட்டி மொழியில் மோடி எழுத்துக்களில் எழுதி வைத்தனர். இம்முறை சுமார் 700 ஆண்டுகளாக வழக்கிலிருந்து வந்தது. இருபதாம் நூற்றாண்டில் மன்னராட்சி மாறியதால் இவ்வெழுத்துமுறை படிப்படியாக வழக்கிழந்து இன்று முழுவதுமாக மறைந்துவிட்டது. எனினும், ஆய்வாளர்கள், மராட்டிய வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்காக, இவ்வெழுத்துப் பயிற்சி பெறுகின்றனர்.

கி. பி. 1676ஆம் ஆண்டு தஞ்சைக்கு வந்த மராட்டிய மன்னர் ஏகோஜி அல்லது வெங்கோஜி இங்கிருந்த சூழல் காரணமாக அரசுப் பொறுப்பேற்றார். அன்று முதல் சுமார் 180 ஆண்டுக்காலம் தஞ்சை, மராட்டியரின் ஆட்சியின் கீழ் இருந்தது. இக்கால கட்டத்தில் இங்கிருந்த மராட்டிய மன்னர்கள் தங்களது ஆவணங்களை மோடி எழுத்திலேயே எழுதி வந்தனர். தஞ்சை, மகாராட்டிரத்திலிருந்து தொலைவிலிருந்ததால் அங்கிருந்து பதினேழாம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்ட 'மோடி எழுத்து முறை' இன்றுவரை அதிகமாற்றமில்லாமல் பயன்படுத்தப்படுவதனால் இதனைப் 'பழைய மோடி' (Archaic Modi) என்பார் டி. வி. போட்தார் என்னும் வரலாற்றறிஞர்.

கி. பி. 1855ஆம் ஆண்டு வரை அரண்மனை தஸ்தான் மகாலில் வைக்கப்பட்டிருந்த மோடி ஆவணங்கள், கடைசி மன்னரான தஞ்சாவூர் சிவாஜிக்குப் பிறகு, குடியிருப்பு ஆட்சியரின் (Resident) கைக்கு மாற்றப்பட்டுப் பின்னர் சரசுவதி மகாலின் ஆட்சிக் குழுவினரும், பொதுமக்களும் கேட்டுக் கொண்டபடி அவ்வாவணங்கள் அனைத்தும் சரசுவதி மகால் நூலகத்திற்கு 1926ஆம் ஆண்டு மாற்றப்பட்டன. சுமார் 1000 துணி மூட்டைகளில் கட்டி வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட மோடி ஆவணங்கள் அரசின் முயற்சியால் 1952ஆம் ஆண்டு பிரித்து வகைப்படுத்தப்பட்டு, அவற்றின் ஒருபகுதி சென்னை ஆவணக் காப்பகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஓரளவிற்குப் பட்டியலிடப்பட்ட அந்த ஆவணங்கள் இதுகாறும் வெளியிடப்படாதிருந்தமையால், தற்போது அவை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

1952.ஆம் ஆண்டுப் பகுப்பின்படி, வருவாய்த்துறை தொடர்பான ஆவணங்கள் தஞ்சை மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு அங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தஞ்சை நாட்டில் மராட்டியரின் ஆட்சி நடைபெற்றுவந்தகாலை, தஞ்சை அரசோடு தொடர்புடைய திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், தரங்கம்பாடி, கடலூர் ஆகிய இடங்களிலிருந்த ஆட்சியாளர்களுக்கு மோடி எழுத்தில் கடிதங்களும், ஆணைகளும் அனுப்பப்பட்டன. அவை ஆங்காங்கே பாது காக்கப்பட்டு வருகின்றன. தரங்கம்பாடியில் இருந்த டச்சுக்காரர்களோடு மராட்டியருக்குத் தொடர்பிருந்தமையின் அதுதொடர்பான ஆவணங்களை அவர்கள் தம் நாட்டிற்கு எடுத்துச்சென்றுவிட்டனர். பின்னாளில் அவை ஜெர்மனியில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. **(The Modi Documents of Thanjavur in Danish Collections by Elizabeth Strandberg)** ஏனைய இடங்களில் இன்றளவும் ஆங்காங்குள்ள ஆவணக்காப்பகங்களில் பாது காக்கப்பட்டுள்ளன. இவ்வாவணங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து மொழிபெயர்த்து ஆய்வுசெய்தால் சுமார் இருநூறு ஆண்டுகாலத் தஞ்சை நாட்டின் வரலாற்றினைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

இவைதவிர, இன்னும் பல வீட்டுமனை, நன்செய், புன்செய் ஆகிய வற்றின் ஆவணங்கள் மோடி எழுத்தில் எழுதப்பட்டு நிலக்கிழார்களின் வீடு களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வாவணங்களில் கொடுக்கப்பட்ட செய்திகளை அறிய மக்கள் சரசுவதி மகால் நூலகத்தை நாடியவண்ணம் உள்ளனர். அவர்களது ஆவணங்கள் குறைந்த கட்டணத்தில் மொழிபெயர்த்துத் தரப்படுகின்றன. அவ்வாறே, கோயில் தொடர்பான ஆவணங்களும் மோடி எழுத்திலேயே கிடைக்கின்றன. சரசுவதி மகால் நூலகத்தில் மோடி எழுத்தில் எழுதப்பட்ட ஐந்து செப்பேடுகள் காணக்கிடைக்கின்றன. இவற்றினின்று மோடி எழுத்தில் எழுதும் முறை பெருவழக்காக இருந்தமை புலனாகின்றது.

## மோடி ஆவணங்கள் கூறும் செய்திகள்

மோடி எழுத்தில் மராட்டி மொழியில் எழுதப்படும் ஆவணங்களைப் பல்வேறு வகைகளாகப் பகுக்கலாம். அப்பகுப்புமுறை, ஆவணங்கள் கொண் டுள்ள செய்திகளின் அடிப்படையிலானது. மோடி ஆவணங்கள் முழுவதுமாக

மொழிபெயர்க்கப்பட்டுவிட்டால் கி. பி. 1676 முதல் 1900 வரையிலான தமிழக வரலாற்றின் ஒரு பகுதியினைத் தெள்ளிதின் அறியலாம்.

1. அரசியல் வரலாற்றினைப்பற்றி ஆராயப்புகுவோமானால் மராட்டியர் தம் ஆட்சிப்பரப்பு, அது பிரிக்கப்பட்டவிதம், அரசு அலுவலர்கள், படைத் தலைவர்கள், மராட்டியர்களோடு தொடர்புடைய பிறநாட்டு ஆட்சியாளர்கள், மராட்டியர் நிருவாகத்தின் தூண்களாக இருந்த பன்னிரு மகால்கள் பதினெண் கானாக்கள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் உள.

2. அரசியலோடு தொடர்புடைய பொருளாதாரச் செய்திகளாக, வசூலிக்கப்பட்ட வரிகள், நாணய வகைகள், நாணயமாற்று, அரசின் பிறவருவாய், விலைவாசி, தொழில்கள், ஊதிய நிலைகள் ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன.

3. சமய நிலைபற்றிய செய்திகளாக, அரண்மனைத் தேவத்தானக் கோயில்கள், திருப்பணி விவரங்கள், பூசை விழா முதலிய செய்திகள். கிறித்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இனாம், கட்டப்பட்ட மாதாகோயில்கள், இசுலாமியர்களுக்குக் கொடுக்கப்பட்ட மானியங்கள் முதலியவற்றிலிருந்து மராட்டியர்களின் சமயப்பொறையும், சமயப் பணியில் அவர்காட்டிய ஆர்வமும் விளங்கும்.

4. சமுதாய வரலாற்றில், தஞ்சை நாட்டில் வாழ்ந்த மக்கள், வலங்கை இடங்கைப் பிரிவினர், அவர் தமக்குள் ஏற்பட்ட பூசல்கள், அவை தீர்த்து வைக்கப்பட்ட விதம், மகளிர் நிலை, தேவதாசியர், உடன்கட்டை ஏறுதல், பணி மகளிர், அரச மகளிர் பற்றிய செய்திகள் காணக்கிடக்கின்றன.

5. கலை வளர்ச்சி பற்றிய செய்திகளில் ஆடற்கலை வளர்க்கப்பட்ட விதம், இசைக்கு அளிக்கப்பட்ட மதிப்பு, ஓவியர்களின் கலைத்திறன், சிற்பங்கள், கட்டிடங்கள் கட்டப்பட்ட விவரங்கள், நாடகக் கலைக்குத் தந்த ஆதரவு, நாடக, இசை நூல்களை உருவாக்கிய கலைஞர்களுக்கு மரியாதை செய்தமை போன்ற பல்வேறு செய்திகள் இடம்பெற்றுள்ளன.

6. சரபோஜி மன்னரின் தல யாத்திரைகள், அதன்மூலம் அவர் சேகரித்த சுவடிகள், நூல்கள், ஓவியங்கள் மற்றும் கலைப்பொருட்கள் ஆகியனவற்றைப் பற்றிய செய்திகளும் உள.

## மோடி ஆவண வெளியீடுகள்

தஞ்சை மோடி ஆவணங்களை மொழிபெயர்த்து வெளியிடும் முயற்சியில் முதலில் இறங்கியவர் ஆர். எஸ். செல்வாங்கர் எனும் மராட்டிய வரலாற்றறிஞரே. இவர் 1933-ஆம் ஆண்டு 27 மூட்டைகளிலுள்ள மோடி ஆவணங்களை மொழி பெயர்த்து ஆராய்ந்து பாட்னாவில் நடைபெற்ற இந்திய வரலாற்று ஆவணக் குழுமத்தின் கூட்டத்தில் அறிக்கையளித்தார். இவ்வறிக்கை ஆங்கிலத்தில் நூல்வடிவில் வெளிவந்துள்ளது. இதன்பின்னர், சரசுவதி மகால்நூலக மோடிப் பண்டிதர்களால் மொழிபெயர்த்து வைக்கப்பட்ட சுமார் 120 மூட்டைகளிலுள்ள செய்திகள் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 1989-ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

இவை தவிர, சுமார் 48 நோட்டுப் புத்தகங்களில் மோடி ஆவணங்க ளிலுள்ள செய்திகளின் சுருக்கம் தமிழில் எழுதப்பட்டுச் சுரசுவதி மகால் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. தற்போது மூல மோடி ஆவணத்தோடு தேவநாகரி எழுத்துப்பெயர்ப்பும், தமிழ் மொழிபெயர்ப்பும் கொண்ட மோடி ஆவணத்தொகுதி ஒன்றும் அச்சிற்குத் தயாராக உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மோடி ஆவணத் தமிழ் மொழிபெயர்ப்பினை அடிப்படையாகக்கொண்டு 'தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும், சமுதாய வாழ்க்கையும்' என்ற நூலைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள் ளது. மோடி ஆவணங்களில் எத்துணை வகையான செய்திகள் பொதிந்துள்ளன என்பதற்கு இந்நூலே சான்றாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

## மோடி ஆவண மொழிபெயர்ப்பின் தேவை

மோடி ஆவணங்களில் இல்லாத செய்திகள் இல்லை. அனைத்து வரலாற்றுப் பதிவுகளும் மோடி ஆவணங்களில் காணப்படுவதால், இவ்வாவணங் களை ஒட்டுமொத்தமாக மொழிபெயர்த்துத் தமிழக வரலாற்றின்மீது ஒளிபடச் செய்வது அவசியமாகும்.

மோடி ஆவணங்களை மொழிபெயர்க்காது பயன்படுத்தலாமே எனில், அது இயலாது. காரணம், தஞ்சையில் வழக்கிலிருந்த மராட்டி மொழியில்

ஏராளமான தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன. இத்தமிழ்ச் சொற்கள் சில இடங்களில் திரித்தும் வழங்கப்படுகின்றன. எனவே, தமிழும் மராட்டியும் அறிந்த ஒருவரே இதனைச் சரியாகப் படித்து மொழிபெயர்த்துக் கொடுக்கமுடியும். மேலும் இவ்வாவணங்கள் தமிழ்நாட்டு வரலாற்றுத் தொடர்புடையனவாகையால், தமிழ் மக்களுக்குப் புரியும் வண்ணம் தமிழ் மொழிபெயர்ப்புச் செய்ய வேண்டியதும் அவசியமாகின்றது.

மொழிபெயர்ப்புச் செய்வதற்கு உதவியாக, மோடியிலேயே மராட்டி—மராட்டி அகராதி ஒன்றும் காகிதச் சுவடியில் உள்ளது. இதில் சுமார் 17,000 சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சொற்கள் மராட்டியர்கால வழக்கில் பயன்படுத்தப்பட்டவை. எனவே, இவ்வகராதி மோடி ஆவண மொழிபெயர்ப்பாளருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

**முடிவுரை**

இதுகாறும் கண்டவற்றால், தஞ்சை மராட்டியர் காலத்தில் எழுதிவைக்கப்பட்டுள்ள மோடி எழுத்திலுள்ள மராட்டி ஆவணங்களைப்பற்றிய பல்வேறு செய்திகளை அறியமுடிகின்றது, போதிய மொழிபெயர்ப்பாளர் இன்மையால். இத்துணைக்காலமும் கட்டிவைக்கப்பட்டிருந்த மோடி ஆவணங்கள், வீணே அழிந்துபோகுமுன் பலருக்குப் பயிற்சியளித்து அவர்களின் மூலம் இவ்வாவணங்களை மொழிபெயர்த்து தஞ்சையின் உண்மையான வரலாற்றினையும், தமிழக வரலாற்றினையும் தெளிவுபடுத்துவது ஒவ்வொரு வரலாற்றாய்வாளர்களின் கடமையாகும்.

# சுவடி நூலகங்களும் பாதுகாப்பு முறைகளும்

**ப. பெருமாள்,** பி.எஸ்ஸி(சி)., எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்ஸி.,
வேதிமக் காப்பாளர்,
சரசுவதி மகால் நூலகம்.

உலகில் தோன்றிய மனிதன் தனித்தும் பின் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்தும் வாழ்ந்து வந்தான். இவ்வாறு வாழத்தொடங்கிய காலத்தில் ஒருவருடைய அறிவும் அனுபவத்திறனும் மற்றவர்களுக்குச் செய்கைகள் மூலம் தெரிவிக்கப்பட்டன. பின் செய்கைகளுடன் ஒலி உபயோகிக்கப்பட்டது. அதன் வளர்ச்சியே மொழியானது. நாகரிக வளர்ச்சியினால் ஒருவருடைய பட்டறிவு பிற்கால மக்களுக்குப் பயன்படுவதற்குப் பதிவு செய்ய வேண்டியிருந்தது. அதற்காகக் கோடுகள், வரைவுகள், குறியீடுகள் ஆகியவை தோன்றி அவை எழுத்துக்களாக மாறின. எழுத்துக் கண்டுபிடிப்பு நாகரிக காலத்தின் முக்கிய வளர்ச்சியாகும். மனிதன் முதன் முதலில் தனது அறிவையும், அனுபவத்தினையும், பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் சித்திரங்களாகவும் எழுத்துக்களாகவும் எழுதி வைத்தான். பாறைகள் ஒரு நிலையான பொருள், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லவோ நகர்த்தவோ முடியாது. ஆகையால் எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய பொருட்களைக் கண்டுபிடிக்கச் செய்த முயற்சியின் பயனாக செங்கல், ஓட்டுச்சில், உலோகத்தகடுகள், போன்றவை பயன்படுத்தப்பட்டன. இப்பொருள்களைக் கையாளுவது மிகக் கடினமாக இருந்ததால் எழுதுவதற்கான மிருதுவான பொருட்களைக் கண்டுபிடித்தனர். அவை மிருகங்களின் தோல் மற்றும் தாவரப் பொருட்களான இலை, மரப்பட்டை, பனை ஓலை, பலகை, பேப்பரைஸ் என்ற நாணற் புல்லின் கட்டு, துணிகள் போன்றவை எங்கெங்கு அதிகமாகக் கிடைத்தனவோ அங்கு அவைகள் பயன்படுத்தப்பட்டன. கி பி. 105ஆம் ஆண்டில் சீனாவில் காகிதம் கண்டுபிடிக்கப்பட்டபின் காகிதத்தின் பயன்பாடும், தயாரிக்கும் முறையும் மற்ற நாடுகளுக்குப் பரவிற்று. அச்சுக் கலை கண்டுபிடிக்கப்பட்டபின் காகிதத்தின் பயன்பாடும் தேவையும் அதிகரித்தது. இந்தியாவில் எழுது பொருட்களாகப் பயன்படுத்தப்பட்ட ஓலைச் சுவடிகளைக் கொண்ட பல சுவடி நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

## ஓலைச்சுவடிகள்

கையால் எழுதப்பட்ட பொருட்கள் சுவடிகள் என்று கூறப்படுகின்றன. இதை ஆங்கிலத்தில் Manuscript அதாவது Man you script என்று பொருள் கொண்டனர். ஓலையில் எழுதப்பட்டவை ஓலைச்சுவடிகள் என்றும் காகிதத்தில் எழுதப்பட்டவை காகிதச் சுவடிகள் என்றும் கூறப்படுகின்றன. இவற்றுள் வரலாற்றுத் தகவல்களைக் கொடுக்கும் கடிதம் போன்றவைகளை ஆவணங்கள் என்றும் மற்றைய பொதுவான தகவல்களைக் கொடுப்பவற்றைச் சுவடிகள் என்றும் கூறலாம். இந்தியாவின் வடபகுதியில் "Birch Bark" என்ற பூர்ஜ மரத்தின் உள்பட்டையைப் பிரித்தெடுத்துச் சமப்படுத்தி எழுதப் பட்டது. மற்றும் உலோகத் தகடுகளும் பனை ஓலைகளும் அதிகமாகப் படன்படுத்தப்பட்டன. இந்தியா மட்டுமின்றிக் கிழக்காசிய நாடுகள் பலவற்றில் பனை ஓலைகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைகளை எழுது பொருளாகப் பயன்படுத்தும் முறை தென்னிந்தியாவிலிருந்து பரவியிருக்கக் கூடும் எனக் கூறப்படுகிறது. ஆனால் எழுதும் முறை இடத்திற்கு இடம் வேறுபட்டுள்ளது. இந்தியாவில் 10ஆம் நூற்றாண்டிற்குப்பின் எழுதிய ஓலைச் சுவடிகள் கிடைக்கின்றன. நேபாள தர்பார் நூலகத்தில் கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த ஓலைச் சுவடி உள்ளது. தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவடி ஒன்றும், 15ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த பல சுவடிகளையும் காணலாம். இந்தியாவின் தட்ப வெப்ப நிலையின் மாறுபாட்டால், 15ஆம் நூற்றாண்டிற்கு முந்தைய சுவடிகள் பெரும்பாலும் அழிந்துபோயின.

## பனை ஓலைச்சுவடிகள்

பனை மரங்களில் பல வகை இருப்பினும் இந்தியாவில் எழுதுவதற்கு நாட்டுப்பனை மற்றும் சீதாளப்பனை எனப்படும் கூந்தற்பனை ஆகிய இரண்டு வகைப்பனை ஓலைக்ள் எழுதுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் நாட்டுப்பனை இந்தியாவில் பல இடங்களில் வளர்கின்றது. இந்த ஓலைகள் மிகவும் தடிமனாகவும் நீளம் குறைந்தும் காணப்படும். இவை சுமார் 4 செ மீ. முதல் 6 செ. மீ. அகலமும் இரண்டடி நீளமும் கொண்டவை. ஆனால் கூந்தற் பனை ஓலைகள் மிகவும் நீளமாகவும் 8 முதல் 10 செ மீ. அகலமும் கொண்ட வையாகும். இவ்வகைப் பனை மரங்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரை இலங்கை, மலேசியக் கடற்கரை ஆகிய பகுதிகளிலும் அதிகமாக வளர்கின்றன. கூந்தற் பனையின் ஓலை மிக மெல்லியதாகவும், வழவழப்பாகவும் நன்கு வளைந்து கொடுக்கும் தன்மையும் கொண்டது. நாட்டுப்பனையின் ஓலை தடிமனாக இருக்கும். ஆனால் கூந்தற்பனை ஓலையில் எழுதும் எழுத்துக்களை விடத் தெளிவாக இருக்கும்.

## பனை ஓலைகளை எழுதப் பயன்படுத்தும் முறை

பனை மரத்தில் ஆறுமாத வயதுடைய ஓலைகளை வெட்டி நிழலிற் காய வைத்துப் பின் நீண்ட தலையோலைககளின் குறுகிய அடி நுனிகளை நீக்கி ஓலைகளின் நரம்பைக் கிழித்து ஒரே அளவாக ஓலைகள் வெட்டப்படுகின்றன. இவ்வோலைகளைக் கட்டி வைக்க மத்தியில் இரண்டு துவாரங்கள் ஓலையை மூன்று பகுதிகளாகப் பிரிக்குமாறு இடப்படுகின்றன. பின் நல்ல நூல் கொண்டு கட்டி வைக்கப்படுகின்றன. நூல் அல்லது கயிறு நழுவி விழுந்துவிடாமல் தடுக்க கயிற்றின் மேற்பக்கம் பனை ஓலையின் ஈர்க்கத் துண்டையோ அல்லது சோழியையோ அல்லது துளை செய்யப்பட்ட செப்புக் காசையோ கட்டி வைக்கின்றனர். சுவடி பெரிய அளவில் இருந்தால் இரு துளையிடப்பட்ட ஓலைகளில் இடப்பக்கம் நூல்கயிறு கோர்த்தும் வலப் பக்கம் மெல்லிய குச்சியைச் செருகியும் சுவடி தொய்வடையாமல் காக்கப் படுகிறது. குச்சிக்குப் பதில் பித்தளை அல்லது இரும்பாலான கம்பியையும் பயன்படுத்துவது உண்டு. இந்தக் குச்சி அல்லது கம்பிக்கு "நரசம்" என்று பெயர். இவ்வாறு தயாரித்து வைக்கப்பட்டுள்ள ஓலைகளின் மேற்பரப்பு கடினமாக இருப்பதால் நேரிடையாக எழுத முடியாது. ஆகையால் ஓலை களை எழுதுவதற்குப் பதப்படுத்துதல் வேண்டும்

ஓலையைப் பதப்படுத்துதல் என்றால் எழுதுவதற்கு அதன் மேற் பரப்பை மிருதுவாக்குதல் என்பதே பொருள். ஓலையின் மேற்பரப்பு மிருது வாக இருப்பின் எழுதுவது எளிது. மேலும் மேற்பரப்பு சேதமடையாது. ஓலையைப் பதப்படுத்தக் கீழ்க் குறிப்பிட்டுள்ள முறைகள் பயன்படுத்தப் பட்டன.

அ. ஓலைகளைத் தண்ணீர் அல்லது பாலில் வேக வைத்தல்.

ஆ. நீராவியில் வேக வைத்தல்.

இ ஈர மணலில் புதைத்து வைத்தல்.

ஈ. நல்லெண்ணெய் பூசி ஊற வைத்தல்.

உ. ஈரமான வைக்கோற் போரில் வைத்திருத்தல்.

பதப்படுத்துதலின் நோக்கம் அதன் மேற்பரப்பை மிருதுவாக்குவதே. ஆனால் ஓலைகளை நீர் அல்லது பாலில் வேக வைக்கும்பொழுது ஓலையில் உள்ள லிக்னின் போன்ற பொருட்கள் வெளியேறுகின்றன. இது ஓலைகள் அதிக நாட்கள் இருக்க உதவுகிறது. மேற்கூறிய முறைகள் பொதுவானவை. ஓலைகளைப்பதப்படுத்தும் முறை இடத்திற்கு இடம் மாறுபட்டும் உள்ளன. ஓரிசாவில் பாதுகாப்பிற்காக மஞ்சள் நீர் அல்லது அரிசிக் கஞ்சியில் அரை மணி நேரம் ஊற வைத்துப் பதப்படுத்தினார்கள்.

## எழுதும் முறை

இந்தியாவில் ஓலைகளில் எழுதும் முறை இரண்டுவகையாகக் கொள்ளப்பட்டன. ஒன்று ஓலைகளின் மேல் ஊசி போன்ற எழுத்தாணிகளால் கீறி எழுதுவது. மற்றொன்று மைகொண்டு தூரிகைபோன்ற எழுதுகோலால் எழுதுவதாகும். எழுத்தாணிகளால் கீறி எழுதும்முறை மிகப்பழமையானது. இதற்கு உதாரணம் மகாபாரதக் கதையாகும். மகாபாரத்தை வியாச முனிவர் சொல்ல விநாயகப் பெருமான் எழுதியதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதில் அவர் எழுதிய எழுத்தாணி தேய்ந்துபோனதால் தன்னுடைய கூரிய தந்தத்தை ஒடித்து எழுதியதாகக் கூறப்படுகிறது. இதிலிருந்து இவ்வெழுத்து முறையும் தந்தங்களின் கூரிய முனைகளால் எழுதப்பட்டது என்றும் தெரியவருகிறது. பொதுவாக ஓலையில் எழுதுவதற்கு எலும்பு, தந்தம், பித்தளை, மற்றும் இரும்பால் செய்த எழுத்தாணிகள் பயன்படுத்தப்பட்டன. இரும்பால் செய்த எழுத்தாணிகள் ஒரு பக்கம் கூர்மையாகவும், மறுபக்கம் கத்தி போன்று இருக்கும். கத்தி ஓலைகளை வெட்டிச் சரிசெய்வதற்கும், கூர்முனை எழுதவும் பயன்பட்டன. இவ்வாறு எழுதப்பட்ட ஓலைகளில் மஞ்சள் அல்லது விளக்குக் கரியும், கோவ்வை இலைச்சாறும் சேர்த்துப் பூசப்பட்டது. இதனால் ஓலையில் எழுதப்பட்ட எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன. வட இந்தியாவில் மை கொண்டு ஓலையின் மேற்பரப்பில் எழுதும் முறை அதிகமாகக் கையாளப் பட்டது. கருக்கிய சங்கின்பொடி, அல்லது விளக்குக் கரியுடன் வேல மரத்துப் பிசினும் மழை நீரும் கொண்டு மை தயார் செய்து எழுதியுள்ளனர். இப்பொழுதும் ஒரிசா மற்றும் வட இந்தியாவில் கிடைக்கும் ஓலைச்சுவடிகளில் ஒவ்வொரு ஏடும் சித்திரங்களுடன் உள்ளது. இவ்வாறு எழுதப்பட்ட சுவடிகள் இரண்டு மரப்பலகைகளுக்கிடையில் வைத்துக் கட்டிப் பாது காக்கப்பட்டன.

## காகிதச் சுவடிகள்

உலகிலேயே முதன்முதலாகக் காகிதத்தைக் கண்டுபிடித்தது இந்தியா தான் என ஆராய்ச்சியாளர்கள் கருதினாலும் முழுமையாகப் பயன்படுத்தாத தால் அதற்கான சரியான ஆதாரம் கிடைக்கவில்லை. அதனால் காகிதத்தைக் கண்டுபிடித்த பெருமை சீனாவிற்குக் கிடைத்தது. கி. பி. 105இல் சீன அரண்மனையில் பணிபுரிந்த டிசைலூன் என்பவர் பழைய துணி, மல்பேரி, சேதமடைந்த மீன் வலை போன்ற பொருட்களைக் கொண்டு காகிதம் தயாரித்தார். இம்முறையானது பல நாடுகளின் வழியாக கி. பி 12-ஆம் நூற்றாண்டில் மொகலாய மன்னர்களால் இந்தியாவிற்குக் கொண்டுவரப் பட்டது. அதன்பின் காகிதத்தின் பயன்பாடு அதிகமாயிற்று. இறக்குமதிக் காகிதத்துடன் இந்தியாவில் பல இடங்களில் காகித ஆலைகள் ஏற்படுத்தப் பட்டன. காகிதத்தின் பயன்பாடு அறிந்த நாட்கள் முதல் அச்சு நூல்கள்

அதிகமாக வரும்வரை நூல்கள் காகிதத்தில் எழுதப்பட்டன. ஆகையால் 12ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு காகிதத்தில் எழுதப்பட்ட ஆவணங்களும், சுவடிகளும் இந்தியா மற்றும் வெளிநாட்டு நூலகம் மற்றும் ஆவணக் காப்பகங்களில் கிடைக்கின்றன. சரசுவதி மகால் நூலகத்தில் 1436இல் எழுதப்பட்ட சுவடியும், 18ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை எழுதிய சுவடிகளும் அதிகமாக இருக்கின்றன.

## காகிதம்

காகிதம் என்பது தாவர நார்ப் பொருட்களின் சேர்ப்பு ஆகும். காகிதத்தை அதன் மூலப்பொருட்கள் கொண்டு நான்கு வகைகளாகப் பாகுபடுத்தலாம்.

1. பருத்தி வகைக் காகிதம்
2. புல், மூங்கில் வகைக் காகிதம்
3. சணல், நார்ப்பொருட்கள் வகைக் காகிதம்
4. மரக்கூழ் வகைக் காகிதம்

இம்மூலப்பொருட்களிலிருந்து மெல்லிய செல்லுலோஸ் நார்ப் பொருட்களைப் பிரித்தெடுத்து அவற்றை ஒன்றோடொன்று சேர்த்துக் காகிதம் தயாரிக்கப்படுகிறது. வேதிம மற்றும் இயந்திரத்தின் உதவியால் மூலப் பொருட்களிலிருந்து நார்ப் பொருளைப் பிரித்தெடுத்துச் சுத்தப்படுத்தி, அதனுடன் சைசிங் என்ற பசைப் பொருட்களைச் சேர்த்துக் கூழாக்கி மெல்லிய தட்டுகளில் ஊற்றிக் காகிதம் தயார் செய்யப்படுகிறது. இவ்வாறு செய்யப் படும் காகிதம் நார்ப் பொருட்களின் இடைவெளியினால் மை உறிஞ்சாமல் இருக்க லோடிங் என்ற முறையில் சில வகையான மாவுப் பொருட்கள் பயன் படுத்தப்படுகின்றன. இம்மாவுப் பொருட்கள் நார்ப் பொருட்களின் இடை வெளியை அடைத்து மை உறியாமல் செய்வதுடன் காகிதத்தின் மேற்பரப்பு வழவழப்பாக இருக்கவும் பயன்படுகிறது. ஆரம்ப காலங்களில் கைவினையால் செய்யப்பட்ட காகிதத் தயாரிப்பு, கி. பி 1780இல் பிரான்சு நாட்டில் காகிதம் தயாரிக்கும் இயந்திரம் கண்டுபிடித்தபின் அதிக அளவில் இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்பட்டது.

## எழுது பொருட்கள்

காகிதச் சுவடிகளில் எழுதுவதற்குப் பறவைகளின் இறகு, நாணல், மூங்கில் போன்ற பொருட்களைப் பேனாக்கள்போல் செய்து, மை தொட்டு எழுதப்பட்டது. பறவைகளின் இறகுகளில் பொதுவாக கழுகு, வல்லூரு

மற்றும் வாத்து இறகுகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. ஏனெனில் இவற்றின் நுனி மிகவும் கடினமாகவும், கூர்மையாகவும் இருக்கும். சுவடிகள் எழுதுவதற்குப் பல நிற மைகள் (மசிகள்) பயன்படுத்தப்பட்டன. அதில் நிலையான எழுத்துக்களுக்குக் கருப்பு மைகள் பயன்படுத்தப்பட்டன. முதன் முதலில் இந்தியாவில் கருப்பு மை தயாரித்துப் பயன்படுத்தியதால் அதற்கு "இந்தியன் மை" எனப் பெயர் பெற்றது. இம்மையானது இலுப்பை எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய் உபயோகப்படுத்தப்பட்ட விளக்கில் இருந்து கரிதயார்செய்து, அவற்றுடன் தேவையான அளவு வேலம்பிசின் மற்றும் மழை நீர் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இந்தவகை மை கொண்டு எழுதப் பட்ட எழுத்தானது, தண்ணீர் பட்டாலும் உடனடியாகக் கரைவது இல்லை. சிலர் வேலம் பிசினுக்குப் பதில் மாட்டுக் கொழுப்பைப் பயன்படுத்தினார்கள். இவ்வகை மையுடன் கடுக்காய் மையும் முக்கிய ஆவணங்கள் எழுதப் பயன் படுத்தப்பட்டன.

கடுக்காய் மை தயாரிக்க ஒரு பாத்திரத்தில் 150 கிராம் கடுக்காயை 4 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்துச் சூடுபடுத்தவேண்டும். அன்னபேதி (வேதிப் பொருள்) 50 கிராம், வேலம்பிசின் 30 கிராம் இரண்டையும் தனித்தனியாக ஊறவைத்து இரண்டையும் கலக்கி, மெல்லிய துணியால் வடிகட்டிக் கொதிக்கும் கடுக்காய்ச் சாருடன் விட்டுக் கிளரவேண்டும், அனைத்தும் சேர்த்து நன்றாகக் கொதித்ததும் இறக்கி மூன்று நாட்கள் அப்படியே வைத்திருந்து சுப்பளித் துண்டால் வடிகட்டிப் பின் எழுதப் பயன்படுத்தலாம். சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள மராத்தியர் கால ஆவணங்கள் இவ்வகை மையால் எழுதப்பட்டவையே.

பொதுவாக, காகிதச் சுவடிகள் தனித்தனித் தாள்களில் எழுதப்பட்டு உள்ளன. 19ஆம் நூற்றாண்டு முதலே புத்தகம்கட்டும்முறைகள் வழக்கிற்கு வந்தமையால் அதற்குமுன் எழுதப்பட்ட காகிதச் சுவடிகள் தனித்தனித் தாள் களில் எழுதப்பட்டன. காகிதச் சுவடிகளில் ஒவ்வொரு பக்கங்களிலும் ஓரங்களில் விடப்படும் இடங்கள் மற்றும் ஒரே மாதிரியான அளவு வரிகள் இருக்க, சுவடிக் காகிதத்தின் அளவிலான மரப்பலகையில் வேண்டிய இடம் விட்டுத் தேவையான வரிகளுக்கு நூல் கட்டி எழுது பலகை தயாரித்துப் பயன் படுத்தியுள்ளனர். எழுதவேண்டிய காகிதத்தை இப்பலகையின்மீது வைத்துத் தேய்த்து எடுப்பதால் அக்காகிதத்தில் வரிகளின் பதிவு ஏற்படும். அதைப் பயன்படுத்தி நேராக எழுதமுடிந்தது. இவ்வாறு எழுதிய சுவடிகள் மேலும் கீழும் மரப்பலகைகள் கொண்டு கட்டிவைக்கப்படுகிறது. முக்கிய காகிதச் சுவடிகள் தங்க நிற எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இவற்றை ஒளிரும் சுவடிகள் என்பர். சில சுவடிகளில் முழுப் பொருளும் அழகிய வண்ணப் படங்களின்மூலம் விவரிக்கப்பட்டுள்ளது. இவைகளைச் சித்திரச் சுவடிகள் என்பர்.

## நூலகங்கள்

மக்களின் பயன்பாட்டிற்காக எழுதப்பட்ட சுவடிகள் கல்வியாளர்களின் இல்லங்களிலும், கோவில்களிலும், அரண்மனைகளிலும் மற்றும் சமய வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட மடங்களிலும் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. இவ்வாறு இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட நூலகங்கள் "ஞான பாண்டார்" "புஸ்தக பாண்டார்" "சரஸ்வதி பாண்டார்" "சரஸ்வதி மகால்" 'தர்ம கஞ்சா" "கிதாப் கானா" போன்ற பல பெயர்களால் அழைக்கப்பட்டன. தற்பொழுது வழங்கப்பட்டு வரும் "நூலகம்" என்ற வார்த்தைக்கு நூல்களின் அகம் என்று பொருள். நூலகத்தை ஆங்கிலத்தில் "லைப்ரரி" என்று குறிப்பிடுகிறோம். அது "லிபர்" என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து பிறந்ததாகும். "லிபர்" என்பதற்கு மரப்பட்டை என்று பொருள். ஆகையால் மரப்பட்டையால் எழுதப்பட்ட நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள இடத்தை லைப்ரரி என்று குறிப்பிட்டனர். தற்பொழுது பொதுவாக அனைத்து நூலகங்களையும் இச்சொல் குறிக்கிறது.

உலகில் சீனா, எகிப்து, கிரேக்கம், ரோம், ஆசியா போன்ற நாடுகளிலிருந்த நூலகங்கள் காலத்தின் மாறுபாட்டால் அழிந்து போயின. தொல் பொருள் ஆய்வினால் இந் நூலகங்கள் இருந்ததற்குச்சான்றுகள் கிடைக்கின்றன. பாபிலோனியாவில் களிமண்ணால் செய்த ஓட்டுச்சில் நூல்கள் நூலகங்களில் பயன்படுத்தப்பட்டதாகக் கண்டுபிடித்து தற்பொழுது அவை பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை கி. மு. 4000ஆம் ஆண்டைச் சார்ந்தவை என ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது போல் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆசிரியா மன்னருக்குச் சொந்தமான நூலக நூல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஓட்டுச்சில் வடிவத்திலிருந்தாலும், தகுந்த முறையில் அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளன. கி. மு. ஆறாம் நூற்றாண்டில் சீனாவில் எழுதப்பட்ட துணிகள், மூங்கில் தப்பைகள் கிடைத்துள்ளன. எகிப்தில் கி. மு. 3000இல் நைல் நதிக்கரையில் வளரும் 'பேப்பரைஸ்' என்ற ஒரு வகை நாணலினால் செய்யப்பட்ட நூல்கள் கிடைத்துள்ளன. இவைகள் ஒன்றோடு ஒன்று இணைத்துச் சுற்றிக் கட்டி வைக்கப்பட்டுள்ளன கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆசியா மைனரில் "பேப்பரைஸ்"க்குப் பதிலாக தோல், ஆட்டின் உள் தோல், இளம் கன்றின் தோல் போன்றவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தியப் புத்தவிகாரில் எழுதப்பட்ட மரப்பலகைகள் இன்றும் போட்லியன் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கிரிஸில் அலெக்சாண்டிரிய நூலகத்தில் 7,00,000 சுவடிகள் இருந்ததாகத் தெரிகிறது. அவை ஒரு தீ விபத்தில் அழிந்து போயின.

இந்தியாவில் காசி, தச்சசீலம், குரு, பாஞ்சாலம் போன்ற இடங்களில் இருந்த சர்வகலாசாலையில் நூலகங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்

கின்றன. கி. பி. நான்காம் நூற்றாண்டில் நாளந்தாப் பல்கலைக் கழகம் மிகப் புகழ் வாய்ந்ததாக இருந்தது. பிற நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து கற்கும் அளவிற்குப் புகழ் பெற்றிருந்தது. நாளந்தாப் பல்கலைக் கழக நூலகம் "தர்ம கஞ்சா" என்று அழைக்கப்பட்டது. இந்த நூலகத்தின் மூன்று கட்டிடங்களும் "ரத்ன சபா" "ரத்ன தாதகி" "ரத்னரஞ்சகா" என்று வெளியிடப்பட்டிருந்தன. இவற்றில் "ரத்னதாதகி" மட்டும் ஒன்பது மாடிகளைக் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்த புத்த விகாரங்களிலும், ஜைன மடங்களிலும் நூலகங்கள் இருந்தமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. பல அரண்மனை நூலகங்கள் மன்னர்களுக்கிடையே நடந்த போரினால் அழிந்து போயின அல்லது தீக்கிரையாக்கப்பட்டன. மைசூர் மன்னர் திப்பு சுல்தான் அரண்மனையில் மிகப் பெரிய நூலகம் இருந்தது. அந்நூலகத்திற்கான அச்சிடப்பட்ட நூல் பட்டியல் ஒன்று சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ளது. ஆனால் தற்பொழுது அந்த நூலகம் அங்கு இல்லை. அது போன்று தமிழகத்தில் பல அரண்மனைகளிலும், சிதம்பரம், காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம் கோவில்களிலும், சமய மடங்களிலும் கல்வியாளர்களின் இல்லங்களிலும் இருந்தன.

## சுவடிப் பாதுகாப்பு

சுவடி நூலகங்களின் முக்கியப் பணிகளை மூன்றாகப் பகுக்கலாம். அவை - சுவடிப்பாதுகாப்பு, சுவடிகளைப் புத்தகமாக வெளியிடுதல், ஆராய்ச்சிக்கு உதவுதல் ஆகியவையாகும். இதில் சுவடிப் பாதுகாப்பு என்பது மிக முக்கியப் பணியாகும். மனிதன் நாகரீகம் அடைந்த காலத்தில் இருந்து சுவடி பாதுகாக்கப்படுகிறது. பிற்காலச் சந்ததியினருக்குப் பயன்படும் நோக்கத்துடன் சுவடிகள் பாதுகாக்கப்பட்டன. சுவடிகள் பல வடிவங்களில் எழுதப்பட்டதால் பாதுகாக்கும் முறை இடத்திற்கு இடமும், நூல்களின் தன்மைகளுக்கு ஏற்பவும் மாறுபட்டது. ஓலைச் சுவடிகளும், காகிதச் சுவடிகளும் காலத்தின் மாறுபாட்டினாலும் காற்றிலுள்ள அதிகப்படியான ஈரத்தினாலும், ஒளி, பூச்சிகள் மற்றும் இதர வேதிமப் பொருட்களாலும் பாதிப்பு அடைகின்றன. இவற்றிலிருந்து பாதுகாக்கப் பல செயல்முறைகளைக் கையாண்டனர். முதன்முதலாக பூச்சிகள் வராமல் பாதுகாக்கப் பயன்படுத்தப்பட்ட பொருள் சீடர் மர எண்ணெய் ஆகும். அதேபோல் சிட்ரஸ் புல் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. மற்றும் சூடம், கிராம்பு, கிராம்பு எண்ணெய், யூகலிப்டஸ் எண்ணெய் ஆகியவற்றோடு வேறு சில மரத்தின் இலைகளும், பூக்களும் பூச்சிகள் வராமல் தடுக்கப் பயன்படுத்தப்பட்டன.

## ஓலைச் சுவடிப் பாதுகாப்பு

பனை ஓலை தாவரப் பொருளாதலால் கரிமப் பொருட்கள் வகையைச் சார்ந்தது. ஆகையால் ஓலைகள் காலநிலை மாறுபாட்டாலும் வேதிம

மாற்றத்தாலும், சுற்றுப்புற வளிமண்டல அமிலத் தன்மையினாலும் ஓலைகளின் நார்ப்பொருட் சேர்க்கை பாதிக்கப்படுகிறது. ஓலைச் சுவடிகளுக்கு ஏற்படும் சில முக்கிய பாதிப்புகள் :

## கறைகளும், புள்ளிகளும்

ஓலைச் சுவடிகளின் மேற்பகுதியில் பூச்சிகளின் எச்சத்தினாலோ, தூசுகள் படிவதாலோ, பாதுகாப்பிற்குப் பயன்படுத்தும் பொருட்கள் படிவதாலோ கரி படிவதாலோ, பூஞ்சைக் காளான்களினாலோ கறைகளும் புள்ளிகளும் ஏற்படுகின்றன. இவற்றைப் பொதுவாகச் சிறுகத்திகொண்டு சுரண்டி நீக்கலாம்; அல்லது தண்ணீரும் ஆல்கஹாலும் கொண்ட கலவையினால் ஈரப்படுத்தி நீக்கலாம்; அல்லது அசிட்டோன், ட்ரைகுளோரோ ஈதேன் மற்றும் சிட்ரனிலா எண்ணெய், கற்பூர எண்ணெய் போன்ற பொருட்களைப் பயன்படுத்தியும் நீக்கலாம்.

## நிறமாற்றம்

ஓலைகளின் நிறமாற்றமானது, நாள்பட்ட காரணத்தினால் ஆக்சிடேசன் என்ற வேதி மாற்றத்தாலும், ஓலையில் உள்ள லிக்னின் என்ற பொருட்கள் ஒளியினால் ஏற்படும் வேதி மாற்றத்தாலும், சுற்றுப்புற வளிமண்டல மாசுவினால் ஏற்படும் அமிலத்தன்மையினாலும், பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தும் பொருட்களினாலும், பூஞ்சைக்காளான்களின் பாதிப்பினாலும், ஓலைகளைப் பாதுகாக்கப் பயன்படுத்தும் எண்ணெய்களினாலும் ஏற்படுகின்றது.

இத்தகு ஓலைகளை அமிலமில்லாச் சோப்புத்திரவத்தைச் சுத்தமான நீரில் கலந்து சுத்தப்படுத்தலாம். 2% ஹைட்ரஜன் பராக்ஸைடு திரவத்தினாலும் அல்லது 2% அமோனியா திரவத்தினாலும், மற்றும் அசிட்டோன், எதில் ஆல்கஹால் கொண்ட கலவையினாலும் சுத்தப்படுத்தலாம்.

## பூச்சிகளின் பாதிப்பு

ஓலைகள் மிருதுவான கரிம வகையைச் சார்ந்தவை. ஆகையால் பூச்சிகளினால் எளிதாகப் பாதிக்கப்படுபவை. பொதுவாக ஓலைகள் கேஸ்ட்ரலஸ் இண்டிகஸ் என்று கூறப்படும் புத்தகப்புழு, கரப்பான் பூச்சி, மற்றும் கரையான்களால் பாதிக்கப்படுகின்றன. புத்தகப்புழு ஓலைகளைத் துளைசெய்யும். இது வெளிப்படுத்தும் ஒரு திரவத்தால் ஓலைகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ளும். கரப்பான் பூச்சிகள், மற்றும் கரையான்கள் சரிசெய்யமுடியாத பாதிப்பை உண்டாக்குவன.

பூச்சிகளின் பாதிப்பைத் தடுக்க, பூச்சி எதிர்ப்புப் பொருட்களான உலர்ந்த வேப்பு இலை, புகையிலை, கற்பூரம், வசம்பு, கருஞ்சீரகம் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இதுபோன்று தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் பொடிசெய்து பயன்படுத்தப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| கருஞ்சீரகம் | 1 பங்கு | மிளகு | $\frac{1}{4}$ பங்கு |
| வசம்பு | 1 ,, | பட்டை | 1 ,, |
| கிராம்பு | $\frac{1}{4}$ பங்கு | | |

இப்பொருட்களைத் தனித் தனியாக நிழலில் காய வைத்துப் பொடி செய்து, வெள்ளைத் துணியில் ஒரு சிறு கட்டி சூடத்துடன் சேர்த்துச் சிறுசிறு முட்டைகளாகச் செய்து, பயன்படுத்தப்படுகிறது. இது ஆறு மாத காலத்திற்கு நல்ல பலனை அளிக்கிறது. பூச்சிகளைக் கொல்ல பாரா–டை–குளோரா பென்சின் போன்ற வேதிப் பொருட்களை ஆவியூட்டுதல் முறையில் பூச்சிக் கொல்லிகளாகப் பயன்படுத்தலாம்.

## பூஞ்சைக்காளான் பாதிப்பு

காற்றில் ஈரம் அதிகமாக இருக்கும்பொழுது ஓலைச்சுவடிகள் ஈரத்தை உறிஞ்சுகின்றன. இதனால் காற்றில் உள்ள பூஞ்சைக்காளான் அணுக்கள் தமக்கு வேண்டிய சீதோஷ்ண நிலை வந்தவுடன் சுவடிகள் மீது வளர்கின்றன. பூஞ்சைக் காளான் வளர்ச்சியானது சுவடிகளுக்குப் பல வகையில் சேதம் ஏற்படுத்தும். இதனால் சுவடிகளில் கறை ஏற்படும். பளபளப்பான மேல் பகுதி பாதிக்கும். ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளும். ஓலைகளைப் புலமிழக்கச்செய்துவிடும். இதனால் ஓலைகள் துகள்களாக உடையும். உரிந்து கொண்டும் விழுந்துவிடலாம்.

பண்டைக் காலத்தில் பூஞ்சைக் காளான் வராமல் தடுக்க காளான் கொல்லியான மஞ்சளைப் பூசுவார்கள். தற்பொழுது வேதிப் பொருட்களின் உதவிகொண்டு பாதிக்கப்பட்ட ஓலையைச் சுத்தம் செய்யலாம். ஒன்றோடு ஒன்று ஒட்டியுள்ள ஓலைகளை நீராவியில் வேகவைத்துப் பிரிக்கலாம். மற்றும் தைமால் என்னும் வேதிப்பொருள் கொண்டு ஆவியூட்டல் முறையில் காளான் பாதிப்பைத் தடுக்கலாம்.

## எழுத்துக்கள் மங்குதல்

எழுத்துக்கள் மங்குதல் என்பது மையால் எழுதப்பட்ட சுவடிகள் ஒன்றோடு ஒன்று உராய்வதால் ஏற்படும். ஆனால் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட சுவடிகளில் எழுத்துத் தெளிவாக இல்லையெனில், ஆற்றுக்

காரணம் எழுத்துக்களில் உள்ள கருப்புத் துகள்கள் விழுந்துவிடுவதுதான். இதற்கு சிட்ரனிலா எண்ணெய் அல்லது ஏதாவது ஒரு ஆவியாகக்கூடிய தாவர எண்ணெய்யுடன் விளக்குக்கரி கலந்து பூசினால் எழுத்துக்கள் தெளிவாகத் தெரியும். மை கொண்டு மேற்பரப்பில் எழுதப்பட்ட சுவடிகளில் எழுத்துச் சேதமடையாமல் இருக்க 2% பாலிவினைல் அசிடேட் பூசலாம்.

### சிதிலமடைதல்

ஓலைகள் நாளாக நாளாக மிகவும் சிதிலமடைகின்றன. பொதுவாக ஓலைகளில் உள்ள ஈரத்தன்மை இழக்கப்படும்பொழுது ஓலைகள் மிகவும் சிதிலமடைகின்றன. மேலும் அமிலத் தன்மையினாலும் ஓலைகளில் உள்ள லிக்னின் பொருட்களினால் ஏற்படும் வேதி மாற்றத்தாலும் சிதிலமடையலாம். இதைத் தவிர்க்க ஆவியாகும் ஏதாவது ஒரு தாவர எண்ணெய்யைப் பூசலாம். பொதுவாக சிட்ரனிலா எண்ணெய் போன்றவைகளைப் பயன்படுத்தலாம். தற்பொழுது புதிய ஓலைகளை வேகவைத்துக் காய்ச்சி வடித்தல் முறையில் தயாரிக்கப்படும் திரவத்தை வேதிப் பொருட்களுடன் சேர்த்துப் பூசினால் நல்ல பலன் கிடைப்பதாக ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் அம்முறை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

### செப்பனிடுதல்

பூச்சிகள், பூஞ்சைக் காளான்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட சுவடிகளை வேதிப் பொருட்கள் கொண்டு பாதுகாக்கலாம். புத்தகப்புழுவினால் ஏற்பட்ட துளைகளை மெழுகு அல்லது மிருதுவான காகிதக் கூழ் கொண்டு செப்பனிடலாம். உடைந்த கிழிந்த ஓலைகளை ஒளி புகும் வேதி முறைப் பசைப் பொருட்கள் கொண்டு செப்பனிடலாம். மிகவும் சிதிலமான ஓலைகளை 2% பாலிவினைல் அசிடேட் என்னும் வேதிப் பொருள்கொண்டு பூசலாம். மற்றும் லேமினேஷன் என்ற புதுமுறையினாலும் என்கேப்சுலேசன் என்ற முறையிலும் செப்பனிடலாம். உடைந்த ஓலைகளைச் சேர்க்க பழைய ஓலைகளின் பவுடரை நீர்த்த பெவிக்கால் பசையுடன் சேர்த்துப்பயன் படுத்தலாம்.

### காகிதச் சுவடிகள் பாதுகாப்பு

காகிதங்கள், தாவர நார்ப்பொருட்களில் உள்ள செல்லுலோஸ் என்ற வேதிப்பொருளின் சேர்க்கை ஆகும். இவை தட்பவெப்பநிலை, வேதிப் பொருட்கள் மற்றும் சில பூச்சிகளால் பாதிக்கப்படுகின்றன.

## இயற்பியல் காரணிகள்

காகிதங்களுக்கு இயற்பியல் காரணிகளான ஒளி, வெப்பம், தீ, நீர் போன்றவைகளால் பாதிப்பு ஏற்படுகின்றன. நமக்கு இயற்கையில் கிடைக்கும் சூரிய ஒளி மற்றும் செயற்கை ஒளி கொடுக்கும் குழல் விளக்குகளில் புறநிற ஊதாக்கதிர்கள் அதிகம் உள்ளதால் காகிதம் மற்றும் எழுத்துக்களை இவை நிறமாற்றம் செய்யும். அத்துடன் காகிதத்தின் உறுதித்தன்மையினையும் பாதிக்கும். வெப்பத்தினால் காகிதத்தில் உள்ள ஈரத்தன்மை ஆவியாகி வெளியேறுவதால் அது வளையும் தன்மையை இழந்து சிதிலமடைகிறது. தீ மற்றும் நீர் சரி செய்ய முடியாத அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்துவன.

## உயிரியல் காரணிகள்

காகிதச் சுவடிகளைப் பாதிக்கும் பூச்சிகள் பல இருப்பினும் அதிகமாக பாதிக்கக்கூடியவை. இராமபாணம், புத்தகப்பேன், புத்தகப்புழு, கரப்பான் பூச்சி, கறையான் போன்றவை ஆகும். இராமபாணம் என்னும் பூச்சி நம் வீடுகளில் தொங்கும் காலண்டரில் தொடங்கிப் புத்தக அடுக்குகள் வரை பரவியிருப்பதைக் காணலாம். இது காகிதத்தை வழவழப்பாக்க உபயோகப் படுத்தப்படும், மாவுபொருட்களைச் சுரண்டித் தின்னும். புத்தகசெல் அல்லது புத்தகப்பேன் என்னும் சிறுபூச்சி காகிதச் சுவடிகளை அரித்துச் சிதிலமடையச் செய்யும். காற்றில் அதிகப்படியான ஈரப்பதம் இருக்கும்பொழுது காகிதத்தில் படிந்துள்ள தூசி போன்ற பொருட்களினால் ஈரம் உறிஞ்சப்படுகிறது. இவ் ஈரப்பதத்தினால் காற்றிலுள்ள நுண்ணுயிர்கள் புத்தகங்கள் மீது படிந்து வளரும். அவ்வாறு வளரும் பூஞ்சைக் காளான் காகிதத்தின் உறுதித் தன்மையைப் பாதிக்கச் செய்து அதை மிருதுவாக்குகின்றன. காகிதத்தில் படிந்துள்ள பூஞ்சைக் காளான்களை உண்ண வரும் புத்தக செல் காகிதத்தை அரிக்கிறது. புத்தகப் புழு, 3 மி. மீ. முதல் 5 மி. மீ. வரையிலான காரட் வடிவு சிறு புழுக்களாகும். சுமார் 200 வகைப் பூச்சிகளின் முட்டைகளிலிருந்து இவை வெளிவரும். இப்பூச்சிகள் புத்தகங்களுக்குத் தீங்கு செய்வதில்லை. ஆனால் புத்தகப் புழுக்கள் காகிதத்தை ஓட்டையிட்டுப் பாதிக்கின்றன.

## வேதியக்காரணிகள்

காகிதங்கள் பூச்சிகளினாலும், சீதோஷ்ணநிலை மாறுபாட்டாலும் பாதிக்கப்படுவதோடல்லாமல் காகிதங்கள் தயாரிக்கப்படும்பொழுது உபயோகிக்கப்படும் வேதிப் பொருட்களினாலும், சுற்றுப்புறம் மாசுபடுவதனாலும் காகிதச் சுவடிகளில் பாதுகாப்பிற்காகச் சுற்றி வைக்கப்படும் குறைந்த தரமுள்ள காகிதங்களிலுள்ள அமிலத்தன்மையிலாலும் பாதிக்கப் படுகின்றது.

## பயன்படுத்துவோரின் செயல்கள்

சுவடிகளைப் பயன்படுத்துவோர் சுவடிகளைப் பாதுகாக்க எண்ணி அதைச் சுற்றிவைக்கும் காகிதத்தாலும், கிழிந்த சுவடிகளை ஒட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்ட பசை நாடாக்கள் (cellotape) மற்றும் பல வகைப் பிசின் களாலும், காகிதச் சுவடிகளைக் கவனக் குறைவாகக் கையாளுதல், கறை படிந்த கைகளைப் பயன்படுத்துதல், கட்டி வைக்க முறுக்கு நூல்களைப் பயன் படுத்துதல் மற்றும் எண்ணெய்ப் பசை கொண்ட மைப் பேனாக்களினால் எழுதுவதாலும் பாதிப்பு ஏற்படுகிறது.

## பாதுகாப்பு முறை

முற்காலத்தில் காகிதச் சுவடிகள் பல முறைகளில் பாதுகாக்கப் பட்டுள்ளன. கைவினைக் காகிதங்கள் மிகவும் உறுதி படைத்தவை. அவற்றில் எழுதும் சுவடிகள் அதிகப் பாதிப்பு ஏற்படுத்துவதில்லை. பூஞ்சைக்காளான் பாதிப்பு ஏற்படாமல் இருக்க காகிதச் சுவடிகள் மஞ்சள் பூசி வைக்கப்பட்டுள்ளன. காற்றில் உள்ள வேதிமப் பொருட்களால் பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும், ஒளியில் உள்ள புற ஊதாக் கதிர்கள், காற்றில் உள்ள ஈரப்பதத்தினால் பாதிக்காமல் இருக்கவும், சிவப்புநிறப் பட்டு அல்லது பருத்தித் துணிகளில் கட்டி வைக்கப்பட்டன. சிவப்பு நிறம் பூச்சிகளுக்கு எதிர்ப்பைக் கொடுக்கும் பூச்சிகள் வராமல் இருக்க, துணிகள் சுற்றி வைக்கும் பொழுது வசம்பு, கற்பூரம், பாம்பு மேலுறை, நிழலில் உலரவைத்த வேப்ப இலை, புகையிலை போன்ற பொருட்களில் ஏதேனும் ஒன்றைச் சேர்த்துச் சுற்றி வைத்தனர். அதிகமாக மர அலமாரிகள் பயன்படுத்தப்பட்டன. ஏனெனில் இவை மழைக்காலங்களில் நீரை உறிஞ்சிக் கொள்ளும். வெயில் காலங்களில் நீரை வெளிவிடும் ஆகையால் உள்ளிருக்கும் பொருட்களுக்குப் பாதிப்பு ஏற்படாது.

தற்பொழுது காகிதச் சுவடிகளைப் பாதிக்கும் பூச்சிகள் மற்றும் பூஞ்சைக் காளான்களைக் கட்டுபடுத்தப் புகையிடுதல் முறை பயன்படுத்தப் பட்டு வருகிறது. புகையூட்டுதல் என்றால் கம்பி வலைத்தட்டுகள் பொருந்திய காற்று புகாத மர அலமாரியில் ஆவியாகும் அல்லது காற்றில் கரையும் வேதிமப் பொருட்கள் வைக்கப்பட்டுப் புகையூட்டுதல் செய்யப்படுகிறது. பூச்சிக் கொல்லியாக "போரா டை குளோரோ பென்சினும்" பூஞ்சைக் காளான் கொல்லியாக "தைமால்" என்ற வேதிப்பொருளும் பயன்படுத்தப்படுகின்றன. காகிதத்தில் அமிலத் தன்மை இருப்பின் அமோனியத் திரவம் பயன்படுத்தப் படுகிறது. காகிதச் சுவடிகள் வைத்துள்ள அலமாரிகளில் பூச்சிகள் வராமல்

தடுக்க நாப்தலின் உருண்டை மற்றும் "நிபால்" போன்ற வேதிமக் கூட்டுப் பொருட்களைப் பயன்படுத்தலாம்.

**செப்பனிடுதல்**

காகிதச் சுவடிகளில் ஏற்படும் கிழிசல்கள், மடிப்புகள் மற்றும் சிறிய சேதங்களைக் கை வினைத் தாள்களினால் பூச்சிக்கொல்லி கலந்த மாவுப்பசை கொண்டு செப்பனிடலாம். காகிதச் சுவடிகளில் இரு பக்கமும் உறுதியான மை கொண்டு எழுதி இருப்பின் மிகச் சிதிலமடைந்த சுவடிகளை ஒளி புகும் தன்மையுடைய கை வினைக் காகிதங்கள் கொண்டு மெண்டிங் முறையில் ஒட்டிச் செப்பனிடலாம் அல்லது ஒளி புகும் மெல்லிய கை வினைக் காகிதம் மற்றும் செல்லுலோஸ் அசிடேட் தாள்கள் கொண்டு லெமினேசன் என்ற முறையில் காகிதச் சுவடிகளைச் செப்பனிடலாம்.

இந்தியா ஒரு வெப்பமண்டல நாடு. ஆகையால் ஓலைச் சுவடிகள் மற்றும் காகிதச் சுவடிகளின் பாதுகாப்பு முக்கியமாக நம் நாட்டின் தட்ப வெப்பநிலை மற்றும் சுற்றுப்புறச் சூழலைப் பொறுத்ததாகும். சாதாரணமாக 45%லிருந்து 60% RHக்குள் காற்றில் ஈரப்பதம் இருக்கவேண்டும். அதிகமானால் பூஞ்சைக்காளான்களால் பாதிப்பு ஏற்படும். குறைந்தால் ஈரப்பதமிழந்து சிதிலமடையும். வெப்பநிலை 21° C யிலிருந்து 24°Cக்குள் இருக்க வேண்டும். இதனைச் சாதாரணமாக, 24 மணி நேர குளிர்பதன வசதியால் மட்டுமே வைக்க முடியும். எல்லா நூலகங்களிலும் இவ் வசதியைப் பெற முடியாது. ஆகையால் அந்நிலையைக்கொண்டு வரக்கூடிய மற்ற செயல் முறைகளைச் செய்தல் வேண்டும். அத்துடன் அடிக்கடி கவனித்தல், தூசு படியாமல் செய்தல், சிரத்தையுடன் கையாளுதல் போன்ற பொதுவான பாதுகாப்பு முறைகளை அறிந்து செயல்பட்டால் நம் முன்னோர்கள் எழுதிய அறிவுக் களஞ்சியங்களைப் பாதுகாக்கலாம்.